877
16.x.07

வெளியீடு: 30-8-2007 Issued: 30-8-2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 18, 2007—தொகுதி 29—எண் 2

Wednesday the 18th April, 2007—Volume 29—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V 24, 31 P07
P07.21.2
227570

[Price Rs. 3.00

தமிழ்நாடு ... பு ... பகளை-600 ... ...

18–4–2007

## உள்ளடக்கம்


பக்கங்கள்

**1. வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 273-310

**2. தகவல் கோரல்—**

(அ) மதுபானக் கடையில் 'பார்' நடத்த, பேரவைத் தலைவரின் உதவியாளர் பரிந்துரைக் கடிதம் வழங்கியது 310-316

(ஆ) ஆலங்குடி தொகுதி, நகரம் ஊராட்சியில் பாம்பு கடித்துப் பெண் இறந்தது 327-330

**3. விதி 110–ன்கீழ் அறிக்கை—**

விழுப்புரம் மாவட்டம், முண்டியம்பாக்கம், இடி தாக்கி இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசின் நிவாரண உதவி–மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் அறிக்கை 316-318

**4. சிறப்புக் கவன ஈர்ப்பு—**

வெர்ஜினியா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட பேராசிரியரின் உறவினர்களை அமெரிக்காவுக்கு அனுப்ப அரசு நடவடிக்கை 318-326

**5. கவன ஈர்ப்பு—**

கன்னியாகுமரி மாவட்டம், ரப்பருக்கு விற்பனைக் கட்டணம் விதிக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு 330-332

| | பக்கங்கள் |
|---|---|
| **6. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—*தொடர்ச்சி* | 332-413 |
| கோரிக்கை எண் 4 — ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 414-446 |
| மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி | 333,354-355, 356,375,385, 414,431-445 |
| *திரு. சொ. கருப்பசாமி | 355-359,364,366-368 |
| திரு. உதயம் சண்முகம் | 368-375 |
| *திருமதி டி. யசோதா | 379-388 |
| திரு. டி. மூர்த்தி | 389-396 |
| *திரு. ப. டில்லி பாபு | 397-402 |
| *திருமதி பி. பத்மாவதி | 402-408 |
| டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் | 409-413 |
| *திரு. து. ரவிக்குமார் | 413-418 |
| திரு. கே. பொன்னுசாமி | 419-421 |
| திரு. போளூர் ம. வரதன் | 421-431 |
| **7. அறிவிப்பு—** | |
| பேரவை அலுவலில் மாற்றம் | 413 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 446 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 5, சர்வஜித் – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஏப்ரல் 18, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்*
*அருமை யுடைய செயல்"*

*அரிய செயல்களை அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்து முடிக்கும் திறமையுடையவர்கள் பெருமைக்குரியவராவார்கள்.*

### 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். (குறுக்கீடு)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, nothing. *உட்காருங்கள். (குறுக்கீடு) வினாக்கள்-விடைகள், வரிசை எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) கேள்வி நேரத்திற்கு முன்னாலே எதுவும் எடுக்க முடியாது. நீங்கள் அமைச்சராக இருந்தவர்கள். உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு)* No, nothing. *உட்காருங்கள்.* Rules-*படி எதுவுமே எடுக்க முடியாது. (குறுக்கீடு) அமைச்சராக இருந்தவர் நீங்கள்; உங்களுக்கு* Rules *தெரியாதா? (குறுக்கீடு)* Rules-*ஐப் பாருங்கள். (குறுக்கீடு)* Rules -*ஐப் பாருங்கள்.*

**81—**

## மின் இணைப்பு

***669—திரு. ஆர். ஞானதாஸ்:**

*மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விவசாய நிலங்களுக்கு மின் இணைப்புக் கோரி விண்ணப்பம் செய்து பல ஆண்டுகளாகக் காத்திருக்கும் விவசாயிகளுக்கு விரைவில் மின் இணைப்புக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** பேரவைத் தலைவர் அவர்களே,

ஒவ்வொரு வருடமும் அரசு நிர்ணயிக்கும் குறியீட்டிற்குத் தகுந்தவாறு, பதிவு அடிப்படையில், வரிசைப்படி, சாதாரண வரிசையில், இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் விருப்பப்பட்டால் நீண்ட நாள் காத்திராமல், விரைவில் விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது நிலுவையிலுள்ள அனைத்துப் பிரிவுகளையும் சார்ந்த விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 5,26,712 ஆகும். விவசாய மின் இணைப்புகள் ஒவ்வொரு ஆண்டும் அரசு நிர்ணயிக்கும் குறியீட்டின்படி விண்ணப்பங்களின் பதிவு மூப்பு அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவசாயிக்கு ஆதாரா சுருதியே அவாது பம்பு செட்டுதான். மின்னிணைப்பு இல்லாத நிலையில் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவது இயலாத காரியமாகின்றது. டீசல் விலை உயர்ந்துள்ளதால், டீசல் என்ஜினைப் பயன்படுத்தி நீர் பாய்ச்சுவது செய்ய இயலாத காரியமாக உள்ளது. நிலத்தடி நீர் மிகவும் ஆழமாகச் சென்றுள்ளதால், இந்த மின்சார பம்பு அவசியமாகின்றது. எனவே, மின் இணைப்பிற்காகப் பல ஆண்டுகளாகக் காத்திருக்கும் விவசாயிகளுக்கு விரைவில் இணைப்புக் கிடைக்க, பதிவு மூப்பு அடிப்படை என்ற நிலையைத் தளர்த்தி [illegible] தமிழகத்தில் surplus power என்று [illegible] அனைவருக்கும் பதிவு மூப்பு அடிப்படை

227570
சென்னை-600 008



என்ற நிலையைத் தளர்த்தி—விரைவில் அனைவருக்கும் மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் தங்களுடைய விவசாயத்திற்கு மின் இணைப்பு கேட்பதிலே நியாயமிருக்கிறது. அவர்களுக்கு மின் இணைப்பு வழங்குவதும் அரசாங்கத்தினுடைய கடமையாகும். அந்த அடிப்படையிலேதான் இதுவரையிலே 18,20,521 பம்பு செட்டுகள் தமிழகத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த பம்பு செட்டுகளிலேகூட, 2,50,000 பம்பு செட்டுகளுக்கு, self financing scheme-லேதான் ஏற்கெனவே கடந்தகால ஆட்சியிலும், தி.மு.க. ஆட்சியிலும் இணைப்புகள் பெற்றார்கள். அவர்களெல்லாம் ஒரு Horse Power-க்கு 250 ரூபாய் ஆண்டுதோறும் கட்ட வேண்டுமென்ற நிபந்தனையுடன், அந்த மின் இணைப்பு வழங்கப்பட்டது. ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த முறை ஆட்சிக்கு வந்தவுடனே ஒரு Horse Power-க்கு அந்த 250 ரூபாயையும் கட்ட வேண்டியதில்லை; அவர்களுக்கும் இலவசமாக மின்சாரம் கொடுத்துவிடலாம் என்று ஆணை பிறப்பித்த காரணத்தினால், மின்சார வாரியத்திற்கு ஏற்கெனவே இருந்த இழப்போடு கூடுதல் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, 40,500 பம்பு செட்டுகளுக்கு, இப்பொழுது இந்த ஆண்டு வழங்குவதாக இருக்கிறோம். இதைக் கூடுதலாக ஆக்கினால், ஒவ்வொரு பம்பு செட்டுக்கும் 71,000 ரூபாய், மின்சார இலாகாவிற்கு இலவச மின்சாரம் கொடுப்பதற்குக் கம்பம் நட்டு, அந்த மின் இணைப்புக் கொண்டு செல்வதற்காகச் செலவாகிறது. இதையெல்லாம் மனதிலேகொண்டுதான் ஆண்டுதோறும் ஒரு இலட்சம் பம்பு செட்டுகளுக்கு கொடுக்க வேண்டுமென்று நினைத்தால், தனியாக 3,000 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு மேலும் கூடுதல் செலவாகும். எனவேதான் அப்படி அந்த எண்ணிக்கையை மேலும் உயர்த்த முடியாத ஒரு சூழ்நிலையிலே மின்சார இலாகா இருந்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

*முற்பகல் 9-35*

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் காத்திருப்போர்பற்றிச் சொன்னார்கள். 1984 ஆம் ஆண்டு பதிவு செய்தவர்கள், இன்று 4,10,552 பேர் காத்திருக்கிறார்கள். அதைப்போல, S.F.S. Scheme-லே, service வாங்குவதற்கு 1984-லே பதிவு செய்து கொண்டவர்கள் 4,919 பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல, 1993 வரைக்கும் ரூ.25,000 செலுத்தி service வாங்க 71,539 பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல, 2003-லே பதிவு செய்து கொண்டவர்கள் 9,732 பேர், ரூ.50,000 பணம் கட்டி service வாங்கத் தயாராக இருக்கிறார்கள். இதுபோன்று, நீண்ட காலமாக விவசாயிகள் காத்திருப்பது, மிகவும் அரிதான விஷயமாகத்தான் இருக்கிறது. "செயற்கரிய செய்வார் பெரியர்" என்ற வகையிலே, அரிய செயல்களை, அற்புதங்களையெல்லாம் நிகழ்த்திக்கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையின்கீழே இயங்கிக்கொண்டிருக்கின்ற மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், மூவாயிரம் கோடி ரூபாயை ஒரு பெரிய சுமையாகக் கருதாமல், ஆண்டுதோறும் ஒரு இலட்சம் மின் இணைப்புகள் விவசாயிகளுக்குக் கொடுக்க முன்வருவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் பெறுகிறவர்கள் self-financing அடிப்படையிலே ரூ.10,000 கட்டியவர்கள், ரூ.25,000 கட்டியவர்கள், ரூ.50,000 கட்டியவர்கள், இவர்கள் எல்லாம்கூட பதிவு மூப்பு அடிப்படையிலேதான் காத்திருக்கிறார்கள் என்றும், எனவே, அவர்களுக்கு எல்லாம் ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் பம்பு செட்டுகளுக்கு இணைப்புக் கொடுக்கலாம்; அதற்கு மூவாயிரம் கோடி ரூபாய்தானே செலவாகிறது; அதைத் தாராளமாகச் செலவு செய்யலாம் என்றும் உறுப்பினர் சொல்கிறார். மூவாயிரம் கோடி ரூபாய் என்பது உறுப்பினருக்குச் சாதாரணமாக இருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் மின் வாரியத்திற்கு மிகவும் சுமையாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் நம்முடைய மாநிலத்தினுடைய வாழ்வாதாரத் தொழில்.



விவசாயத்தை நம்பியிருக்கிற விவசாயிகள், கிணறு வெட்டி, அந்த நீரை இறைக்கும் மின் இயந்திரத்திற்கு மின்சாரம் இல்லாத காரணத்தாலே, எரி எண்ணெயைப் பயன்படுத்துகிறார்கள்; அதாவது, டீசல், பெட்ரோலைப் பயன்படுத்துகிறார்கள்; விலை கூடுதலாக இருக்கிறது. அதை வாங்கி இறைக்கின்ற நேரத்தில் விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலையில்லாத இந்தச் சூழ்நிலையில், விவசாயி ஆண்டுதோறும் நஷ்டத்திற்கு உள்ளாகிறான். ஆகவே இப்படி விவசாயி நலிந்துகொண்டிருக்கிறான். நம்முடைய அரசு, பல்வேறு தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையில் எல்லா வகையிலும் மின்சார சலுகை வழங்குகிறது. பல்வேறு வகையிலே மற்றத் தொழில்களுக்கு வழங்கக்கூடிய சலுகையைப்போல விவசாயத்திற்குச் சலுகை அடிப்படையில் நீங்கள் இலவச மின்சாரம் வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள். அதை வரவேற்கிறோம். 250 ரூபாய் ஒரு குதிரைத் திறனுக்கு வாங்கியதைக்கூட நீங்கள் இரத்து செய்திருக்கிறீர்கள். அதுவும் பாராட்டிற்குரியதுதான். ஆனால், அண்டை மாநிலமான கர்நாடக மாநிலத்தில் மின் பற்றாக்குறை இருக்கிறது. அங்கேகூட விண்ணப்பித்த உடனேயே வழங்கிவிடுகிறார்கள். மற்ற மாநிலங்களில் எல்லாம் இந்த நிலை இருக்கிறது. ஆகவே, எல்லாவற்றிலும் முதன்மை மாநிலமாக இருக்கிற நம்முடைய தமிழக அரசு, விவசாயிகளின் வாழ்வாதாரத் தொழிலாக இருக்கிற விவசாயத்திற்கு, மின் இணைப்புக் கோரி விண்ணப்பித்தவுடனேயே மின் இணைப்பு வழங்குவதற்கு ஆவன செய்யுமா? பெரிதும் மனது வைத்து இந்த ஆண்டில் அதை அறிவிப்பீர்கள் என்று சொன்னால், அது மக்கள் மத்தியிலே, விவசாயிகள் மத்தியிலே மிகப் பெரிய வரவேற்பை உண்டாக்கும். ஆகவே, அரசு இதற்கு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு திரு. கோ.க. மணி அவர்கள், கருநாடக மாநிலத்திலே விண்ணப்பம் கொடுத்தவுடனேயே விவசாயத்திற்கு மின் இணைப்புக் கொடுப்பதாகச் சொன்னார்கள். இந்தியாவிலே விவசாயத்திற்கு விண்ணப்பம் கொடுத்தவுடனே, இதுவரையிலே எந்த மாநிலத்திலேயும் மின் இணைப்புக் கொடுக்கவில்லை; வீட்டிற்கே மின் இணைப்புக் கேட்டவுடன் 24 மணி நேரத்திலே மின் இணைப்புக் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு

[2007 ஏப்ரல் 18

போட்டிருக்கின்ற ஒரே ஒரு மாநிலம் தமிழ்நாடு மாநிலம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, விவசாயிகளுடைய கஷ்டங்களை இந்த அரசாங்கம் புரிந்துகொள்ள முடியாமல் இல்லை. ஐந்து இலட்சம் பம்பு செட்டுகளுக்கு இன்றைய தினம்வரை சீனியாரிட்டி அடிப்படையிலே விண்ணப்பித்திருக்கிறார்கள். ஐந்து இலட்சம் பேருக்கும் மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், நம்முடைய மின் வாரியத்திற்குத் தனியாக 15 ஆயிரம் கோடி ரூபாய் தேவை. ஒரு இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மூவாயிரம் கோடி ரூபாய். ஐந்து இலட்சம் பம்பு செட்டுகளுக்கு என்றால் 15 ஆயிரம் கோடி ரூபாய். அந்த 15 ஆயிரம் கோடி ரூபாயை முதலீடு செய்ய முடியாமல்தான் ஆண்டுக்கு—இப்போது அல்ல; காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயிருந்து, அ.தி.மு.க. காலம் வரை, எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலமானாலும் சரி, தி.மு.க. ஆட்சிக் காலமானாலும் சரி, ஆண்டு ஒன்றுக்கு—40 ஆயிரம் மின் இணைப்புகள் என்று வைத்து, seniority அடிப்படையிலே நாம் கொடுத்துக் கொண்டு வருகிறோம். இதிலே President of India-வே ஒரு விண்ணப்பம் கொடுத்தால்கூட, உடனடியாக மின்சார இணைப்புக் கொடுத்துவிட முடியாது. இந்த அவையிலே நாம் மட்டும்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் யாராவது, மின் இணைப்பு அவர்கள் பெயரில் கேட்டால், ஒரே ஒரு மின் இணைப்பு அவர்களுடைய வாழ்நாளிலே கொடுக்கப்படும் என்று நாம் அறிவித்திருக்கின்றோம். அதைத் தவிர, வேறு யாருக்கும் seniority அடிப்படையை மாற்றி, இதுவரையிலே மின் இணைப்புக் கொடுக்கவில்லை; கொடுக்கப்போவதும் இல்லை.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம் விவசாயிகள் நிறைந்த மாவட்டம். அங்கே ஆற்றுப் பாசனம் இல்லாமல், அனைத்தும் கிணற்றுப் பாசனம்மூலமாக நடைபெறுகிறது. தமிழ்நாட்டிலே அதிகமாக நெல் உற்பத்தி செய்கின்ற ஒரு மாவட்டமாக இருக்கிறது. ஆகவே, இலவச மின்சாரம் வழங்குகின்ற அந்தத் திட்டத்திலே, அதிக எண்ணிக்கையிலே திருவண்ணாமலை மாவட்டத்திற்கு முன்னுரிமை தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



2007 ஏப்ரல் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே அதிகமாக விவசாய மின் இணைப்புகள் பெற்றிருக்கின்ற மாவட்டங்கள், வேலூர் மாவட்டமும், திருவண்ணாமலை மாவட்டமும்தான். எனவே, திருவண்ணாமலை மாவட்டத்திற்கென்று தனியாக, கூடுதலாக மின் இணைப்புகள் விவசாயிகளுக்குக் கொடுக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், விவசாயிகளுக்குப் புதிய பம்பு செட் வழங்கவிருப்பதாகக் கூறியிருக்கின்றார்கள்; (குறுக்கீடு) மின் இணைப்பு வழங்குவதாகக் கூறியிருக்கின்றார்கள். 7 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அய்யா கலைஞருடைய அரசு, என்னுடைய பகுதியிலே இருக்கின்ற விவசாய மக்களுக்கு, மின் இணைப்புக் கேட்டு நீண்ட காலமாகக் காத்திருக்கின்ற விவசாயிகளுக்கு, மின் இணைப்பு வழங்க முன்வருமா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 7 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்குக் கடன்களை இரத்து செய்திருக்கிறார்கள். அதைப்போல, இதையும் செய்ய முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இப்படி எல்லாவற்றையும் இரத்து செய்துகொண்டே போனால், கடைசியாக, தமிழ்நாடு அரசாங்கம் திவாலாவதைத் தவிர, வேறு வழியில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு, முன்பணம் ரூ.50 ஆயிரம் இல்லாமல், மின் இணைப்புக் கொடுப்பதற்கு அரசு கனிவுடன் பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

[2007 ஏப்ரல் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மின்சார வாரியம், அரசாங்க உத்தரவின்படி, ஜீவன்தாரா திட்டம் மற்றும் உடல் ஊனமுற்றோர், விதவைகள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், முன்னாள் இராணுவத்தினர் ஆகியவர்களுக்குத்தான் முன்னுரிமை கொடுத்து, அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு மின்சார இணைப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஒரு புதிய யோசனையைச் சொல்லியிருக்கிறார். அவர்களுக்குக் கொடுக்கின்ற பணத்திற்குப் பதிலாக மின் இணைப்புக் கொடுக்கமுடியுமா என்று கேட்டிருக்கிறார். இதுகுறித்து மாண்புமிகு முதல்வரிடத்திலே கலந்து பேசி நடவடிக்கை எடுக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எல். இளவழகன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**82—**

**கட்டட வசதி**

***6554—திரு. கே.எல். இளவழகன்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆற்காடு தொகுதி, பெருமாதாங்கல் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குக் கட்டடம், சுற்றுச் சுவர் ஆகியவற்றைக் கட்டவும், வாழைப்பந்தல் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியைப் புதுப்பிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*ஆம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எல். இளவழகன்.*

**திரு. கே.எல். இளவழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதிக்குட்பட்ட பெருமாதாங்கல் ஊராட்சி*



2007 ஏப்ரல் 18]

*ஒன்றியத் தொடக்கப் பள்ளி சுற்றுச் சுவர் இல்லாமல் மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. இப்பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைத்துத்தர, அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன். அதேபோன்று, வாழைப்பந்தல் தொடக்கப் பள்ளியைப் புதுப்பிக்கவுள்ளமைக்காக நன்றியைச் சொல்லி, அந்தப் பணியினை இந்த நிதியாண்டிலே முடித்துத்தர, அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டிருக்கக்கூடிய பெருமாதாங்கல் ஊராட்சி ஒன்றியத்தினுடைய தொடக்கப் பள்ளியிலே, ஏறக்குறைய 80 பேர் படிக்கக்கூடிய வசதியுண்டு. ஆனால், தற்போது அந்தப் பள்ளியிலே 46 பேர் மட்டுமே படித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் இப்போது எழவில்லை. இருந்தாலும், அனைவருக்குக் கல்வித் திட்டத்தினுடைய அடிப்படையிலே, முன்புறம் மட்டும் சுற்றுச் சுவர் கட்டப்பட்டிருக்கிறது. பின்புறம் மற்றும் பக்கவாட்டுப் பகுதிகளில் இதுபோன்ற சுற்றுச் சுவர்கள் கட்ட வேண்டுமென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து நிதியை ஒதுக்குவாரென்று சொன்னால், நிச்சயமாக அந்தப் பணியை நிறைவேற்றக் காத்திருக்கிறோம். அதேபோல, வாழைப்பந்தல் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார். அந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில், இரண்டு கான்கிரீட் கட்டடங்களும் மற்றும் ஒரு சீமை ஓட்டுக் கட்டடமும் அங்கு அமைந்திருக்கின்றன. அந்தப் பள்ளியிலே 295 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் சீமை ஓட்டுக் கட்டடத்தைப் புதுப்பிக்க, 50,000 ரூபாய் மதிப்பீட்டிலே, திமிரி ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து அது வழங்கப்பட்டு, அந்தப் பணி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, வருகிற 31-5-2007-க்குள் அந்தப் பணி முடிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*(முற்பகல் 9-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கலியவரதன். (குறுக்கீடு) திரு. கே.எல். இளவழகன், சொல்லுங்கள்.*

**திரு. கே.எல். இளவழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்ட கோரிக்கையை உடனடியாக அறிவித்தமைக்காக*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என் தொகுதியின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.*

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதியில் அரசு நிதியுதவி பெற்ற தொடக்கப் பள்ளிகள், நடுக்கம்பட்டு, அத்திப்பாக்கம், கொழுந்திராம்பட்டு, ஆற்காடு, அரகண்டநல்லூர், கொடுங்கால் ஆகிய கிராமங்களில் இருக்கின்றன. அந்தப் பள்ளிகள் கிட்டத்தட்ட 50 ஆண்டுக் காலமாகக் கட்டடங்கள் இல்லாமல் . . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேசுகிறவர்கள், எழுந்துநின்று பேசவேண்டும். பெஞ்சுக்குக் கீழிருந்து பேசக்கூடாது.*

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** *அந்த ஏழை மக்கள் வெளியிலே அமர்ந்து பயிலக்கூடிய நிலைமையிலே அந்த நிதியுதவி பெற்ற பள்ளிகள் இருக்கின்றன. எனவே, அவற்றிற்குப் புதிய கட்டடங்கள் கட்டித்தர, அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சரிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வியாகும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 83, 84 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**85—**

## பேருந்து வசதி

***20529—திரு. ந. சுப்ரமணியன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) குளத்தூர் தொகுதி, மணப்பாறையிலிருந்து லஞ்சமேடு, அகரப்பட்டி, இன்பப்பட்டி, வெள்ளையக்கவுண்டபட்டி, ஊத்துக்குழி, மேட்டுப்பட்டி வழியாக இலுப்பூர் வரை புதிதாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித் தடத்தின் மொத்த தூரம், 33 கிலோ மீட்டர் ஆகும். குளத்தூர் தொகுதி அகரப்பட்டி கிராமத்திலிருந்து, இன்பப்பட்டி வரையுள்ள 4 கிலோ மீட்டர் தூரம் பெட்டல் சாலையாகவும், மண் சாலையாகவும், பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை என்பதால், லஞ்சமேடு, அகரப்பட்டி, இன்பப்பட்டி கிராமங்களுக்குத் தற்போது பேருந்துகளை இயக்க முடியாத நிலை உள்ளது. மேற்படி சாலை, பேருந்து இயக்கத்திற்குத் தகுதி உள்ளதாக மாற்றப்படும்போது, கோரிக்கை வழித் தடத்தில் நகரப் பேருந்து இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், மேற்கூறிய கிராமங்கள் தவிர, கோரிக்கையிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் பகுதிவாரியாகக் கீழே குறிப்பிட்டுள்ளவாறு நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன:*

*மணப்பாறையிலிருந்து ஊத்துக்குழிக்கு கோவில்பட்டி-வெள்ளையக்கவுண்டன்பட்டி வழியாக 4 நடைகளும், மணப்பாறையிலிருந்து செல்லம்பட்டி, கோவில்பட்டி, வெள்ளையக்கவுண்டன்பட்டி வழியாக ஊத்துக்குழிக்கு 6 நடைகளும், மணப்பாறையிலிருந்து வேம்பனூர் வழியாக ஊத்துக்குழிக்கு 8 நடைகளும், மணப்பாறையிலிருந்து வேம்பனூர், கோவில்பட்டி, வெள்ளையக்கவுண்டன்பட்டி வழியாக ஊத்துக்குழிக்கு 4 நடைகளும், மணப்பாறையிலிருந்து இலுப்பூர், கொடும்பப்பட்டி, மேட்டுப்பட்டி வழியாக 2 நடைகளும், மணப்பாறையிலிருந்து இலுப்பூர், கொடும்பாளூர், திருநாடு வழியாக 6 நடைகளும் இப்போது இயக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன்.*

**திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்*

வழித் தடம் குறித்து கூறியவை நீங்கலாக, நான் வினாவில் தொடுத்துள்ள வழித் தடம் வேறு. லஞ்சமேட்டிலிருந்து அகரப்பட்டி வரை 3 கிலோ மீட்டர் தார்ச் சாலை நல்ல நிலையில் இருக்கிறது. அதேபோன்று, அகரப்பட்டியிலிருந்து, மேல இன்பப்பட்டி, கீழ இன்பப்பட்டி, செல்லம்பட்டி, வெள்ளையக்கவுண்டன்பட்டி வரை, 4 கிலோ மீட்டர் மெட்டல் சாலை நல்ல நிலையிலுள்ளது. ஊத்துக்குழிக்கு 1½ கிலோ மீட்டர் தார்ச் சாலையாக உள்ளது. ஊத்துக்குழி முதல் மேட்டுப்பட்டி, வெள்ளாளப்பட்டி, கோத்ராப்பட்டி மேலப்பட்டி வரை 12 கிலோ மீட்டர் தூரம் தார்ச் சாலை நல்ல நிலையிலுள்ளது. எந்த ஒரு பகுதியும் மண் சாலையாக இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதைச் சுற்றியுள்ள ஊர்களைத்தான் கூறினார்கள், ஊத்துக்குழி வரையிலும், இன்பப்பட்டி வரையிலும். இவை நீங்கலாக, 6 உள்ளாட்சிகளை உள்ளடக்கிய இந்த வழித் தடத்தில், அவசியம் போக்குவரத்து இயக்கப்பட வேண்டும். இங்கு ஐந்தாவது வகுப்பு வரை 3 பள்ளிக்கூடங்களும், எட்டாவது வகுப்பு வரை 2 பள்ளிக்கூடங்களும், பத்தாவது வகுப்பு வரை ஒரு பள்ளிக்கூடமும் உள்ளன. அதேபோன்று, அங்கு ஏழை விவசாயப் பெருமக்கள் விளைவித்திடும் மலர் மற்றும் காய்கறிகளை அருகிலுள்ள மணப்பாறைக்கு எடுத்துச் செல்வதற்கு இந்த வழி ஏதுவாக இருக்கும். அதேபோன்று, ஆறு உள்ளாட்சிகளை உள்ளடக்கிய 20,000 பொதுமக்கள் பயன்பெறுவார்கள். அவசியமாக, இந்த வழித் தடத்தில் பஸ் இயக்கப்படுவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய்த் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறையிலிருந்து லஞ்சமேடு வழியாக அகரப்பட்டி, இன்பப்பட்டி, வெள்ளையக்கவுண்டன்பட்டி, ஊத்துக்குழி, மேட்டுப்பட்டி வழியாக இலுப்பூர் வரை புதிய நகரப் பேருந்து இயக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அங்கு ஆய்வு செய்யப்பட்டு அகரப்பட்டி கிராமத்திலிருந்து இன்பப்பட்டி வரை உள்ள சாலை, 4 கிலோ மீட்டர் தூரம் மண் சாலையாகவும், குண்டும் குழியுமாகப் பேருந்து இயக்கத் தகுதியற்ற நிலையில் உள்ளதாகவும் இருக்கிறது என்று





பதில் சொல்லியிருக்கிறார்கள். இங்கு சட்டமன்ற உறுப்பினர் இப்போது வேறொன்றைத் தெரிவித்திருக்கிறார். மீண்டும், புதுக்கோட்டையிலிருக்கின்ற அதிகாரியைச் சென்று பார்க்கச் சொல்லி, பேருந்து இயக்குவதற்குத் தகுதியுள்ளதாக இருந்தால், உடனடியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் கூறிய அந்த 4 கிலோ மீட்டர் சாலை குறித்து, நான் காலையில்கூட அந்த ஊராட்சித் தலைவரிடம் தொடர்பு கொண்டு கேட்டேன். அது நல்ல நிலையில் உள்ளது. தவிரவும், நான் பத்து தினங்களுக்கு முன்பாக, அதே ஊரில் ஒரு காதணி விழாவிற்குச் சென்றபொழுதும், அந்த வழியாகத்தான் சென்றேன். அந்த வழி மெட்டல் சாலையாக உள்ளது; நல்ல நிலையில் உள்ளது; அது பஸ் போக்குவரத்தை இயக்குவதற்குத் தகுதியான சாலைதான். அது குறித்து, நான் உதவிப் பொறியாளரிடம் கேட்டேன். அது நல்ல நிலையில் உள்ளது. எனவே, அதை மறுபரிசீலனை செய்து, அந்த வழித் தடத்தில் நகரப் பேருந்து இயக்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இதேபோன்று, அதற்குப் பக்கத்தில் இன்னொரு வழித் தடம் கோரியுள்ளேன். இதுபோன்று 25-8-2006, 8-12-2006, 4-1-2007 மற்றும் 22-1-2007 ஆகிய நான்கு தேதிகளில் அரசுச் சார்புச் செயலாளரிடம், 3.5 கிலோ மீட்டர் தூரம் வரையுள்ள வழித் தடங்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. ந. சுப்ரமணியன்:** இதுபோன்று வழித் தடங்களில் பஸ் விடுவதற்கும் நீட்டித்து இயக்குவதற்கும், கூடுதல் பஸ் வசதி கேட்டும் கோரிக்கை விடுத்து, இந்நாள்வரையிலும் எந்தவொரு வழி தடத்திலும் பஸ் போக்குவரத்து ஆவன செய்யப்படவில்லை. கேட்காமல் இருப்பதைக்கூட செய்வேன் என்று கூறுகிறார்கள். ஆனால், நான் நான்கு முறை, முறையாகக் கொடுத்தும் இதுவரையிலே ஒரு கோரிக்கைகூட. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்ரமணியன், கேள்வியை மட்டும் கேளுங்கள். உங்களுக்கு என்ன தேவை என்று மட்டும் சொல்லுங்கள்.

[2007 ஏப்ரல் 18

**திரு. ந. சுப்ரமணியன்:** எனவே, நான் கொடுத்துள்ள அந்த வழித் தடத்தில் பஸ் இயக்குவதற்கு மீண்டும் ஆவன செய்யவேண்டுமாய், தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில், இதுவரை கிட்டத்தட்ட 10 புதிய வழித் தடங்களிலே இப்போது பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. அது, பல சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கு வந்து கேட்டுக்கொண்டதற்கிணங்க. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர், அந்த வழியாகச் சென்றபோது, பாதை நன்றாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். உடனடியாக அதிகாரிகளை மறுபடியும் சென்று பார்க்கச் சொல்லி, ஏற்றதாக இருக்குமானால், உடனடியாக அது நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சட்டமன்ற உறுப்பினர் இங்கே சொன்னார்; 3.5 கிலோ மீட்டர் தூரம் வரை இயக்கலாம் என்று இருக்கிறபோது, நான் நான்கு, ஐந்து முறை கேட்டும் எனக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். மீண்டும் எங்களுக்கு நினைவுபடுத்துங்கள். 3.5 கிலோ மீட்டர் வரை கிராமங்களில் இருக்கின்ற கிராம மக்கள் பயன்பெறத்தக்கவகையிலே நகரப் பேருந்துகள் விட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். நிச்சயமாக அது நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை தொகுதி, வத்தலகுண்டிலிருந்து வெங்கிட்டாஸ்திரி கோட்டை, பூசாரிப்பட்டி பிரிவு, மல்லணம்பட்டி, பங்களாபட்டி பிரிவு, நூத்தலாபுரம் பிரிவு, மணியாரம்பட்டி, நிலக்கோட்டை, வெள்ளத்தாதன்பட்டி, கரியாம்பட்டி, மன்னவராதி, கவிராயபுரம், சீராம்பட்டி, நரியூத்து, உச்சணம்பட்டி, அம்மாபட்டி, மாவுத்தன்பட்டி வழியாகக் கொடை ரோடுவரை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அம்மா, உங்கள் தொகுதியில் உள்ள கிராமங்கள் பூராவையும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, என்ன?



2007 ஏப்ரல் 18]

**திருமதி எஸ். தேன்மொழி:** கொடை ரோடுவரை, காலை, மாலை இரண்டு முறை பேருந்து வந்து செல்வது போதுமானதாக இல்லை. ஏழை எளிய மக்களின் நலன் கருதி, கூடுதலாக இரண்டு தடவைகள் இயக்க அரசு ஆவன செய்யுமா? இதேபோன்று, வத்தலகுண்டிலிருந்து கருப்பமூப்பன்பட்டிக்குச் செல்லும் பேருந்தைக் கூடுதலாக இயக்க, இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, பயணிகளுடைய அடர்வு அதிகமாக இருக்குமானால், பேருந்தை நீட்டித்துத் தருவதிலே எங்களுக்குச் சிரமம் ஒன்றுமில்லை. சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை விரைவாக நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்த்தாண்டத்திலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதுபோல, தனியாரும் பேருந்துகளை இயக்குகிறார்கள். தனியார் பேருந்துகளைவிட, அதிகமான நேரத்தை, அரசு விரைவுப் பேருந்துகள் எடுத்துக்கொள்கின்றன. சுமார் 3 மணி நேரம் வரையிலும் அதிகமாக எடுத்துக்கொள்கின்றன. இதனால், கட்டணம் குறைவாக இருந்தாலும்கூட, இதைப் பயன்படுத்தக்கூடிய பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. ஆகவே, தனியார் பேருந்துகளுக்கு இணையான வேகத்தில், அரசு விரைவுப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் இருக்கின்ற ஓட்டுநர்கள், ஒரு லிட்டர் டீசலுக்கு 5.4 கிலோ மீட்டர் என்ற அளவிலே இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதிலே, அகில இந்திய அளவிலே, நாம்

முதலிடத்தில் இருந்துகொண்டிருக்கிறோம். தனியார் பேருந்துகளை வேகமாக இயக்குவதுபோல, அரசுப் பேருந்துகளை வேகமாக இயக்கினால், நமக்கு டீசல் கட்டுப்பாடு என்பது இல்லாமல் போய்விடும். அதனால்தான், ஒரே சீராக இயக்கப்பட வேண்டுமென்று அனைத்து இடங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அப்படி விரைவாக இயக்குகின்ற ஓர் எண்ணம் அரசிடம் இல்லை. ஒரே சீராகத்தான் இயக்கியாக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பேருந்துகளையெல்லாம் அரசுடைமையாக்கி, இப்போது பல்லாயிரம் ஓட்டுநர்களுக்கும், நடத்துநர்களுக்கும் வேலைவாய்ப்பைத் தந்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், தமிழகத்தில் போக்குவரத்துக் கோட்டங்களைப் பிரித்தபோது, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கி, தனிக் கோட்டமாக ஆக்கியதை, கடந்தகால ஆட்சியில் மதுரைக் கோட்டத்தோடு இணைத்துவிட்டார்கள். ஆகவே, மீண்டும் திருநெல்வேலியை மையமாக வைத்து, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கி, தனிக் கோட்டமாக அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 22 கோட்டங்களாக இருந்த அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செலவைச் சிக்கனப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு, 7 போக்குவரத்துக் கழகங்களாக மாற்றியமைக்கப்பட்டன. அப்படி 7 போக்குவரத்துக் கழகங்களாக மாற்றப்பட்டபோது, மதுரைப் போக்குவரத்துக் கழகத்தோடு, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளை இணைத்து, அது இயங்கிக்கொண்டிருக்கிறது. தற்போது இருக்கின்ற 7 போக்குவரத்துக் கழகங்களை அதிகப்படுத்த வேண்டுமென்றால், அதற்கு நாம் மத்திய அரசை அணுகி, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அதைப் பதிவுசெய்திட, 8, 9 மாத காலம் ஆகும். ஆனாலும், அதற்கான முயற்சியை இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. வரவு-செலவைப்



பார்க்கின்றபோது, எது சிக்கனமாக இருக்குமோ அதைத்தான் ஏற்க முடியும். ஆனால், மதுரைப் பகுதி, மிகப் பெரிய பகுதியாக, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளை உள்ளடக்கி இருக்கின்ற காரணத்தால், திருநெல்வேலியை மையமாகக் கொண்டு ஒரு முதுநிலை மேலாளரை இப்போது அங்கே நியமித்து, அவருக்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டிருக்கின்றன. ஒரு கோட்டமாகப் பிரிக்கப்படவில்லையே தவிர, அதற்கான அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, அந்தப் பணிகள் இப்போது தனியாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன. 15 நாட்களுக்கு முன்புதான் அந்த அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்தப் பகுதியிலே பணிகள் விரைவாக நடைபெறுவதற்கு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எதைச் சொன்னாலும் செய்வதற்கு அந்த அதிகாரிகள் இப்போது அங்கே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மருத்துவக் கல்லூரி, வேலூருக்கு 8 கிலோ மீட்டர் அருகிலே உள்ளது. காட்பாடியிலிருந்து பாகாயம் வரை 10 நிமிடங்களுக்கு ஒரு பஸ் வருகிறது. மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு, ஒரு நாளைக்குக் குறைந்தது 3,000 புற நோயாளிகள் வருகிறார்கள். எனவே, காட்பாடி முதல் பாகாயம் வரை செல்கின்ற அந்தப் பேருந்தை அடுக்கம்பாறை வரை நீட்டித்துத்தர வேண்டும். பாகாயத்திலேயிருந்து அடுக்கம்பாறை, 5 கிலோ மீட்டர் தூரத்தில்தான் இருக்கிறது. எனவே, அதை நீட்டித்துத்தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கிறார்கள். இப்பொழுது காட்பாடியிலிருந்து பாகாயம் வரை செல்கின்ற பேருந்தை இன்னும் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு நீட்டித்தால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் மிகவும் சிரமப்படுவார்கள். "எங்களுக்கு உட்கார்ந்துகொண்டு செல்கின்ற வசதி குறைந்து விடுகிறது" என்றும், "அங்கிருந்து புறப்படுகிறபோது, நாங்களெல்லாம் நின்றுகொண்டே வரவேண்டியிருக்கிறது" என்றும் சொல்லி, ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற, ஊர்களிலே இருக்கின்ற மக்கள், இதற்கு ஒத்துக்கொள்வதில்லை. புதிய வழித் தடத்தை நமது சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள்.

எனவே, காட்பாடியிலேயிருந்து நேரடியாக மருத்துவக் கல்லூரி வரையிலே புதிய வழித் தடமாக விடமுடியும் என்றால், நிச்சயமாக அதை ஆய்வு செய்து விடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.*

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், ஏராளமான பேருந்துகளை இப்போது இயக்கிக்கொண்டிருக்கிறார்கள். அதிலும், இப்போது ஓட்டுநர்களும், நடத்துநர்களும் மிகக் குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதிக அளவில் ஓட்டுநர்களையும், நடத்துநர்களையும் நியமிப்பதற்கு அரசு முன்வருமா? அதேபோல, என்னுடைய தொகுதி குறித்து, தொடர்ந்து நம்முடைய அமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறேன். செங்கல்பட்டுக்கும் தி. நகருக்கும் இடையே மாநகரப் பேருந்துகள் இயக்கப்படுமா? அதேபோல, செங்கல்பட்டிலிருந்து மாமல்லபுரத்திற்கு நகரப் பேருந்துகளை இயக்குவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புதிதாக ஓட்டுநர்கள், நடத்துநர்கள் நியமனம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மாநகரத்திலே மட்டும், கிட்டத்தட்ட 800 ஓட்டுநர்களும், நடத்துநர்களும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அதற்கிடையே கடந்தகால ஆட்சியில் நியமிக்கப்பட்டவர்கள், நீதிமன்றத்திற்குச் சென்றபோது, அவர்களை நியமித்துவிட்டுத்தான், இவர்களை நியமிக்க வேண்டுமென்று நீதிமன்றம் சொன்ன காரணத்தால், கடந்தகால ஆட்சியிலே நியமிக்கப்பட்ட 2,017 பேருக்கும் இப்பொழுது வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 1,900 பேர் அதிலே பணியில் சேர்ந்துவிட்டார்கள். இன்னும் 100, 120 பேர்தான் மீதம் இருக்கிறார்கள். அது முடிந்தவுடன், தொடர்ந்து முறைப்படி நமது வேலைவாய்ப்புத் துறைமூலம் பெற்று, அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. கிட்டத்தட்ட 8,000 பேர்கள் வேலையிலே சேர்க்கப்படவிருக்கிறார்கள். அதனால், நடத்துநர், ஓட்டுநர் இல்லையென்கின்ற பிரச்சினை இன்னும் ஓரிரு மாதங்களிலே நிச்சயமாகத் தீர்ந்துவிடும். செங்கல்பட்டிலிருந்து மாமல்லபுரத்திற்கும், செங்கல்பட்டிலிருந்து தியாகராய நகருக்கும் பஸ் விட வேண்டுமென்று





இப்பொழுது கேட்டார்கள். நம்முடைய ஆட்சி வந்தவுடன், நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான், விரிவுபடுத்தப்பட்ட புறநகர்ப் பகுதிகளிலிருந்து நேரடியாக நகரத்தை நோக்கிப் பேருந்துகள் விடவேண்டுமென்ற நோக்கத்தோடு, 50 கிலோ மீட்டர் வரை நகரப் பேருந்து இயக்கலாம் என்று போட்ட புதிய சட்டத்தின்கீழ், இப்போது காஞ்சிபுரம் மாவட்டத்தை முழுமையாகக் கொண்டு, பல்வேறு இடங்களிலிருந்தும் நேரடியாக திருச்சிக்குப் பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. அவர்கள்கூட கேட்டார்கள். இப்போது தாம்பரத்திலிருந்து கேளம்பாக்கம் வழியாக மகாபலிபுரம் வரை ஏற்கெனவே பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அவை நல்லமுறையில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்வதையும் கருத்திலேகொண்டு, நிச்சயமாகப் புதிய பேருந்துகள் இயக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கின்ற அனைத்து வழித் தடங்களிலேயும் புதிய பேருந்துகள் இயக்கப்படும் என்று அறிவிக்கின்றார்கள். அது மிகப் பெரிய மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்கு எல்லாம் புதிய பேருந்துகள் வாங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றனவா? அதைப்போலவே, நமது அரசின் விரைவுப் பேருந்துகள், ஆறு ஆண்டுகள், எட்டு ஆண்டுகள், பத்து ஆண்டுகள் எனப் பழைய பேருந்துகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றனவே, அவற்றை மாற்றுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள், 3,000 புதிய பேருந்துகள் வாங்குவதற்காக, இந்த ஆண்டு, இந்த அரசு பணம் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே வாங்கப்பட்ட 2,230 பேருந்துகளும், போக்குவரத்துக் கழகங்கள் தனியாக வாங்கிய 250 பேருந்துகளும் சேர்த்து, இப்பொழுது கிட்டத்தட்ட 95 சதவீதம் பேருந்துகள் கூண்டு கட்டி, அவை ரோட்டிலே போய்க்கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டுகூட, இன்னும் ஓரிரு மாதங்களிலேயே புதிய பேருந்துகள்

வாங்குவதற்கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் பழையனவாக இருக்கின்றன என்று சொன்னார்கள். மொத்தம் 972 புதிய நடைகளிலே, வழித் தடங்களிலே, அந்த விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றிலே வெறும் 110 பேருந்துகள் மட்டும்தான், Ultra Deluxe என்ற வகையிலே நவீன சொகுசுப் பேருந்துகளாக முன்பு இருந்தன. நம்முடைய ஆட்சி வந்தவுடன், 200 புதிய பேருந்துகள் அரசு சார்பாக, அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு, 200 பேருந்துகள் வாங்குவதற்காக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். மீதம் தேவைப்படுகின்ற, வெளி மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய அந்தப் பேருந்துகளை, வெளியிலே இருந்து வாடகைக்கு எடுத்து விடலாம் என்று சட்டமன்றத்தில் அறிவித்து, சட்டமாகக்கூட ஆக்கப்பட்டிருக்கிறது. அதிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதைப் பேசித் தீர்க்கவேண்டும். எனவே, ஓர் ஆறு மாத காலம் அல்லது இன்னொரு மூன்று, நான்கு மாத காலத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் சொன்னதைப்போல, விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அத்தனையுமே புதிய பேருந்துகளாக நிச்சயமாக இருக்கும் என்ற நம்பிக்கையை உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களை, வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் பெற்று பணியமர்த்த இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். தற்பொழுது நம்முடைய மாநில அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பதிவு மூப்பின் அடிப்படையிலே அரசு வேலைவாய்ப்புகள் நிரப்பப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதே முறையைப் போக்குவரத்துத் துறையிலே பின்பற்றினால், பதிவு மூப்பின் அடிப்படையிலே மட்டும் ஓட்டுநர்களையும், நடத்துநர்களையும் பணியமர்த்தினால், அவர்களுடைய உடல் தகுதிகளைப் பார்ப்பதற்கான வாய்ப்பு இருக்கிறதா? ஏனென்று சொன்னால், கண் பார்வை என்பது மிக முக்கியமான விஷயம். ஆகவே, பத்து ஆண்டுகள், இருபது ஆண்டுகள் என, நம்முடைய வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்து, அவர்கள் பதிவு மூப்பின் காரணமாகவே ஓட்டுநராக,



நடத்துநராக நியமிக்கப்பட்டால், அதனால் விபத்துகள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. எனவே, இந்தப் பதிவு மூப்பின் அடிப்படை என்கிற தகுதியை, இதிலே நிச்சயமாகப் பின்பற்ற வேண்டாம் என்றும், நல்ல உடல் தகுதியுடையவர்களை—ஏனென்றால், பொது மக்களுடைய பாதுகாப்பையும் கருத்தில்கொண்டு—நியமனம் செய்வதற்கு, உடல் தகுதி, கண் பார்வை போன்றவற்றையும் பார்த்து நியமனம் செய்ய, அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, ஒரு நல்ல முடிவு எடுக்கலாம்.

(முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. குருசாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**86—**

**தனி வட்டம்**

***10456—திரு. செ. குருசாமி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், அந்தியூரை மையமாகக் கொண்டு தனி வட்டம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. குருசாமி.

**திரு. செ. குருசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி வட்டம், அந்தியூரிலிருந்து 20 கிலோ மீட்டரில் இருக்கிறது. அந்தியூர் தொகுதியிலேயுள்ள பர்கூர் மலைவாழ் மக்கள், ஏதாவது ஒரு சான்றிதழ் வாங்க வேண்டுமென்று சொன்னால், ஏறத்தாழ 60 கிலோ மீட்டர் தூரம் வரை போக வேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்குப் போக்குவரத்து மிக இடையூறாக இருக்கிற அல்லது சரியான வசதி இல்லாத காரணத்தினால், சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் போன்ற சான்றிதழ்களை வாங்குவதற்கு, அவர்கள் இரண்டு, மூன்று நாட்கள் அங்கேயே தங்கியிருந்துதான் அவற்றை வாங்கிச் செல்லவேண்டுமென்கிற சூழ்நிலை ஏற்படுகிறது. 2000 ஆம் ஆண்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தனி வட்டம் அமைப்பதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யும் என்று அப்போது கூறி, அதற்குரிய நடவடிக்கையும் எடுத்திருக்கிறார்கள். ஆனால், 2001 ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக, அந்த நடவடிக்கை கிடப்பிலே போடப்பட்டது. இப்போது அந்தியூரை மையமாக வைத்து தனி வட்டமாக அமைத்தால், அங்கே அந்தியூர் மலைவாழ் மக்கள், பர்கூரிலே இருப்பவர்கள் எல்லாம் ஏறத்தாழ 60 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து வரவேண்டிய சூழ்நிலையைக் குறைத்து, அவர்களுக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்ததாக இருக்கும் என்று சொல்லி, அதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஒரு வட்டம் அமைப்பதற்குக் குறைந்தபட்சம், சுற்றளவு 250 சதுர கிலோ மீட்டர் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதேபோல, வருவாய்க் கிராமங்களும், 30 இருக்க வேண்டும், ஜனத்தொகை ஒரு இலட்சத்திற்கு மேல் இருக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மலைவாழ் மக்கள் சான்றிதழ்களைப் பெறவேண்டுமென்றால், 60 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டுமென்று இங்கே எடுத்துக்கூறிய அந்த இடர்ப்பாட்டைச் சிறப்பு நேர்வாகக் கருதி, அப்படி வருகின்ற நேரத்திலே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலமாக





சம்பந்தப்பட்ட கோட்டாட்சியர், வட்டாட்சியர் அவர்களிடத்திலே தெரிவிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற மலைப் பகுதியிலே, வட்டாட்சியர்கள், கோட்டாட்சியர்கள் நேரடியாகச் சென்று சான்றிதழ்களை வழங்குகின்ற பணியை மேற்கொள்வதற்கு அரசு அறிவுறுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. குருசாமி.

**திரு. செ. குருசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே சான்றிதழ்கள் பெறுவது என்பதை ஓர் உதாரணமாகத்தான் சொன்னேன். மற்ற எந்தவொரு காரியமாக இருந்தாலும், மலைவாழ் மக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பவானி சென்று வருவதற்கு மிகவும் சிரமமான காரியம். ஆகவே, அந்தியூரிலே தனி வட்டம் அமைத்துக் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும். ஒரு இலட்சம் ஜனத்தொகை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அங்கே ஒரு இலட்சம் ஜனத்தொகை என்பது, அந்தியூர் தொகுதியைப் பொறுத்தவரையில் இருக்கிறது. 250 சதுர கிலோ மீட்டர் என்பதைத் தளர்த்தி, இதனைச் சிறப்பு நேர்வாகக் கருதி, தனி வட்டமாக அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தேர்தல் ஆணையத்தினுடைய வரையறை பணிகள் முடிவுறும்தறுவாயில் இருக்கின்றன. அப்பணிகள் முடிவுற்றவுடனே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் ஒன்றியம், 33 பஞ்சாயத்துகளைக் கொண்ட, மலையும் மலையைச் சார்ந்த பகுதியாகவும் இருக்கிற காரணத்தால், அந்தப் பகுதியை இரண்டு ஒன்றியங்களாகப் பிரித்து அறிவிக்க முடியுமா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றியத்தைப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஒன்றியத்தைப் பிரிக்கின்ற பணியை, வருவாய்த் துறை செய்வதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் புறநகரை ஒட்டிய அம்பத்தூர் வட்டம், மிகப் பெரிய வட்டமாக இருக்கிறது. அதனைப் பிரிப்பதற்கான செயற்குறிப்பு அரசினுடைய கவனத்தில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள் சென்னை மாநகரத்திலே அம்பத்தூர் வட்டத்தைப் பிரிக்க வேண்டுமென்றும், சென்னை மாநகரத்திலே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் இருக்கின்ற பல்வேறு பகுதிகளில், இன்னும் வட்டங்களை உயர்த்த வேண்டும் என்றும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நான் ஏற்கெனவே இதே அவையிலே, தேர்தல் ஆணையத்தினுடைய அந்தப் பணிகள் முடிவடைந்தவுடனே மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, அந்த நிலையிலே நிச்சயமாக அரசு அதைப் பரிசீலிக்கும் என்று பலமுறை தெரிவித்திருக்கின்றேன். தேர்தல் ஆணையத்தினுடைய அந்தப் பணிகள் முடிவடையும்தறுவாயில் இருக்கின்றன. முடிவடைந்தவுடனே, தமிழகத்திலே எங்கெங்கு அவசியமாகத் தேவைப்படுகின்றனவோ, அங்கங்கு அதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, நிச்சயமாக இந்த அரசு முடிவு எடுக்கும்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**87—**

**மருத்துவக் கல்லூரி**

***11238—திரு. கோ. ஐயப்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூரில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?



**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூரில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன்.

**திரு. கோ. ஐயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். பொன்விழாக் காணும் தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களின் நல்லாட்சியில், இப்பொழுது 100 ஆண்டை நிறைவு செய்யும் பழமையும், சிறப்பும் வாய்ந்த கடலூர் அரசு மருத்துவமனை, 1907-லே ஆரம்பிக்கப்பட்டது. அனைத்து வசதிகளும் உள்ள மருத்துவமனை. சராசரியாக ஒரு நாளைக்கு 2,000 முதல் 3,000 புற நோயாளிகள் சிகிச்சைகள் பெற வந்து செல்கின்றார்கள். 458 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை. மேலும், தண்ணீர் வசதியுடன்கூடிய அந்த மருத்துவமனைக்குச் சொந்தமான 37 ஏக்கர் நிலம், காலியாக உள்ளது. நிதிச் செலவுகள், கட்டடச் செலவுகள் குறைந்த அளவிலேயே தேவைப்படும் என்பதால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், 100-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்ற இந்த மருத்துவமனைக்குச் சிறப்பைச் சேர்க்கின்ற விதமாக, முன்னுரிமை அடிப்படையிலே, இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரி அமைய ஆவன செய்வாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், அரசு மருத்துவக் கல்லூரி இல்லாத அத்துணை மாவட்டங்களிலும், அரசு மருத்துவக் கல்லூரி வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருப்பவர்கள். ஆகவே, ஒவ்வொரு வருடமும், அதற்கு வேண்டிய நிதியை ஒதுக்கி, சென்ற ஆண்டு ஒன்று, இந்த ஆண்டு இரண்டும் கொடுத்திருக்கிறார்கள். உங்களுடைய அமைச்சரும் என்னைப் பார்க்கின்ற நேரத்திலே என்னிடம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உங்கள் மக்களுடைய கோரிக்கைகளை எங்கள் கவனத்திற்குச் சொல்கிறார்கள். உள்ளபடியே, நம்முடைய கடலூர் மாவட்டம், பின்தங்கிய மாவட்டம்தான்.

உங்களுடைய கோரிக்கைகளை நம்முடைய முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று தகுந்த நடவடிக்கையை நான் எடுப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன்.

**திரு. கோ. ஐயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூறாவது ஆண்டை நிறைவு செய்கின்ற இந்த மருத்துவமனைக்குச் சிறப்புச் சேர்க்கின்ற விதமாக, முன்னுரிமை அடிப்படையிலே, வருகின்ற ஆண்டிலாவது முன்னுரிமை தந்து, மருத்துவக் கல்லூரி அமைய ஆவன செய்வாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு செல்வேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலே ஒரு மிகச் சிறந்த பிரிவைத் திறந்து வைத்திருக்கின்றார்கள். Gastro-enterology என்று சொல்லப்படுகின்ற அந்தப் பிரிவு, பெருமைப்படத்தக்க பிரிவாக, இப்போது ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிக்கு ஒரு புதிய அந்தஸ்தை அளித்துக் கொண்டிருக்கிறது, அதிலே, ஓர் உணர்ச்சிமயமான உரையையும் மாண்புமிகு கலைஞர் அவர்கள் நிகழ்த்தி இருக்கின்றார்கள். அது உண்மையிலேயே வரவேற்கத்தகுந்த ஒன்று. அத்தகைய வகையிலே, அரசாங்க பொது மருத்துவமனையாக இருக்கின்ற Government General Hospital-உம் விரிவடைய வேண்டிய நிலையிலே இப்போது இருக்கிறது. நம்முடைய Central Jail, இப்போது காலி செய்யப்பட்ட நிலையிலே, அந்த Central Jail இருந்த இடத்திலே, மத்திய சிறைச்சாலை இருந்த இடத்திலே, இணைப் பொது மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? அரசுப் பொது மருத்துவமனையிலே, ஸ்டான்லியிலே இருப்பதைப்போல, சிறப்புக் கட்டணப் பிரிவைத் துவக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதனைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைப் பகுதியை, சுகாதாரத் துறைக்குக் கேட்கிற அந்தக் குறிப்பு, அரசினுடைய பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. இரண்டாவது, ஒவ்வொரு மருத்துவக் கல்லூரிக்கும் ஒரு தனிச் சிறப்பு உள்ளது. ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியிலும், ஒவ்வொரு பிரிவும் தனித் தனியாகச் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்றது. அந்தப் பிரிவுகளை வலு செய்கின்ற வேலையை நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும் என்கிற திட்டத்தின் அடிப்படையில், நடப்பாண்டே, கடலூர் மாவட்டத்தில் தமிழக அரசின் சார்பாக—பக்கத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் தொடங்கியாகிவிட்டது—உடனடியாக நடப்பாண்டிலே தொடங்குவதற்கு அரசு முன்வருமா? எங்கள் மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மாண்புமிகு மருத்துவர் சின்ன அய்யா அவர்கள், N.L.C. நிர்வாகத்தை அழைத்து, N.L.C. நிர்வாகம் உடனடியாக அங்கு ஒரு மருத்துவக் கல்லூரியைத் தொடங்க வேண்டும் என்று கேட்டு, அதற்கான முன்குறிப்பெல்லாம் தயார் செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழக அரசும், நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், N.L.C. நிர்வாகத்தினுடைய அதிபர் அவர்களை அழைத்து, உடனடியாக இந்த ஆண்டே, தமிழக அரசினுடைய நிதியின்மூலமோ அல்லது, ஆண்டு ஒன்றுக்கு 1,200 கோடி ரூபாய் இலாபம் ஈட்டுகின்ற அந்த N.L.C. நிர்வாகத்தின்மூலமாகவோ, கடலூர் மிகப் பின்தங்கிய மாவட்டம் என்கிற காரணத்தால், முன்னுரிமை அடிப்படையில், அங்கு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மருத்துவக் கல்லூரி

[2007 ஏப்ரல் 18

தொடங்குவதற்கு 100 கோடி ரூபாய் வேண்டி இருக்கிறது. இந்த ஆண்டு இரண்டு மருத்துவக் கல்லூரிகளுக்கு, தலைவர் அவர்கள், அனுமதி வழங்கியிருக்கிறார்கள். இதற்கு 200 கோடி ரூபாய், போன ஆண்டு 100 கோடி ரூபாய், மொத்தம் 300 கோடி ரூபாய் என்று மருத்துவக் கல்லூரிகளுக்கு மட்டும் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல, N.L.C. முன்வருவார்கள் என்று சொன்னால் நிச்சயமாக, வேகமாக இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

**திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், பழனியில் சித்த மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டு இயங்கி வந்தது. அதற்கு 40 ஏக்கர் நிலமும் வாங்கப்பட்டது. அந்தச் சூழ்நிலையில், போதிய வசதி இல்லை என்று மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததன் காரணமாக, முந்தைய அரசு சித்த மருத்துவக் கல்லூரியைச் சென்னைக்கு மாற்றிவிட்டது. எனவே, அந்தச் சித்த மருத்துவக் கல்லூரியை மீண்டும் பழனிக்கு மாற்றுவதற்கு அரசு பரிசீலிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தனியாகக் கேள்வி போடுவார்கள் என்று சொன்னால், அதற்குச் சரியான விடை அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து திருப்பதி போகின்ற ஆயிரக்கணக்கான வாகனங்கள் தினமும் திருவள்ளூரைத் தாண்டிப் போக வேண்டியிருக்கின்றது. விபத்துகள் அதிகமாக ஏற்படுகின்ற அந்தத் திருவள்ளூர் பகுதியில் உடனடியாக ஒரு மருத்துவக் கல்லூரியை அமைக்கின்ற எண்ணம் அரசுக்கு உண்டா? அல்லது சித்த மருத்துவக் கல்லூரியையாவது திருவள்ளூரிலே அமைக்கின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2007 ஏப்ரல் 18]

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்திலே இந்தக் கோரிக்கைகள் எல்லாம் பரிசீலிக்கப்படும். பொதுவாக, மருத்துவக் கல்லூரிகளை நாம் ஆரம்பிப்பதன்மூலமாக, அந்த மாவட்ட மக்களுக்கு மிகப் பெரிய மருத்துவ வசதிகள் கிடைக்கின்றன. குறைந்தது 500 படுக்கை வசதிகள் கொண்ட, எல்லாவிதமான வசதி வாய்ப்புள்ள மருத்துவமனையாக மருத்துவக் கல்லூரி திகழ்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், மாண்புமிகு அண்ணன் சுதர்சனம் போன்றவர்களெல்லாம் கேட்பதில் நியாயம் இருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும், நிதிநிலையினுடைய சூழ்நிலையைப் பொறுத்து, நம்முடைய முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, தகுந்த பணிகளை நிறைவு செய்வேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

நூலகம் 227570 சென்னை-600 008

88—

**ஜவுளிப் பூங்கா**

***11778—திரு. த. தியோடர் ரெஜினால்டு:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதி, பள்ளியாடியில் கைத்தறி ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பத்மநாபபுரம் தொகுதி, பள்ளியாடியில் கைத்தறி ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தியோடர் ரெஜினால்டு.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான பத்மநாபபுரம் பள்ளியாடிப் பகுதியில், சுமார் 500 குடும்பங்கள் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. பக்கத்துத் தொகுதியைச் சார்ந்த

[2007 ஏப்ரல் 18

ஊர்களான அணஞ்சிகோடு, அம்சி போன்ற பகுதிகளிலும், சுமார் 500-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. எங்கள் மாவட்டத்தில், நாகர்கோவில், வடசேரிக்கு அடுத்தபடியாக மேற்குப் பகுதியில் அதிகமாகக் கைத்தறித் தொழில் செய்கின்ற பகுதி, எங்கள் பகுதியாகும். எங்கள் மாவட்டத்தில் குறிப்பாக, பெரிய அரசு நிறுவனங்களோ அல்லது தனியார் தொழிற்சாலைகளோ இல்லை. எங்கள் மாவட்டத்தில் இதே பள்ளியாடிக்கு அருகில் சுமார் 50 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய சீரிய முயற்சியால், எங்கள் மாவட்டத்தில் குளச்சல் துறைமுகம் வர இருக்கிறது. இந்த மேற்குப் பகுதியான பள்ளியாடிப் பகுதியானது, திராவிட இயக்கத்திற்கு வித்திட்ட பகுதியாகும். எங்கள் மாவட்டத்தில் நாகர்கோவில் தலைநகரத்திற்கு அடுத்தபடியாக, கேரள மாநிலத்திற்கு மிக அருகில் இருக்கின்ற இந்தப் பகுதியானது, திராவிட இயக்கத்திற்கு வழிகாட்டிய வித்திட்ட பகுதி என்ற முறையிலும். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** எங்கள் மாவட்டத்திற்கு எந்தவொரு பெரிய தொழிற்சாலை இல்லை என்ற நிலையிலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து, ஒரு கைத்தறி ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திற்கு, மொத்தமாக 13 திட்டங்களை இப்போது நடைமுறைப்படுத்துகிற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அவற்றிலே இரண்டு திட்டங்கள் முடிவடைந்துவிட்டன; நான்கு திட்டங்கள் முடிவடைகிற நிலையிலும், 7 திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதிலே இந்த அரசால் வேகம் காண்பிக்கப்பட்டு வருகிற நிலையிலும் உள்ளன. பள்ளியாடியைப் பொறுத்தவரை, இருக்கிற நெசவாளர்களுக்குரிய பாதுகாப்பு, ஜவுளிப் பூங்கா என்கிற முறையில் அல்ல; வேறு ஏதாவது பாதுகாப்பு, அங்கு இருக்கிற நெசவாளர்களுக்குத் தலைவர் கலைஞர் அரசு கொடுக்கிற ஒரு நிலை இருந்தால், உடனடியாக அதற்குரிய நிலை உருவாக்கிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2007 ஏப்ரல் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தியோடர் ரெஜினால்டு.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மத்திய அரசாங்கம், கடந்த ஆண்டிலே 100, 110 கைத்தறிக் குழுமங்களை- Handloom clusters—என்ற அமைப்புகளை ஏற்படுத்தி இருக்கிறது. இன்னும் சொல்லவேண்டுமென்றால், இந்தியாவிலேயே கைத்தறியில் முதன்மையான மாநிலமாகத் தமிழகம் இருந்துகொண்டிருக்கிற இந்த நேரத்திலே, மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்களால், 180 ஜவுளிப் பூங்காக்கள் இந்தியா முழுவதற்கும் பொதுவாக இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கின்றன; அவற்றிலே தமிழகத்திற்கு முன்னுரிமை அளித்து, அதிகமாகக் கேட்டுப் பெறுவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களிடம் கோருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து வருகின்ற திட்டங்களிலே, நம்முடைய மாநிலத்திற்கென்று மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் அண்ணன் ஈ.வி.கே.எஸ்., அவர்களிடம் பேசியிருக்கிறோம். கைத்தறி நெசவாளர்களுடைய முக்கியத்துவம் கருதி, தமிழகத்திற்கு அதிக நிதியும், அதிக திட்டங்களும் கண்டிப்பாகக் கொடுக்கப்படும் என்ற உத்தரவாதம் மத்திய அரசிடமிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**89—**

## இணைப்புச் சாலை

***14726—திரு. கோ. எதிரொலி மணியன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, ஓசூர் கிராமத்திலிருந்து ஈயகொளத்தூர் வரை இணைப்புச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதிக்குட்பட்ட, சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஓசூர்-ஈயகொளத்தூர் சாலை, ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாலையாகும். இதை மேம்பாடு செய்கின்ற திட்டம், அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்,*

**திரு. கோ. எதிரொலி மணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது போளூர் தொகுதிக்குட்பட்ட ஓசூர்-ஈயகொளத்தூர் ஆகிய இந்த இரண்டு கிராமங்களுக்கும் இடைப்பட்ட தூரம், 2 கிலோ மீட்டரே இருக்கிறது. அதிலும் குறிப்பாக, ஈயகொளத்தூர் செல்கின்ற மக்களும், பக்கத்திலே இருக்கின்ற சாணார்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் செல்கின்ற மாணவர்களும், அருகிலுள்ள சர்க்கரை ஆலைக்கு அரைவைக்குக் கரும்பைக் கொண்டு செல்லும் கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளும் ஓசூரிலிருந்து 2 கிலோ மீட்டர் தூரம் செல்வதற்குப் பதிலாக, தற்போது 15 கிலோ மீட்டர் தூரம் சுற்றிச் செல்லவேண்டியிருக்கிறது. எனவே, பொதுமக்களும், மாணவர்களும் தற்போது பயன்படுத்துகின்ற ஒத்தையடிப் பாதையை மாற்றி, வாகனங்கள் செல்கின்ற அளவுக்கு, மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாகப் பாதை அமைத்துத் தருவார்களா எனவும், இடையிலே செய்யாற்றின் குறுக்கே தரைப் பாலம் அமைப்பார்களா எனவும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற ஈயகொளத்தூர் முதல் ஓசூர் வரையிலான சாலை, சுமார் 2 கிலோ மீட்டர் சாலை. இது ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாலை என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். இந்தப் பகுதியில், இதுமட்டுமல்லாமல், மண்டகொளத்தூர், ஈயகொளத்தூர், அரம்பலூர், திருமலை, தேவிகாபுரம் மற்றும் ஓசூரில் சில கிராமங்கள் இருக்கின்றன.*





*மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போல, கரும்பு விவசாயிகள் அதிகம் உள்ள பகுதியாகவும் இருக்கின்றது. மேலும், மாண்புமிகு உறுப்பினரவர்களே, ஒத்தையடிப் பாதையாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எனவே, கிராமச் சாலைத் திட்டத்திலே அந்தச் சாலையை மேம்படுத்த வேண்டுமென்று சொன்னால், முதலிலே அந்தப் பகுதியிலே நிலத்தைக் கையகப்படுத்தவேண்டும். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள், ஊரக வளர்ச்சியின்மூலம் செயல்படுத்த நிறைய திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், அதேபோன்று மத்திய அரசு தரக்கூடிய PMGSY திட்டம், ஊரக வளர்ச்சியின் CRIDP திட்டம் போன்ற திட்டங்கள் பெருமளவில் எடுக்கப்படுகின்றன. நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் ஓரே ஒரு திட்டம், நபார்டு வங்கியின் ஒத்துழைப்போடுதான் கிராமச் சாலைகள் மேம்படுத்தப்படுகின்றன. கடந்த 14 ஆம் தேதிகூட, மத்திய தரைவழி மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் முன்னிலையில், மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் தொகுதியில் நடைபெற்ற துறையின் விழாவிலே, நானும் இதைப்பற்றிக் குறிப்பிட்டேன். ஏனென்று சொன்னால், துறைக்கு அதிகமாக வருகின்ற கோரிக்கைகளில், கிராமச் சாலைகளை மேம்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகள்தான் அதிகம் வருகின்றன. உள்ளாட்சிமன்றப் பிரதிநிதிகளானாலும் சரி, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்தும் இதுபோன்ற கோரிக்கைகள்தான் எங்களுக்கு வருகின்றன. எனவே, இதற்குச் சிறப்பு நிதி வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அவர்களும் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர், தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, இவ்வரசு எந்தப் பணியைச் செய்வதாக இருந்தாலும், நிலத்தைக் கையகப்படுத்திய பிறகுதான், திட்டப் பணிகளைத் தேர்வு செய்வது என்று கொள்கை முடிவு எடுத்திருக்கிறது. அந்த அடிப்படையில், முதலில் அந்தப் பகுதியில் நிலம் கையகப்படுத்தப்படவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், செய்யாற்றிலே ஒரு பாலம் அமைக்கப்படவேண்டும் என்றும் சொன்னார். எனவே, இதுபோன்றவற்றைக் கவனத்திலே எடுத்துக்கொண்டு, எதிர்காலத்திலே மாண்புமிகு உறுப்பினரவர்களின் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.*

**திரு. கோ. எதிரொலி மணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.*

***திரு. சி. கோவிந்தசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை தொடர்புடைய ஒரு கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களின்மூலம் நான் விடை காண விரும்புகின்றேன். இரயில்வே பாதையில் ஒருபுறம் நெடுஞ்சாலைத் துறையின் ரோடும், மற்றொருபுறம் நகராட்சியின் ரோடும் இருக்கிறது. ஆகவே, அந்த இரயில்வே பாதையைக் கடப்பதற்கு, நெடுஞ்சாலைத் துறையின்மூலமாக பாலம் அமைக்க வாய்ப்பிருக்கிறதா என்பது ஒன்று. அதைத் தொடர்ந்து, திருப்பூர் நகரத்தில், இப்போது சுற்றுச் சாலையிலே பாலம் அமைக்க அனுமதி தந்திருக்கிறீர்கள். அதற்காக நன்றி. நகரத்தினுடைய மையப் பகுதியில், ஒரேயொரு இரயில்வே மேம்பாலம்தான் திருப்பூரின் தெற்கு வடக்குப் பகுதியைக் கடப்பதற்கு இருக்கிறது. கொங்கு நகர் மெயின் ரோடிலும், இராமகிருஷ்ணாபுரம் பகுதியிலும் இரண்டு இரயில்வே கேட்டுகள் இருக்கின்றன. நீண்ட நெடிய நேரம், போக்குவரத்திற்காகக் காத்திருக்க வேண்டிய நிலைமை இருக்கிற காரணத்தினால், அந்த இடத்தில் ஏதாவது ஒரு இரயில்வே மேம்பாலம் அமைக்க வாய்ப்பு இருக்கிறதா; அதற்கு அரசு முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரயில்வே மேம்பாலத்தைப் பற்றி இங்கே எழுப்பியிருக்கிறார்கள். இரயில்வே மேம்பாலப் பணியானாலும், அதேநேரத்தில், கீழ்பாலப் பணியானாலும், நம்முடைய இரயில்வே துறையின் மூலமாகவும், நெடுஞ்சாலைத் துறையின்மூலமாகவும், சரிபாதியாகப் பங்கிட்டு, அந்தத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நேரடியாக அதுபோன்ற பாலங்களை அமைக்கவேண்டுமென்று சொன்னால், அது தேவைப்படுமானால், நெடுஞ்சாலைத் துறை கோரிக்கை வைத்தாலும் சரி, உள்ளாட்சி அமைப்பு கோரிக்கை வைத்தாலும் சரி, முழுத்*





*தொகையையும் செலுத்தி, அந்தப் பாலப் பணியைச் செய்யவேண்டும். அந்த அடிப்படையிலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற, அந்த இரண்டு பாலங்களையும் திருப்பூர் பகுதியிலேயும் கொங்கு நகர் பகுதியிலேயும், நான் நன்கு அறிவேன். அந்தப் பகுதிகளில் இரயில்வே கடவில் போக்குவரத்து எண்ணிக்கை கருத்தில் கொள்ளப்பட்டு, கடந்த நிதியாண்டில், மத்திய இரயில்வே துறைக்குப் பரிந்துரை செய்யப்பட்டு, தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குரிய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. எனவே அந்தப் பாலப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.*

**திரு. அ. ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, மேலமணக்குடி, கீழமணக்குடி கிராமங்களை இணைக்கக்கூடிய சாலையாக ஒரு பெரிய மேம்பாலம், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் கட்டப்பட்டு இருந்தது. சமீபத்தில் நிகழ்ந்த சுனாமியின் தாக்கத்தால் அது அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு வந்த சமயம், நேரடியாக அதைப் பார்வையிட்டிருக்கிறார்கள். இப்போது அங்கே சாலை வசதி இல்லாததால், பொதுமக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, மக்களின் நலனைக் கருதி, மேலமணக்குடி, கீழமணக்குடி இணைப்புப் பாலத்தைத் தமிழக அரசு உடனடியாகக் கட்டித்தர நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே மேலமணக்குடி, கீழமணக்குடி பகுதியை இணைக்க, ஏற்கெனவே அமைக்கப்பட்டிருந்த பாலம் சுனாமிப் பேரலையால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. அந்தப் பகுதியை, அந்த மாவட்டத்திற்கு ஆய்வுக்குச் சென்றிருந்தபோது நானும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும், அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் பிரதிநிதிகளும், அரசு அலுவலர்களும் பார்வையிட்டோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனக்கு இருந்த பணியின் காரணமாக வர இயலாமல் போய்விட்டது என்பதைக்கூட*

கட்டாயமாக எடுத்துச் சொல்லியிருந்தார்கள். அந்த அடிப்படையில், அந்தப் பாலப் பணியைப் பார்வையிட்டிருக்கின்றோம். அது, உலக வங்கியின் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்போது விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலை புகுந்திருக்கிறது. எதிர்வரும் மாதத்தில், இரண்டாவது வாரவாக்கில் அதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட இருக்கிறது. அதற்குப் பிறகு, அந்தப் பாலப் பணி நிச்சயம் நடைபெறும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 90. மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**90—**

**கால்நடை மருத்துவமனை**

***12287—திரு. சபா. இராஜேந்திரன்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, திருத்துறையூர், வரிஞ்சிபாக்கம், பைத்தாம்பாடி மற்றும் தொரப்பாடி (பேரூர்) ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, திருத்துறையூர், வரிஞ்சிபாக்கம், பைத்தாம்பாடி மற்றும் தொரப்பாடி (பேரூர்) ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவமனை துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழ வாய்ப்பு இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்.*



**திரு. சபா. இராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது நெல்லிக்குப்பம் தொகுதியில் திருத்துறையூர், வரிஞ்சிபாக்கம், பைத்தாம்பாடி ஆகிய கிராம ஊராட்சிகளும், தொரப்பாடி பேரூர் பகுதியும் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும், முழுமையாக வாழ்கின்ற பகுதி. விவசாயத்திற்கு அடுத்து, கால்நடை வளர்ப்பு, இந்தப் பகுதி மக்களின் வருமானத்திற்கு வழியாக இருந்துவருகிறது. திருத்துறையூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம ஊராட்சிகளில், 9,511 கால்நடைகளும், பைத்தாம்பாடி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில், 10,101 கால்நடைகளும், அதேபோல, தொரப்பாடியில் 6,751 கால்நடைகளும் இருந்து வருகின்றன. எனவே, இந்தப் பகுதிகளுக்குக் கால்நடை மருத்துவமனை அவசியம் தேவைப்படுகிறது. மக்கள் தேவையை உணர்ந்து செயல்படுகின்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசில் திருத்துறையூர், பைத்தாம்பாடி போன்ற ஊர்களில், கால்நடை மருந்தகங்களை அமைத்துத் தரவும், தொரப்பாடியில் செயல்படுகின்ற கால்நடை கிளை நிலையத்தைக் கால்நடை மருந்தகமாகவோ அல்லது கால்நடை மருத்துவமனையாகவோ தரம் உயர்த்தித்தரவும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

*(முற்பகல் 10-30)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர்.*

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்ட இடங்களில் தொரப்பாடி கிராமத்தில் ஏற்கெனவே ஒரு கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. அதைத் தற்சமயம் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு எதுவும் இந்த அரசிடம் இல்லை. அதுபோல, பிற கிராமங்களான திருத்துறையூர், வரிஞ்சிபாக்கம் மற்றும் பைத்தாம்பாடி கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை மற்றும் கால்நடைக் கிளை நிலையங்களுக்கிடையே உள்ள தூரத்தைக் கணக்கிட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படி, உரிய விதிமுறைகளுக்குட்பட்டு இருப்பின், அந்தப் பகுதிகளில் புதிய கால்நடைக் கிளை நிலையமோ அல்லது மருந்தகமோ தொடங்க இந்த அரசு அவருடைய கோரிக்கையைப் பரிசீலிக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு திரு. சபா. இராஜேந்திரன்.*

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், எனது காவேரிப்பட்டணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நெடுங்கல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க, ஊர்ப் பொதுமக்கள், அரசு அதிகாரிகள் ஒத்துழைப்போடு சுமார் 60 சென்ட் நிலம் ஒதுக்கி சுமார் 5 வருட காலமாகக் காத்திருக்கிறார்கள். இதுவரை கால்நடை மருத்துவமனை அமைக்கப்படவில்லை. அங்கு கால்நடை மருத்துவமனை அமைத்தால் சுமார் 5 பஞ்சாயத்து மக்கள் பயன்பெறுவார்கள். எனவே, உடனே கால்நடை மருத்துவமனை அமைக்க, அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) மதுபானக் கடையில் 'பார்' நடத்த, பேரவைத் தலைவரின் உதவியாளர் பரிந்துரைக் கடிதம் வழங்கியது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ. பன்னீர்செல்வம், என்ன? சொல்லுங்கள்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுடைய அரசியல் நேர்முக





உதவியாளராக இருக்கிற திரு. மு. வெங்கடேசன் அவர்கள், அரசு முத்திரையுடன்கூடிய, தங்களுடைய letter pad-ல் திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கின்ற தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தினுடைய மாவட்ட மேலாளருக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். அதாவது புளியறை என்கிற ஊரில் TASMAC கடை எண் 10886, மற்றும் பார்டர் பகுதியிலுள்ள கடை எண் 10899 என்ற இரண்டு கடைகளையும் அவர் கோடிட்டுக்காட்டி, அந்த இரண்டு கடைகளையும், நம்முடைய சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கு மிகவும் வேண்டியவர் என்றும், அவற்றைச் செங்கோட்டையிலே இருக்கிற நகர தி.மு.க. இளைஞரணியினுடைய அமைப்பாளர் திரு. எம். ரபீக் காதர் மைதீன் அவர்களுக்கு வழங்கவேண்டும் என்றும், அவர் கடிதத்தின்வாயிலாக அந்தக் குறிப்பினை எழுதி இருக்கிறார்கள். மாவட்ட மேலாளர் திரு. கோ. சிவசங்கரன் அவர்களும், 28-2-2007 அன்று ஓர் உத்தரவு பிறப்பிக்கின்றார். அந்த உத்தரவில், பார்டர் பகுதியிலுள்ள கடை எண் 10899 என்ற மதுக் கூடத்தில், bar நடத்துவதற்கு அனுமதி தருவதாகவும் அவர் உத்தரவிட்டிருக்கிறார். ஆக, சட்டப் பேரவைத் தலைவர், திரு. மு. வெங்கடேசன், திரு. கோ. சிவசங்கரன் ஆகிய மூவரும் அரசுத் துறையைச் சார்ந்த பொது ஊழியர்கள். தங்களுக்குரிய அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதனைச் சட்டபூர்வமாக, ஆதாரத்துடன், தமிழ்நாடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநருக்குப் புகாராக, எழுத்துமூலமாக வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் சபாநாயகர் அவர்கள், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள், தங்களுடைய அதிகார வரம்பை, எல்லையை மீறி அவருக்குக்கீழ் பணியாற்றுகின்ற திரு. வெங்கடேசன் அவர்கள், "bar நடத்துவதற்கு அனுமதி வழங்க வேண்டும்" என்று தங்களுடைய letter pad-ல் குறிப்பிட்டதிலிருந்து அதிகாரத்தை அவர் துஷ்பிரயோகம் செய்திருக்கிறார் என்பது ஊர்ஜிதமாகிறது. ஆகவே, அந்த ஊர்ஜிதத்திலிருந்து, மாவட்ட மேலாளர் அவர்களும், கடையை அவருக்குக் கொடுத்திருக்கிறார் என்பது தெரிகிறது. இதிலிருந்து அரசினுடைய நிதி இழப்புக்குக் காரணமாக இருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் தங்களுடைய பொறுப்பிலிருந்து கடமை தவறியதாகவே நாங்கள் கருதுகிறோம். இதற்குச் சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் என்ன பதில் அவர் தரப்பிலிருந்து தரப் போகிறார் என்பதை நான் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தயவுசெய்து ஆளும்கட்சிக்காரர்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பதில் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) பதில் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) தயவுசெய்து கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Please. இல்லை, தயவுசெய்து கொஞ்சம் உட்காருங்கள். பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், சொல்லுங்கள்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டப் பேரவை விதிகள், சட்டப் பேரவைத் தலைவருக்கு, சில விசேஷமான உரிமைகளையும், அங்கீகாரத்தையும் தந்திருக்கின்றன. தங்கள்மீது குற்றச்சாட்டுச் சொல்வதோ அல்லது தங்கள்மீது ஏதாவது ஒரு பிரச்சினையைக் கிளப்புவது என்று சொன்னால், அதற்கு முறையான விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின்படி, அவர்கள் அறிக்கை கொடுத்துவிட்டு, அதற்குப் போதுமான கால அவகாசம் கொடுத்துவிட்டுத்தான் கொண்டு வரவேண்டுமேயொழிய, இப்படி எடுத்தவுடனே Zero Hour-லே சாதாரணமாக எழுப்புகின்ற பிரச்சினையல்ல இது. எனவே, அப்படிப்பட்ட பிரச்சினையை நீங்கள் அனுமதிக்கக் கூடாது. அதை அவைக் குறிப்பில் நீங்கள் ஏற்றக் கூடாது. சட்டப் பேரவை விதிப்படி, சபாநாயகர் அவர்கள்மீது எப்படிப் புகார் சொல்ல வேண்டுமோ, அப்படிப் புகாரை அவர்கள் கொண்டு வந்தால்தான், அதை நீங்கள் அனுமதிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற பிரச்சினை, இது பேரவைத் தலைவர் சம்பந்தப்பட்ட பிரச்சினை. இந்தப் பேரவையை வழி நடத்தக்கூடிய, பேரவையிலே எல்லோருக்கும் பாதுகாப்பு வழங்கக்கூடிய, எல்லோருக்கும் நியாயம் வழங்கக்கூடிய, பொறுப்புள்ள தலைவர்மீது ஒரு குற்றச்சாட்டு என்று சொன்னால், அந்தக் குற்றச்சாட்டை உங்களிடத்திலே கேட்டிருக்கலாம்; அல்லது விதிமுறைப்படி அவர்கள் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. "எடுத்தேன் கவிழ்த்தேன்"



என்ற போக்கிலே, அவசரக் கோலத்திலே இப்படிப்பட்ட ஒரு பிரச்சினையை எடுத்துச் சொல்வது என்பது, எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. எல்லோருக்கும் பொதுவாக இருப்பவர் பேரவைத் தலைவர். ஆகவே, கட்சிக்கு அப்பாற்பட்டு, நடுநிலையோடு இருக்கிற பேரவைத் தலைவரின் பிரச்சினை என்கிற காரணத்தினாலே, இதை அவையிலே ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படிப்பட்ட ஒரு முன்னுதாரணத்தை அவையிலே ஏற்படுத்தாதீர்கள். ஆகவே, இதை அவைக் குறிப்பிலே ஏற்றக் கூடாது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், தங்களைப் பற்றி ஒரு புகார் கடிதத்தை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரிடத்திலே கொடுத்ததாகவும், அதிலே, தங்களுடைய உதவியாளர் ஒரு குறிப்பிட்ட நபருக்கு உதவி செய்ய வேண்டுமென்று ஒரு கடிதம் கொடுத்ததாகவும், இது, பேரவைத் தலைவர் தன்னுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தது ஆகாதா என்று கேட்டும் ஒரு வினா எழுப்பியுள்ளார். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், பீட்டர் அல்போன்ஸ் மற்றும் நம்முடைய கோ.க. மணி, நம்முடைய கோவிந்தசாமி போன்றவர்கள் எல்லாம் சொன்னார்கள். இந்த அவையிலே அவைத் தலைவர்மீது ஒரு பிரச்சினை எழுப்புவது என்றால், ஒன்று, எழுத்துமூலமாகக் கொடுக்க வேண்டும். இரண்டாவது, புகார் எழுப்புவதற்குச் சட்டத்திலே இடமில்லை. பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்குத்தான் அதிகாரம் இருக்கிறதே தவிர, புகார் சொல்வதற்கு எந்தவிதமான சட்ட விதிமுறைகளிலும் இடமில்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், இந்த ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவருடைய letter pad-லே அவருடைய உதவியாளர் ஒரு கடிதம் கொடுத்ததாகச் சொன்னார். அந்தக் கடிதத்தை அவர்கள், ஊழல் தடுப்பு அதிகாரிக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அது அவருடைய letter pad-லே இல்லை; உதவியாளர் letter pad-லேதான் அந்தக் கடிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஒன்று. இரண்டாவது, அமைச்சராக இருந்தவர், அதுவும் முதலமைச்சராகவே இருந்தவர், நம்முடைய மாண்புமிகு பன்னீர்செல்வம் அவர்கள். அமைச்சர்கள் சட்டமன்றத்திற்கு வருகின்ற நேரத்திலே, ஒரு நாளைக்கு நூற்றுக்கணக்கானவர்கள் அவர்களிடத்திலே

வருவார்கள். அவர்கள், சில உதவிகள் கேட்பார்கள். மருத்துவமனைக்குப்போய்ச் சேரவேண்டுமென்று கேட்பார்கள். கடிதம் கொடுப்பது உதவியாளருடைய வழக்கம். இன்னும் சொல்லப்போனால், என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய வீட்டிலே நூறு பேர் இருந்தால், நான் யார் வருகிறார்கள் என்றுகூட பார்ப்பதில்லை. எங்கே கையெழுத்துப் போடச் சொல்கிறார்களோ, அங்கே கையெழுத்துப் போடுவேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு நாள், நம்முடைய மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், மத்திய அமைச்சர், முரசொலி மாறன் அவர்கள், "யார் நீட்டினாலும், கையெழுத்துப் போடுகிறீர்களே!; 'அமைச்சர் பதவியையே இராஜினாமா செய்கிறேன்' என்று எவனாவது எழுதியிருக்கப் போகிறான்; பார்த்து, படித்து, கையெழுத்துப் போடுங்கள்" என்றார்கள். "அப்படி, அவர்கள் எடுத்துக்கொண்டு வந்து, நான் கையெழுத்துப் போட்டுவிட்டால், அது உள்ளபடியே எனக்கு மிகவும் மகிழ்ச்சி தரக்கூடியது; ஏனென்றால், அமைச்சர் பதவி போனால்கூட, நான் அதைப்பற்றிக் கவலைப்படமாட்டேன்" என்றுகூட சொல்லியிருக்கிறேன்.

நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இங்கு சொல்லப்பட்டிருக்கின்ற குற்றச்சாட்டில், எந்த அளவிற்கு உண்மை இருக்கிறது என்று பார்க்க வேண்டும். ஓர் உதவியாளர் கடிதம் கொடுத்தார். அந்தக் கடிதத்தை ஏற்றுக்கொண்டு அவருக்கு உத்தரவு போட்டாரா என்றால், இல்லை. அரசாங்கம் டெண்டர் கேட்டது. அவர் கொடுத்த கடிதத்தின்மீது, ரபீக் காதர் முகைதீன் அவர்களுக்கு உத்தரவு வழங்கப்படவில்லை. அவர் டெண்டர் கேட்ட நேரத்திலே, அதிகமான தொகைக்கு டெண்டர் கேட்ட காரணத்தினாலே, முதலிலே அவருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. மறுபடியும் அதை எதிர்த்து கனி அண்ணாவி என்பவர், "அதைவிட நான் அதிகமாகப் பணம் செலுத்துகிறேன்" என்று அவருக்குக் கடிதம் கொடுத்த காரணத்தினாலே, முதலிலே ரபீக் காதர் முகைதீன் அவர்களுக்குக் கொடுத்த உத்தரவை இரத்து செய்துவிட்டு, அதற்குப் பிறகு கனி அண்ணாவி அவர்களுக்கு அந்த உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 10-40*

இதிலே வேடிக்கை என்னவென்றால், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், எந்த முறைகேட்டுக்கும் எந்த அதிகாரியும் உடந்தையாக இல்லை என்பதற்கு உதாரணமாகத்தான் இதைச்





சொல்கிறேன். ஆனால், பாதிக்கப்பட்ட ரபீக் காதர் முகைதீன் அவர்கள், "எனக்கு முதலிலே உத்தரவு கொடுத்துவிட்டு, பிறகு கனி அண்ணாவிக்கு உத்தரவு வழங்கியது தவறு; இது சட்டப்படி செல்லுபடியாகாது" என்று செங்கோட்டையில் உள்ள, உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்திற்கு, வழக்கு எண் 11/2007-ல் அவர் வழக்கு தொடுத்து இருக்கிறார். இந்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. நியாயமாகப் பார்த்தால், இதை விவாதிப்பதற்குக்கூட நமக்கு இங்கே சட்டப்படி இடம் இல்லை. இருந்தாலும் ஒன்று சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அதிலே எதாவது கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறாரா; அல்லது, யாருக்காவது பரிந்துரை பண்ணியிருக்கிறாரா என்று கேட்டால், இல்லை. ஆனால், கடந்தகால ஆட்சியிலே, உங்களுக்குத் தெரியும்; இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். முன்னாள் பேரவைத் தலைவர் காளிமுத்து அவர்கள், கே.வி. ஆர். மாணிக்கம் என்பவருக்கு அன்னை உணவகத்திற்காக, 8-2-2002 அன்று—(கூச்சல்-குழப்பம்) நான் சொல்ல வருவது, இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தைச் சொல்கிறேன்—8-2-2002 அன்று, அவர் கேட்கிறார், "2,00,000/- ரூபாய்க்கு நான், சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய குடியிருப்பு வளாகத்திலே சிற்றுண்டி நடத்துவதற்கு அனுமதி வழங்குங்கள்" என்று அவர் கேட்கிறார், பேரவைத் தலைவர் காளிமுத்து அவர்களிடம். ஆனால், காளிமுத்து அவர்கள் (கூச்சல்-குழப்பம்) பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசிய பிறகு, நான் பேசியதிலே தவறு இருந்தால், விளக்கம் கேளுங்கள்; சொல்லத் தயாராக இருக்கிறேன். ஆனால். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைத்திலிங்கம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முடியாது, உட்காருங்கள். அமைச்சர் பேசும்போது எழுந்து நிற்கக்கூடாது. (குறுக்கீடுகள்) முடியாது, உட்காருங்கள். Not allowed.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, காளிமுத்து அவர்கள் 16-5-2002-ல் ஓர் ஆண்டிற்கு 2,00,000/- என்பதற்குப் பதிலாக ரூ.2,750/- கட்டினால் போதும் என்று பேரவைத் தலைவரே கோப்பிலே கையெழுத்துப் போட்டு இருக்கிறார்; அந்தக் கோப்பும் இங்கே இருக்கிறது. அப்படி, இங்கே இருக்கக்கூடிய பேரவைத் தலைவர், எதாவது ஒரு கோப்பிலே கையெழுத்துப் போட்டு, இப்படித் தவறு செய்திருந்தால், இந்த அவையிலே இதையெல்லாம் நீங்கள் எழுப்பலாம். ஆனால், யாரோ உதவியாளர் கொடுத்தார் என்று ஒரு கடிதத்தைக் காண்பித்து, பேரவைத் தலைவர்மீது குற்றச்சாட்டு

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2007 ஏப்ரல் 18

சொல்வது முறையல்ல. அதிலேயும் இரண்டு விஷயங்கள்; ஒன்று பேரவைத் தலைவருடைய உதவியாளர். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவருடைய உதவியாளர் சொன்னவர்க்கு டெண்டர் வழங்கப்படவில்லை. அண்ணாவி என்பவருக்குத்தான் டெண்டர் வழங்கப்பட்டிருக்கிறது. அதை எதிர்த்து, பேரவைத் தலைவருடைய உதவியாளர் சிபாரிசு செய்த ரபீக் காதர் முகைதீன் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார். அந்த வழக்கு நிலுவையிலே இருக்கிறது. அதைப்பற்றி, இங்கே விவாதிப்பது முறையல்ல என்பதைமட்டும் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுவிஷயமாகத் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள்.

## 3. விதி 110–ன்கீழ் அறிக்கை

### விழுப்புரம் மாவட்டம், முண்டியம்பாக்கம், இடி தாக்கி இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசின் நிவாரண உதவி – மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110-ன்கீழ் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், இங்கே அறிக்கை ஒன்றை அளிக்கின்றார்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று 17-4-2007 இரவு, சுமார் 11-00 மணி அளவில் விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி காவல் நிலைய சரகம், முண்டியம்பாக்கம் சுடுகாட்டில் உள்ள முண்டியம்பாக்கம் வள்ளியம்மை கோவில் தெருவில் இருக்கின்ற அங்காளம்மன் கோவிலுக்கு, வழக்கமாக ஒவ்வோர் அமாவாசையன்றும், சுடுகாட்டில் கரகம் ஜோடித்து எடுத்துவந்து, அங்காளம்மனுக்குப் படைப்பதுபோல, நேற்றும் சுடுகாட்டில் கரகம் ஜோடித்துக் கொண்டிருந்தபோது, இடி மின்னலுடன்கூடிய மழை பெய்தும், திடீரென்று மின்னலுடன்கூடிய இடி, தென் மேற்குத் திசையில் பக்க வாட்டில், சுடுகாட்டுக் கொட்டகைக்குள் விழுந்ததில், அந்தக் கொட்டகைக்குள் கரகம்



2007 ஏப்ரல் 18] [பேராசிரியர் க. அன்பழகன்]

ஜோடித்துக் கொண்டிருந்தவர்கள்மீது அந்த இடி தாக்கி, அதில் 8 நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்துள்ளனர்.

முற்பகல் 10-45

மேலும், 5 பேர் காயமடைந்து விழுப்புரம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தச் சம்பவத்தில் இறந்தவர்கள் விவரம் வருமாறு:

1. பெருமாள் உடையார் மகன், 32 வயதான வீரவேல் முருகன்
2. விஜயபாலன் மகன், 32 வயதான கோபி சுதாகர்
3. வெள்ளிக்கண்ணு மகன், 55 வயதான கலியமூர்த்தி
4. பெருமாள் மகன், 27 வயதான ராஜேந்திரன்
5. அண்ணாமலை மகன், 47 வயதான மோகன்
6. பிச்சைக்காரன் என்பவரின் மகன், 28 வயதான பரமசிவம்
7. முருகேச கவுண்டர் மகன், 55 வயதான காசிநாதன்
8. பூங்காவனம் என்பவரின் மகன், 20 வயதான வீரகுமார்

இந்தச் சம்பவத்தில் காயம் அடைந்தவர்கள் விவரம் பின்வருமாறு:

1. காசி என்பவரின் மகன், 11 வயதான கார்த்தி
2. கருப்பன் மகன், 35 வயதான கங்காதுரை
3. ரங்கநாதன் மகன், 31 வயதான தேனப்பன்
4. கருப்பன் மகன், 43 வயதான கண்ணன்
5. அங்கப்பன் உடையார் மகன், 28 வயதான மேகராஜன்

இந்தச் சம்பவம் பற்றிய நிகழ்ச்சி, நேற்று காலையில், அதாவது அறிக்கை தருகிற முறையில் இன்று காலையில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டவுடன் அந்த மாவட்ட அமைச்சரான உயர் கல்வித் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்களையும், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. புஷ்பராஜ், திரு. கண்ணன் ஆகியோரையும், மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை அதிகாரிகள் ஆகியோரையும், சம்பவம் நடந்த இடத்திற்கு அனுப்பி, நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச்

செய்யச் சொல்லியிருக்கிறார் முதலமைச்சர். உடனடியாக இறந்தவர்களின் குடும்பங்களுக்கு, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா 50,000/- ரூபாயும், விபத்து நிவாரண நிதியிலிருந்து தலா 50,000/- ரூபாயும் ஆக மொத்தம் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம், அமைச்சர்மூலமாக வழங்கப்பட்டுள்ளது. காயம் அடைந்தவர்களுக்கும், அவரவர்களின் காயத்திற்குத் தகுந்தாற்போல், மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்கிற தொகையை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த சப்ஜெக்ட்டில், விதி 110-ன்கீழ் அறிக்கை கொடுத்தாகிவிட்டது. வேறு சப்ஜெக்ட்டில், பாம்பு கடித்த விஷயமாகத் தங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். (குறுக்கீடு) இந்த விஷயம் பாதியில் இருக்கிறது. உட்காருங்கள். ஒரு நாளைக்கு ஒன்றுதான் எடுக்க முடியும். (குறுக்கீடு) உட்காருங்கள். அதுதான் விதி 110-ன்கீழ் அறிக்கை வாசித்தாகி விட்டது இல்லையா? உட்காருங்கள்.

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### வெர்ஜினியா தொழில்நுட்பம் பல்கலைக்கழகத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட பேராசிரியரின் உறவினர்களை அமெரிக்காவுக்கு அனுப்ப அரசு நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமெரிக்காவிலுள்ள வெர்ஜினியா பல்கலைக்கழகத்தில் 16-4-2007 அன்று, மாணவர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டதில், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையத்தைச் சார்ந்த கல்லூரிப் பேராசிரியர் ஜி.வி. லோகநாதன் என்பவர் இறந்துவிட்டதால், அவருடைய உறவினர்கள் அங்கு சென்று இறுதிச் சடங்கு செய்வதற்குத் தேவையான பாஸ்போர்ட் மற்றும் விசாவை உடனடியாக அவர்கள் பெறுவதற்கு ஏற்பாடு செய்வது குறித்து, அ.தி.மு.க. சார்பாக திரு. செங்கோட்டையன், ம.தி.மு.க. சார்பாக திரு. இராமகிருஷ்ணன், காங்கிரஸ் சார்பாக திருவாளர்கள் ஞானசேகரன், ஆர்.எம். பழனிசாமி, விடியல் எஸ். சேகர், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. சிவபுண்ணியம் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இது சிறப்புக் கவன ஈர்ப்பின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்காவிலுள்ள வெர்ஜினியா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில், 16-4-2007 அன்று. . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வமும் இதுபற்றிக் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள் சார்.

முற்பகல் 10-50

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** காலையில் நடைபெற்ற அந்தக் கல்லூரியினுடைய வகுப்பறையில், மனித நேயமற்ற முறையில், ஒரு மாணவன் நுழைந்து, தன் கையில் வைத்திருந்த துப்பாக்கியோடு சென்று, பலபேரைச் சுட்டுக் கொன்றதோடு, பேராசிரியராக இருந்த, ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப் பாளையத்தைச் சார்ந்த மிகவும் ஏழையெளியவராய் இருந்து, ஒரு கல்லூரிப் பேராசிரியராகச் சென்று பணியாற்றிவந்த, ஜி.வி. லோகநாதன் என்ற பேராசிரியர் அவர்களையும், அவரோடு சேர்ந்த 33 பேர்களையும் சுட்டுக் கொன்றுள்ளான். அந்தக் கொடிய செயலால், மீளாத் துயரில் இருக்கிற அவரது தாய் தந்தையர்கள், அவரது உடலைப் பார்ப்பதற்கும், அவரது உடலை அடக்கம் செய்வதற்கும், தான் உயிரோடு இருந்த நேரத்தில், அதே கல்லூரியிலேயே தன்னை அடக்கம் செய்ய வேண்டுமென்று தன்னுடைய துணைவியாரிடத்திலே எடுத்துச் சொன்னதாக அவர் சுட்டிக்காட்டியதன் அடிப்படையில், அவரது ஆசையை நிறைவேற்றுகின்ற வகையிலும் அந்தப் பெற்றோர்கள், அவரது உற்றார் உறவினர்கள் அங்கு செல்வதற்காக, இன்று Passport-க்காக மாவட்ட ஆட்சித் தலைவராலே பரிந்துரை செய்யப்பட்டு, விசா வாங்குவதற்காக சென்னையிலே அவர்கள் இருக்கிறார்கள். இந்த அரசு, அவர்களுக்கு உடனடியாக விசா பெற்றுத் தருவதோடு, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே வைப்பதோடு, அவருடைய பிரிவால் வாடும் அந்தக் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த லோகநாதன் என்பவர், மொடக்குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் படித்து, பிறகு கான்பூர் ஐ.ஐ.டி.-யிலே படித்து, பிறகு அவர் தொடர்ந்து 30 ஆண்டுக் காலம் உலகத்திலேயே, ஒரு தலைசிறந்த University என்று அழைக்கப்படுகிற Virginia University-யிலே பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இன்னும் 5 நாட்களில், அவர் அங்கிருந்து இங்கு வந்து, தமிழகத்திலேயே

settle-ஆகி. இந்தப் பகுதியிலேயே அவருடைய ஆற்றலைப் பயன்படுத்துவதற்குத் திட்டமிட்டிருந்தார். நம்முடைய Director of Technical Education திரு. சிவகுமார், இ.ஆ.ப. அவர்களுடைய classmate அவர்; அதே பள்ளியிலே படித்தவர். அப்படிப்பட்டவர், கடந்த 30 ஆண்டுக் காலம் தொடர்ந்து ஒரே பல்கலைக்கழகத்தில், அதுவும் உலகப் புகழ்பெற்ற ஒரு பல்கலைக்கழகத்தில், ஒரு தமிழன் இந்த அளவுக்குச் சிறந்த பேராசிரியராகப் பணியாற்றினார் என்பது, நம்முடைய தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிற ஒரு பெருமை; அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த அவரை, தென்கொரிய நாட்டு இளைஞன் ஒருவன் சுட்டுக் கொன்றுவிட்டது உண்மையிலேயே வருத்தத்தை அளிக்கிறது. அவருடைய குடும்பத்தாருக்கு, காங்கிரஸ் கட்சியின் சார்பிலே, எங்களுடைய ஆழ்ந்த இரங்கலை இங்கே நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம்.

நான் பணிவன்போடு இந்த அவையிலே கேட்டுக்கொள்வதெல்லாம், ஒரு தலைசிறந்த பொறியாளராக இருந்து, பேராசிரியராகப் பணியாற்றிய அவருக்கு, அந்த அரசு உயர்நிலைப் பள்ளியிலே—அந்தப் பள்ளி இருக்கிற மொடக்குறிச்சி ஊர் மக்களும் ஆழ்ந்த வருத்தத்திலே இருக்கிறார்கள்—அவரது படத் திறப்பு விழாவை நடத்துவதற்கு, நம்முடைய மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா; அரசு அதற்கு ஆவன செய்யுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, அவர்களுக்கு Passport கொடுப்பதிலே, இப்போது Tatcal-இல் apply செய்திருக்கிறார்கள். விசா பிரச்சினை இருக்கிறது. Passport வழங்கப்பட்டுவிட்டதா? அதேபோல, விசாவிற்கு நம்முடைய அரசு மத்திய அரசைத் தொடர்பு கொண்டு, உடனடியாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்து, உடனடியாக 9 பேரும் அந்த இறப்புக்குச் செல்ல வேண்டியிருக்கிற காரணத்தால், அதற்குத் தமிழக அரசு ஆவன செய்யுமா என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்காவில், வெர்ஜினியா மாகாணத்தில் உள்ளது Blacksburg நகரம். மலைப் பகுதியில் அமைந்துள்ள அந்த நகரத்தில், 135 ஆண்டு பாரம்பரியமிக்க அந்த Virginia Tech பல்கலைக்கழகம் உள்ளது. சர்வதேச அளவில் இப்பல்கலைக்கழகத்தில் இந்தியர்கள்



உட்பட, பல்வேறு நாடுகளைச் சார்ந்த 26,000 மாணவ, மாணவிகள் படிப்பதோடு, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளைச் சார்ந்த பேராசிரியர்களும் பணியாற்றுகின்றார்கள். அமெரிக்க நேரப்படி, நேற்று முன்தினம் காலை 7-15 மணிக்கு 895 மாணவர்கள் படுத்துறங்கும் அறைக்குள் அடையாளம் தெரியாத ஒருவன் நுழைந்து, ஒரு மாணவனைச் சுட்டுக் கொன்றுவிட்டு ஓடினான். துப்பாக்கிச் சூடு நடந்தது குறித்து, பல்கலைக்கழகம் ஒலிபெருக்கி மூலமாக எந்தவித எச்சரிக்கையும் விடுக்கவில்லை. படுக்கைக் கூடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது, அறிவியல் மற்றும் engineering பாடப் பிரிவுகள் செயல்படும் Norris Hall கட்டடம். முதல் துப்பாக்கிச் சூடு நடந்த இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு, Norris Hall-க்கு அதே ஆசாமி வந்தான். சிவில் மற்றும் சுற்றுப்புறச்சூழல் வகுப்பறைக்குச் சென்ற அவன், மாணவிகள் யாரும் வெளியேற முடியாதபடி கதவுகளைச் சங்கிலியால் போட்டு பூட்டிவிட்டு, வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருந்த, ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த பேராசிரியர் மரியாதைக்குரிய லோகநாதன் மற்றும் 32 மாணவர்களைத் தன் கைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றான். 5 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். துப்பாக்கிச் சூடு நடத்தியவனும் இறந்தான். இந்தக் கோர நிகழ்ச்சி அமெரிக்கா முழுவதும் பீதியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளதோடு, தமிழ்நாட்டிலேயும், குறிப்பாக கோவை மாவட்டம் மற்றும் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளார்கள். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அன்னாரது குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமகிருஷ்ணன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** உலக அளவில் இந்தியர்களுக்கு—குறிப்பாகத் தமிழர்களுக்கு, பாதுகாப்பற்ற நிலையிலுள்ள இந்தியர்களுக்கு—வெளிநாடுகளில் வாழும் இஞ்சினியர்களுடைய பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு, ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு மாநில அரசு, மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்காவின் Virginia Tech பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவத்தில், நமது மாநிலம், ஈரோடு மாவட்டம், கோபியைச் சேர்ந்த காட்டடிப்பாளையம் கிராமத்திலே பிறந்து, சாதாரண குடும்பத்திலே பிறந்து வளர்ந்து, மிகப் பெரிய பேராசிரியராக, சிறப்புக்குரியவராக, 30 ஆண்டுக் காலம் அங்கே பணியாற்றிய லோகநாதன் அவர்கள், சுட்டுப்பட்டு மரணமுற்றிருக்கிறார். கடந்த சில நாட்களுக்கு முன்பாகத்தான், அவருக்கு அந்தப் பல்கலைக்கழகத்திலே சிறந்த பேராசிரியர் என்ற பட்டம் அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு சிறப்புக்குரியவருடைய அந்த மரணம் என்பது, மிகப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

குறிப்பாக, இங்கே நமது உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, அமெரிக்காவிலே துப்பாக்கிக் கலாச்சாரம் என்பது, வெகு வேகமாகப் பரவி வருகிறது என்று பல்வேறு செய்திகளும், ஊடகங்களும் தெரிவித்துக்கொண்டிருக்கின்றன. இப்படி மாணவர்கள் மத்தியிலே இந்தச் சம்பவம் நடப்பது என்பது, அந்த நாட்டிலே வன்முறை கலாச்சாரம் அல்லது பயங்கரவாதத்திற்கு உரிய வாய்ப்பினைத் தோற்றுவித்திருக்கிறதோ என்ற அச்சத்தை வெளிப்படுத்துகிறது. இருந்தாலும், இவையெல்லாம் உலக அளவிலே இருக்கிற பல பிரச்சினைகளுக்குக்கூட, பல காரணங்களாக அமைந்துவிட்ட நிலையிலும், இப்படி மாணவர்களிடையே இப்படிப்பட்ட பாதிப்புகள் ஏற்படுகிற ஒரு கொடுமையிலே, நமது தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் மரணமுற்றிருக்கிறார். வேறு சில தகவல்கள் வருகிற அடிப்படையிலே, நமது தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் அங்கே வேறு யாராவது படிக்கிறார்களா? அப்படி ஏதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா? அந்தத் தகவல் ஏதாவது உண்டா என்பதையும் அரசு தெரிவிக்க வேண்டும். அவருக்கு, உரிய வகையிலே நமது அரசும், நமது மாநிலமும் அஞ்சலி செலுத்துவதற்கும் ஒரு நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதோடு, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு சென்று வருவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டனவா; அந்தக் குடும்பத்திற்குரிய உதவிகளைச் செய்வதற்கு உரிய முயற்சியை அரசு மேற்கொள்ளவிருக்கிறதா என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைச் சேர்ந்த பச்சைத் தமிழன் திரு. லோகநாதன் என்கிற





பொறியியல் பேராசிரியர், அமெரிக்காவில் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவர் இறந்த செய்தியைக் கேட்டு, அவருடைய குடும்பம் இங்கு மிகப் பெரிய துயரத்திற்கு உள்ளாகியிருக்கிறது. அவருடைய குடும்பத்தார்கள், அமெரிக்கா செல்வதற்கான பாஸ்போர்ட், விசா போன்ற அவசரகால நடவடிக்கைகளுக்காக, பாஸ்போர்ட் அலுவலகத்தில் மனு செய்திருக்கிறார்கள். தமிழக அரசு, ஒரு தனி அதிகாரியை நியமித்து அந்தக் கடவுச் சீட்டையும் அதற்கான அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து, உடனடியாக அத்துணை வசதிகளையும் அந்தக் குடும்பத்திற்குச் செய்து கொடுக்கவேண்டும். அதுவும் தற்போது அவர் அமெரிக்காவில் இறந்திருக்கிறார்; அந்தக் குடும்பம் செல்வதற்கான விமானச் செலவுக் கட்டணங்கள் எல்லாம் அவர்களிடம் இருக்கிறதோ, இல்லையோ என்கிற நிலையும் ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையையும் உணர்ந்து, அதுபோன்ற விமானக் கட்டணங்களையெல்லாம் ஏற்பாடு செய்து, உடனடியாக அந்தக் குடும்பம் அமெரிக்காவுக்குச் செல்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதே பல்கலைக்கழகத்தில் அவருடைய உடலை அடக்கம் செய்வதற்காகவும் அவர் உறுதி வாங்கியிருக்கிறார்; அந்த வகையில் நம்முடைய தமிழக அரசு அந்த உதவிகளையெல்லாம் செய்துகொடுத்து அவர்களுக்கு ஆறுதலாக இருக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்க நாட்டுப் பல்கலைக்கழகத்தில், தென்கொரியாவைச் சேர்ந்த ஒரு கொலைவெறி பிடித்த மாணவன், கொடூரமான முறையிலே, அந்தக் கல்லூரி வளாகத்திலேயே ஏற்கெனவே இரண்டு மாணவர்களைச் சுட்டுக் கொன்று, பிறகு இரண்டு மணிநேரம் கழித்து, வகுப்பறைக்குள்ளே நுழைந்து, அந்த வகுப்பறையிலே பாடம் நடத்திக்கொண்டிருந்த பேராசிரியர் உட்பட, 33 பேரை கொடூரமாகச் சுட்டுக் கொலை செய்திருக்கக்கூடிய நிகழ்ச்சி, மிகக் கொடுமையானது. அந்தக் கொலைவெறித் தாக்குதலுக்கு, நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த, ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த, கோபிசெட்டிப்பாளையத்தைச் சேர்ந்த பேராசிரியர், மிகச் சாதாரண குடும்பத்திலே பிறந்து வளர்ந்து, உயர் கல்வி படித்து, பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அவர், கொடூரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவருடைய மறைவிற்கும், மற்றவர்களுடைய மறைவிற்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த

[திரு. சி. கோவிந்தசாமி] [2007 ஏப்ரல் 18

இரங்கலைத் தெரிவிப்பதோடு, அவருடைய விருப்பப்படி, அவருடைய உடல் அமெரிக்க நாட்டிலேயே அடக்கம் செய்யப்பட வேண்டுமென்று தெரிவித்திருந்த அடிப்படையில், அவருடைய உறவினர்கள் இங்கிருந்து உடனடியாக அமெரிக்காவிற்குச் செல்வதற்கு விசா உள்ளிட்ட பல்வேறு வசதிகளையும், போக்குவரத்திற்குரிய பொருளாதார வசதி இல்லையென்றால், அதற்கான உதவிகளைக்கூட செய்து, அவர்கள் அந்த இறுதி நிகழ்ச்சியிலே கலந்துகொள்வதற்கு, நம்முடைய அரசு அனைத்து முயற்சிகளையும் செய்ய வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த லோகநாதன் என்பவர், தென்கொரிய மாணவனால், அமெரிக்காவின் வெர்ஜினியா பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அவருடைய குடும்பத்தாருக்கும், சோகத்தில் மூழ்கி இருக்கின்ற அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்களுக்கும், விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெர்ஜினியாவில் நடந்துள்ள சம்பவம், உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் அனுபவிக்கும் துயரத்திற்கு ஓர் உதாரணமாக உள்ளது. வேலை தேடி வெளிநாடுகளுக்குச் செல்லும் தமிழர்கள், அந்தந்த நாடுகளில் சொல்ல முடியாத துன்பத்தை அனுபவித்து வருகிறார்கள். குறிப்பாக, சிங்கப்பூர், மலேசியா, மியான்மர் ஆகிய நாடுகளிலும் இப்படிப்பட்ட கொடுமைகள் நடக்கின்றன. ஐரோப்பிய நாடுகளில் இனவெறிக் குழுக்கள், தமிழர்கள் உள்ளிட்ட இந்தியர்களைத் தாக்கி... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர். க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைப்பற்றி இங்கே எழுப்பலாமே தவிர, பொதுவான பிரச்சினை, தமிழர்களுக்குள்ள பிரச்சினைகளையெல்லாம் இதிலே சேர்த்துப் பேசுவது, இந்தப் பிரச்சினையைத் தவறாகக் கருதுவதற்கு இடமாகிவிடும். ஆகவே, அருள்கூர்ந்து அந்தக் குறிப்பிட்ட பிரச்சினையைமட்டும் எழுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.



2007 ஏப்ரல் 18]

**திரு. கு. செல்வம்:** மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க, நம்முடைய அரசு, இந்திய அரசை வற்புறுத்தவேண்டும். அன்னாரின் உறவினர்களுக்குக் கடவுச் சீட்டும், அந்த நாட்டிற்குச் செல்லும் நுழைவு அனுமதியும் வாங்கித்தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்காவிலுள்ள வெர்ஜினியா பல்கலைக்கழகத்தில், 16-4-2007 அன்று, தென்கொரிய நாட்டைச் சேர்ந்த ஒரு மாணவர் துப்பாக்கியால் சுட்டதில், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையத்தைச் சேர்ந்த கல்லூரிப் பேராசிரியர் ஜி.வி. லோகநாதன் அவர்கள் இறந்துவிட்டதைக் குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. சி. ஞானசேகரன், திரு. நா. இராமகிருஷ்ணன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. சி. கோவிந்தசாமி, திரு. தி. வேல்முருகன், திரு. கு. செல்வப்பெருந்தகை ஆகிய மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய இரங்கலையும் தெரிவித்து, இறந்துவிட்ட அந்தப் பேராசிரியருடைய உறவினர்கள், ஈரோடு மாவட்டத்திலே இருக்கின்ற காரணத்தால், அவர்கள் உடனடியாக அமெரிக்காவிலே நடக்க இருக்கின்ற இறுதிச் சடங்கிலே கலந்துகொள்வதற்கு, தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது; பாஸ்போர்ட் வழங்கப்படுமா; விசா வாங்கித் தரப்படுமா; விமான டிக்கெட்டுகள் எல்லாம் வாங்கித் தரப்படுமா என்று பல்வேறு வேண்டுகோள்களை இங்கே தெரிவித்திருக்கிறார்கள்.

உள்ளபடியே, நம்முடைய ஈரோடு மாவட்டத்திலே கோபிசெட்டிப்பாளையத்தில் பேராசிரியர் ஜி.வி. லோகநாதன் அவர்கள், ஒரு சாதாரண குடும்பத்திலே பிறந்து, மிகச் சிறந்த கல்வி அறிவு பெற்று, அவர் ஆராய்ச்சித் துறையிலேயும் ஈடுபட்டு, சிவில் மற்றும் சுற்றுச்சூழல் பேராசிரியராக வெர்ஜினியா பல்கலைக்கழகத்திலே பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். இந்தத் துப்பாக்கிச் சூடு சம்பவம் பற்றிக் கேட்டவுடனே, அமெரிக்க அதிபர் அதிர்ச்சி அடைந்திருக்கிறார். அதுமட்டுமல்ல; அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய ஆளுநர், ஆசியாவிலே சுற்றுப்பயணம் செய்துகொண்டிருந்தவர், கேள்விப்பட்டவுடனே அவரது பயணம் எல்லாவற்றையும் இரத்து செய்துவிட்டு, உடனடியாக அந்த

மாநிலத்திற்குச் சென்றிருக்கிறார். இந்தச் சூழ்நிலையில், இங்கே இருக்கக்கூடிய அவருடைய பெற்றோர்கள் தகப்பனார், தாயார் மற்றும் சகோதரர், சகோதரருடைய மனைவி ஆகிய நான்கு பேரும், மற்ற உறவினர்கள் ஐந்து பேரும், ஆக ஒன்பது பேர் அந்த இறுதிச் சடங்கிலே கலந்துகொள்ள வேண்டுமென்று தமிழக அரசுக்கு முறையிட்டார்கள். நேற்று இரவு இந்த வேண்டுகோள் வந்தவுடன்; தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், இரவெல்லாம் வேறு எந்தப் பணியும் செய்யாமல், நம்முடைய அதிகாரிகளோடு தொடர்புகொண்டு, பாஸ்போர்ட் அதிகாரியோடு தொடர்புகொண்டு, அமெரிக்காவுக்கு விசா வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று அதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டு, அதற்காக ஓர் அதிகாரியையே அனுப்பி, இன்னும் ஒருசில நிமிடங்களிலே பாஸ்போர்ட் பெறுவதற்கான முயற்சிகளை இந்த அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது.

*முற்பகல் 11-05*

உடனடியாக, நம்முடைய அமெரிக்க embassy அலுவலகத்திலேயும் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டு, அந்த 9 பேருக்கும் விசா வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் முதலமைச்சர் அவர்களாலேயே வைக்கப்பட்டு, அவர்களும் passport வந்தவுடனே, விசா கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில், அந்த 9 பேரும் அங்கே செல்வது என்றால், அவர்களுக்குப் பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவாகும். Ticket எடுப்பதற்குக்கூட அவர்களிடத்திலே பணம் இருக்கிறதா என்ற ஒரு கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. அதையும் அவர்களிடத்திலே எதிர்பார்க்காமல், தமிழக அரசாங்கமே உடனடியாக அவர்கள் அமெரிக்கா செல்வதற்கான (மேசையைத் தட்டும் ஒலி) விமான ticket-களையும் எடுத்து, உடனடியாக அவர்களை அனுப்புவதற்கான எல்லா முயற்சிகளையும், குறிப்பாக, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், இறந்துவிட்ட அந்தப் பேராசிரியர் ஜி.வி. லோகநாதன் அவர்களுக்கு, இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த அளவிற்கு இரங்கல் தெரிவித்தார்களோ, அதைப்போல தமிழக முதல்வர் சார்பிலேயும், இந்த அவையின் சார்பிலேயும், எங்களுடைய இரங்கலையும் தெரிவித்துக்கொண்டு, இந்த அளவிலே விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் என்ற முறையில், நானும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## 2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

### (ஆ) ஆலங்குடி தொகுதி, நகரம் ஊராட்சியில் பாம்பு கடித்துப் பெண் இறந்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, நகரம் ஊராட்சியைச் சேர்ந்த அமிர்தம் என்ற பெண்ணுக்கு உரிய நேரத்தில் பாம்பு கடிக்கான சிகிச்சை அளிக்காமையால் இறந்தது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன் அவர்கள், விதி 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார். இதைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாகப் பேச வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 11-1-2007 அன்று, இரவு சுமார் 12 மணி அளவில், எனது தொகுதியில், நகரம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில், அமிர்தம் என்ற பெண்ணைப் பாம்பு கடித்துவிட்டது. பாம்பு கடித்த இருபதாவது நிமிடத்தில், அருகில் தஞ்சை மாவட்டம், பேராவூரணி அரசுப் பொது மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது, அங்கே உள்ள மருத்துவர்கள், இது புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து வருகின்ற case; அதனால் பார்க்கமுடியாது; ஊசி போடமுடியாது என்று சொல்லி, ஒரு மணி நேரம் தாமதப்படுத்தியதன் காரணமாக, அந்தப் பெண் இறந்துவிட்டார்.

குறிப்பாக, நகரத்திலிருந்து, அதாவது, பாம்பு கடித்த இடத்திலிருந்து, புதுக்கோட்டைக்குச் செல்வது என்று சொன்னால், 50 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். ஆலங்குடிக்குச் செல்வது என்று சொன்னால், 25 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். பக்கத்திலே இருக்கின்ற தஞ்சை மாவட்டத்திலுள்ள பேராவூரணிக்குச் செல்வது, சுலபம் என்ற முறையில், 15 கிலோ மீட்டருக்குள் உள்ள தூரத்தைச் சென்றடையலாம் என்ற நோக்கத்தோடு, அங்கே உள்ளவர்கள் சென்று, அந்த மருத்துவமனையில் கேட்கின்றபோது, வேறு மாவட்டத்திலிருந்து வருகின்றவருக்கு இங்கே ஊசி போட முடியாது என்று அந்த மருத்துவர் மறுத்ததோடு மட்டுமல்ல; இந்த மாவட்டத்திற்கு வேண்டிய மருந்துகள்தான் இங்கே வருகின்றன; வேறு எங்கிருந்தும் வருபவர்களுக்கு இங்கே ஊசி போட முடியாது என்று சொல்லித் தாமதப்படுத்தி, மிகவும் சிரமப்பட்டு, கெஞ்சி, பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டதற்குப் பிறகு, ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, அந்த அம்மையாருக்கு ஊசி போட்டிருக்கின்றார். அதனால், அந்த

அம்மையார் உடனடியாக இறந்துவிட்டார். ஆகவே, இப்பொழுது அந்தப் பகுதியில் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை, மாவட்டம் விட்டு மாவட்டம் போகின்றபோது, வைத்தியம் செய்ய முடியாது என்று சொல்கிறார்களே, அது உண்மையா? அப்படியென்று சொன்னால், எங்கேயாவது செல்கின்றபோது பாம்பு கடித்தால், வைத்தியம் செய்ய முடியாது என்கின்ற ஒரு நிலை இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் பொது மருத்துவமனைகள் அனைத்திற்கும், இந்தமாதிரி பாம்புக் கடிக்குச் சிகிச்சை பார்க்க வருகின்றபோது, உடனடியாக வைத்தியம் செய்வதற்கு உத்தரவிடுவதோடு, அந்த இறந்த பெண்ணுக்கு அரசின் சார்பிலே நட்ட ஈடும் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, இதன்மீது அமைச்சரின் கவனத்தை ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியைச் சேர்ந்த மருத்துவமனையில் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கீரமங்கலம் நகர ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அமிர்தம் என்பவர், வயது 90; அவரைப் பாம்பு கடித்து, இரவு 2 மணிக்கு . . . (குறுக்கீடு) வயது 90 என்று எனக்கு விவரம் வந்திருக்கிறது; 90 வயது என்று எனக்கு விவரம் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் 60 வயது என்று சொல்கிறார்கள். அவரைப் பாம்பு கடித்து இரவு 2 மணிக்கு அங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். வந்த பிறகு அங்கே அவரைப் பரிசோதிக்கிற நேரத்திலே நாடித் துடிப்பு 60 ஆக இருந்திருக்கிறது. இரத்த அழுத்தம் 90/40 ஆகவும், இரத்தம் உறையும் நேரம் ஆறு நிமிடமாகவும் இருந்தது. வரும்போதே condition கொஞ்சம் bad-ஆகத்தான், கொஞ்சம் serious-ஆகத்தான் வந்திருக்கிறார்கள். வந்தவுடனே, அவருக்கு உயிர்காக்கும் மருந்து கொடுக்க, test ஊசி ஒன்று போடப்பட்டு இருக்கிறது. போடப்பட்ட பிறகும், அவர் உடல்நிலை சரியாக வராத காரணத்தால்தான், புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி இருக்கிறார்கள்.

பொதுவாக Police Station-ல்தான், இந்த jurisdiction, அந்த jurisdiction என இருக்கிறது, case போடுவதற்கு. ஆனால், டாக்டர்கள் எங்கேயும் அப்படிச் சொல்வதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு அப்படிக் கொண்டுவந்திருந்தால்—அப்படி நடப்பதற்கு





வாய்ப்பில்லை; ஏனென்று சொன்னால், வியாதி வருவது என்பது, எந்த ஊருக்குப் போனாலும் வந்துவிடும்; அந்த ஊருக்குப் போனால்தான் வியாதி வருகிறது என்று சொன்னால், திரும்பிப் போவதற்குமுன்னால், ஆள் காலியாகிப் போய்விடுவான்; ஆகவே, அப்படிப்பட்ட நிகழ்வுகள் இல்லை; இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய அந்தக் கருத்தைத் துறையினுடைய மருத்துவர்களுக்குச் சொல்ல இருக்கிறோம். அப்படிப்பட்ட நிகழ்வுகள் நடக்கவில்லை. மேலும், பேராவூரணி அரசு மருத்துவமனையில் பாம்புக் கடிக்குரிய அந்த மருந்து 11 vial, stock இருந்திருக்கிறது. அப்போது stock ready ஆகத்தான் இருந்திருக்கிறது. அது போக, sub stock-லேயும் 9 vial இருந்தது. Vial என்று சொன்னால் குப்பி; அந்த மருந்துக் குப்பிகள் இல்லாமல் இல்லை. மருந்துக் குப்பிகள் இருந்திருக்கின்றன. அந்த அம்மையார் போகும் வழியில் இறந்திருக்கிறார்கள். வருகிற நேரத்திலே, condition கொஞ்சம் மோசமாகத்தான் இருந்திருக்கிறது. வயது, கூடி இருந்த காரணத்தால்தான் அந்த இறப்பு வந்திருக்கிறது. பொதுவாக, தமிழ்நாட்டில் பாம்புக் கடிக்குமட்டும், வருடத்திற்கு 2 இலட்சத்து 20 ஆயிரம் பாட்டில்கள், vial என்று சொல்லக்கூடிய அந்த பாட்டில்கள் வாங்குகிறோம். இப்பொழுது ஒரு vial-இனுடைய விலை, 94 ரூபாய் 50 காசு. இப்போது அரசாங்கத்தினுடைய stock-லே, மார்ச் 30 முடிய 45 ஆயிரம் vial-கள் இருக்கின்றன. ஆகவே, மருந்து பற்றாக்குறை இல்லை. இந்தப் பாம்புக் கடிக்குச் சிகிச்சை பெற வருகின்ற நேரத்தில், கொஞ்சம் காலதாமதமாக வருவதாலும், இந்த வயது வித்தியாசத்தாலும் இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடக்கின்றன. இதையும் நம்முடைய மருத்துவர்களுக்கு அறிவுரை சொல்லி, தகுந்த உதவிகளை வெகு வேகமாகச் செய்யச் சொல்லி உத்தரவிடுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்... (குறுக்கீடு) சொல்லுங்கள். திரு. இராசசேகரன், சொல்லுங்கள்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். ஒரேயொரு வித்தியாசம்; வயது 90 என்று சொன்னார்; அல்ல; அந்தப் பெண்ணுக்கு வயது 60 என்பதைத் திருத்திக்கொள்ளவும். மருத்துவர்கள் தவறான தகவலைக் கூறியிருக்கிறார்கள் என்று நான் மறுத்துச் சொல்ல விரும்புகின்றேன். குறிப்பாக, அந்த ஊசி போடுவதற்காக ஒரு மணி நேரம் அங்கே போராட்டம் நடைபெற்று இருக்கின்றது. அதற்குப் பிறகுதான், அந்த ஊசியைப் போட்டிருக்கிறார்களே தவிர, சென்றவுடன் அந்த ஊசியைப்

போடவில்லை என்பதைச் சொல்லி, அந்த மருத்துவர்மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக அமைச்சரைக் கேட்டுக்கொண்டு, இனிமேல் இந்தமாதிரிச் சம்பவங்கள் நடக்காமல் பாதுகாக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறேன். நான் உடனடியாக நாளைய தினமே சென்னையிலிருந்து அதிகாரிகளை அனுப்பி, அதை விசாரிக்கச் சொல்லுகிறேன். நடந்த நிகழ்ச்சிகள் உண்மையாக இருக்கும் என்று சொன்னால், உடனடியாக, கட்டாயம் suspend போன்ற கடுமையான நடவடிக்கையை நான் எடுக்கிறேன்.

## 5. கவன ஈர்ப்பு

### கன்னியாகுமரி மாவட்டம், ரப்பருக்கு விற்பனைக் கட்டணம் விதிக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திருமதி ரா. லீமா ரோஸ் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி ரா. லீமா ரோஸ் அவர்கள்.

***திருமதி ரா. லீமா ரோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில், ரப்பர் பயிரிடும் விவசாயிகளிடம் ரப்பருக்கு, அறிவிக்கையிடப்பட்ட விளைபொருள் என விற்பனைக் கட்டணம் வசூலிப்பதால் ஏற்படும் பாதிப்பு" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை விளைபொருள் விற்பனையை





முறைப்படுத்தும் சட்டத்தின்படி, அந்தந்தப் பகுதியில் முக்கிய விளைபொருட்களின் விற்பனை, முறைப்படுத்தப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சட்டப் பிரிவு 2(1) 3, 4, 5(3) மற்றும் 5(1)-ன்படி ரப்பர் அறிவிக்கையிடப்பட்டு, 1978-லிருந்து செயலில் இருந்து வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 30,000 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் விளைவிக்கப்படுகிறது. ஆண்டிற்கு 40,000 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் (முறைப்படுத்துதல்) சட்டப் பிரிவு 24(1)-ன்படி, அறிவிக்கையிடப்பட்ட விளைபொருளான ரப்பரைக் கொள்முதல் செய்தால், அதன் மதிப்பில் 1% விற்பனைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். இந்தக் கட்டணம், விளைபொருளினைக் கொள்முதல் செய்யும் வியாபாரிகளிடமிருந்துதான் வசூலிக்கப்படுகிறது. கன்னியாகுமரி விற்பனைக் குழுவின் ஆண்டு வருவாயில், 80 விழுக்காடு, ரப்பரில் மட்டுமே வருவாயாகப் பெறப்படுகிறது. இந்த வருவாயினைக் கொண்டுதான் கன்னியாகுமரி விற்பனைக் குழுவின்கீழ் செயல்பட்டுவரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், தேவையான அடிப்படை வசதிகளான உலர்களங்கள், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் தங்கிட ஓய்வறை, வேளாண்மை விளைபொருள் தரம் பிரிப்பு வசதி, விளைபொருள்களைச் சேமித்துவைக்க கிட்டங்கிகள், அன்றாட விலை விவரங்கள் பெறும் வசதி, இலவச மருத்துவச் சிகிச்சை வசதிகள், விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்குப் பொருளீட்டுக் கடன் வசதி, உழவர் நல நிதித் திட்டத்தின்கீழ் உழவர்கள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு இறப்பு அல்லது விபத்து ஏற்படின் குடும்பப் பாதுகாப்பு நிதி வசதி எனப் பல வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர்மீது வசூலிக்கப்படும் விற்பனைக் கட்டணத்தை வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம், 1987-ன்படி ரத்து செய்ய இயலாது.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா ரோஸ்.

***திருமதி ரா. லீமா ரோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசியாவிலேயே உயர்தர ரப்பர், குமரி மாவட்டத்தில்தான் கிடைக்கிறது. குமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் ரப்பருக்கு, 4 சதவீத VAT வரியும், ஒரு சதவீத Cess வரியும் என, 5 சதவீத வரி வசூலிக்கப்படுகிறது. ஆனால், குமரி மாவட்டத்துடன் ஒட்டியிருக்கும்

கேரளாவில், 4 சதவீத VAT வரி மட்டும் வசூலிக்கப்படுகிறது. இதன் காரணமாக, குமரி மாவட்ட விவசாயிகள் ஒரு டன் ரப்பருக்கு, சுமார் ஆயிரம் ரூபாய் அதிகமாக, குமரி மாவட்டத்தில் வரி செலுத்த வேண்டியுள்ளது. அதிக வரிச் சுமை காரணமாக, வெளியூர் முதலாளிகள் இங்கு வந்து ரப்பர் கொள்முதல் செய்யவில்லை. இதனால் ரப்பர் விவசாயிக்கு நியாயமான விலை கிடைப்பது தடைபடுவதுடன், ரப்பர் விவசாயத்தின் வளர்ச்சியும் தடைபட்டுள்ளது. மேலும், check post-களில் பணம் கொடுத்து, இலட்சக்கணக்கான டன் ரப்பர், கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. இதனால், தமிழக அரசுக்குக் கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இந்த ஒரு சதவீத விற்பனைக் கட்டணத்தால், விவசாயிகளுக்கோ, சிறு வியாபாரிகளுக்கோ, அரசுக்கோ எந்தவிதத்திலும் இலாபம் வருவதாக இல்லை. எனவே, இது சம்பந்தமாக ஒரு குழு அமைத்து, இந்த உண்மைகளை விசாரணை நடத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாபாரிகள் வியாபாரம் செய்வதற்காக, அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே உரிமம்—licence—வாங்க வேண்டும். அப்படி வாங்கும்போது, ஆயிரம் ரூபாய் கட்டி licence வாங்கினால் போதுமானது. அவர்கள் கொள்முதல் செய்யக்கூடிய அந்தப் பொருளுக்கு, அந்த மதிப்பிற்குத்தான் ஒரு சதவீத Cess வரி மட்டும்தான் நாம் வசூல் செய்கின்றோம். ஆகவே, இதை இப்பொழுது ஒன்றும் தளர்த்துவதற்கு இல்லை.

## 6. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 4 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 4 - ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.22,99,63,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5271, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5369, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11369, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2672, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6158, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11343, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5659, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7068, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8030, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8572, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8761, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10183, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10247, திரு. பு.க. பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10302, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11779, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 440, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில் வருவாய் கிராமத்தில் உள்ள 16 பழங்குடியினர் குடியிருப்புகளுக்குக் குடிநீர், குடியிருப்பு, சாலை, மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ள சிறப்பு நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1296, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1181, திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குருவிக்கார நாயக்கர்கள் எந்தவிதச் சலுகைகளும் பெறமுடியாத நிலையில், தாங்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என அறிய முடியாமல் இருப்பதால், அவர்களுக்குரிய சாதிச் சான்றிதழ் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2725, திரு. து. அமரமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3594, திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, எண்ணை ஊராட்சி, தக்கிரிப்பட்டி ஆதி திராவிடர் காலனிகளுக்கு வடிகால் அமைத்தல், இரையபட்டி ஊராட்சி, கூவாட்டுப்பட்டி, வெலியாக்குடி, முத்துக்காடு ஊராட்சி, மேலமுத்துக்காடு, பொய்யாமணி, பூதகுடி ஊராட்சி, மேலபுதுவயல் ஆகிய இடங்களில் உள்ள ஆதி திராவிடர் காலனிகளுக்கு மயானச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3872, திரு. போ. சின்னப்பன்.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளாத்திகுளம் தொகுதி, மேல்மாந்தை கிராமத்தில் ஆதி திராவிட

மாணவர் விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4600. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசபாளையம் தொகுதியில், ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில், சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட இலவசத் தொகுப்பு வீடுகள் ஆயிரத்திற்கும் மேல் உள்ளன. அவற்றைப் பழுது நீக்கம் செய்ய சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4880. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை, கீழ்மதுரை, கீரைத்துறை, முனிச்சாலை பகுதிகளில் குடியிருக்கும் ஆதி திராவிடர் குடியிருப்புகள் சீர்படுத்தப்படவும், மதுரை முழுவதும் இப்பணி நிறைவேற்றப்படவும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5217. திரு. சு. குணசேகரன்.



**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பில், சிவகங்கையில் பள்ளி விடுதிகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5301. டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5166, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் நலத் துறை, மாவட்ட, வட்ட அளவில் தனித் துறையாக இயங்குவதற்குரிய அலுவலக மற்றும் உள்கட்டமைப்பு, வாகன ஊழியர் வசதிகள் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5580. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாட்கோ லோன் பெற வங்கிகளுக்கு அலையும் நிலையினைப் போக்க, அரசே தாட்கோ வங்கிகளை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5641. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதியில் மணவாள நகர்ப் பகுதியில், ஆதி திராவிடக் கல்லூரி மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் ஆதி திராவிடக் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5993, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதி, சதுரகிரி சுந்தரமகாலிங்கத்தில் உள்ள மலைவாழ் மக்களுக்குச் சத்துணவுக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6016, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல காலமாக வீட்டுமனை இல்லாமல் ஒரே வீட்டில் இரண்டு குடும்பங்களுக்கு மேல் வசிக்கின்றனர். அவர்களுக்கு வீட்டுமனை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6012, திரு. ந. கணபதி.



**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகளைச் சீர்படுத்துவதற்கு வழங்கப்படும் தொகையினை அதிகப்படுத்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6119, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி தொகுதியில் உள்ள ஆதி திராவிடர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள 10 ஆண்டுகளுக்கு மேலான தொகுப்பு வீடுகளைப் பராமரிப்புச் செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6240, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்ககிரி தாலுகா இன்னந்தேரி, பூவானூர் அருந்ததியர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6292, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாணவ, மாணவியர் அரசு விடுதிகளுக்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6303, திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6326, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6543, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிட மாணவ மாணவியர் தங்கும் விடுதிகளில், மாணவ மாணவியர் சேர்க்கை விதிகளின்கீழ், ஏழ்மை நிலையில் உள்ளோர், பெற்றோர் இல்லாதவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதுடன், சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைக்கும் மாணவ, மாணவியர்க்கு முன்னுரிமை கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6515, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு தொகுதியில் உள்ள அனைத்து ஆதி திராவிட மக்களுக்கும், நிலம் கையகப்படுத்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6669, திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஒன்றியம், பொய்யாப்பட்டி பஞ்சாயத்தில் பொய்யாப்பட்டி ஆதி திராவிடர் பள்ளிக்குப் புதிய பள்ளிக் கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6709, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியம், கட்டனூர் பள்ளபச்சேரியில் ஒரு திருமண மகால் தாட்கோமூலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6763, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் மட்டுமல்லாது, தமிழகம் முழுவதும் கட்டப்பட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான வீடுகள் 10, 15 ஆண்டுகளுக்கு

மேலாக, பராமரிப்பு செய்யமுடியாத ஏழ்மை நிலையால், இடிந்து விழுந்து குடியிருக்கத் தகுதி இழந்துகொண்டே வருகின்றன. இவற்றை பராமத்து செய்ய, தனியாக அதிக நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6811, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் பகுதியில், கடந்த 50 ஆண்டுகளாக வசித்துவரும் குடுகுடுப்பைத் தொழில் செய்துவரும் கணிக்கர் இனத்தைச் சேர்ந்தவர்கள், கல்வி கற்பதற்கு ஏதுவாக சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7105, திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7127, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோட்டில் நடுவட்டம், கடம்பூர் தாலுகா, குன்றி பகுதியிலுள்ள பழங்குடி மக்களை ஈரோடு மலையாளிகள் என்று அரசாணை பிறப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7258, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை மாவட்டம் முழுவதும் ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்பட்ட தொகுப்பு வீடுகள் மற்றும் காலனி வீடுகளில் பழுதடைந்துள்ள வீடுகளைப் பழுது பார்க்க, நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7356, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள ஆதி திராவிடர்கள் வசித்துவரும் கச்சா வீடுகளைச் செப்பனிட, நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7416, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறைத் தொகுதியில் உள்ள காஞ்சிக்கோயில் பேரூராட்சியில் உள்ள திட்டுக்காடு அரிஜனர் காலனிக்கு மயான வசதி செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7432, திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை தொகுதியில் மணல்மேடு பேரூராட்சியில் மாணவர் விடுதி இயங்கி வருகின்றது. பெண்களுக்குத் தனி தங்கும் விடுதி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7471, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதியில் ஆதி திராவிடர் நலத் துறை சார்பில் ஒரத்தநாடு, கிரையூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாணவ, மாணவியர் விடுதிகள் புதிதாகக் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7553, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் தொகுதி, பாலக்கோடு ஒன்றியம், பஞ்சப்பள்ளி மலைப் பகுதியில் குடியிருக்கும் பழங்குடியின மக்களுக்குச் சாதிச் சான்றிதழ்களை உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7670, திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7711, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, தோலம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட நீலம்பதி, உலக்கம்பட்டி, உலக்கைபாளூர், முட்டியூர் ஆகிய ஊர்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் உள்ளனர். இவர்களுக்கு உண்டு உறைவிடப் பள்ளி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7853, திருமதி ரா. லீமா ரோஸ்.

**திருமதி ரா. லீமா ரோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாடு சுதந்திரம் அடைந்தும் இன்னும் மின்சார வசதியில்லாத மலைவாழ் மக்கள் குடியிருக்கும் கிராமங்களுக்கு மின்சாரம் கிடைக்க சிறப்பு நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8186, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதி, சூலூர் ஆதி திராவிடர் கூட்டுறவுச் சங்கத்தில்

சிமெண்ட் ஸ்லாப், பாலிதின் பைகள், சத்துமாவு தயாரிப்பு ஆகியவை நடைபெற்று வந்தன. தற்சமயம் அச்சங்கம் செயல்படாமல் உள்ளது. அதனைச் செயல்படச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8210, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் காலனி தொகுப்பு வீட்டிற்கு ஒதுக்கும் ரூ.25,000/-உடன் ரூ.12,500/- அதிகரித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8506, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் நலத் துறை, வட்டாட்சியர் தனி அலுவலகத்தை, அம்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து, பொன்னேரி கோட்டாட்சியர் வருவாய் அலுவலகம் அமைந்துள்ள இடத்திற்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8651, திரு. இரா. குமரகுரு.



**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநாவலூர் தொகுதியில் ஆனத்தூரிலுள்ள மேல்நிலைப் பள்ளிக்கு ஆதி திராவிடர் நல விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8716, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் நலத் துறை சார்பில் உள்ள விடுதிகளில் உள்ள மாணவர்களுக்குச் சரியான உணவு, விடுதிக்கு மேசை, நாற்காலி, மின்விளக்கு, மின்விசிறி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8935, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், தளி சட்டமன்றத் தொகுதியில் வாழ்கின்ற பழங்குடி மக்களுக்குப் புதியதாகத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9087, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, விளூர் பகுதியில் ஆதி திராவிடர் நலத் துறை சார்பில் தனித் தனியாக மாணவ, மாணவியர் விடுதிகள் புதியதாகக் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9325, திரு. இல. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9465, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாட்கோ வணிக வளாகங்களில் பினாமிகளைக் களைந்து, தாட்கோ வணிக வளாகங்கள், ஆதி திராவிட மக்களே பயன்பெறும் வகையில் நடைபெற நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9477, திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதி, முருகத்தூரான்பட்டியில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு, 1985-86 ஆம் ஆண்டு கட்டிக் கொடுக்கப்பட்ட ஓட்டு வீடுகளைப் பராமரிப்புச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9504, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் உள்ள ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை சாலை வசதி, குடிநீர், மின்விளக்கு, சுடுகாடு மற்றும் சுடுகாடு செல்வதற்கான பாதை போன்றவற்றை அமைத்துத்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9599, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் விவசாயிகள் கடன் தள்ளுபடி செய்ததுபோல், ஆதி திராவிட மக்கள் தாட்கோமூலம் பெற்றுள்ள கடன்களை ரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9715, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஒரு வருட மருத்துவம் சார்ந்த பயிற்சிகள் முடித்த, ஆதி திராவிட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9815, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் நலத் துறையால் நடத்தப்படும் பள்ளிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9851, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர்களுக்கு இலவசப் பட்டா வழங்க மற்றும் தொகுப்பு வீடுகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9941, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டத்தில் ஆதி திராவிட மாணவ, மாணவிகள் விடுதிகள் பல, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10011, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதியிலுள்ள வல்லத்திராக் கோட்டை, அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவிகள் விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11170, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள பழுதடைந்துள்ள அனைத்துத் தொகுப்பு வீடுகளையும் பழுதுபார்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11171, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்குக் குடியிருப்பு வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11637, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலம் தொகுதி, நெடுங்குளம் அரசினர் ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து, பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11850, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழங்குடியின மக்களுக்குச் சாதிச் சான்றிதழ்களை உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,99,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள், முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை" நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில்

" 417 முதல் 480 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைமீது விவாதம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சொ. கருப்பசாமி. 15 நிமிடங்கள்.

***திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறாமை கொண்டு, புரட்டு, உருட்டு, புறம் பேசுகின்ற, சூழ்ச்சிகள், சூதுகள் நிறைந்த இன்றைய அரசியலில், (குறுக்கீடுகள்) இன்முகத்துடன் எதிர் வரிசையிலே இருந்தாலும்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அங்கே இருக்கிறதா?

**திரு. சொ. கருப்பசாமி:** எதற்கும் அஞ்சாமல், எந்த நேரமும் தமிழ் மக்கள் ஏற்றத்தோடு வாழ, மிக்க...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Subject-ஐப் பேசுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** பேசுகிறேன். (குறுக்கீடு) ஏற்றத்தோடு வாழ, என்ன வழி என்ற சிந்தனை கொண்ட உயர்ந்த எண்ணம், தொண்டுள்ளம், துணிச்சலில் வேங்கை, உழைப்பிலே தேனீ, உள்ளத்திலே வானம், அன்பிலே தேன்மழை, ஆற்றலிலே பெருங்கடல், சிந்தனைப் பேரொளி, சீர்திருத்தச் செம்மல், மலைபோல் வந்தாலும் நிலைகுலையாமல், பூகம்பமே ஏற்பட்டாலும் புறமுதுகு காட்டாமல், (மேசையைத் தட்டும் ஒலி) ** ஆராய்ச்சி மணி கட்டி, ஆண்டிருந்த தமிழகத்தில், அறம் காக்க, உரம் தேக்கும் மண்டலத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் subject-க்கு வராமல் நேரத்தை வீணாக்குகிறீர்கள். நான் சொல்கிறேன், நீங்கள் நேரத்தை வீணாக்குகிறீர்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** அகிலமே புகழ் படைத்த வள்ளுவனைப் பெற்றெடுத்த தங்கத் தமிழகத்தில், காலம் காலமாய், ஆணாதிக்கத்தின் பிடியில் சிக்கித் தவித்த அரசியல் சதுரங்கத்தில், ஆண்களுக்கு நிகர் என்ன, அதைவிடப் பன்மடங்கு அதிகமாகவே மக்கள் சேவை செய்யமுடியும் என்று இந்த உலகுக்கு நிரூபித்துக்காட்டிய மாண்புமிகு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அம்மா அவர்கள், தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் போற்றி வணங்குகிறேன். (குறுக்கீடு) பேரவைத் தலைவரே, இங்கே பாருங்கள். (குறுக்கீடு) பேரவைத் தலைவரே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், என்ன? சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.-ஐயும் ஆணாதிக்கம் செய்தார் என்று சொல்கிறாரா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், பேசுங்கள், நீங்கள் பேசுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** பேரவைத் தலைவரே, தொகுதிப் பிரச்சினையைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15 நிமிடங்கள்தான் கொடுத்திருக்கிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** எங்களுடைய சங்கரன்கோயில் தொகுதியிலே, 15 நாட்களுக்கு ஒருமுறைகூட குடிதண்ணீர் வரவில்லை, ஒன்று. இரண்டாவது, எந்த நேரம் கரண்ட் வருகிறது, எந்த நேரம் போகிறது என்று ** தெரியவில்லை. கேட்டால், பொது மக்கள் சொல்கிறார்கள்; உங்களுக்கு நன்றாகத் தெரியும்; பேரவைத் தலைவருக்கு நன்றாகத் தெரியும். மணல், அரிசி, ரேஷன் பொருள் கேரளாவிற்குப் போவதுமாதிரி, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் ** என்று சொன்ன அந்த வார்த்தை நீக்கப்படுகிறது. உங்களுக்கு ** என்கிற வார்த்தையெல்லாம் ஏன் வருகிறது? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, மணல், ரேஷன் அரிசி காணாமல் போவதுமாதிரி, current-ம் போகிறது என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரையை ஆரம்பிக்கும்போது, திருட்டு, புரட்டு அரசியல் என்று சொன்னார்கள். அதை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரைச் சொன்னார்?

**திரு. சொ. கருப்பசாமி:** யாரோ மேலேயிருந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பாருங்கள். அதாவது, என்னுடைய சங்கரன்கோயில் தொகுதியிலே, 5 ஆயிரம் பேருக்கு மேல் ரேஷன் கார்டு கேட்டு மனு கொடுத்திருக்கிறார்கள்; ஒன்றும் கொடுக்கவில்லை.

இரண்டாவது, நீங்கள் சொல்வீர்களே, விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்புத் திட்டம், அப்படியென்று சொல்லி, மாண்புமிகு அம்மா கொடுத்த உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் 2 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் என்னுடைய தொகுதியிலே வாங்கினார்கள். இன்னும், நீங்கள் அந்த உழவர் அட்டையைக் கொடுக்கவில்லை; சீக்கிரமாகக் கொடுங்கள்.

அடுத்து, எங்களுடைய சங்கரநயினார்கோவில் தொகுதியிலே, சங்கரன்கோயில் புண்ணியஸ்தலம். அந்த ஸ்தலத்திலே பாருங்கள்; இந்த ஆட்சியிலேதான் திடீரென்று, கோயிலில் கட்டணத்தைப் பல மடங்கு உயர்த்தியிருக்கிறீர்கள். என்னய்யா, அநியாயமாக இருக்கிறது? பொதுமக்கள், ஏழை மக்கள் அனைவரும் திகைக்கிறார்கள். ஆனால், பொதுவாக, காணிக்கை செலுத்துவது கோயிலுக்குத்தான் என்பார்கள்; கண்டவர்களுக்கெல்லாம் காணிக்கை செலுத்தமுடியாது. அதேமாதிரி, கோயிலுக்கு மொட்டைபோடப் போனால், இருக்கிற முடியைத்தான் மொட்டைபோட முடியும். நீ, வழுக்கைத் தலைக்காரன், மொட்டைபோட வேண்டாமென்றால் முடியுமா ஐயா? இது என்ன அநியாயமாக இருக்கிறது. அதனாலே, பழைய நிலையிலேயே அந்தக் கட்டணம் தொடர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்து, எங்களுடைய தொகுதியிலே, மேலநீலிதநல்லூர் ஒன்றியத்திலே, ஊராட்சி ஒன்றியக் குழு, 11-வது வார்டு உறுப்பினர் தேர்தலுக்குப் பின் மறுவாக்குப் பதிவு கோரிய 50 பேருக்கு மேல் வேண்டுமென்றே case போட்டிருக்கிறார்கள். இன்னும் அவர்கள் condition bail-ல் இருக்கிறார்கள். அதை இரத்து பண்ணுங்கள்.

அதேமாதிரி, திருநெல்வேலி மாவட்டக் காவல் துறை சார்பிலே, என்னுடைய தொகுதியிலே விழா நடத்தினார்கள். அந்த விழாவிலே பாருங்கள்; 307, கொலை வழக்கில் குற்றப் பதிவு செய்யப்பட்டவர், S.P.-யோடு meeting-ஐ நடத்துகிறார். அதேபோல, நன்றியுரை ஆற்றவேண்டிய உதவி ஆய்வாளர் திரு. முத்துகிருஷ்ணன் என்பவர், அந்த விழா நடக்கும்போது, அவர் தங்கியிருந்த அறையிலே

செத்துப் போய்க்கிடந்தார். Letter எழுதி வைத்துவிட்டு, செத்துப் போயிருக்கிறார். என்ன, ஏது என்று கண்டுபிடிக்கவில்லை. ஆனால், அந்த அழைப்பிதழே எனக்கு இல்லை; அந்த அழைப்பிதழிலே என்னுடைய பெயர் அச்சிடப்படவில்லை. ஒரு ஆதி திராவிட சட்டமன்ற உறுப்பினர், எதிர்க்கட்சி உறுப்பினர் என்பதாலே, அந்தமாதிரி பெயர் போடவில்லையா? அதற்கெல்லாம் சட்டப்படி நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தமாதிரி... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** *கடந்த காலத்திலே, என்னுடைய தொகுதியிலே எத்தனையோ அரசு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. என்னுடைய பெயர் எந்த அழைப்பிதழ்களிலும் போடப்படவில்லை.*

**திரு. சொ. கருப்பசாமி:** ஆதாரத்துடன் பேசுகிறேன் தலைவரே, உங்களுக்குத் தெரியும். அவர் பேச்சைக் கேட்காதீர்கள். என் பேச்சை நீங்கள் கேளுங்கள், தலைவரே! அதாவது, ஆதி திராவிடர் நலத் துறையிலே இந்த book இருக்கிறது பாருங்கள்; எத்தனையோ தடவை முதலமைச்சர் என்று சொல்கிறீர்களே, இந்த book-இலே நீங்கள் கொண்டு வந்த திட்டம் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது என்று ஒரு திட்டத்தைக் காட்டுங்கள் பார்ப்போம். என்னையா அநியாயமாக இருக்கிறது? மாண்புமிகு அம்மா கொண்டு வந்தார்கள், சைக்கிள் திட்டம்; நீங்களும் கொண்டு வருகிறீர்கள். மாண்புமிகு அம்மா கொண்டு வந்தார்கள், கல்வி முழு மானியக் கடன்; அதை நீங்கள் கொண்டு வருகிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா கொண்டு வந்தார்கள், நிலம் வழங்கும் திட்டம்; நீங்கள் கொண்டு வருகிறீர்கள். அப்படி மாண்புமிகு அம்மா கொண்டுவந்த திட்டத்தைத்தான் கொண்டுவருகிறீர்களே தவிர, 'நாங்கள் கொண்டு வந்த திட்டம் தொடர்ந்து இருக்கிறது' என்று சொல்லமுடியுமா? பார்ப்போம். கொண்டுவந்தது என்ன? சமத்துவபுரங்கள் என்று கொண்டுவந்து, ஆதி திராவிடர் நலத் துறை நிதியிலே, பிற சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய அளவுக்கு அந்த சமத்துவபுரத்தை மாற்றியிருக்கிறீர்கள். சரி, ரொம்ப சந்தோஷம். இருக்கட்டும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*



**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு இலவசமாக வீடு கட்டும் திட்டம் என்பது, 1972 ஆம் ஆண்டு முதன்முதலாக, மாண்புமிகு அண்ணன் கலைஞர் அவர்கள்தான் முதன்முதலாகக் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்து அந்த ஆட்சியில் அவர்கள் கட்டவில்லையா? ஏதோ இவர்கள் சொல்லியதைத்தான் நாங்கள் செய்ததைப்போல, இங்கு வெளிப்படுத்துகிறார்கள். பல்வேறு திட்டங்கள், இப்படித் தலைவர் கலைஞர் கொண்டு வந்த திட்டங்கள்தான், அந்த அரசிலும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தன.*

**திரு. சொ. கருப்பசாமி:** *சரி தலைவரே. அதாவது நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள், திட்டம், இரண்டு ஏக்கர் இலவச நிலம் என்று சொல்லி, அதேமாதிரி, gas அடுப்பு, டி.வி. என்று சொல்லியிருக்கிறீர்களே, ஆதி திராவிட மக்களுக்குத்தான் முன்னுரிமை வழங்கப்படும் என்று ஒரு வார்த்தை சொன்னீர்களா அய்யா? நாங்கள், ஆதி திராவிட மக்கள் என்ன, பாவம் செய்தவர்களா? என்னையா கொடுமையாக இருக்கிறது? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அவருடைய கருத்துகள் சிலவற்றைச் சொல்லுவதிலே எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், வேண்டுமென்றே, திட்டமிட்டு, இந்த அரசாங்கத்தின்மீது பழி சுமத்துகின்ற வகையில், ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் யாருக்காவது தொலைக்காட்சிப் பெட்டிகள் கொடுத்திருக்கிறீர்களா என்று கேட்கிறார். நம்முடைய அம்மையார், திருமதி டி. யசோதா அம்மையார் அவர்களுடைய தொகுதியிலே, தலைவர் கலைஞர் அவர்கள் விழா நடத்தும்போது, எல்லோருக்கும்தான் கொடுத்தார்கள். குடும்ப அட்டைகள் வைத்துக்கொண்டிருக்கின்ற அத்தனை பேருக்கும் கொடுத்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில், ஆதி திராவிட மக்களுக்கு கொடுக்கவில்லை என்று சொல்வது பெரிய குற்றச்சாட்டு. நானே கோவை மாவட்டத்திலே, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொடுக்கின்ற நேரத்தில், நூற்றுக்கணக்கான ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்னுடைய கையாலேயே பெற்றுக்கொண்டு சென்றிருக்கிறார்கள் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள், திரு. கருப்பசாமி. அரசு நிகழ்ச்சியிலே, உங்கள் தொகுதியிலே நானே வந்து கலந்து கொண்டேன். அந்த நிகழ்ச்சிக்கு நீங்களே வரவில்லை.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நம்முடைய வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குகின்ற...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். நீங்கள் பேசுங்கள், பேசுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள் அவ்வளவு பேரும். உட்காருங்கள், உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள் எல்லோரும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள் எல்லோரும். திரு. இராமகிருஷ்ணன், உட்காருங்கள். திரு. அரி, உட்காருங்கள் (கூச்சல்-குழப்பம்), திரு. அன்பழகன், உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) No, no, உட்காருங்கள், உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள் முதலிலே. (கூச்சல்-குழப்பம்) .

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இந்த அவையிலே நடக்கின்ற எந்த விவாதத்திலும், எந்தக் கருத்துப் பரிமாற்றத்திலும் உங்கள் அனுமதியோடு பேசுவதற்கு எனக்கு உரிமையிருக்கிறது. இந்த அவையில் யார் பேசவேண்டும், எப்பொழுது பேச வேண்டும் என்பதை முடிவு செய்யும் அதிகாரம் . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சின்னசாமி, அமைதியாக உட்காருகிறீர்களா? இல்லையா? (கூச்சல்-குழப்பம்) பேசுங்கள் நீங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் யாராவது விளக்கம் கேட்க வேண்டுமென்று கேட்டு, தாங்கள் அனுமதித்தால்,.



யாராக இருந்தாலும் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், அவர்களுடைய கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார்; அவர் பேசியதில் இருக்கின்ற ஒரு குற்றத்தை இந்த அவைக்கு நினைவுபடுத்த திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், அவையில் அனுமதி கேட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதற்கு அவைத் தலைவர் அனுமதி தந்திருக்கிறார். அதன்மீது அவர் பேசுகின்ற நேரத்திலே, எதிர்க்கட்சிக்காரர்கள் இப்படிக் கூச்சல் போடுவது முறையல்ல.

(முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே விவாதத்திலே பங்குபெறுகின்ற எந்த உறுப்பினருக்கும், மற்றொரு உறுப்பினர் பேசுகின்றபோது, ஏதாவது தவறான கருத்துகளைச் சொன்னாலோ, இல்லை, விளக்கம் தரக்கூடிய வகையிலே பேசினாலோ, அதற்கு விளக்கம் கேட்கக்கூடிய உரிமையோ, அந்தத் தவறைச் சுட்டிக்காட்டக்கூடிய உரிமையோ நீங்கள் அனுமதி அளித்தால், இந்த அவையிலே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களுக்கும் உண்டு. இந்த அவையிலே யார் பேச வேண்டும், யார் பேசக் கூடாது என்பதை முடிவு செய்யக்கூடிய அதிகாரம் உங்களுக்கு மட்டுந்தான் இருக்கிறதேயொழிய, இந்த அவையிலே, பின்னாலே உட்கார்ந்து, எங்களை 'பேசு' 'வை' என்று சொல்லக்கூடிய அதிகாரம் யாருக்கும் கிடையாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உண்மைதான், அப்படித்தான். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபகாலமாக முக்கிய பிரதான எதிர்க்கட்சியைச் சார்ந்த நண்பர்கள், வேறு யாருமே பேசக்கூடாது என்கிற உணர்வோடு அவர்கள் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இந்த அவையிலே எல்லோருடைய கருத்தையும் சொல்வதற்கான உரிமையை நீங்கள் தர வேண்டும். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குகின்றபோது, ஆதி திராவிட மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவில்லை என்கிற . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள் *(குறுக்கீடுகள்)* அமைதியாக உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். திரு. அரி, உட்காருங்கள், உட்காருங்கள் *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், அமைதியாக உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர்கள்... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சின்னசாமி, உங்கள்மீது நடவடிக்கை எடுப்பேன், ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள் முதலிலே. *(குறுக்கீடுகள்)* திரு. செ.ம. வேலுசாமி, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். திரு. விடியல் சேகர், உட்காருங்கள். உட்காருங்கள் முதலில். நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள். உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நான் பார்த்துக்கொள்கிறேன். *(கூச்சல்-குழப்பம்)* *(குறுக்கீடுகள்)* திரு. அமரமூர்த்தி, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து, பேரவைத் தலைவர் அவர்களே. *(குறுக்கீடுகள்)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள். விடியல் சேகர், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து, பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை விதிமுறைகள்படி நடப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். ஆளுங்கட்சியைச் சார்ந்த நண்பர்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சியைச் சேர்ந்த அத்தனை பேரும் எழுந்து கொள்கிறார்கள் என்பதற்காக, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் எழுந்தால், இந்த அவையிலே என்ன நடைபெறுகிறது என்று யாருக்கும் தெரியாது. எனவே, எந்தக் காரணத்தைக் கொண்டும் — எதிர்க்கட்சிக்காரர்கள் செய்வதை வெளி உலகத்திற்கு நாம் காட்ட வேண்டுமே தவிர — நாம் எழுந்து பதிலுக்குப் பதில் பேச வேண்டாம் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். பேரவையினுடைய தலைவர், இந்த அவையை ஒழுங்காக நடத்துவதற்கு நாமும் ஒத்துழைக்க வேண்டுமென்று ஆளுங்கட்சித் தரப்பைக் கேட்டுக்கொண்டு, பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், அவர்களுடைய கருத்தைச் சொல்வதற்கு அவைத் தலைவர் அனுமதித்திருக்கிறார். அவர் சொல்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கருப்பசாமி அவர்கள் பேசுகின்றபோது, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படுகின்ற இடங்களிலே, ஆதி திராவிட மக்களுக்கு முன்னுரிமை இல்லை என்கிற கருத்தை ஒட்டுமொத்தமாகச் சொன்னார்.

ஆதி திராவிட மக்கள், சங்கரன்கோயில் தொகுதியிலே மட்டுமில்லை; தமிழகத்திலே இருக்கின்ற 234 தொகுதிகளிலும் ஆதி திராவிட மக்கள் வாழ்கிறார்கள். நாளை எங்கள் தொகுதியிலே இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்களுக்கு, இந்தக் கருத்துச் சென்றால், அவர்களுக்கு அப்படி ஒரு அநீதி நடக்கிறதோ என்கிற ஐயப்பாடு வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்கு முதலில் அந்த நல்ல தகவல் போக வேண்டுமென்பதற்காகத்தான் நான் எழுந்து நின்றேன்.

என்னுடைய சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை, ஐந்து உள்ளாட்சி மன்றங்களிலே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்

வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஐந்து ஊராட்சிகளிலும் பெரும்பாலான வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த மக்களுக்குத்தான் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை, நான் இந்த அவையிலே பதிவுசெய்ய விரும்புகிறேன். நண்பர், மாண்புமிகு உறுப்பினர் கருப்பசாமி அவர்கள், அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியிலே வழங்கப்பட்ட ஐந்து ஊராட்சி மன்றங்களிலே எந்த ஊராட்சிமன்றத்தில் ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதைக் குறிப்பாகச் சொன்னால், அரசு அதற்கு நடவடிக்கை எடுக்கும். அந்தக் கிராமத்தில், அந்த ஊராட்சிமன்றத்தில் யாருக்கு வழங்கப்படவில்லை என்பதை அவர் குறிப்பிட்டுச் சொல்வாரா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. துரைராஜ். திரு. கருப்பசாமி, பேசுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், சைக்கிள் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வீட்டுப் பிள்ளைகளுக்குத்தான், சைக்கிள்களை முதன்முதலாக மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்தார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை, சட்டமன்ற உறுப்பினர்களோ, அல்லது ஆட்சியிலே, இருக்கின்ற அமைச்சர்களோ நேரடியாகக் கொடுப்பதில்லை. இதற்கென்று ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஊராட்சியிலும், ஊராட்சிமன்றத் தலைவர்களை உள்ளடக்கியிருக்கிற குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த ஊராட்சிமன்றத் தலைவர்களை உள்ளடக்கிய குழுவினர்தான் பயனாளிகளைத் தேர்வு செய்கிறார்கள். எனவே, அங்கேயும் அவர்கள்தான் தேர்வு செய்கிறார்கள். என்னுடைய மாவட்டத்திலேகூட பல இடங்களிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஊராட்சிமன்றத் தலைவர்களை உள்ளடக்கிய குழு, பயனாளிகளைத் தேர்வு செய்த பின்புதான், அதற்கென்று ஒரு துணை ஆட்சியரை அரசு நியமித்திருக்கிறது; அவர்கள் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொடுக்கின்றார்கள். ஆகவே, பயனாளிகளைத் தேர்வு



செய்வது, அந்த ஊராட்சிமன்றத் தலைவர்களை உள்ளடக்கியிருக்கிற குழு. ஆக, அவருடைய கட்சியைச் சார்ந்த ஊராட்சிமன்றத் தலைவர்கள் யாராவது, ஆதி திராவிடர்களை நம்பாமல், அவர்களுக்குக் கொடுக்காமல் ஒதுக்கியிருக்கலாமேயொழிய, எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த அளவில், அ.தி.மு.க.-வைச் சார்ந்த ஊராட்சிமன்றத் தலைவர்கள்கூட, அந்தந்த இடங்களிலே ஒழுங்காகக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இதிலே கட்சிப் பாகுபாடெல்லாம் அல்ல. ஊராட்சிமன்றத் தலைவர்கள்தான் இந்தப் பட்டியலைத் தயார் செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிக்காரர்களுக்கு உதவுவதற்காகச் சொல்கிறேன். இந்தத் திட்டம் தொடங்கப்பட்டதே, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று. முதன்முதலாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டது, தமிழ்நாட்டிலே உள்ள சமத்துவபுரங்களிலேதான். அந்தச் சமத்துவபுரங்களில் வாழ்கின்றவர்களிலே 50 சதவிகிதம் பேர், ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களைப்பற்றிப் பேசுவதற்கு இவர்களுக்குத் தகுதியில்லை என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்) நான் ஒன்றைச் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட சமுதாயத்திலேயிருந்து, தன்னுடைய வீட்டிற்கு, தன்னுடைய மகனுக்கு, மருமகளைத் தேர்ந்தெடுத்தவர்,

நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். அதேநேரத்தில், இவர்களுடைய தலைவி முதலமைச்சராக இருந்தபோது, தான் சென்ற விமானத்தில் பயணம் செய்த ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் திரு. அருணாசலம் அவர்களை இறக்கிவிட்டவர் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, உட்காருங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளிலே, (குறுக்கீடுகள்) கேளுங்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாளிலேதான் மாண்புமிகு அம்மா அவர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வீட்டுப் பிள்ளைகளுக்கு சைக்கிள் கொடுத்தார்கள். முன்னுரிமை கொடுத்து, S.C. பிள்ளைகளுக்குத்தான் கொடுத்தார்கள். அந்த மாதிரி முன்னுரிமை கொடுத்து, டி.வி., 2 ஏக்கர் நிலம் ஆகியவற்றைக் கொடுக்கலாமே என்றுதான் சொன்னேன். இதைக்கூடத் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறீர்கள். சரி, பரவாயில்லை. இருக்கட்டும்.

அதாவது, "ஊரான் ஊரான் தோட்டத்திலே, ஒருத்தன் போட்டானாம் வெள்ளரிக்காய். காசுக்கு இரண்டா விற்கச் சொல்லி காகிதம் போட்டானாம் வெள்ளைக்காரன்" என்று அந்தக் காலத்திலே சொல்வார்கள். ஆனால் நீங்கள், ஆதி திராவிட மக்கள், புறம்போக்கு இடங்களிலே வீடுகளைக் கட்டிக்கொண்டு, நீண்டகாலமாக வாழ்கிறார்கள். அங்கே current-ம் இல்லை. ** இல்லை. அதாவது, current-ஐயாவது முன்கூட்டியே கொடுக்கலாம்... (குறுக்கீடுகள்) கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, ** என்கிற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அந்தப் பக்கத்திலிருந்து, அடிக்கடி ** என்ற வார்த்தை ஏன் வருகிறது? (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** அல்ல, அதை ** என்று வைத்துக்கொள்ளுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுகின்ற உறுப்பினர் அடிக்கடி ** என்றே சொல்கிறார். இந்த ** என்ற வார்த்தையைத் தவிர, அவர் வாயில் வேறு ** வராது போலிருக்கிறது!

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பிலே, பக்கம் 10-ல், பத்தி 5-ல், "அனைத்துக் கிராமங்களிலுள்ள வீடுகளுக்கு 2012 ஆம் ஆண்டிற்குள் மின்சார இணைப்பு வழங்குவதையே முக்கிய நோக்கமாக இந்த அரசு கொண்டிருக்கிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு என்ன அர்த்தம் என்றால், "செத்த பிறகே சிவலோகம், வைகுண்டம் என்பார் பித்த மனிதர், அவர் உரை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்பொழுது பார்த்தாலும், சாவைப்பற்றியே பேசிக் கொண்டிருக்கிறீர்களே? திரு. கருப்பசாமி, உங்கள் கருத்தை மாத்திரம் சொல்லுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** பேயுரையாம் என்று ஊதடா சங்கை", என அப்படிக் கதையிலே இருக்கின்றது. (குறுக்கீடுகள்) பொறுங்கள். இன்னும் பேசவே ஆரம்பிக்கவில்லை. இனிமேல்தான் கதையே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டு (குறுக்கீடுகள்) கேளுங்கள், தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.208 கோடியில், ஒரு இலட்சத்து, 97 ஆயிரத்து, 400 பேர் பயன்பெறும்வகையில், தாட்கோமூலம் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், உள்ளே படித்துப் பார்த்தால், என்ன தெரிகிறது என்றால், முழுக்கப் பார்த்தால், வெறும் 88 கோடி ரூபாய்தான் செலவிடப்பட்டதாகக் கணக்கு இருக்கிறது. அப்படியென்றால், என்ன அர்த்தம் என்றால், பஜாரிலே பெரிய போர்டிலே போட்டிருப்பார்கள்: "நெய்யினால் சுட்ட பலகாரம்" என்று பெரிய போர்டிலே போட்டுவிட்டு, கீழே சிறியதாக "அல்ல" என்று எழுதிவிடுவார்கள். அதைப் பார்க்கிறவர்களெல்லாம், "ஆஹா! நெய்யினால் சுட்ட பலகாரம்" என்று ஓடி ஓடி உள்ளே போய் வாங்கப் போவார்கள். ஆனால், உள்ளே போய் வாங்கப் போனால், அந்த நெய்யிலேயும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சுடவில்லை, தண்ணீரிலேயும் சுடவில்லை. என்ன இருக்கிறது? வெறும் கல்லிலேதான் கட்டிருக்கிறார்கள். ஆக, இப்படிப்பட்ட திட்டங்கள்தான் இந்த ஆதி திராவிடர் நலத் துறையில் இருக்கிறது. அப்புறம் கேளுங்கள், தலைவர் அவர்களே...

(முற்பகல் 11-15)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் பேசப்படுகிற கருத்துகள், காரண காரியத்தோடு, புள்ளிவிவரத்தோடு இருக்குமானால், அவற்றை இந்த அவையிலே பதிவு செய்யலாம். மாறுபட்ட கருத்தைச் சொல்லலாம்; ஆனால், புள்ளிவிவரம் சரியாக இருக்கவேண்டும். புள்ளிவிவரம் சரியாக இல்லாத கருத்துகளை வைத்துக்கொண்டு, ஒன்றுக்கொன்று இணைப்பில்லாதவற்றை இணைத்துப் பேசப்படுமானால், அவைக் குறிப்பிலேயிருந்து அவ்வாறு பேசப்பட்ட பகுதி நீக்கப்பட வேண்டும் அவைத் தலைவருடைய உரிமையைத் தாங்கள் பயன்படுத்தி, நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, நீங்கள்...

**திரு. சொ. கருப்பசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, புத்தகத்திலே இருக்கிறதைத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தகத்தைக்கூட படிக்கத் தெரிய வேண்டும். படிக்கவும் தெரிய வேண்டும்; புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற கருத்துகளைப் படிக்கவும் தெரிய வேண்டும்; இணைக்கவும் தெரிய வேண்டும்; ஒப்பிட்டுக் காட்டவும் தெரிய வேண்டும்; ஏற்றத்தாழ்வை விளக்கவும் தெரிய வேண்டும். (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயம் சண்முகம். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயம் சண்முகம். (கூச்சல்-குழப்பம்)*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று குரலெழுப்பினர்.)*

**திரு. உதயம் சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். வங்கக் கடல் அலைகள் வந்து உறவாடும்*



*தங்கத் தமிழ் மணக்கும், தங்கத் தமிழகத்தின் தலைவா, எங்கள் குல விளக்கே, பொன்விழா காணும் உங்கள் பாதமலர் தொட்டுத் தொடருகிறேன், என் பேச்சை. (மேசையைத் தட்டும் ஒலி)*

ஓரே ஒரு சந்திரன்தான் இரவுக்கெல்லாம்; ஓரே ஒரு சூரியன்தான் பகலுக்கெல்லாம்; ஓரே ஒரு தளபதிதான் தமிழகத்துக்கெல்லாம்; என் உள்ளமெல்லாம் ஆட்சிசெய்யும் தளபதியே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே, உங்கள் ஆசியுடன் தொடங்குகிறேன், என் பேச்சை. (மேசையைத் தட்டும் ஒலி)

*சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, இந்த மாமன்றத்தில் பேச அழைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தளபதி அவர்களுக்கும், நன்றியினைக் கூறுகின்றேன். (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனுமதி இல்லை. எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) திரு. உதயம் சண்முகம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) அனுமதி இல்லை, உட்காருங்கள்.*

**திரு. உதயம் சண்முகம்:** ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மீதான எனது கருத்துகளைப் பதிவு செய்கிறேன். மக்கள்தொகையின்படி பார்க்கப்போனால், ஆதி திராவிட மக்கள் 118.53 இலட்சம், எஸ்.டி. பிரிவு என்று சொல்லக்கூடிய மலை சாதியின மக்கள் 6.51 இலட்சம், இஸ்லாமியர்கள் 13 கோடி, கிறிஸ்தவர்கள் 2.5 கோடி இந்தியாவில் வாழ்கிறார்கள். இதில் ஏறத்தாழ 11¼ கோடி ஆதி திராவிட மக்களின் எண்ணங்களைத் தெரிந்து, அவர்களின் எண்ணங்கள் ஈடேறும் வகையில் ஏற்றமிகு திட்டங்கள் பல நிறைவேற்றி, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், இந்தியாவிலேயே அரசியல் சாதனை படைத்த தமிழகத்தின் முதல்வர் அவர்களே, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) ** ஆதி திராவிடர்களைப் பற்றிப் பேசியிருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** *என்கிற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (கூச்சல்-குழப்பம்) திரு. உதயம் சண்முகம், subject-ஐ மட்டும் பேசுங்கள். (கூச்சல்-குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) போங்கள்.*

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. சி. துரைராஜ்:** நன்றி சொல்லி முடிக்கட்டும், சார். ஒரு நிமிடம் கொடுங்கள், சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, No. no. no. not allowed. நீங்கள் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். திரு. துரைராஜ், நீங்கள் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) அவை முன்னவர் அவர்கள் (குறுக்கீடுகள்) அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசிய அந்தப் பேச்சில் ** என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கச் சொல்லிவிட்டேன். (கூச்சல்-குழப்பம்) திரு. கருப்பசாமி, உங்களுக்கு 15 நிமிடம் கொடுத்தேன். ஆனால், 20 நிமிடம் உங்களுக்கு பேச வாய்ப்புத் தரப்பட்டுள்ளது. (கூச்சல்-குழப்பம்) திரு. உதயம் சண்முகம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. உதயம் சண்முகம்:** மத்தியில் ஆதி திராவிடர் சமுதாயத்திற்கு ஒரு அமைச்சரையும், இந்தச் சட்டமன்றத்திற்கு மூன்று அமைச்சர்களையும், துணைச் சபாநாயகராக ஒருவரையும் என ஐந்து அமைச்சர்களை அமர்த்தி, அழகு பார்க்கும் ஒப்பற்ற தலைவர், தமிழினத் தலைவர் அவர்களே, நன்றியினைக் கூறுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேசப் பிதா காந்தியடிகள் அவர்கள், "மறுபிறவி என ஒன்று இருக்குமேயானால், அதில் நான் அரிஜனாகப் பிறக்க வேண்டுமென்று விரும்புகிறேன்" என்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்வி, கலாச்சாரத்திலும் கடைக்கோடியில் வாழும் நிலையை அனுபவிக்கும் மக்களுக்கு, சமூகத்தில் சமத்துவ அந்தஸ்து கிடைக்கும் பல திட்டங்களை வகுத்துள்ளது இந்த அரசு.

பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்காச்சியேந்தலில் ஒரு ஆதி திராவிடரைத் தலைவராக்க இந்த அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகள் மற்றும் அந்த மக்களுக்கென, சமத்துவப் பெருவிழாக் கண்ட உள்ளாட்சித் துறை அமைச்சர் எங்கள் தளபதி அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



முற்பகல் 11-50

ஆதி திராவிட மக்களுக்கு நேரடியாகப் பல திட்டங்களை அறிவித்துள்ளது மட்டுமின்றி, அவர்கள் பயன்பெறும்படியாக இலவச கேஸ் இணைப்பு, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, தொழிலாளர் பாதுகாப்பு வாரியம், விவசாயத் தொழிலாளர் பாதுகாப்பு வாரியம் எனப் பல்வேறு திட்டங்களை அறிவித்த இந்த அரசை எல்லோரும் பாராட்டுகிறார்கள்.

ஆதி திராவிட மக்கள், இந்திய அளவில் பல்வேறு உரிமைகளைப் பெற, காலமெல்லாம் போராடியவரும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியவருமான அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு, சென்னை மாநகரில் இராஜா அண்ணாமலைபுரத்தில் அழகான மணி மண்டபம் ஒன்றை அமைத்து, அதனை 10-6-2000 அன்று திறந்து, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு மரியாதையைத் தேடிக் கொடுத்தவர், நமது முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மலைவாழ் மக்கள், அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் உரிய இடங்களைப் பெற்று, வாழ்வில் உயர வேண்டும் என்பதற்காக, அவர்களுக்கென்று ஒரு சதவிகித தனி இட ஒதுக்கீட்டை 1990 ஆம் ஆண்டில் உருவாக்கி, புதிய வரலாறு கண்ட உன்னதத் தலைவர், நம் முதல்வர் அவர்கள்.

நமது தமிழக வரலாற்றில், முதன்முதலாக 13-11-1969 அன்று எ.என். சட்டநாதன் கமிஷனை அமைத்தவர் நமது முதல்வர். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அந்தக் கமிஷனின் பரிந்துரைகளை, 7-6-1971 அன்று ஏற்று, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 16 விழுக்காடாக இருந்த இட ஒதுக்கீட்டினை, 18 விழுக்காடாக உயர்த்தித் தந்து, நலிந்த நிலையில் விழுந்துகிடந்த சமுதாயத்தை எழுந்து நடக்கச் செய்திட, அவர்கள் சமூகப் பொருளாதார நிலையில் உயர்ந்து, உன்னத நிலையை எய்திட, வழிவகுத்துத் தந்த வரலாற்று நாயகர் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினராக்கி, இம்மாபெரும் சபையில் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, 31 ஆண்டுகளுக்குப் பின்பு, அறந்தாங்கியில் சுமார் 18 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றிபெறச் செய்த, அறந்தாங்கி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என் நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

வெளி அளவில்தான் அறந்தாங்கி வெளிச்சமாகப் பேசப்படும். 234 தொகுதிகளிலும், மிகப் பின்தங்கிய தொகுதியாக இருப்பது அறந்தாங்கிதான். இந்த மன்றத்தில் இருக்கும் 80 சதவிகித சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் அமைச்சர்களுக்கும், இந்நாள் அமைச்சர்களுக்கும் அறந்தாங்கியின் பழைய அவல நிலை தெரியும். 31 ஆண்டுகளுக்குப் பின், திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற அறந்தாங்கி தொகுதியை, உண்மையிலேயே வெளிச்சமான தொகுதியாக மாற்றித் தரும்படி, மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களே, என் தொகுதியின் தேவைகள் என்னென்ன என்பதையும், 234 தொகுதிகளின் தேவைகள் என்னென்ன என்பதையும் உங்கள் விரல் நுனியில் வைத்திருப்பீர்கள் என்று தெரியும். கேட்காமலேயே கொடுப்பது தங்கள் கரம் என்றாலும், 'அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்' என்பதால், சில கோரிக்கைகளை முன்வைக்கிறேன். முன்வைக்கும் வேளையில் ஓராண்டு காலத்தில் தாங்கள் எனது தொகுதிக்குச் செய்த நன்மைகளுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

கடந்தகால கசப்பான ஆட்சியில், களையிழந்து காணப்பட்டது எங்கள் அறந்தாங்கி தொகுதி. தாங்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற நாள் முதல், தினந்தோறும் மக்கள் நலன் கருதி, தாங்கள் அறிவித்துவரும் திட்டங்களின்மூலமாக, களைகட்டத் தொடங்கிவிட்டது எங்கள் அறந்தாங்கி தொகுதி.

(அ.இ.அ.தி.மு.க. மற்றும் ம.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

கொள்ளிடம் ஆற்றில் அபாய காலங்களில் திறந்துவிடப்படும் வெள்ள உபரி நீரை, புதுக்கோட்டை மாவட்டத்திற்குத் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியினைக் கூறுகின்றேன். அதனை மேலும் நீட்டித்து, புதுக்கோட்டை பகுதியிலுள்ள கவிநாடு கண்மாய் வழியாக வெள்ளாறு, பாம்பாறுவரை வந்தால், ஆவுடையார்கோயில் மற்றும் அறந்தாங்கியும் பயன்பெறும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறை ஏரிகள், சிறுபாசன ஏரிகள், வகை செய்யப்படாத ஏரிகள் அனைத்தையும் சீரமைத்திட, 1974 ஆம் ஆண்டு தலைவர் அவர்களால் ஆவுடையார்கோயில் பகுதியில், பொதுப் பணித் துறை உபகோட்டம் ஒன்று நிறுவப்பட்டு சிறப்புடன் செயல்பட்டது. அதுபோல, இந்த நிதியாண்டில் நிரந்தரமாக ஒரு சிறப்பு உபகோட்டம்



அமைய, நிதி ஒதுக்கீடு செய்தால் எம் பகுதி விவசாய மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

15-7-2006 முதல், பள்ளி மாணவர்களுக்கு வாரம் இரண்டு முட்டைகள் வழங்கப்பட்டன. மேலும், மாணவர்களின் அறிவுத் திறன் வளர. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. உதயம் சண்முகம்:** கன்னிப் பேச்சு; நான் பேசவே இல்லை; அவர்கள்தான் போய்விட்டார்களே! வாரத்திற்கு மூன்று முட்டைகள் வழங்கிய தலைவர் அவர்களுக்கு, என் தொகுதி மாணவ மாணவியர் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

கல்லூரிகள் இல்லாத தொகுதிகளில், புதிய கல்லூரிகள் ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்காக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தில் எங்கள் தொகுதியில் கல்லூரி இல்லை. ஒரு கல்லூரியை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் 10 காவல் நிலையங்கள் உள்ளன. அவற்றில் அறந்தாங்கி, மணமேல்குடி, கோட்டைப்பட்டினம், ஜெகதாப்பட்டினம், மீமிசல், திருப்புனவாசல், ஏம்பல் ஆகியவற்றிற்குப் புதிதாகக் கட்டடம் கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மணமேல்குடியில் மாணவியர் விடுதி ஒன்று அமைத்துத் தந்தால், ஏழை மாணவிகள் பயன்பெறுவர்; அந்த வகையில், மாணவியர் விடுதியை அமைத்துத் தரும்படி மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

52 கிலோ மீட்டர் கடற்கரையைக் கொண்ட அறந்தாங்கி தொகுதியில், பெரும்பாலான மக்கள் மீன்பிடித் தொழிலை நம்பியே வாழ்கிறார்கள். அவர்களுக்கு மீன்பிடித் துறைமுகம் அமைத்துத் தரும்படியும், கோட்டைப்பட்டினம் அல்லது ஜெகதாப்பட்டினத்தில் அந்த மீன்பிடித் துறைமுகத்தை அமைத்திட ஆணை பிறப்பிக்குமாறும் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில், அறந்தாங்கி நகரம், ஒன்றியப் பகுதிகளில், நீண்ட நாட்களாக, சுமார் 15 ஆண்டுகளுக்குமேல் வாழும் ஏழை எளிய மக்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்ட

மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கவில்லை. தலைவர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், வழங்கிக் கொண்டிருக்கும் அந்தப் பட்டாக்களைச் சுணங்காமல் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சுனாமி, வெள்ளம் அடிக்கடி வரும் பகுதிகளில், புயலிலிருந்து மக்களைக் காப்பாற்ற, கடற்கரையோரம் தாழ்வான பகுதிகளில் தடுப்புச் சுவர்கள் அமைத்துத் தரும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்களுக்குத் தேவையான வலைகள், கட்டுமரங்கள் ஆகியவற்றை இலவசமாகவோ அல்லது மானிய விலையிலோ வழங்கிட கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதியில் மீனவர்கள் நலன் கருதி, அவர்களுக்கு மீன் உலர்களம் ஒன்று அமைத்திடவும், அரசு சார்பில் குளிர்சாதனக் கிடங்கு ஒன்று அமைத்துத் தரும்படியும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உதயம் சண்முகம், உரையை முடியுங்கள்.

**திரு. உதயம் சண்முகம்:** அறந்தாங்கி தொகுதியை ஒட்டியுள்ள, பல கிராமங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இன்றும் கிடைக்காத சூழ்நிலை உள்ளது. 1,000 அடி அல்லது 1,200 அடி ஆழ்குழாய்க் கிணறுகள்மூலம் சில இடங்களில் மட்டுமே அறந்தாங்கி தொகுதியில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதுவும் உப்பு நீராகவே உள்ளது. கடந்தகால நமது ஆட்சியில், நல்ல மனம்கொண்ட உங்களால் திருக்காட்டுப்பள்ளியிலிருந்து அறந்தாங்கி தொகுதிக்குக் குடிநீர் வழங்க போடப்பட்ட திட்டம், கல்மனம் படைத்தவர்களின் ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டது. தற்போது, அறந்தாங்கி தொகுதிக்கு மட்டும், காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக, ரூபாய் 42 கோடி வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியினைக் கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உரையை முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் . . . (குறுக்கீடு) நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. உதயம் சண்முகம்:** அறந்தாங்கி தொகுதியில், பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு 26 கோடி ரூபாய் வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இதுவரையில் நான் பேசவேயில்லை; இரண்டாவது வருடமும் வந்துவிட்டது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, no, no.

**திரு. உதயம் சண்முகம்:** சாலை வசதியைப் பொறுத்தமட்டில் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியாளர்களால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதாகக் கூறினார்கள். அவர்கள் திட்டங்களைச் செயல்படுத்தவில்லை என்பதுதான் உண்மை. குறுகிய மனப்பான்மையோடு, பல்வேறு திட்டங்களைக் கிடப்பில் போட்டவர்கள்தான். தாட்கோமூலமாக, எண்ணற்ற நலத் திட்டங்கள், இந்த ஓராண்டுக்குள், 2,32,774 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியாளர்களால், தாட்கோவின் பல்வேறு திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டன. அவற்றில் ஆதி திராவிடர்கள் தனியாகத் தொழில் தொடங்குவதற்கு, தலைவர் கலைஞர் அவர்கள், 1996 முதல் 2000 வரையில் 24.22 இலட்சம் ரூபாய் வழங்கினார்கள். ஆனால், கடந்த ஆட்சியாளர்களால் அந்தத் திட்டத்திற்கு ஒரு பைசாகூட ஒதுக்கப்படவில்லை என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) துப்புரவுப் பணிக்குத் தேவையான பொருட்கள் மற்றும் வியாபாரம் செய்ய கடைகள் அமைக்க, தலைவர் கலைஞர் அவர்களால் 15.85 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால், கடந்த ஆட்சியாளர்களால் வெறும் 1.9 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டது. மற்றும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் நீங்கள் பதிலுரையிலே சொல்லுங்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** இப்படிப் பல்வேறு திட்டங்களைக் கிடப்பில் போட்டவர்கள்தான் கடந்தகால ஆட்சியாளர்கள். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சி என்றெல்லாம் மலர்கிறதோ அன்றைக்குத்தான் ஆதி திராவிட மக்களுக்கு ஒரு விடிவுகாலமாக அமைகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா. (குறுக்கீடு) ஏன், கொறடா என்றால், எப்பொழுதும் எழுந்து நிற்கவேண்டும்; கையைத் தூக்க வேண்டும் என்றா அர்த்தம்? நான் ஒன்றும் அனுமதி தர வேண்டும் என்ற அவசியம் இல்லை. (குறுக்கீடு) திருமதி யசோதா, பேசுங்கள்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பாக, மானியக் கோரிக்கை எண் 4 என்ற தலைப்பின்கீழ், நான் சார்ந்திருக்கின்ற இந்திய. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன வேண்டும் என்று சொல்லுங்கள். அம்மா, நீங்கள் ஒரே ஒரு நிமிடம் பொறுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, குறுகிய மனம் படைத்தவர்கள் முந்தைய ஆட்சியாளர்கள் என்று சொன்னார்கள். இப்பொழுது பேசுவதற்கே வாய்ப்பில்லாமல் உருவாக்கி இருக்கிற குறுகிய மனப்பான்மை படைத்தவர் யார் என்பதை நாடு அறியும்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரைட். நன்றாகத் தெரியும். சொல்லுங்கள் அம்மா நீங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் இந்த மன்றத்தில் பேசுவதற்கு எங்களைப் போன்றவர்களுக்கு எப்படி வாய்ப்புகள் வழங்கப்பட்டன என்பதை இங்கே உட்கார்ந்திருக்கின்ற பத்திரிக்கையாளர்கள் நன்றாக அறிவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா. 12.00 மணி.

**திருமதி டி. யசோதா:** ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பாக, மானியக் கோரிக்கை எண் 4-ன்மீது நான் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துகளை, இந்த மாமன்றத்தில் பதியவைக்க விரும்புகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சாதாரணமாக, ஆதி திராவிடர் நலத் துறை என்று சொன்னால், இது ஒரு மிகப் பெரிய துறை. எப்படிக் காவல் துறைக்கு இரண்டு நாட்கள் ஒதுக்கீடு செய்து விவாதத்தை நடத்துகின்றீர்களோ, உள்ளாட்சித் துறைக்கு எப்படி இரண்டு நாட்கள் ஒதுக்கீடு செய்து விவாதத்தை நடத்துகின்றீர்களோ, அதேபோன்று ஆதி திராவிடர் நலத் துறைக்கும் நடத்த வேண்டும். ஒரு மணி நேரம், இரண்டு மணி



நேரம் என்று ஒதுக்கி, தமிழகத்திலே இருக்கின்ற மொத்த ஆதி திராவிட மக்களுடைய பிரச்சினைகளுக்கும் இந்த மாமன்றத்திலே தீர்வு காண முடியும் என்று சொன்னால், அது நிச்சயமாக முடியாது. ஆகவே, எடுத்துவைக்கின்ற ஆக்கபூர்வமான கருத்துகளுக்கு, தயவுசெய்து நேரத்தை நீங்கள் ஒதுக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இச்சமுதாய மக்கள், கல்வி மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள நிலையை இவ்வரசு முற்றிலும் உணர்ந்திருக்கிறது என்பதை இங்கே ஒப்புக்கொண்டிருப்பதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிட மக்களுடைய எழுத்தறிவு விகிதம் 63.19. பழங்குடியினருடைய எழுத்தறிவு விகிதம் 41.53. ஆனால், பொது எழுத்தறிவு விகிதமான 73.45-லே ஒப்பிடுகின்றபோது, இது மிகவும் குறைவாக இருக்கின்றது என்பதை இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே நீங்கள் குறிப்பிட்டிருப்பதை, உண்மையிலேயே நான் வேதனையோடு காணுகின்ற சூழ்நிலை இருக்கிறது. காரணம், ஆதி திராவிட மக்களுக்குப் பல வசதிகள் கிடையாது. அதேநேரத்திலே, ஆதி திராவிட மக்களுக்குப் பொருளாதாரத்திலும் அவ்வளவு சிறப்பான சூழ்நிலை இல்லை. அதனை அதிகரிப்பதற்காக, அதனை உருவாக்குவதற்காகத்தான் இந்த நலத் துறையின் இந்த மானியக் கோரிக்கையின்மூலம், இருக்கின்ற முன்னேற்றங்களை எடுத்துச் சொல்வதற்கும், இதுவரைக்கும் செய்திருக்கின்ற சாதனைகளைக் குறிப்பிடுவதற்கும், இனிச் செய்யப்போகின்றவற்றை சுட்டிக்காட்டுவதற்கும், உங்களுடைய கொள்கை விளக்கத்தைக் கூறுகின்றீர்கள். அதிலே நாங்கள் விமர்சனத்தைச் செய்ய இருக்கின்றோம். ஆனால், என்னவோ இன்றைக்குத் தொடக்கமே ** என்று இப்படியே போய்விட்டது. அதிலே நிரம்ப வருத்தமாக இருக்கிறது. இந்தத் துறைக்காகப் பேசுகின்றபோது, ஒரு நல்ல, மங்களகரமான சூழ்நிலையிலே ஆரம்பிப்பதற்குப் பதிலாக, எடுக்கிறபோதே நீங்கள் ** என்று ஆரம்பித்தால், எப்படிச் சரியாக இருக்கும் என்பது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. நான் கேட்கிறேன், என்னுடைய விவாதத்திற்குப் போவதற்கு முன்னால் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது எப்படி என்றால், 'bad beginning, good ending' என அப்படி வந்து முடிந்துவிடும்.

**திருமதி டி. யசோதா:** குறிப்பாக நான் சொல்ல விரும்புவது, என்னுடைய செய்திகளுக்குப் போவதற்கு முன்னாலே,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தொலைக்காட்சிப் பெட்டிகள் எல்லாம், ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கவில்லை என்ற மிகப் பெரிய குற்றச்சாட்டு இருக்கிறது. நான் சரியாக இருக்கின்ற காரணத்தினாலே, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற ஆதி திராவிட மக்கள் எந்தக் காலக்கட்டத்திலும் புறக்கணிக்கப்படவில்லை என்பதை இந்த மாமன்றத்திலே உறுதியளிக்கின்றேன். (மேசையைத் தட்டும ஒலி) குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், மேட்டுப்பாளையம், A.D.M.K. பஞ்சாயத்துத் தலைவர்; அவரை வைத்துத்தான் மேட்டுப்பாளையம் பஞ்சாயத்திலே தயாளன் என்கின்றவருடைய தலைமையிலேதான் காலனியிலேயே நாங்கள் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குகின்ற நிகழ்ச்சியை நடத்திக் கொடுத்திருக்கிறோம். வல்லக்கோட்டையிலேகூட M.D.M.K. தலைவர்; அவரை வைத்துக்கொண்டுதான் அங்கே இருக்கின்றவர்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொடுத்தோம். இவர்கள் எல்லாம் ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். பெண்ணலூரிலே பாபு என்கின்றவர், ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவர்; அவரை வைத்துக்கொண்டுதான் அந்தப் பகுதியிலே நாங்கள் விநியோகம் செய்தோம். கீரநல்லூரிலே அன்பரசு என்கின்றவர்; அவரும் ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். அவரை வைத்துக்கொண்டுதான் அந்தப் பகுதியிலே இருக்கின்றவர்களுக்கு நாங்கள் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொடுத்திருக்கின்றோம். அதேபோல, சேந்தமங்கலம், சிறுமாங்காடு என்று எல்லாப் பகுதிகளுக்கும் நாங்கள் கொடுக்கின்றபோது என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலும், அங்கே கட்சி பேதமும் கிடையாது, சாதி பேதமும் கிடையாது; யார் யாருக்குத் தகுதி இருக்கின்றதோ, அந்தத் தகுதியின் அடிப்படையிலேதான் நாங்கள் கொடுத்திருக்கிறோம் என்பதை இன்றைக்குக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நிலமற்ற ஏழைகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்கும் திட்டத்தின்கீழ், அரசால் நிலம் கையகப்படுத்துகின்றபோது, ஆதி திராவிடர் நிலங்களை, தயவுசெய்து கையகப்படுத்துவதை நிறுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழும் ஆதி திராவிடர்களை மேம்படுத்துவதற்காகத்தான் பல திட்டங்களை நீங்கள் அறிவிக்கின்றீர்கள். அந்தக் கொள்கைக்கு மாறாக அவர்களிடமிருக்கிற நிலத்தை நாம் கையகப்படுத்துவதென்பது, அந்தக் கொள்கைக்கு மாறானதாக இருக்கும். எனவே... (குறுக்கீடு)



*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மையார் சொல்வதைப்போல, ஆதி திராவிடர் நிலத்தை மட்டும்கூட அல்ல; யாருடைய நிலத்தையும் கையகப்படுத்துவது என்னும் நோக்கம் இந்த அரசாங்கத்திற்குக் கிடையாது. அதுவும் இன்னொருவருக்கு அந்த நிலத்தைக் கொடுப்பதற்காக கையகப்படுத்துவது கிடையாது. ஒருவேளை அவர்களே தங்களுடைய நிலத்தைப் பண்படுத்தித் தர வேண்டும் என்று கேட்பார்களேயானால், அரசாங்கம் பண்படுத்தி அவர்களிடத்திலேயேதான் நிலத்தைக் கொடுக்குமே தவிர, எந்த ஆதி திராவிடர்களுடைய நிலத்தையும் இந்த அரசு எடுக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு நிதியமைச்சருடைய பதிலுக்கு நன்றி. இரண்டு ஏக்கர் நிலம் நீங்கள் கொடுக்கிறீர்கள். அந்த இரண்டு ஏக்கர் நிலத்தை எதிர்காலத்திலே அவர்கள் வேறு யாருக்காவது கைமாற்றி விடக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைமை ஏற்படாமல் இருக்க, அரசாங்கமே இந்த நிலங்களை விற்கவோ, மாற்றவோ முடியாது என்ற அரசு விதி இப்போது அமலில் இல்லை. அந்த விதி. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மையார் குறிப்பிட்டதைப்போல, இந்த இரண்டு ஏக்கர் நிலம் கொடுக்கும் திட்டத்திலே, 30 ஆண்டுகளுக்கு அதனை விற்கக் கூடாது என்று அரசு விதிமுறை விதித்திருக்கிறது.

**திருமதி டி. யசோதா:** தற்போது அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட தொகுப்பு வீடுகள் வழங்கும் திட்டத்தின்மூலம் பல சமூகத்தினரும் பயன்பெறுகின்றனர். ஆதி திராவிட மக்கள் முழு அளவில் பயன்பெறும் வகையில், இத்திட்டத்தின்கீழ் இத்துறைமூலம் தொகுப்பு வீடுகளை ஒதுக்கீடு செய்து மீண்டும் இந்தத் திட்டத்தினைப் புனரமைப்பு செய்யக் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழக அரசின் பல்வேறு பதவிகளில், மொத்தப் பணியிடங்கள் ஒரு இலட்சத்து 60 ஆயிரத்து 617. இவற்றில் 18 சதவிகிதம் S.C.-யினுடைய பங்கு; 28,781 பங்களிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 17 ஆயிரத்து 81 இழப்பு எங்களுக்கு. இன்னும் அவற்றை fill-up பண்ணவில்லை. அப்படியே இருக்கிறது.

அதேபோல S.T.-களுக்கும், ஒரு per cent என்றால்கூட, 1,596 பணியிடங்கள். அதற்குக் கொடுத்திருப்பது 717 பேருக்குத்தான் கொடுத்திருக்கிறீர்கள். கொடுக்காதது 877. இன்னும் நிலுவையிலே இருக்கின்றது.

இது தவிர, 58 அரசுத் துறைகளில் A மற்றும் B பிரிவு அலுவலர்கள் நேரடி நியமனம் இல்லாமையால், எங்களுக்கு நிரந்தர இழப்பு. அனைத்து அரசுத் துறைகளிலும் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு வேண்டும் என்பதை நான் கேட்டுக்கொள்கின்றேன். பின்னடைவுப் பணியிடங்களைச் சிறப்பு நேர்வாகக் கருதி நிரப்ப வேண்டும்.

அம்பேத்கர் மணி மண்டபம்; அதற்கு 5 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. 1¼ ஏக்கரிலே மணி மண்டபம் கட்டியிருக்கின்றீர்கள். இன்னும் 3¾ ஏக்கர் நிலம் அங்கே கிடக்கின்றது. அந்த மீதமுள்ள 3¾ ஏக்கரில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய மணி மண்டப வளாகம் கட்டப்படாத நிலையில் உள்ளது. மீதமுள்ள நிலத்தில், இந்தியாவிலேயே மிகப் பெரிய நூலகம் அமைத்து, அனைத்து மக்களும் பயன்படுத்தும் வகையில், அம்பேத்கர் மணி மண்டபத்திற்கு நிலத்தை வழங்கி, ரூபாய் 50 கோடி நிதியையும் ஒதுக்கீடு செய்து தர ஆணையிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தாட்கோ கடன் தேசிய வங்கிகள்மூலமாக வழங்குவதைத் தவிர்த்து, இந்திய ரிசர்வ் வங்கியினுடைய, அது நிர்ணயித்துள்ள நிபந்தனைகளை நிறைவு செய்து, தாட்கோ வங்கி எனும் நிதி நிறுவனத்தைத் தொடங்கி, அதன்மூலம் கடன் வழங்க அரசு ஆணையிட வேண்டும். தாட்கோமூலமாக sanction பண்ணுகிற எதுவுமே தேசிய வங்கிகளுக்குப் போகும்போது, அவர்கள் கொடுப்பதில்லை. அதனால் உங்களுடைய திட்டம் பாதியிலேயே நிறுத்தப்படுகிறது. அது நம்முடைய வங்கியாக இருக்குமேயானால், தாட்கோவினுடைய வங்கியாக இருக்குமேயானால், நிச்சயமாக நீங்கள் எடுக்கின்ற நலப் பணிகள் விரைவிலேயே முடியும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.



பிற்பகல் 12-10

தமிழகத்திலுள்ள அனைத்து ஆதி திராவிட விடுதிகளுக்கு, மாணவர்களுடைய எண்ணிக்கையின் அடிப்படையிலே நான்கு துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மைய அரசு, ஆதி திராவிட மாணவர்களுக்கு உயர் கல்விக்கு அளிக்கும் உதவித் தொகையை மாநில அரசு அப்படியே கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 10 நிமிடங்கள் அம்மா.

**திருமதி டி. யசோதா:** நீங்களும் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர். குறைவான நேரத்தைக் கொடுத்தால், எங்களால் எதையும் சொல்ல முடியாது. பாதியில் நிறுத்தாதீர்கள். அரைக் கிணறு தாண்ட நான் விரும்பவில்லை. நிறுத்தச்சொன்னால், நான் இப்போதேகூட நிறுத்திக்கொள்கிறேன். கொஞ்சம் time கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி.

**திருமதி டி. யசோதா:** நான் ஆலோசனைகள் சொல்கிறேன். என்னுடைய ஆலோசனைகளைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) ஆலோசனைகளைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் சண்டை போடுவதற்கு வரவில்லையம்மா! அவர் சண்டை போட்டவர். அவர் ஏற்கெனவே மந்திரியாக இருந்தவர். அவர் என்ன செய்தார் என்பது எங்களுக்குத் தெரியும். அதனால், நான் அந்தச் சண்டைக்குப் போக விரும்பவில்லை. நான் ஆலோசனைகளைக் கூற விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அவர்களுக்காகத்தான் பேசுகிறீர்கள் என்பதுகூட அவர்களுக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திருமதி டி. யசோதா:** அதுதான். முதலில் இந்தத் துறை மானியம் என்று சொல்கிறபோது, இந்தக் கலவரங்கள் இங்கே தேவைதானா என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். நீங்கள் சொல்கின்ற கருத்து, எதிரிகளுடைய மனதிலே புகுந்து, "ஆம்! இதை நாம் செய்யத் தவறிவிட்டோம், இதைச் செய்ய வேண்டும்" என்கிற எண்ணத்தைத் தூண்ட வேண்டுமே தவிர, அரசியலுக்கு இந்தத் துறையிலே இடமில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மைய அரசு. ஆதி திராவிட மாணவர்களுக்கு உயர் கல்விக்கு அளிக்கும் உதவித் தொகையை மாநில அரசு அப்படியே கொடுக்க வேண்டும். தனியார் கல்லூரிகளிலே கட்டணம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும், அரசுக் கல்லூரிகளிலே கட்டணம் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலும், அரசுக் கல்லூரிகளிலே இருக்கின்ற அந்தத் தொகையைத்தான் தனியார் கல்லூரிகளிலே படிக்கின்றவர்களுக்கும் ஒதுக்கீடு செய்வோம் என்று சொல்வது சரியாக இருக்க முடியாது. தனியார் கல்லூரிகளிலே அதிகபட்ச கட்டணத்தை மைய அரசு ஒதுக்கீடு செய்யும்போது, அதனை அப்படியே ஏற்றுச் செயல்படுத்த வேண்டுமென்று கோருகிறேன். மைய அரசின் உதவித் தொகை, சென்ற ஆண்டு ரூபாய் 400 கோடி கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு மாண்புமிகு நிதியமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள், 600 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கின்றார். 50 சதவிகிதம் அதிகமாக அதிகரித்திருக்கின்றார். அதற்குப் போட்டியாக, நம்முடைய மாநிலத்திலே, நாம் 100 சதவிகிதம் உயர்த்த வேண்டாமா? அதைச் செய்வீர்கள் என்று நான் நினைக்கின்றேன்.

புதியதாக 60 ஆயிரம் பேருக்குப் பணி தந்துள்ளீர்கள். இதில் S.C.-க்கு கொடுத்த வேலைவாய்ப்புகள் எத்தனை? தெரியவில்லை. 40 ஆயிரம் பணியாளர்களைக் கூட்டுறவுத் துறையில் regularise செய்து கொடுத்து இருக்கிறீர்கள். அந்தக் கூட்டுறவுத் துறையிலே 40 ஆயிரம் பணியாளர்களை நீங்கள் regularise செய்தபோது, அவர்களில் ஒருவருக்குக்கூட, S.C.-க்குக் கிடைக்கவில்லை என்பது நிரம்ப வேதனைக்குரியது.

நலத் துறையின் மூலமாக, இனி வருங்காலத்தில் Engineering College ஆரம்பிக்க வேண்டும். நம்முடைய மக்களுக்காக, இந்தத் துறையின்மூலமாக, அதை நீங்கள் உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஆதி திராவிட மாணவர்கள் தங்கும் விடுதிகள், மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில், போதிய அளவு தமிழகம் முழுவதும் கட்டப்பட வேண்டும். ஏற்கெனவே, விடுதிகள் பராமரிப்பின்றி பழுதடைந்த நிலையில் உள்ளன. இவற்றைச் செப்பனிட்டுப் பராமரிக்க, ரூபாய் 50 கோடி ஒதுக்கீடு செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிட மாணவர்களுக்கு hostel fees 300 ரூபாய். ஆனால், அதிலே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு அதே hostel fees 500 ரூபாய். இந்த வித்தியாசத்தைப் போக்குவதற்கு



மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்களும் முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

2006-2007-ல் ரூபாய் 74 இலட்சம் செலவில், 12 சமுதாயக் கூடங்களைக் கட்டியிருக்கின்றீர்கள். ஆனால், 2007-2008-லே ரூபாய் 14 இலட்சம்தான் ஒதுக்கீடு செய்திருக்கின்றீர்கள். போன வருடம், இந்த ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே ரூபாய் 74 இலட்சம் ஒதுக்கீடு செய்தீர்களேயம்மா! இந்த வருடம் ரூபாய் 14 இலட்சமாகக் குறைத்து, கிட்டத்தட்ட 60 இலட்சம் ரூபாய் குறைத்திருக்கிறீர்கள். அந்த அளவிற்கு hostel இன்னும் தன்னிறைவு பெறவில்லை. ஆகவே, அதையும் பரிசீலிக்க வேண்டுகின்றேன்.

மயானம்: தொடங்கும்போதே, இன்றைக்குச் சாவிலே தொடங்கியதால், மயானத்தைப் பற்றியும் பேசியாக வேண்டிய நிலையிலே இருக்கிறோம். மயானப் பாதைக்கு நிலத்தை வாங்கவும், கையகப்படுத்தவும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். எவ்வளவு என்று தொகை ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இது முக்கியமானது. வாழும் காலத்தில்தான் நாம் மரியாதை கொடுக்கவில்லையென்றாலும்கூட, செத்ததற்குப் பிறகாவது, சுடுகாட்டிற்கு அனுப்பும்போது, அவர்களை அந்தக் கௌரவத்தோடு அனுப்புவதற்கு, எவ்வளவு நிதி, தொகை, ஒதுக்கியிருக்கின்றீர்கள் என்பது தெரியவில்லை.

பிற்பகல் 12-15

அதேபோல, ஈமச் சடங்குகளுக்கு 500 ரூபாய் என்று சொல்கிறீர்கள். 500 ரூபாய் போதாது. ஈமச் சடங்கிற்கு, கடைசிச் செலவு, அவர்களுக்கு, 2,000 ரூபாயாவது ஒதுக்கீடு செய்வதற்கு நீங்கள் தமிழக முதல்வரைக் கலந்து பேசி முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கலவரங்களால் பாதிக்கப்படும் S.C., S.T. மக்களுக்கு நிதி உதவி அளிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறீர்கள். அது ஒரு மிகப் பெரிய நிதியாக இல்லை. ஒரு formality-க்காக ஒதுக்குவதுபோன்று இருக்கிறது, அந்த ரூ.2.25 இலட்சம். அதையும் நீங்கள் கவனிக்க வேண்டும். தீண்டாமை ஒழிப்பில் சிறந்த கிராமங்களைத் தேர்வு செய்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. இதற்கு 2006-2007-ல் 29 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறீர்கள். ஆனால், இந்த வருடமும் அதே தொகையைத்தான் ஒதுக்கி இருக்கிறீர்கள். ஏன், நிறைய கிராமங்கள் வராதா? அந்த எண்ணிக்கை இல்லையா? நிறைய கிராமங்கள் தன்னிறைவு பெறுவதற்கு நீங்கள் நிதியொதுக்கீடு செய்ய வேண்டும்.

எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்காக 50 இலட்சம் ரூபாய், S.C., S.T-யில் 10 பேர் தேர்வு செய்கிறீர்கள், எழுத்தாளர்களை; நம்முடைய இந்தச் சமுதாயத்தைப்பற்றி எழுதுகின்ற, இந்தச் சமுதாயத்தைச் சேராதவர்களையும், நாம் அவர்களைக் கௌரவப்படுத்துவதற்கும் ஒரு பரிசு கொடுத்து இருக்கின்றோம். ஆனால், அதற்கு நாம் ஒதுக்கீடு செய்வது, ஒரு வருடத்திற்கு ரூ.50 இலட்சம்; அதையும் நீங்கள் கவனிக்க வேண்டும்.

அதேபோல, S.T.-களுக்கு 2006-2007-ல், 46 வீடுகள் கட்டிக் கொடுத்து இருக்கிறீர்கள், ரூபாய் 16.80 இலட்சத்தில். இப்போதும், அதே 46 வீடுகள்தான் வருகிற இந்தக் காலத்திலேயும், 16.80 இலட்சம் ரூபாய் நாம் செலவிடப்போகிறோம். போனமுறை நீங்கள் போட்ட பட்ஜெட், மே மாதத்தில் இருந்து மார்ச் மாதம் வரைக்கும்தான். ஆனால், இப்போது போடுகிற பட்ஜெட் ஏப்ரல் மாதம் முதல் அடுத்த வருடம் வரை. ஆனால், S.T. மக்களுக்கு நீங்கள் போடுகின்ற அந்தத் திட்டத்திலே, 46 வீடுகள் என்பது மிகக் குறைந்த கணக்காக இருக்கிறது. ஆகவே, அதையும் அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடிநீருக்காக 2006-2007 ஆம் ஆண்டு 8 பழங்குடியினர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்ய, ரூ.32 இலட்சத்தை ஒதுக்கீடு செய்து இருக்கிறீர்கள். மறுபடியும் இந்த வருடமும் அதே 32 இலட்சம் ரூபாய்தான். அதிலே மாறுதலே இல்லை. கொஞ்சம் அதிகரித்து இருந்தால்கூட, வித்தியாசம் தெரியாது. அதேபோல, குடிநீர்ப் பிரச்சினையிலும் நிதி ஒதுக்கீடு அதிகரிக்கவில்லை. (மணியடிக்கப்பெற்றது)

10 கோடி ரூபாய் செலவில் சிறப்பு நிதி உதவித் திட்டத்தின்கீழ் 1,000 மாணவர்களுக்கு ஆங்கிலம் சரளமாகப் பேசுவதற்காக நீங்கள் ஏற்பாடு செய்திருக்கின்றீர்கள்; பாராட்டுகின்றேன். ஏனென்றால், இந்தச் சமுதாயத்தைச் சார்ந்த பிள்ளைகளுக்கு, அவ்வளவாக ஆங்கிலம் சரளமாகப் பேசத் தெரியவில்லை. இரண்டாவது, 200 இளைஞர்களுக்கு B.P.O Call centre பயிற்சி கொடுப்பதற்கு இருக்கிறீர்கள். 100 மகளிருக்கு, விமானப் பணிப் பெண் பயிற்சி அளிப்பதற்கு இருக்கிறீர்கள். அவர்களுக்குப் பணியும் நீங்கள் ஏற்பாடு செய்து தர இருக்கிறீர்கள். அவர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் உதவித் தொகை கொடுக்க இருக்கிறீர்கள். ஆனால், அதற்கு இருக்கிற வரம்பு என்னவென்றால், அவர்கள் கொஞ்சம் கலராக இருக்க வேண்டும். அவர்கள் கொஞ்சம் உயரமாக இருக்க வேண்டும் என்கிறீர்கள். Plus 2 படித்துவிடுவார்கள். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலர், நிரம்ப கலர் என்று தேவையில்லை. பார்ப்பதற்கு முகத்தில் கொஞ்சம் வடு, கிடு இல்லாமல் இருந்தால், அந்தப் பெண்களை எடுத்துக்கொள்கின்றார்கள். (குறுக்கீடு) கருப்பு என்றாலும் அழகுதான்!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை ஏன் உங்களிடம் சொல்கிறார்கள்? (சிரிப்பு)

**திருமதி டி. யசோதா:** நிலம் வாங்குவதற்கு மகளிர்க்கு, ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கிறீர்கள். அதுமட்டுமல்ல; அந்த நிலத்தைப் பண்படுத்துவதற்காகவும், மேம்பாடு செய்வதற்காகவும், நீர்ப்பாசன வசதி செய்வதற்காகவும், கால்நடைகளை வாங்குவதற்காகவும் மீண்டும் ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கிறீர்கள். இது பெண்களுக்கான திட்டம். இத்திட்டத்தின்மூலம் விவசாயத்திற்கு மின் இணைப்புகளுக்கு முன்னுரிமை தரப்படும் என்று சொல்லி இருக்கிறீர்கள். அது உண்மையிலேயே வரவேற்கக்கூடியது. ஏனென்றால், நீங்கள் ரூபாய் இரண்டு இலட்சம் கொடுத்து எல்லாம் செய்து, current இல்லாவிட்டால் பிரயோஜனப்படாது. (மணியடிக்கப்பெற்றது) அதற்கு முன்னுரிமை தரப்படும் என்பதை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திருமதி டி. யசோதா:** முடித்து விடுகிறேன், இரண்டே இரண்டு வரிதான். முன்னுரிமை தரப்படும் என்பதை நான் உண்மையிலேயே வரவேற்கின்றேன். முத்திரைத் தாள் கட்டணத்தில்கூட அவர்களுக்கு 75 சதவிகிதம் சலுகைக் (concession) கொடுத்து, 25 சதவிகிதம் அவர்கள் கட்டினால் போதும் என்று சொல்லும்போது. பாராட்ட வேண்டிய நிலை இருக்கிறது.

துப்புரவுப் பணியாளர்களுக்கு, அப்பணியில் இருந்து, மாற்றுத் தொழிலுக்கு ஏற்பாடு செய்யும் அரசை நான் பாராட்டுகின்றேன். எல்லா அலுவலகங்களிலும், மாநகராட்சிகள், நகராட்சிகள், முனிசிபாலிட்டிகள், ஆட்சித் தலைவர் அலுவலகங்கள், உள்ளாட்சிமன்றங்கள் அத்தனை இடங்களிலும் அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய படம் வைப்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டும். 2001-ல் இருந்து 2006 வரை தேர்தல் நடத்த இயலாமல்போன

பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் போன்ற ஆதி திராவிடப் பஞ்சாயத்துகளில் அப்போது தேர்தல் நடத்த முடியவில்லை. உங்களால் எப்படி இந்தத் தேர்தலை நடத்த முடிந்தது என்பதை நான் எண்ணிப் பார்க்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* உண்மையிலேயே திறமை உள்ளவர்கள் அதை நடத்தி முடித்திருக்கிறீர்கள். உண்மையிலேயே சமுதாயத்தின் சார்பாக நான் உங்களைப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆற்றலும், அதற்கேற்ற திறமையும், வலிமையும் இந்த அரசுக்கு உண்டு என்பதை நிரூபிப்பதற்காகத்தான் இந்தத் தேர்தல்கள் சிறப்பான முறையிலே நடந்து முடிந்திருக்கின்றன என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்... *(மணியடிக்கப்பட்டது)* இரண்டே இரண்டு நிமிடம்தான்.

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லையம்மா, நேரம் அதிகமாக எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

**திருமதி டி. யசோதா:** உள்ளாட்சித் தேர்தல்களிலே வெற்றிபெற்ற ஆதி திராவிட தலைவர்கள் இன்னும் தாங்கள் வெளியே வருவதற்கு அச்சப்படுகிறார்கள். அவர்கள் வெற்றிபெற்றவர்கள் அத்தனைபேரும் Union Chairman-ஆக இருந்தாலும் சரி, Member-ஆக இருந்தாலும் சரி உள்ளாட்சித் துறையிலே இருப்பவர்கள் சமமாகப் பழகுவதற்கு உரிய ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கித் தர வேண்டும். ஆதி திராவிடர்களுக்கு என்று தனியாக ஒரு பட்ஜெட்டைப் போட்டால் அது சிறப்பாக இருக்கும். எங்களுக்கு என்று இருக்கின்ற அந்தப் பணத்தை எந்தெந்தத் துறைக்கு நாங்கள் கொடுக்கின்றோம்; அந்தத் துறையின்மூலமாக என்னென்ன பணிகள் நடக்கின்றன என்பதையெல்லாம் தெரிந்துகொள்வதற்கு ஆதி திராவிடர் நலத் துறைக்கு என்று தனியான ஒரு பட்ஜெட்டை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசியலமைப்பு சட்டப் பிரிவு 16-ல் 4 (a)-ன்படி அனைத்துத் துறைகளிலும், அனைத்துப் பதவிகளிலும் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு வேண்டும். தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் உயர் நிர்வாகப் பதவிகளில் ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை நியமிக்க வேண்டும். 2001-2006-ல் ஆதி திராவிட மக்களுக்காக ஏதும் செய்யவில்லை என்கின்ற ஆதங்கத்தோடு நான் குறிப்பிட விரும்புகின்றேன். அன்னை இந்திரா காந்தியால் சிறப்புக் கூறுத் திட்டம்—Special Component Plan—1980-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் ஆதி திராவிடர்களுக்கான



ஒதுக்கீடு முழுமையும் ஆதி திராவிட நலத் துறையிடம் ஒப்படைக்க வேண்டும். பொதுச் செலவுகளில் ஆதி திராவிடர்களுக்கான பங்கினை நலத் துறையிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். பொதுச் செலவுகளில் ஆதி திராவிடர்களுக்கான பங்கை வரையறுக்க ஒரு கமிட்டி அமைக்க வேண்டும். மீதமுள்ள தொகைக்கான திட்டம் தீட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், வல்லுநர்கள் அடங்கிய குழு அமைக்க வேண்டும். திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு, நிதியை உரிய துறைக்கு, நலத் துறையே பகிர்ந்து அளிக்க வேண்டும்; பிரித்து அளிக்க வேண்டும். அரசாணை எண் 45, ஆதி திராவிடர் நலன், நாள் 9-1-1977-இதன்படி அனைத்துத் துறைகளின் தலைவர்களும், செயலாளர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் 3 மாதத்திற்கு ஒருமுறை ஆதி திராவிட பணியாளர் சங்கத்துடன் கூட்டம் நடத்துவதை அரசு உறுதி செய்ய வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)* ஏனென்றால், இந்த ஒரு சட்டம், ஓர் ஆணை இருப்பதே அதிகாரிகளுக்குத் தெரியவில்லை என்று சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. 3 மாதத்திற்கு ஒரு முறை அப்படி ஒரு கூட்டம் கூடினால்தான், அவர்களுடைய பிரச்சினைகளை முடிக்க முடியும். தொகுப்பு ஊதிய அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களில் ஒதுக்கீடு முறை நடைமுறைப்படுத்தப்படவில்லை ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி யசோதா, நீங்கள் நிறைய சொல்லிவிட்டீர்களே!

**திருமதி டி. யசோதா:** தொகுப்பு ஊதியத்திலே பணி அமர்த்தியிருக்கிறார்கள். ஆனால் அதிலே S.C.-களும், S.T.-களும் இடம்பெறவில்லை. அதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். எத்தனையோ திட்டங்களைச் சொல்லியிருக்கின்றீர்கள். ஒன்றை மட்டும் கடைசியாகச் சொல்லி முடித்து விடுகிறேன். கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு எந்த அறிவிப்பும் வரவில்லை. விவசாயத்திற்கு, வீடுகட்ட என அதிகமாக அவர்கள் கேட்கவில்லை. தொகுப்பு வீடு, தாங்கள் இருப்பதற்கு வீடு கொடுத்தால் போதுமென்று அவர்கள் கேட்கிறார்கள். கேட்கின்ற இடத்தில் நாங்கள் இருக்கின்றோம். அதைப் பரிசீலித்துக் கொடுக்கவேண்டிய இடத்தில் நீங்கள் இருக்கின்றீர்கள். எங்களது உரிமைகளைக் கேட்கின்றோம். உரிமைகளை நீங்கள் நிச்சயமாக மறுக்கமாட்டீர்கள். கருணை உள்ளம் கொண்ட நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், நிச்சயமாக எங்களுக்குத் தருவார்கள் என்று சொல்லி, 50 சதவிகிதத்திற்கு அதிகமாக உள்ள S.C. மக்கள் இருக்கின்ற பகுதிகளிலே, தன்னிறைவு வசதிகளை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள், நம்முடைய உள்ளாட்சித் துறை

அமைச்சர் அவர்கள். அதாவது பஞ்சாயத்துகளுக்கு 20 இலட்சம் ரூபாய் என்று கொடுத்து உருவாக்கி இருக்கின்றார்கள். அதை நான் மீண்டும் பாராட்டுகின்றேன். இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டத்தின் அடிப்படையில் நிலங்களை வாங்கி வீடுகளைக் கட்டுவதற்கு நீங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* S.C. பெண்கள் நடத்தும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரேஷன் கடை நடத்த அனுமதி கொடுக்க வேண்டும். அதற்கு அவர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் கடனாகவும் நீங்கள் கொடுத்து உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

ஆகவே, நேரம் அதிகம் இல்லையென்ற காரணத்தினாலே, அடுத்த முறையாவது நீங்கள் தயவுசெய்து ஆதி திராவிடர் நலத் துறையிலே நாங்கள் என்ன கோரிக்கைகள் வைக்கிறோமோ அவற்றைப்பற்றி எங்களுக்குச் சொல்வதற்கு நேரத்தை ஒதுக்குங்கள். இந்த ஒரு மணி நேரத்திலே, 2 மணி நேரத்திலே எங்களால் எந்தப் பிரச்சினையையும் பேச முடியாது. எப்படி உள்ளாட்சித் துறைக்கு 2 நாட்கள் ஒதுக்குகிறீர்களோ, காவல் துறைக்கு 2 நாட்கள் ஒதுக்குகிறீர்களோ, அதேபோல ஆதி திராவிடர் நலத் துறைக்கும் நீங்கள் 2 நாட்கள் ஒதுக்கினால்தான், எங்களால் நிச்சயமாகப் பிரச்சினைகளை ஒழுங்காக எடுத்துச் சொல்ல முடியும். அரசாங்கத்தினுடைய கவனத்தை முழுமையாக ஈர்க்க முடியும். அவசர அவசரமாகப் பேசி விட்டு, எதையும் சொல்ல முடியவில்லை என்ற நிலைமை இல்லாமல், உங்கள்மீது வைத்திருக்கின்ற நம்பிக்கை, "நீங்கள்தான் இந்தச் சமுதாயத்து மக்களைக் காப்பீர்கள்" என்ற நம்பிக்கையின் அடிப்படையில் விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் யசோதா அவர்கள் பேசுகிற நேரத்திலே பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் தேர்தலை எப்படி நடத்தினீர்கள் என்று கேட்டார்கள். நடத்த வேண்டுமென்று முடிவெடுத்தோம்; நடத்தியே தீருவோம் என்று முடிவெடுத்தோம்; அதனால் நடத்தி முடித்தோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*



அடுத்து, இன்னொரு பிரச்சினையைச் சொன்னார்கள். உள்ளாட்சி அமைப்பிலே தலைவர் பொறுப்புக்கு வந்திருக்கக்கூடிய, குறிப்பாக ஆதி திராவிட சமுதாயத்தைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள், சுயமாக எந்தப் பணிகளையும் ஆற்ற முடியவில்லை; அது ஒரு பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது, அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கிறது என்று அந்தப் பிரச்சினையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆக, இந்தப் பிரச்சினைகள் வருகிறபோது, உடனடியாக அரசு அதிலே தலையிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக அந்தப் பிரச்சினைகளை எல்லாம் முடித்துக் கொண்டிருக்கிறோம். எங்காவது இந்தப் பிரச்சினை இருக்கும் என்று சொன்னால், அதை முறையாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள் என்று சொன்னால், அதை உடனடியாக தீர்த்து வைக்கின்ற முயற்சியிலே அரசு நிச்சயமாக ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த, சிறப்பு பெற்ற இம்மாமன்றத்தில் திருப்போரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக என்னை உருவாக்கியவரும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு விடிவெள்ளியாகத் தோன்றி, தன் வாழ்நாளை அர்ப்பணித்து, தினமும் சமுதாயப் பிரச்சினைக்காகப் போராடி, அதில் வெற்றியும் பெற்று வாழும் பெரியாராய், டாக்டர் அண்ணல் அம்பேத்கர் வழி நடந்து, பெருமைக்குரிய தமிழின உரிமைக் காவலர், மனிதநேயப் பற்றாளர், சமூகநீதிக் காவலர், மருத்துவர் அய்யா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சாதிகள் அற்ற சமுதாயத்தைப் படைப்பதற்கு, சமத்துவபுரத்தை உருவாக்கியது மாத்திரம் அல்ல; சமத்துவத்தைத் தனது குடும்பத்திலேயே கொண்டுவந்து மற்றவர்களுக்கு வழிகாட்டியாய் இருக்கின்ற சமத்துவ நாயகர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மத்திய அரசின் மருத்துவத் துறைக்கு மாண்பு சேர்த்து, உலகே வியக்கும் வண்ணம் சாதனை பல படைத்து, உடல்நலக் கேடு

விளைவிக்கும் புகையிலையினையும், புகைப் பிடித்தலையும் ஒழித்ததால், அமெரிக்காவின் உயரிய விருதான Luther L.Terry விருதுபெற்ற மருத்துவ நாயகனாம் மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் உள்ளாட்சியை, நல்லாட்சியாக மாற்றிவரும் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகச் சட்டமன்றத்தில் என் கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும், சொல்லாற்றலும், செயலாற்றலும் மிகுந்த எளிமையும், இனிமையும் கொண்டு விளங்கும் தியாகச் செம்மல், ஓய்வறியா உழைப்பாளி, மாண்புமிகு தலைவர், மரியாதைக்குரிய கோ.க. மணி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படித்தான் வாழ வேண்டுமென்று வாழ வழியற்ற மக்களாக, வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம் என்கின்ற மனநிலையில் வாழ்ந்து மடிந்து கொண்டிருக்கின்ற ஆதி திராவிடர்களுக்கு இந்த அரசு அற்புதமான திட்டங்களைத் தந்து, உயர்த்திட வழிவகை காண வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கின்ற அதேவேளையில், இந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பின்னடைவு காலிப் பணியிடங்களை அரசு உடனடியாக நிரப்ப வேண்டும் என்றும், 1996-ல் கலைஞர் அரசு, தாட்கோ மூலம் கூட்டுறவுப் பட்டயப் படிப்பு படிக்க வைத்து, இன்றளவும் பணி நியமனம் வழங்கப்படாமல் இருக்கின்ற 5,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்களைச் சிறப்பு நியமனம்மூலம், வரும் மூன்று மாதங்களுக்குள் பணி நியமனம் செய்ய வேண்டுமென்றும் நம்முடைய அரசைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கத் தேர்தலில், தலைவர் மற்றும் இதர இயக்குநர் பதவிக்கு இந்திய அரசமைப்புச் சட்டம் உறுதியளித்துள்ளபடி, 19 சதவிகிதம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பதவிகளிலும் இட ஒதுக்கீடு வழங்க, சமத்துவபுரம் கண்ட சமத்துவ சூரியன் கலைஞர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கிய கலைஞர் அரசு, வரும் ஜூன் மாதம் நடக்க இருக்கின்ற கூட்டுறவுச் சங்கத் தேர்தலிலும், பெண்களுக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பதவிக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கும்படி



கேட்டுக்கொள்கிறேன். அப்படி இட ஒதுக்கீடு வழங்கும்போது, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண்களுக்கு உள் ஒதுக்கீடாக 10 சதவிகிதம் வழங்கிட, பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கிய பெண்ணுரிமைக் காவலர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை ஆதி திராவிடப் பெண்கள் பயன்பெறும் வகையில், இந்த அரசால் முதன்முறையாக, தனியார் விமான நிறுவனங்களில் அதிக வேலைவாய்ப்புப் பெறக்கூடிய விமானப் பணிப்பெண் பயிற்சி 100 மகளிருக்கு தாட்கோமூலம் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதற்கு ஆதி திராவிட மக்களின் சார்பாகவும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகவும் முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோன்று, ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த படித்த வேலையற்ற இளைஞர்களுக்கும் விமானப் பணியாளர் பயிற்சித் திட்டத்தை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

உயர் கல்வி சிறப்பு உதவித் தொகையாக, உதவித் தொகை திட்டத்தின்கீழ் மாணவ மாணவிகளுக்கு இளங்கலைப் பட்டப் படிப்புக்கு ஆண்டொன்றிற்கு ரூபாய் 1,500 வழங்கப்படுகிறது; அதை 10,000 ரூபாயாக உயர்த்தித் தரும்படியும், முதுகலைப் பட்டப் படிப்பு மற்றும் தொழிற் கல்வி, மருத்துவம் படிக்கின்ற மாணவர்களுக்கு 7,000 ரூபாய் வழங்கப்படுகிறது; அதை 12,000 ரூபாயாக உயர்த்தித் தரும்படியும் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்காகக் கடந்த 2006-2007 ஆம் ஆண்டில் ரூபாய் 1,029.50 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பு நிதியாண்டிலும் 2007-2008-லும் கடந்த ஆண்டைப் போன்றே அதே 1,029.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மிகவும் குறைவான ஒதுக்கீடாகும். இத்தொகையை அதிகப்படுத்தி, உயர் கல்வியில் ஆதி திராவிட மாணவ மாணவியர் பயன்பெறும் வகையிலே, தமிழக அரசு அதிக நிதியை வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் ஒன்று முதல் 12 ஆம் வகுப்புவரையில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு இலவசச் சீருடை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தை விரிவுபடுத்தி, அரசு மற்றும் அரசு உதவிபெறும் அனைத்துப் பள்ளிகளிலும், ஒன்று முதல்

12 ஆம் வகுப்புவரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு இலவசச் சீருடை வழங்கும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற அண்ணாவின் கோட்பாட்டினைப் பின்பற்றி சமத்துவபுரம் கண்ட சமத்துவ நாயகனே, ஆதி திராவிட மக்கள் இறந்தபின், தனிச் சுடுகாட்டில் புதைக்கின்ற அல்லது எரிக்கின்ற முறை நடைமுறையில் உள்ளது. இந்த நிலை மாறி, அனைவருக்கும் பொது மயானம் அல்லது சமத்துவ மயானம் என்ற ஒன்றை ஏற்படுத்தித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களின் மனதில், நீங்கள் ஒரு நீங்காத இடத்தை அடைவீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இட ஒதுக்கீடு முறையில், ஆதி திராவிடர்களுக்குள்ள 18 சதவீத இட ஒதுக்கீடு, இன்றைய நிலைமைக்கேற்ப 22.5 சதவீதமாக உயர்த்தி வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்காகச் சிறப்புக் கூறுத் திட்டத்தின்மூலம், கூடுதலாக நிதி ஒதுக்கிட வேண்டும். அதன்மூலமாக இந்த ஏழை மக்களுக்கு இத்திட்டத்தினை முழு அளவில் நிறைவேற்ற வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.

கடந்த கூட்டத் தொடரிலேயே, தமிழக அரசு, ஆதி திராடர் வாழும் பகுதிகளில் சமுதாயக் கூடம் கட்டித் தருவதாக அறிவிப்பு வழங்கப்பட்டு, இதுவரை சமுதாயக் கூடம் கட்ட நிதி வழங்கப்படவில்லை. எனவே, அதற்காக அதிக நிதியை உடனே வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஆட்சி மாறினாலும், காட்சி மாறவில்லை என்று தமிழகத்துப் பொதுமக்கள் குறைகூறும் அளவிலே, நம்முடைய பொது விநியோகக் கடைகளில் வ்ழங்கப்படும் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்ற பொருட்களின் அளவு குறைந்து காணப்பட்டு வருகிறது. எனவே, குறிப்பாக அளவு குறைத்து வழங்கப்படும் பொருள்களைப் பாதுகாக்கப்பட்ட பைகளில் அடைத்து விற்க, உடனடியாக ஆணை பிறப்பிக்க வேண்டுமாய்த் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனது தொகுதியின் சில முக்கியமான கோரிக்கைகளை இந்த மாமன்றத்தில் பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

தமிழகத்திலே, குறிப்பாக காஞ்சிபுரம் மாவட்டத்தில், எனது திருப்போரூர் தொகுதியில் அதிக அளவில் பேருந்து வழித் தடங்களை



உருவாக்கியும், அந்த வழித் தடங்களில் புதிய பேருந்துகளை இயக்கியும், பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைத்த மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எல்லா வகையிலும் தொகுதியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளவரும் மாவட்ட மந்திரியுமான அண்ணன் தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும், தொகுதி மக்களின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் ஆட்சிக்கு வந்தாலே, மேம்பாலங்கள் கட்டி சாதனை படைப்பார் என்று வரலாறு உண்டு. அந்த வரலாற்று நாயகன் ஆட்சி செய்யும் இந்தக் காலக்கட்டத்தில், என்னுடைய திருப்போரூர் தொகுதியில், கிழக்குக் கடற்கரைச் சாலையில், திருப்போரூருக்குச் செல்லும் வழியிலுள்ள பக்கிங்காம் கால்வாயின்மீது மேம்பாலம் கட்டி, அங்கும் ஒரு சாதனையைப் படைக்கும்படி நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்போரூரை மையமாகக் கொண்டு, வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்போரூர் தொகுதியிலே, குறிப்பாக ஆலத்தூர் பகுதி, வேதியியல் தொழிற்சாலை மற்றும் கெமிக்கல் கம்பெனிகள் அதிகம் நிறைந்த பகுதி. அந்தப் பகுதியில் அடிக்கடி தீ விபத்து ஏற்பட்டு, அதனால் உயிர்ச் சேதம், பொருட் சேதம் ஏற்படுகின்றது. எனவே, இப்பகுதியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருப்போரூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் தரமிழந்து காணப்படுகிறது. மற்றும் மருத்துவர், மருந்துகளின்றி அங்கிருக்கும் நோயாளிகள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள். எனவே, மேற்படி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி 30 படுக்கைகளுடன்கூடிய வசதியுடன், 24 மணி நேரமும் இயங்கக்கூடிய சுகாதார நிலையமாக மாற்றித் தரும்படி மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்போரூர் தொகுதியிலுள்ள மானாமதி ஊராட்சியில், சுமார் 10,000 மக்கள் வசிக்கின்றனர். அப்பகுதியில், இதுவரை ஆரம்ப சுகாதார நிலையமே அமைக்கப்படவில்லை. எனவே, ஏழை எளிய, குறிப்பாக, ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற இப்பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

திருப்போரூர் தொகுதி, ஒரு முக்கியமான தொகுதி. குறிப்பாக, சென்னையின் அருகில், பல தொழிற்சாலைகள் நிறைந்துள்ள தொகுதி. *(மணியடிக்கப்பெற்றது)* இங்கு சாலை வசதி சரியில்லாமல், சாலைகள் குண்டுங் குழியுமாக உள்ளன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் இரண்டு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. டி. மூர்த்தி:** எனவே, இத்தொகுதியிலுள்ள சில முக்கியமான சாலைகளான திருப்போரூர்-செங்கல்பட்டு சாலையை இருவழிச் சாலையாக, தரமான சாலையாக அமைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாம்பாக்கம், காயார், திருப்போரூர் வரை செல்லும் சாலையை அகலப்படுத்தித் தரமான சாலையாக அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன். காரணை-குன்னப்பட்டு இடையே செல்லும் சாலையைத் தரமான தார்ச் சாலையாக அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மறைமலை நகர் நகராட்சிப் பகுதிகளில், சிங்கபெருமாள்கோயில் கூட்டுறவு வங்கி மற்றும் தென்மேல்பாக்கம் கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன. இந்த வங்கிகளுக்கு CMDA மூலம் காலிமனைகள் பெறப்பட்டும், கட்டடம் கட்டப்படாமல், வாடகைக் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றன. எனவே, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் வாடகைக் கட்டடத்தில் அவை இயங்கவேண்டியதன் அவசியம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும், இந்தத் துறையில் உள்ள குறைகளைப் போக்குமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மறைமலை நகர் கலைஞரால் உருவாக்கப்பட்டது. இப்பகுதியில் சுமார் 20,000 மக்கள் வசிக்கின்றனர். இப்பகுதி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்பாடு செய்யப்பட்டது. இப்பகுதியில் இளைஞர்கள் விளையாடுவதற்கு விளையாட்டுத் திடல் ஏதும் அமைக்கப்படவில்லை. எனவே, அப்பகுதியில் *(மணியடிக்கப்பெற்றது)* சுமார் 5 ஏக்கர் நிலம் விளையாட்டுத் திடல் அமைக்க ஒதுக்கித் தரும்படியும் மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மறைமலை நகர் நகராட்சிப் பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் இடிந்துவிழும் நிலையில் உள்ளது. அதனைச் செப்பனிட்டு--*(மணியடிக்கப்பெற்றது)* இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்--மேலும் 30 படுக்கை



வசதியுடன்கூடிய மருத்துவமனையாகத் தரம் உயர்த்தியும், அதற்குத் தேவையான இட வசதியும் வழங்கும்படியும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மறைமலை நகர் நகராட்சியில், கடந்த 10 ஆண்டுகளாக, பாலாற்று நீர் செம்மண் நிறத்தில் வந்துகொண்டிருக்கிறது. அதனைச் சுத்திகரிப்பு செய்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தரும்படியும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

G.S.T. சாலையில் அமைந்துள்ள முக்கியமான கூடுவாஞ்சேரி பகுதியின் தேசிய நெடுஞ்சாலையில், அடிக்கடி வாகன விபத்து ஏற்பட்டு உயிர்ச் சேதம் ஏற்படுகிறது. எனவே, அங்கு போக்குவரத்துக் காவல் நிலையம் அமைத்து, உயிர் இழப்பைத் தடுக்க ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கிழக்குக் கடற்கரைச் சாலையில்—E.C.R. சாலையில்—அடிக்கடி சாலை விபத்தும், வழிப்பறிக் கொள்ளைகளும் மற்றும் சமூக முறைகேடுகளும் நடக்கின்ற காரணத்தினால், E.C.R. சாலையில் அமைந்துள்ள நெம்மிலி அல்லது கோவளம் பகுதியில் காவல் நிலையம் அமைத்துத்தரும்படி கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* கடைசியாக ஒன்றே ஒன்று.

எனது திருப்போரூர் தொகுதியில், இதுவரை அரசுக் கல்லூரி நிறுவப்படவில்லை. எனது தொகுதியில், மாம்பாக்கம் பகுதியில், அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. அந்தப் பகுதியில் அரசுக் கல்லூரி அமைத்துத் தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கிராம ஊராட்சியில் வசிக்கும் ஏழை எளிய மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் (Group Houses) கட்டித் தருவது போல, நம்முடைய தமிழகத்தில் 625 பேரூராட்சிகள் உள்ளன; இந்தப் பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் ஏழை எளிய மக்களுக்கும் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிட மாணவ மாணவியருக்கு, அரசு நலத் திட்டங்களை, குறிப்பாகப் பள்ளி உதவித் தொகை, சாதிச் சான்றிதழ்கள், வருமானச் சான்று, இருப்பிடச் சான்று போன்றவற்றைப் பெறுவதில் காலதாமதம் ஆகின்றது. இதனைப் போக்க, அந்தந்த ஊராட்சிகளுக்குச் சான்று வழங்கும் அதிகாரத்தை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* கடைசியாக ஒன்று: இறுதியாக ஒன்று.

எனது திருப்போரூர் தொகுதியில் அமைந்துள்ள பக்கிங்காம் கால்வாய் (கைவேலி) என்ற இரு பகுதிகள் உள்ளன. அந்த இரு பக்கங்களிலும் சுமார் 6,000 ஏக்கர் நிலப் பரப்பு உள்ளது. அந்தப் பகுதியில், சுமார் 3,000 பேர் உப்பளத் தொழிலாளிகளாக அங்குள்ள உப்பளக் கம்பெனிகளில் பணிபுரிந்து வருகின்றனர். அந்தப் பகுதியில் I.T. கம்பெனி வரப்படுவதாக அறியப்படுகிறது. இங்கு I.T. கம்பெனி அமைந்தால், மழைக் காலங்களில் காஞ்சிபுரம் மாவட்டத்தின் அனைத்து மழை நீரும் கடலைக் கடக்க வேண்டுமானால், இந்தக் கைவேலி பகுதியில்தான் செல்ல வேண்டும். எனவே, கைவேலி பகுதியில் I.T. கம்பெனி கட்டப்பட்டால், மழை நீரானது அடைபட்டு, செங்கல்பட்டு தொகுதியிலும், திருப்போரூர் தொகுதியில் அமைந்துள்ள கிராமங்களான பூந்தண்டலம், பெருமாள்சேரி, நத்தமேடு, வெங்கம்பாக்கம், பூஞ்சேரி, பையனூர், ஆலத்தூர், திருப்போரூர், தண்டலம், கோவளம் போன்ற பகுதிகளும் மழை நீரால் மூழ்கடிக்கப்படும் அபாயம் உள்ளது. எனவே, அந்தப் பகுதியில் I.T. தொழிற்சாலை பகுதி அமைக்கப்படுவதை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இந்த மாமன்றத்தில் என்னுடைய பேச்சைக் கேட்ட அனைவருக்கும் நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்கள் பேசும்போது ** என்று பேசினார். அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே ஏற்கெனவே உரையாற்றிய முன்னாள் அமைச்சர் சங்கரநயினார்கோவில் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் கருப்பசாமி அவர்கள், அவர்களுடைய சங்கரநயினார் கோவில் தொகுதியிலே இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குகிறபோது, ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த யாருக்கும் வழங்கப்படவில்லை என்ற ... (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முன்னுரிமை வழங்கவில்லை என்ற ...

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** முன்னுரிமை வழங்கப்படவில்லை என்ற ஒரு கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஆக, அதையொட்டி, அந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே இதுகுறித்து நாங்கள் விளக்கம் கேட்டோம். மாவட்ட ஆட்சித் தலைவரும், உடனடியாக ஒரு fax செய்தியை இப்பொழுது அனுப்பி வைத்திருக்கிறார்கள். அந்தத் தொகுதியைப் பொறுத்தவரை, சங்கரநயினார்கோவில் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் 1,827 வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த 1,827 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளில், ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சார்ந்த மக்களுக்கு முன்னுரிமை தந்து, 728 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு. (குறுக்கீடு) இல்லை, கருப்பசாமி, இதையெல்லாம் தெரிந்து பேச வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

***திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்*
*கிறையென்று வைக்கப் படும்"*

என்ற குறளுக்கேற்ப, நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுகிறான்.

10 ஆண்டுகளுக்கு மேலாக, ஆதி திராவிட இன மக்களுக்குப் பறிக்கப்பட்டிருந்த உரிமைகளை, நீதியைப் பெற்றுத்தந்த, தமிழக முதல்வரை, இவ்வின மக்களும், தமிழக மக்களும் பாராட்டினர். (மேசையைத் தட்டும் ஒலி) பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய கிராமப் பஞ்சாயத்துக்களின் தேர்தலை நடத்தி, வெற்றி பெற்ற, அவர்களுக்குப் பாராட்டு விழா நடத்தியதை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கின்றது. அதேநேரத்தில், நேற்றைய முன்தினம் ஏப்ரல் 16 ஆம் தேதியன்று வெளியான 'இந்து' ஆங்கிலப் பத்திரிகையில், "Caste bias

still unchecked here—17 Dalit Panchayat chiefs attest to various forms of untouchability" என்று குறிப்பிட்டுள்ள விஷயத்தையும், தமிழக அரசிற்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கீரிப்பட்டி பஞ்சாயத்துத் தலைவர் பாலுச்சாமிக்கு, தனி டம்ளர், டீக்கடையில்; ஊர்ப் பெரியவர்களை மேல் சாதியைச் சார்ந்த சிறு குழந்தைகள்கூட பெயரிட்டுச் சொல்வதைச் சுட்டிக்காட்டியிருப்பதைத் தமிழக அரசு கவனத்தில்கொள்ள வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்கள் குரும்பா, குரும்பர், குருமன்ஸ் மற்றும் குறவர் இனம் உள்ளிட்ட 27 பிரிவினரையும் ஈரோடு மாவட்ட மலையாளி, நரிக்குறவர் ஆகிய இனங்களையும் பழங்குடியினப் பட்டியலில் சேர்த்திட, மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளதை, தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தின் சார்பாக வரவேற்கின்றோம்; பாராட்டுகின்றோம்.

அதேநேரத்தில், உடனடியாக மத்திய அரசாங்கம் இதை நிறைவேற்றிட, அமலாக்கிட, தமிழக அரசு வலியுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, 19 சதவிகிதம் ஆதி திராவிடரும், 1.04 சதவிகிதம் பழங்குடியினரும் உள்ளதாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் உள்ளது. இதற்கேற்ப, இட ஒதுக்கீட்டை, 20 சதவிகிதம் உயர்த்திட வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வலியுறுத்துகிறோம்.

இத்துறையில், கல்விக்காகத் தந்துள்ள முக்கியத்துவத்தை வரவேற்கின்றோம். சென்ற ஆண்டு 567.83 கோடி ரூபாயில் 75 சதவிகிதமும், அதாவது ரூ.425.87 கோடியும், இவ்வாண்டு 641.54 கோடி ரூபாயில் ரூ.492.09 கோடியும், அதாவது 77 சதவிகிதம் கல்வி சார்ந்த திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ.149.45 கோடி மட்டுமே, இந்த மக்களின் நலத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பது மிகக் குறைவே. கொள்கை விளக்கக் குறிப்பில், ஏறக்குறைய சென்ற ஆண்டு, ஆதி திராவிட நலப் பள்ளிகள் 1,048; இவ்வாண்டு 1,053; ஏறக்குறைய ஓராண்டுக் காலத்தில் 5 பள்ளிகளும், GTRS என்று சொல்லக்கூடிய உண்டு உறைவிடப் பள்ளிகள், ஓராண்டுக் காலத்தில் 3 பள்ளிகள்மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

பழங்குடியின மாணவர்கள், ஏறக்குறைய 116 பேருக்குமட்டுமே உண்டு உறைவிடப் பள்ளி கிடைத்துள்ளது. பயிலும் பழங்குடியின



மாணவர்கள் அனைவருக்கும், விண்ணப்பித்த அனைத்து மாணவர்களுக்கும் உண்டு உறைவிடப் பள்ளிகள் ஏற்படுத்திட வேண்டுகிறோம். 1,000 மாணவர்கள் சேர்ப்பது என்பது போதாது. கூடுதலான பள்ளிகளையும், விடுதிகளையும் உருவாக்க வேண்டும்.

திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் காட்டுநாயக்கன், இருளர், மலைக்குறவன், போன்ற S.T. இனத்தைச் சேர்ந்தவர்கள், 1,36,126 மக்களுக்கு இதுவரை ஒரு GTR பள்ளிகூட—உண்டு உறைவிடப் பள்ளிகூட—இல்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பெண் மாணவியர் விடுதிகள் கூடுதலாக்கப்பட வேண்டும். பழங்குடி மக்களுக்குத் தனி அடையாள அட்டைகளை, ரேஷன் கார்டு வழங்குவதுபோல், மேகாலயா அரசு வழங்கியிருப்பதுபோல், தமிழக அரசும் வழங்க வேண்டும்.

தாட்கோமூலம் தமிழக அரசு மானியம் கொடுத்தாலும், மத்திய அரசு வங்கிகள் கடன் கொடுக்க மறுக்கின்றன. இதில், இன்னும் சொல்லப்போனால், பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்களுக்கும், ஆதி திராவிடர்களுக்கும், ஒரு வரையறையைச் செய்திட வேண்டுகிறோம்.

பழங்குடி மக்களுக்கு அரசின் தொகுப்பு வீடுகள் கட்டிட, கேரள அரசு 72,000 ரூபாய் ஒதுக்கீடு செய்து வழங்கி வருகிறது. அதேபோல், தமிழகத்தில் பழங்குடி மக்களுக்காக ஒதுக்கப்படுகின்ற வீடுகளுக்கு, ஒரு இலட்சம் ரூபாய் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

பிற்பகல் 12-45

ஜனஸ்ரீ பீம யோஜனா திட்டம்; பண்டைய பழங்குடியினருக்கு மட்டுமல்லாமல், அனைத்துப் பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த மத்திய அரசை, மாநில அரசு வற்புறுத்திட வேண்டுகிறோம். கிருஷ்ணகிரி மாவட்டம், காணிக்காரன் செட்டில்மென்ட் என்னும் 48 கிராமங்களில் ஆலம்பாறா, வளையக்காரத் தோப்பு உள்ளிட்ட பல பகுதிகளுக்கு மின்சார வசதிக்காக 3¼ கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்னும் அமலாக்கப்படவில்லை. சேலம், கல்வராயன்மலை மற்றும் அந்தியூர் தொகுதியிலே மலையனூர், எனது அரூர் சட்டமன்றத் தொகுதியிலே சுமார் 13 கிராமங்கள், சிட்லங்கி பஞ்சாயத்துக்குட்பட்ட காரப்பாடி, கீரைப்பட்டி இருளர் குடியிருப்பு, அண்ணாநகர் உள்ளிட்ட கிராமங்களுக்கு 60 ஆண்டுக் காலமாகியும் இன்னும் மின்சார வசதி கிடையாது. குடிநீர் வசதி, பாதை வசதி, பள்ளிக்கூடம் ஏதும் இல்லாத சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள்தொகைகொண்ட காரப்பாடி

கிராமத்திலே, இன்னும் சுதந்திரம் அடைந்தோமா என்று தெரியாமலே வாழ்ந்து கொண்டிருக்கும் நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிறது.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அரசு இயந்திரங்கள் எதுவுமே அக்கிராமத்தில் செயல்படவில்லை. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதன்மூலமாக, நிச்சயமாக விடிவு பிறக்கும் என்று அந்த மாவட்டத்து மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியின மக்களுக்குச் சாதிச் சான்றிதழ் கிடைப்பது என்பது மிகவும் வேதனைக்குரிய விஷயமாகத் தமிழகத்தில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. தன் இனத்தில் பிறந்த, தான் பெற்ற பிள்ளை படிப்பதற்கு, உயர் கல்வி செல்வதற்கு, அரசில் வேலை தேடுவதற்கு, அரசின் பல்வேறு சலுகைகள் பெறுவதற்கு, இனச் சான்றிதழ் கிடைக்காமல், பல்லாயிரக்கணக்கான பழங்குடி மக்கள் பரிதவித்து வருகின்றனர். பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி உதவித் தொகைகூட பெற முடியாமல், இன்னும் அந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். 14-2-2002 ஆம் நாளன்று அரசு வெளியிட்டுள்ள ஒரு சுற்றறிக்கையில், சாதிச் சான்றிதழ் வழங்குவது குறித்து மையச் சட்டம் 108/76-ன் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டியலில் காணப்படும் பல்வேறு இனங்கள், மாநிலம் முழுவதும் காணப்படுகின்றன. அம்மாவட்டத்தில் பழங்குடி மக்கள் இல்லை என, சாதிச் சான்றிதழ் வழங்கிட மறுப்பது, ஏற்புடையது அல்ல. எனவே, அரசாங்கமே குறிப்பாணையை மீண்டும் அனுப்பி, முழுமையாக அனைத்து மாவட்டங்களிலுமுள்ள அனைத்து வருவாய்க் கோட்ட ஆட்சியர்களும் இதை அமல்படுத்த வேண்டுகிறோம்.

சென்னை மாவட்டத்தில், குருமன்ஸ், இருளர், மலைக்குறவன், காட்டுநாயக்கன் போன்ற சான்றிதழ் இன்னும் வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) அதேபோல், Notified Area என்று சொல்லக்கூடிய கிராமங்களில், பழங்குடியினர் வாழக்கூடிய அந்தப் பகுதிகளில், அரசு அதிகாரிகள் சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கு மறுக்கிறார்கள். வேலூர் மாவட்டத்தில் குறுவன், குரும்பன் சாதியைச் சார்ந்தவர்களுக்கும், தருமபுரியில் பன்னியாண்டி இனத்தைச் சார்ந்தவர்களுக்கும் சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கு மறுக்கப்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்ட வருவாய்க்



கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர், வீடு வீடாகச் சென்று, அங்கேயே விசாரணை செய்து, அங்கேயே சாதிச் சான்றிதழ் வழங்குகிற முயற்சியைத் தமிழகம் முழுவதும் கொண்டுவர வேண்டுகின்றோம்.

மனிதனின் மலத்தை, மனிதன் அள்ளுகின்ற நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுகின்றோம். மனிதன் மலத்தைத் தெரியாமல் மிதித்துவிட்டால், கால்களை மட்டும் கழுவுகிறான். ஆனால் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்களை ஆதி திராவிட இன மக்கள் தொட்டுவிட்டால், கை, கால் பட்டுவிட்டால், உடல் முழுதும் தண்ணீர் ஊற்றிக் கொள்கின்ற நிலைமை; வீட்டிற்குச் சேரி மக்கள் நுழைந்துவிட்டால், வீட்டையே கழுவுகின்ற நிலைமை; ஆடு தீண்டலாம், எங்களை மாடு தீண்டலாம்; ஆனால் மனுஷன்மட்டும் தீண்டக் கூடாது என்ற சொல்லுக்கேற்ப, இன்றைக்கும் தீண்டாமைக் கொடுமை என்பது அந்த அளவுக்கு நீடித்துக் கொண்டிருக்கின்றது. மனிதன் மலத்தை மனிதனே அள்ளுகின்ற அந்தக் கொடுமைக்குத் தமிழகத்தில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுகிறோம் என்று மாண்புமிகு தமிழக முதல்வரின் பணிவான கவனத்திற்குத் தலைவணங்கி தெரிவித்துக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டில்லி பாபு (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி. (குறுக்கீடுகள்) 12-40-ல் ஆரம்பித்து இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) No, no. 12-40-க்கு ஆரம்பித்திருக்கிறீர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை இன்னும் தமிழகத்தில் முழுமையாக அமல்படுத்த வேண்டுகிறோம். அதேபோல், ஆதி திராவிட பழங்குடியின மக்களுக்குப் பின்னடைவு மற்றும் குறையிடைப் பணியிடங்கள், உடனடியாக நிரப்பப்பட வேண்டுகிறோம். பஞ்சமி நிலங்களை அடையாளம் கண்டு, தலித் மக்களுக்கே அந்நிலங்களை ஒப்படை செய்திட வேண்டுகிறோம். G.T.R. பள்ளிகளில், ஆசிரியர்கள் முழுமையாகப் பணியாற்றப்பட வேண்டுகிறோம்.

சிறப்புக் கூறுத் திட்டம் என்று பெயரளவில் சொல்லப்பட்டு, கடந்த கால் நூற்றாண்டைக் கடந்துவிட்ட பின்னும், இன்னும் "பட்டியலினத்தவர் துணைத் திட்டம்" என்ற பெயரில் அரைகுறையாகச் செயல்பட்டு வருகிறது. அரசு வழங்கக்கூடிய— Appendices—பல்வேறுபட்ட நிதி ஆதாரங்களில், ஏறக்குறைய 27 கோடி ரூபாய் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய நிதியில் 1.59 இலட்சம்

ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒட்டுமொத்தமாகக் கணக்கிட்டுப் பார்க்கப்போனால், 11,350 கோடி ரூபாய், அதாவது.. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பத்மாவதி. *(குறுக்கீடு)* 9 நிமிடங்கள் அதிகமாகி இருக்கின்றன. No, no. சொல்லுங்கள்; சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சட்டமன்றத் தொகுதியிலே, கிருஷ்ணகிரி மாவட்டத்தை உள்ளடக்கிய ஊத்தங்கரை ஒன்றியத்தில், இதுவரை ஒரு G.T.R. பள்ளிகூட இல்லை. அங்கே ஆவாரங்குறிச்சியிலே G.T.R. பள்ளி துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சரிடத்திலே மனு கொடுத்து ஆய்வு நடைபெற்று இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றக் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்து விடுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** அந்தப் பள்ளியும், சிங்காரப்பேட்டையிலே ஆதி திராவிட மாணவர்களுக்கு, ஒரு விடுதியும், அதேபோல், வேலூரிலே, நெகமத்திலே ஒரு விடுதியும் கட்டித் தருவதற்குத் தாங்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

***திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், 7 நிமிடங்களுக்குள் உரையை முடியுங்கள்.

**திருமதி பி. பத்மாவதி:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*"ஏழை யென்றும் அடிமை யென்றும்*
*எவனும் இல்லை ஜாதியில்,*
*இழிவு கொண்ட மனித ரென்பது*
*இந்தி யாவில் இல்லையே!*
*விடுதலை! விடுதலை! விடுதலை!*
*பறைய ருக்கும் இங்கு தீயர்*
*புலைய ருக்கும் விடுதலை;*
*பரவ ரோடு குறவ ருக்கும்*
*மறவ ருக்கும் விடுதலை!"*

என எட்டயபுரத்து உலக மகாகவி பாடலை நினைவுகூர்ந்து, சாதி, சமய வேறுபாடுகளைக் களைந்தெறிந்து, தீண்டாமை, தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக, அனைத்துச் சாதியினரும் ஆலயப் பிரவேசம் செய்ய வேண்டும் என வைக்கம் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திய, சமூக நீதிக்குக் குரல் கொடுத்த பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியார் வழியில் வந்த மாண்புமிகு முதல்வர், முத்தமிழறிஞர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற அறிவிப்பைத் தந்த இந்நாள் வாழும் பெரியார் அவர்களை நாங்கள் பாராட்டுகிறோம்.

பத்தாண்டுக் காலம், உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படாமல் இருந்த, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய ஊராட்சிகளின் தேர்தலை நடத்தி, ஆதிதிராவிட பிரதிநிதிகளைத் தலைமையேற்க வைத்து, அவர்களை அழைத்து, பாராட்டு விழா நடத்திய மாண்புமிகு முதல்வர் அவர்களை நன்றியுணர்வோடு பாராட்டுகிறோம்.

ஆதி திராவிட, பழங்குடியின மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், அதிக மதிப்பெண்கள் பெற்ற 10 மாணவ, மாணவியர்களைத் தேர்வு செய்து, தமிழகத்தில் தலைசிறந்த பள்ளிகளில் அவர்கள் விரும்பிய பாடங்களை எடுத்துப் படிப்பதற்குக் கல்விக் கட்டணம், உறைவிடச் செலவுகளை அரசே ஏற்கும் என்ற அறிவிப்பை நாங்கள் மனதார வரவேற்கிறோம்.

சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்கச் சென்ற அதிரடிப் படையினரால் பாதிக்கப்பட்ட மலைவாழ் மற்றும் ஏழையெளிய மக்களுக்கு மனித உரிமை ஆணையத்தின் பரிந்துரையை ஏற்று, 5 கோடி ரூபாய் வழங்கிய நமது தமிழக அரசையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனதாரப் பாராட்டுகிறோம்.

மயானத்தில் பணியாற்றும் ஊழியரை, சாதிப் பெயரைச் சொல்லிக் கேவலமாகப் பேசுவோரின் வாயை அடைத்து, மயான உதவியாளர் என்று அழைக்க வேண்டும் எனவும், அவர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்கப்படும் எனவும் அறிவித்த சிறப்பு அறிவிப்பை வரவேற்கின்றோம்.

சமூகத்தில் கல்வி, கலாச்சாரம், சமூக நீதியில் பின்தங்கியுள்ளவர்கள், சமத்துவம் அடைந்திட, இப்படி நல்ல திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ள இந்த நல்ல சூழ்நிலையிலும்கூட, சாதிய அடக்குமுறைகள் இருப்பதையும் சுட்டிக்காட்ட வேண்டிய நிலைமை உள்ளது. உள்ளாட்சி அமைப்புகளில் தேர்வு செய்யப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்கள், சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை. துணைத் தலைவர்கள், ஊராட்சி எழுத்தர்கள் முழு உரிமைகளையும் எடுத்துக்கொள்கிறார்கள். குறிப்பாக, பெண்கள் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. குறிப்பாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், வலங்கைமான் ஒன்றியம், ஆலங்குடி என்பது குரு ஸ்தலம்; அதிக வருமானம் வரக்கூடிய ஓர் ஊராட்சி. ஆதி திராவிட பெண் தலைவர். அங்கு அவர்கள் சுதந்திரமாகச் செயல்பட முடியாத நிலையிருக்கிறது. "மழை பெய்தும், தூவானம் விடவில்லையே!" என்ற நிலைமையிருக்கிறது; வேதனையாக இருக்கிறது. ஆதி திராவிட ஊராட்சித் தலைவர்கள் உயிருக்குப் பயந்து வாழக்கூடிய சூழ்நிலையும், கொலை சம்பவங்களும், நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. எனவே, நமது அரசு தனிக் கவனம் செலுத்தி, பாதுகாப்பு அளித்திட வேண்டுமென இச்சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை, நுங்கம்பாக்கம் அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயிலில், புதுக்கோட்டை அரசு இசைப் பள்ளியில் முறையாக தேவாரம் பயின்ற கதிர்வேல், ஆலய ஓதுவராக அரசால் நியமிக்கப்பட்டார். தற்பொழுது, அவரது சாதி தெரிந்தவுடன் மற்ற அர்ச்சகர்களாலும், அறங்காவலர்களாலும் பல்வேறு நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டு, ஆலயத்தைவிட்டு அப்புறப்படுத்தப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சம்பவங்களுக்குக் காரணமானவர்களைக் கண்டறிந்து, வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

கோவில் நிலங்களில், பெரும்பாலும் ஏழை ஆதி திராவிட மக்கள்தான் நீண்டகாலமாகக் குடியிருக்கின்றார்கள். கோவில் நிலங்களுக்குப் பட்டா வழங்க முடியாது என்ற அரசாணையிருப்பதால்,



அவர்களுக்குக் குடிமனைப் பட்டா கிடைக்காததோடு மட்டுமின்றி, அரசு சலுகைகளும் புறக்கணிக்கப்படுகின்றன. எனவே, அதற்கான விதிகளைத் தளர்த்தி, மனைப் பட்டா வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ், தாட்கோமூலம் கடன் பெறும் பயனாளிகளுக்கு தாட்கோ பரிந்துரை கிடைத்த பிறகும், சம்பந்தப்பட்ட வங்கிகள் கோரப்பட்ட கடன் தொகையை வழங்க மறுக்கிறார்கள். இத்தகைய சிரமங்களைப் போக்கி, இலகுவாகக் கடன் பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். ஆதி திராவிடர் நலத் துறைப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில், தண்ணீர் வசதி, தரைகள், கழிப்பிடம் மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலைகள் மிகவும் மோசமாக உள்ளன. பல விடுதிகளில் சமையலர்கள் இல்லை. பாதுகாப்பான சமையல் கூடங்கள் இல்லை. சிறப்புக் கூறுத் திட்டத்தின்மூலமாக ஒதுக்கப்படுகின்ற நிதிகளையெல்லாம் இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்குச் செலவழித்துத் தீர்வு காண வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-55

அதோடுமட்டுமல்லாமல், விடுதிகளுக்குக் கொடுக்கக்கூடிய உணவுப் பொருட்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை, விலைவாசி உயர்வைக் கணக்கில்கொண்டு அதிகப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின்மூலம், மூன்றாம் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வரையில் பயிலும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியினப் பெண் குழந்தைகளுக்கு வழங்கும் உதவித் தொகையை, மாதம் ரூ.50 வீதம் 10 மாதங்களுக்கு ரூ.500 என இந்த அரசு வழங்குகிறது. இது பெண் குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல், ஆண் குழந்தைகளுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதேசமயத்தில், அறிவிக்கப்பட்ட இந்த ஊக்கத் தொகையை அதிகப்படுத்தி, ரூ.100/- ஆக வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதோடுமட்டுமல்லாமல், இத்திட்டம், நம்முடைய மாநிலத்திலே பதினைந்து மாவட்டங்களில் மட்டும்தான் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் இருக்கின்ற அனைத்து மாவட்டங்களிலும், அதிலும் குறிப்பாக, திருவாரூர் போன்ற

மாவட்டங்கள் எல்லாம் அதில் விடுபட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கின்றபோது, கொஞ்சம் சங்கடமாக இருக்கிறது. இந்த மாவட்டங்களுக்கெல்லாம் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிட, பழங்குடியின மாணவர்கள் தனியார் கல்லூரிகளில், மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பதற்காகச் சேரும்பொழுது, கட்டணங்களை முதலிலேயே செலுத்தக்கூடியதைத் தவிர்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்.சி., எஸ்.டி. அரசு ஊழியர்களை முக்கியத்துவம் இல்லாத பணிகளில் நியமிக்கக் கூடாது என்ற அரசு விதி இருந்தும்கூட, தமிழகத்தில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ். போன்ற உயர் பொறுப்புகளில் அந்த நிலை நீடிப்பதை, அரசு கவலையோடு பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசுப் பணிகளில் எஸ்.சி., எஸ்.டி. பின்னடைவுப் பணிகள் 17,314-ஐ ஐந்தாண்டுகளில் நிரப்புவோம் என்ற உத்தரவாதம் அளித்தும், இதுவரையில் நடைமுறைப்படுத்தவில்லை. உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று பணிவன்போடு இத்தருணத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையில், 1986-ல் பணியில் அமர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு, 1996-ல் பணி வரன்முறை கிடைத்தது. அதேபோல, 1986-ல் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையில் நியமனம் செய்யப்பட்டோர்களுக்கு, நியமன நாள் முதல் பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளது. ஆனால், ஆதி திராவிடர் நலத் துறைப் பள்ளியில் அமர்த்தப்பட்ட 191 பட்டதாரி ஆசிரியர்களுக்குமட்டும், 10 ஆண்டுக் காலம் தண்டனையா என்ற கேள்வி எழுந்துள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும் இந்தப் பிரச்சினையை நாங்கள் கொண்டு சென்றுள்ளோம். எனவே, அவர்களுக்கு 1986 முதல் பணி வரன்முறை அளித்திட வேண்டுமென நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அரசின் ஆணையை ஏற்று, பின்னடைவுப் பணியிடங்களை நிரப்பி, கல்வி மேம்பாட்டிற்காகத் தியாக உணர்வோடு பணியாற்றிவரும் பட்டதாரி ஆசிரியர்களைப் பணி நியமன நாள் முதல், பணி மூப்பிற்கேற்ப, கல்வித் தகுதிக்கேற்ப, பட்டதாரி ஆசிரியர் எனவும், முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் எனவும் நிலை உயர்த்தி அறிவிக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



ஆதி திராவிடர் குடியிருப்புகளை, அடுக்கு மாடிக் கட்டடமாகக் கட்டித்தர வேண்டும் என்ற வேண்டுகோளை நான் முன்வைக்கின்றேன். அதோடு தொகுப்பு வீடுகளின் வடிவமைப்பைக்கூட மாற்றியமைத்துத் தர வேண்டும் என்றும், தொகுப்பு வீடுகளுக்குக் கூடுதலாக, ஒரு இலட்சம் ரூபாயாக வழங்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிக்கு ஆசிரியர்கள், காப்பாளர்கள் முறையாகச் செல்வதில்லை. அப்பகுதிகளைச் சார்ந்த 8 மற்றும் 10 ஆம் வகுப்பு படித்த மாணவர்களுக்கு ரூ.500, ரூ.1000 கொடுத்து ஆசிரியர்களைப் பாடம் சொல்லிக் கொடுக்கப் பயன்படுத்துகிறார்கள். பலமொழி பேசும் மலைவாழ் மாணவர்களிடம் சமவெளிப் பாடங்களைக் கொண்டு செல்லும்பொழுது, முறையான ஆசிரியர்களே இப்படிச் செய்தால், எப்படிக் கல்விப் பயன் அவர்களுக்குக் கிடைக்கும்? எனவே, ஆசிரியர்களுக்கான குடியிருப்புகளை மலைப் பகுதியிலேயே கட்டிக் கொடுத்து, தங்க வசதி செய்ய வேண்டும் என இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடி மக்களுக்கு இனச் சான்று வழங்குவதில் இருக்கின்ற சிரமங்களைப் போக்க, பழங்குடி கிராமங்களில், வரும் தேதியை முன்னரே தெரிவித்து, சிறப்பு முகாம் நடத்தி அங்கேயே இனச் சான்று வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

விழுப்புரம் மாவட்டம், திருக்குவளை சுபில்ராம்பட்டு இந்து குறவன் சாதிச் சான்றிதழைப் பெற, அம்மக்கள் நீண்ட நாள் கடுமையான முயற்சி மேற்கொண்டு, கிடைப்பதற்கான உத்தரவாதம் பெற்றும், அவர்களுக்கு வழங்கப்படாமல் அதற்காக மேலும் அலைந்து கொண்டிருக்கிறார்கள். பெற உத்தரவாதம் கிடைத்துவிட்ட அந்தச் சாதிச் சான்றிதழை, உடனடியாக மாவட்ட ஆட்சியர்மூலமாக வழங்க, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆன்றோர் மன்றக் குழு; கடந்தமுறை, நமது முதல்வர் அவர்கள் ஆட்சியில், பழங்குடி ஆன்றோர் மன்றக் குழு அமைக்கப்பட்டு, பல்வேறு சிறப்பான பரிந்துரைகள் அரசுக்கு அனுப்பப்பட்டன. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், மன்றம் புதுப்பிக்கப்படாமல் செயலிழந்துவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Nine minutes ஆகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு)

**திருமதி பி. பத்மாவதி:** தற்போது, மீண்டும் அந்த மன்றக் குழுவை அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

பழங்குடி மக்களின் நிலங்களைப் பிறர் வாங்குவதைத் தடை செய்யக்கூடிய சட்டத்தைத் தமிழக அரசு கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-00

ஒன்றே ஒன்று. நன்னிலம் தொகுதியில் உள்ள கொரடாச்சேரி, பத்தூர் மேல்கரை ஆதி திராவிடர் ஆரம்பப் பள்ளிக்கு, இந்த ஆண்டு புதிய கட்டடம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். நெடுங்குளம் ஆதி திராவிடர் அரசு மேல்நிலைப் பள்ளியில், சமமாக ஆண்களும், பெண்களும் 1,500-க்கும் மேல் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, பெண்கள் மேல்நிலைப் பள்ளியைத் தனியாகப் பிரித்துத் தரம் உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மன்னார்குடி தொகுதியிலுள்ள சவளக்காரன் ஆதி திராவிடர் அரசு உயர்நிலைப் பள்ளியைத் தரமுயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏனம்மா? நீங்கள் மற்றவற்றையெல்லாம் எழுதிக் கொடுத்துக் கேட்டுக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார். (குறுக்கீடு)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையில் பணியமர்த்தும்போது, 10 பணியிடங்களுக்குக் குறைவாக இருந்தால், இட ஒதுக்கீட்டுக் கொள்கையை அமல்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இருந்ததை, 1998 ஆம் ஆண்டு, ஒரேயொரு பணியிடம் இருந்தாலும், இட ஒதுக்கீட்டுக் கொள்கையை அமல்படுத்த வேண்டும் என்று சட்டமாக்கித் தந்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; இந்தியாவிலேயே முதன்முதலாக நம்முடைய மேதகு இந்தியக் குடியரசுத் தலைவராக யாரை நியமிக்கலாமென்ற நிலை வந்தபோது, திரு. கே.ஆர். நாராயணன் அவர்களை நியமிக்கலாம் என்ற முதல் குரல் அரசியல்வாதிகளிடமிருந்து வந்தது, நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களிடமிருந்துதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே பதிவுசெய்து அமர்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார். Doctor, 7 minutes. (குறுக்கீடு) 7 minutes.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** 10 minutes கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 7 minutes பேசுங்கள்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** மண்ணின் மைந்தராகிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (சிரிப்பு) எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், நான் இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த என்னுடைய மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், என் ஆருயிர் அண்ணன் வை.கோ. அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களை நினைவுகூர்ந்து, அரசியல் சாசனத்தை ஆக்கித் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களையும் நினைவுகூர்ந்து, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். தேசப் பிதா காந்தி அவர்கள் சொன்னார்; "The weakest should have the same opportunity as the strongest". 'குழந்தைகளை கடவுள்' என்று சொன்னார். குழந்தைகள், இன்றும் குழந்தைகளாகவே, ஆதி திராவிட மக்கள் இருந்து கொண்டிருக்கின்றார்கள். Karal Marx சொல்லியிருக்கின்றார்; 'மனிதர்களின் வாழ்வு நிலையைத் தீர்மானிப்பது உணர்வு அல்ல; மாறாக, அவர்களது வாழ்வு நிலையே, உணர்வுகளைத் தீர்மானிக்கிறது'' என்று சொல்லியிருக்கின்றார்.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள், 'எங்கு அறிவியலும், பொருளியலும் மோதுகின்றனவோ, அங்கே பொருளியல்தான் வெற்றி பெற்றிருக்கிறது என்பது வரலாறு'' என்று கூறியிருக்கின்றார்கள். ஆகவே, சமூக நீதி கிடைக்கவேண்டுமென்றால், பொருளியலில் முன்னேற்றம் அடையவேண்டும் இந்த மக்கள். அதற்கு அரசு என்ன செய்யவேண்டும்? மத்திய அரசு, சில நிறுவனங்களில், குறிப்பாக, பெட்ரோலிய நிறுவனங்கள், diesel bunk, petrol bunk, gas agency என்று ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை, ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டை, இந்த ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஒதுக்குவதைப்போல, தமிழகத்திலுள்ள நம்முடைய மாநிலத்திலுள்ள சில நிறுவனங்களில், குறிப்பாக, மணல் குவாரி, கல் குவாரி, TASMAC Bar போன்றவற்றிலும், மற்ற நிறுவனங்களிலும் இவர்களுக்கென்று தனி ஒதுக்கீடு கொடுக்கவேண்டும். நிச்சயமாக அப்படிக் கொடுத்தால், அவர்களது பொருளாதார நிலை மேம்படும் என்று நான் கருதுகிறேன்.

ஆதி திராவிட மக்களுக்காக, தமிழகத்தில் கல்லூரி இருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தொழிற் கல்லூரி அவர்களுக்காகத் தொடங்குவதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தி, அக்கல்லூரியை உருவாக்க முன்வருபவர்களுக்குச் சிறப்புச் சலுகை கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

பிற்பகல் 1-05

வேலைவாய்ப்புகளில், சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு—இப்பொழுது அங்கன்வாடிப் பணியாளர்கள் தேர்வு நடந்து கொண்டிருக்கிறது; நடந்து முடிந்திருக்கிறது—அதில் rule of reservation பின்பற்றப்பட்டிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதில் நிச்சயமாக rule of reservation பின்பற்றப்படவேண்டும்.

உள்ளாட்சித் தேர்தலில், 19 சதவிகித இட ஒதுக்கீடு உள்ளதுபோல், கூட்டுறவுத் துறையிலும் 19 சதவிகித இட ஒதுக்கீடு தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பின்னடைவுப் பணியிடங்களைப் பொறுத்தவரை, தமிழகத்தில் அரசுப் பணியிலும், அரசு சார்ந்த நிறுவனங்களிலும் ஆயிரக்கணக்கான பின்னடைவுப் பணியிடங்கள் உள்ளன. குறிப்பாக, 'A' group, 'B' group, 'C' group, 'D' group-ல் 15,240 இடங்கள் பின்னடைவுப் பணியிடங்கள் இருக்கின்றன. கூட்டுறவுத் துறையில் பின்னடைவுப் பணியிடங்கள், அரசுக் கூட்டுறவுத் துறையில் இளநிலை உதவியாளர்கள் முதல் கூடுதல் பதிவாளர் வரை 1,200 இடங்களும், கூட்டுறவுத் துறைக் கட்டுப்பாட்டில் இயங்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி முதல் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி வரை, 20,400 காலியிடங்கள், பால் வளக் கூட்டுறவுச் சங்கங்களில் 18,750 காலியிடங்கள், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் 6,550 இடங்கள், கதர் கிராமத் தொழில் கூட்டுறவுச் சங்கத்தில் 5,390, நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 3,565, மாவட்டக் கூட்டுறவுச் சங்கமான மாவட்ட மைய கூட்டுறவு வங்கியில் 1,265, மாவட்ட மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் 2,625, கூட்டுறவு அச்சகத்தில் 52, மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத்தில் 29, கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்களில் 37, வட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 538, கூட்டுறவு நகர வங்கிகளில் 498, பிரதம நில வள வங்கியில் 342, பால் வளக் கூட்டுறவுச் சங்கங்களில் 17,434, வீட்டு வசதித் துறை கூட்டுறவு வீட்டு



வசதிச் சங்கத்தில் 4,848, கைத்தறித் துறையின்கீழ் வருகின்ற நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 2,447 எனக் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பின்னடைவுக் காலியிடங்கள் இருக்கின்றன. அரசு வெள்ளை அறிக்கை அளித்து மூன்று மாதத்திற்குள் இந்தக் காலியிடங்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவுப் பட்டயப் படிப்பு படித்த சுமார் 5,000 இளைஞர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்புத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

கூட்டுறவு வங்கிகளில், விவசாயக் கடன் ரூ.7 ஆயிரம் கோடியைத் தள்ளுபடி செய்தீர்கள். அதை நான் வரவேற்கிறேன். அதேபோன்று, வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கு தாட்கோவால் கொடுக்கப்பட்ட சுமார் 7 கோடி ரூபாய்; அந்த 7 கோடி ரூபாய் என்பது, ரூ.7 ஆயிரம் கோடியில் 0.1 விழுக்காடுதான்; அதைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 சதவிகிதத்திற்கு உச்ச நீதிமன்றம் தடைவிதித்தபோது, தமிழ்நாடு முழுவதும் எல்லோருமே 'பந்த்' நடத்தினோம். அதிலே நாங்களும் கலந்துகொண்டோம். அதேபோன்று, பின்னடைவுப் பணியிடங்களை, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு இருக்கின்ற பின்னடைவுப் பணியிடங்களை நிரப்புவதற்கு அனைவரும் போராட வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கின்றேன்.

ஆதி திராவிட மாணவர்களுக்கு, All India Civil Service Examination Training வைத்திருப்பதைப் போன்று, Pilot course-ஐயும் இலவசமாக வழங்க வேண்டும்.

கிராமப்புறங்களில் படித்த, தகுதிவாய்ந்த ஆதி திராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு, sports and games-ல் சிறப்புப் பயிற்சி கொடுக்க வேண்டும்.

10, 15 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட அரசு மாணவர் மற்றும் மாணவியர் விடுதிக் கட்டடங்கள் மிகவும் பாழடைந்த நிலையில் இருக்கின்றன. அவற்றை உடனே செப்பனிட வேண்டும்.

அரசின் சலுகைகளைப் பெறும், குறிப்பாக அரசிடமிருந்து நிலம், நிதி, மானியம், வரி விலக்கு, மின்சார சலுகை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். இதுபோன்ற சலுகைகள் பெறும் தனியார் நிறுவனங்களில், இட ஒதுக்கீட்டு முறையை—rule of reservation-ஐப் பின்பற்ற வேண்டும்.

*பிற்பகல் 1-10*

தாட்கோமூலம் வழங்கப்படும் தனி நபர் கடன் தொகையை அதிகரிக்க வேண்டும்.

விளிம்புத் தொகையைக் கொடுக்க வேண்டும்; Margin money-யைத் தாட்கோ நிறுவனம் கொடுக்க வேண்டும். அரசின் திட்டங்கள் நிறைவேற வேண்டுமென்றால், வங்கிகளுக்கு அறிவுரை வழங்கி, கட்டாயமாகத் தாட்கோ நிறுவனம் loan வழங்கும்போது, வங்கிகளும் கொடுக்க வேண்டுமென்று அறிவுறுத்த வேண்டும். குறிப்பாக, வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள பெண்களுக்கு, விவசாய நிலம் வாங்குவதற்கு, தாட்கோ நிறுவனம் சுமார் 50,000 ரூபாய் அளிக்கின்றது. ஆனால், அதற்கு வங்கிகள் கடன் அளிப்பதில்லை. அதற்கு வங்கி, கடன் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு collateral security கேட்கின்றார்கள் வங்கிகளில்; அதைத் தவிர்க்க வேண்டும்; அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர், போதும்; இத்துடன் பேச்சினை முடித்துக்கொள்ளுங்கள். இன்னும் இரண்டு மூன்று உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** முடித்துவிடுகிறேன் சார்; ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த உறுப்பினர், மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார். (குறுக்கீடு)

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** தனி நபர் பேச்சு வார்த்தைமூலம் நிலங்களைக் கையகப்படுத்தி, ஆதி திராவிட மக்கள், பழங்குடியினருக்கு வீட்டுமனை வழங்கவும், மயானம் மற்றும் மயானப் பாதை அமைக்கவும், மாவட்டந்தோறும் ரூபாய் பத்து இலட்சம்தான் வழங்கப்படுகிறது; இந்நிலங்களின். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார். (குறுக்கீடு) நீங்கள் பத்து நிமிடங்களுக்குமேல் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். பேச்சினை நிறைவு செய்யுங்கள். அடுத்து திரு. து. ரவிக்குமார் பேசுங்கள். (குறுக்கீடு) சரி, உரையை முடியுங்கள்.



**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** முடித்துவிடுகிறேன். இந்த நிலங்களின் வழிகாட்டு மதிப்பில் மூன்று மடங்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்புக்கு நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அடுத்து திரு. து. ரவிக்குமார் பேசுங்கள்.

***திரு. து. ரவிக்குமார்:** தமிழ்நாட்டில் ஐந்தில் ஒரு பகுதி மக்களாக இருக்கின்ற ஆதி திராவிட பழங்குடியின மக்களுக்குரிய நலன்கள் குறித்த மானியக் கோரிக்கையிலே நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த, பேரவைத் தலைவர் அவர்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரவிக்குமார் உங்களுக்கு 7 நிமிடங்கள் மட்டும் பேசுவதற்கு அனுமதியளிக்கிறேன்.

**திரு. து. ரவிக்குமார்:** இன்றைக்கு நமது அரசு வழங்குகிற இலவசத் திட்டங்கள் எல்லாமே, வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களைக் கணக்கிட்டுத்தான் வழங்கப்படுகின்றன...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. ரவிக்குமார், ஒரு நிமிடம்.

## 7. அறிவிப்பு

### பேரவை அலுவலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (18-4-2007) நண்பகல் 12-00 மணிக்கு எனது அறையில் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு முடிவு செய்யப் பட்டுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9-5-2007 அன்று பிற்பகல் எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த இனங்கள் (items) 10-5-2007 அன்று எடுத்துக்கொள்ளப்படும்.

10-5-2007 அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த இனங்கள், 11-5-2007 அன்று எடுத்துக்கொள்ளப்படும். மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், 11-5-2007 அன்று வெளிநாடு செல்லவிருப்பதால் பங்கேற்க இயலவில்லை. எனவே, மாண்புமிகு மக்களவைத் தலைவர் அவர்கள், 11-5-2007 அன்று நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்று பாராட்டுரை வழங்குவார்கள்.

11-5-2007 அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த இனங்கள் 12-5-2007 அன்று எடுத்துக்கொள்ளப்படும்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### கோரிக்கை எண் 4 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விடுதி மராமத்து சரியாக இல்லை என்று சொன்னார்கள். 2001 முதல் 2006 ஆம் ஆண்டுவரைக்கும் விடுதி மராமத்துக்கு கடந்த ஆட்சியால் ஒதுக்கப்பட்ட தொகை, ஐந்து வருடங்களுக்கும் வெறும் 9.34 கோடி ரூபாய். ஆனால் நமது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2006-2007 ஆம் நிதி ஆண்டில் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, திட்டப் பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மயானப் பாதை மற்றும் மயான சாலை வசதிக்குச் செல்லும் பாதை வசதிக்காக, 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்கள். தலைவர் கலைஞர் அவர்கள், 1996 முதல் 2001 ஆம் ஆண்டுவரைக்கும் 321.19 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். கடந்த ஆட்சியாளர்களால் வெறும் 215.79 இலட்சம் ரூபாய்தான் செலவிடப்பட்டுள்ளது. இந்த 2006-2007 ஆம் ஆண்டிற்கு, 42.27 இலட்சம் ரூபாய் இந்த மயானப் பாதைகளுக்குச் செலவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரவிக்குமார், சொல்லுங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** இந்த வறுமைக்கோட்டினை மறு வரையறை செய்ய வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கின்றது. நேற்றையதினம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்த நேரத்திலே, அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இப்போது நாம் இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, எரிவாயு இணைப்பு போன்றவற்றை வழங்குகின்ற காரணத்தினாலே, அந்தப் பொருட்களையெல்லாம் வைத்திருக்கின்றவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே வரமாட்டார்கள் என்கின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே, மண்டல் குழுத் தீர்ப்பையொட்டி, Indira Sawhney தொடுத்த வழக்கிலே, உச்ச நீதிமன்றம்



creamy layer என்கின்ற வரையறை, ஆதி திராவிட மக்களுக்குப் பொருந்தாது என்று அன்றைக்குத் தீர்ப்பளித்திருக்கின்றது. அதை முன்னுதாரணமாகக் கொண்டு, இப்போது ஊரகப் பகுதிகளிலே வாழ்கின்ற ஆதி திராவிட, பழங்குடியின மக்கள் அனைவரையும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள்தான் என்று நாம் ஒரு முடிவினை எடுத்து, அதை அறிவிக்க வேண்டுமாய் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, நான் பொது விவாதத்திலும் குறிப்பிட்டேன், மாநில அளவிலே S.C., S.T. ஆணையம் என்பது தொடங்கப்படாத ஒரு நிலை இருக்கின்றது என்று. சமூக நீதிக்குப் பெயர் பெற்ற நம்முடைய மாநிலத்திலே, மாநில S.C., S.T. ஆணையங்களை உடனடியாக உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இப்போது மத்திய அளவிலே இருக்கின்ற S.C., ஆணையத்திலே, மூன்று உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். அதிலே ஒருவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக இருந்து வந்திருக்கின்றார். இப்போது அந்த இடங்கள் நிரப்பப்பட இருக்கின்ற நேரத்திலே, அவற்றிலே ஒருவரைத் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக நியமிப்பதற்குத் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உங்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தனியார் துறையிலே இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பது, மத்திய அரசின் Common Minimum Programme-லே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கொள்கை. ஆனால், இப்போது தமிழ்நாட்டிலே அதற்கான முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படாத ஒரு நிலை இருக்கின்றது. "Special Economic Zone—அதிலே தொழில் தொடங்க வருகின்றவர்களிடத்திலே, வேலைவாய்ப்பு அளிப்பதிலே உள்ளூர்வாசிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்கின்ற உத்தரவாதத்தைப் பெற்றுத்தான் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திலே கையெழுத்திடுகிறேன்" என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேரவையிலே சொன்னார்கள். அப்படி ஒப்பந்தமிடுகின்ற நேரத்திலே, 'சமூக நீதியை நிலைநாட்டுகின்ற அந்த affirmative action என்று சொல்லப்படுகின்ற ஒத்தாசை நடவடிக்கைகளையும் நாங்கள் நிறைவேற்றுவோம்' என்கின்ற ஒரு வாக்குறுதியையும் பெற்று, Special Economic Zone-லே தொழில் தொடங்க வருகின்ற தொழிலதிபர்களிடத்திலே நாம் ஓர் உறுதிமொழியைப் பெற்று, புரிந்துணர்வு ஒப்பந்தத்திலே கையெழுத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோலவே, இன்றைக்குச் சில்லறை வர்த்தகத்திலே ஈடுபடுகின்ற நிறுவனங்களிடத்திலும்கூட, அப்படித் தொடங்கப்படுகின்ற அந்த நிறுவனங்களிலே, பணியாளர்களாக, சமூக நீதியை நிலைநாட்டுகின்றவிதமாக, 'ஒடுக்கப்பட்ட பிரிவினரை நாங்கள் நியமிப்போம்' என்கின்ற உறுதிமொழியை இந்த அரசு கேட்டுப்பெற வேண்டும்.

கூட்டுறவுச் சங்கத்திலே, இட ஒதுக்கீட்டை வழங்க வேண்டுமென்று பல உறுப்பினர்கள் இங்கே வலியுறுத்தினார்கள். கூட்டுறவுச் சங்கத் தலைவர் பொறுப்புக்களிலே இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்கின்ற அதே நேரத்திலே, அங்கே பல தற்காலிக நியமனங்கள், ஆயிரக்கணக்கான தற்காலிக நியமனங்களெல்லாம், பணி வரன்முறை செய்யப்படுகின்ற ஒரு சூழல் இருக்கின்றது. அப்படி வரன்முறை செய்யப்படும்போது, இட ஒதுக்கீட்டுக் கொள்கை என்பது, பாதிக்கப்படுகின்றது. அப்படி regularisation செய்யும்போது, இட ஒதுக்கீடு பாதிக்கப்படாத விதத்திலே அதைச் செய்ய வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, தொகுப்பு வீடுகள் குறித்து நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். இந்தியாவிலே குடிசை வீடுகள் என்பது, 18 விழுக்காடுகள் இருக்கின்றன. ஆனால், தமிழ்நாட்டிலோ, 23 சதவிகிதமாக இருந்து கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, ஆதி திராவிட, பழங்குடியின மக்கள்தான் அதிகமாக குடிசை வீடுகளிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு, கடலூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அங்கேயிருக்கின்ற ஆதி திராவிட மக்களிலே 58 சதவிகிதம் பேர் குடிசைகளிலே இருக்கின்றார்கள். விழுப்புரம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அங்கே 59 சதவிகிதம் பேர் குடிசை வீடுகளிலே இருக்கின்றார்கள். நாகப்பட்டினம் மாவட்டத்திலோ நிலைமை மிக மோசமாக இருக்கிறது. அங்கே 64 சதவிகிதம் பேர் குடிசை வீடுகளிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். பல துறைகளிலே நமது மாநிலத்தை முதல்நிலை பெறப் பாடுபட்டுக்கொண்டிருக்கின்ற நாம் இந்த நேரத்திலே, இப்படிக் குடிசைகள் நிறைந்த ஒரு மாநிலமாக, இந்தியாவிலே மிக அதிகமாக குடிசைகள் இருக்கின்ற ஒரு மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது என்று சொல்கிற செய்தி, நமக்குப் பெருமை சேர்க்கின்ற செய்திதானா என்பதை இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. அதை நாமெல்லாம் இன்றைக்கு வரவேற்றுக் கொண்டிருக்கின்றோம். அதேபோல, தாட்கோ மூலமாக ஏழையெளிய மக்கள் பெற்ற கடன்



தொகை, 70 கோடி ரூபாய்கூட வராது; ரூ.7,000 கோடியில் ஒரு சதவீதம்கூட இல்லை. அந்தத் தாட்கோ கடன்களை இரத்து செய்தால், ஆதி திராவிட, பழங்குடியின மக்கள் அதனால் பயன் பெறுவார்கள். இதனால், அரசுக்குப் பெரிய அளவிலே நிதிச் சுமை எதுவும் ஏற்பட்டுவிடாது என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-20

அடுத்ததாக, இன்றைக்கு ஆதி திராவிடர் நலத் துறைக்கு ஒதுக்கப்படுகிற தொகையிலே, ஏறத்தாழ 77 விழுக்காடு தொகை அந்தத் துறையினால் நடத்தப்படுகின்ற ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்குச் சென்று சேர்கிறது. 1,053 பள்ளிகள் ஆதி திராவிடர்களுக்கும், இன்னும் 200-க்கும் அதிகமான பள்ளிகள் பழங்குடியினருக்கும் அந்தத் துறையினால் இப்போது நடத்தப்படுகின்றன. ஆனால், அந்தப் பள்ளிகளுடைய தரத்தைப் பார்த்தால், மிக மிக மோசமாக இருக்கின்றது. காரணம், அதற்கான மானிட்டரிங் ஏற்பாடு என்பது சரியாக இல்லை. சிறப்பு வட்டாட்சியர்கள்தான் அந்தப் பள்ளிகளை மேற்பார்வையிடுகின்றவர்களாக இருக்கின்றார்கள். வருவாய்த் துறையைச் சேர்ந்தவர்கள், கல்வி நிறுவனங்களைச் சரியாக மேற்பார்வை செய்ய முடியாது. எனவே, பள்ளிக் கல்வித் துறையிலே இருக்கின்ற அந்த மேற்பார்வை அமைப்பை, ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்குப் பயன்படுத்திக்கொள்ள இந்த அரசு முன்வர வேண்டும். ஆதி திராவிடர் நலப் பள்ளிகளை, பள்ளிக் கல்வித் துறையினுடைய inspection-க்குக் கீழே கொண்டுவர, இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உங்களை நான் பணிவோடு வேண்டுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்தத் துறையினால் நடத்தப்படுகிற விடுதிகளைப் பொறுத்தவரையில், அண்மையிலே ஏப்ரல் மாதம் 14 ஆம் தேதி புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த தினத்தன்று நாங்கள் வில்லிவாக்கத்திலே இருக்கின்ற ஆதி திராவிடர் மாணவர்களுடைய விடுதிக்குச் சென்றோம். அந்த விடுதியைப் பார்க்கின்றபோது—இப்போது தமிழ்நாட்டிலே இருக்கின்ற சிறைச்சாலைகளுக்குப் பல வசதிகளை நாம் இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கின்றோம்—சிறைச்சாலைகளைவிட மிக மோசமான நிலையிலே அந்த விடுதிகள் இருக்கின்ற நிலையை நாங்கள் பார்த்தோம். அந்த விடுதிகளை எல்லாம் சீரமைப்பதற்கு, ஒரு சிறப்புத் திட்டத்தை, எப்படி நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியத்தின்கீழே இருக்கின்ற பள்ளிகளை எல்லாம் சீரமைப்பதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே

ஒரு சிறப்புத் திட்டத்தை அறிவித்து இருக்கின்றார்களோ, அப்படியே இந்த ஆதி திராவிடர் நலத் துறையின்கீழே இருக்கின்ற விடுதிகளைச் சீரமைப்பதற்கும் ஒரு சிறப்புத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரவிக்குமார், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** அடுத்து, மத்திய அரசினால் பல நலத் திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன. ஆனால் அவை பலருக்குத் தெரிய வருவதில்லை. குறிப்பாக, 1998 ஆம் ஆண்டு, மத்திய அரசு ஒரு திட்டத்தை அறிவித்தது. அதன்மூலம், ஆதி திராவிட, பழங்குடியின மக்களுக்குச் சிறப்புப் பள்ளிகள் தொடங்கினால், நூறு சதவீதம் அதற்கான மானியத்தை மத்திய அரசு கொடுத்தது. அந்தத் திட்டத்தின்கீழே மத்தியப்பிரதேசத்திலே மாவட்டந்தோறும் ஒரு பள்ளி என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நமது மாநிலத்திலோ, ஒரு பள்ளிகூட அப்படி ஏற்படுத்தப்படவில்லை. கடந்த ஆண்டு மார்ச் மாதத்திலே, இப்படி மத்திய சமூக நீதித் துறை ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. அதன்படி, 90 விழுக்காடு மானியம் அளிக்கப்படுகிறது. அந்தத் திட்டத்தின் அடிப்படையிலும்கூட, நம்முடைய மாநிலத்திலே எந்த ஒரு பள்ளியும் ஏற்படுத்தப்படாத ஒரு நிலை இருக்கிறது. ஆக, இந்தத் திட்டங்கள் எல்லாம் சரிவர எல்லோருக்கும் தெரியும்படி, அவற்றை பிரபலப்படுத்துவதற்கு அந்தத் துறை முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி.

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்னுசாமி, கொஞ்சம் இருங்கள். திரு. ரவிக்குமார், நீங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** இறுதியாக, எனது தொகுதியிலே நந்தனார் ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அவை இரண்டையும் இணைத்து ஒரே பள்ளியாக, இருபாலரும் படிக்கின்ற பள்ளியாக மாற்றி, அதிலே இருக்கின்ற பெண்கள் பள்ளியை கல்லூரியாகத் தரம் உயர்த்தித்தர வேண்டுமென்கின்ற ஒரு நீண்டநாள் கோரிக்கையை உங்கள் மத்தியிலே வைத்து, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன். வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்னுசாமி.

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்தில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மானியக் கோரிக்கையின்மீது, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த, தமிழகத்திலே பிறந்து, தமிழகத்திலே வளர்ந்து, தமிழ்ச் சமுதாயத்திற்காக உழைத்துக் கொண்டு இருக்கிற எங்கள் உத்தம தலைவர் எத்திசையில் இருந்தாலும், அத்திசையை நோக்கி வணங்கிவிட்டு, என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சித் துறையை நல்லாட்சியாக நடத்திக் கொண்டிருக்கின்ற எங்களுடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களுக்கு, என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்டக் கழகச் செயலாளர், அண்ணன் காந்திச்செல்வன் அவர்களுக்கும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதுச்சத்திரம் ஒன்றியக் கழகச் செயலாளர் துரை என்கிற ராமசாமி அவர்களுக்கும், சேந்தமங்கலம் ஒன்றியக் கழகச் செயலாளர் அசோக்குமார் அவர்களுக்கும், இராசிபுரம் சட்டமன்ற உறுப்பினரும், என்னுடைய ஒன்றியக் கழகச் செயலாளருமான கே.பி. இராமசாமி அவர்களுக்கும், கொல்லிமலை ஒன்றியக் கழகச் செயலாளர் திரு. காளியப்பன் அவர்களுக்கும், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இராமலிங்கம் அவர்களுக்கும் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல, ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

2001 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழகத்திலுள்ள மக்கள்தொகையில், 6.51 இலட்சம் பழங்குடியினர் உள்ளனர். அதாவது, பழங்குடியினர் 1.04 விழுக்காடு உள்ளனர். இதில் 0.85 விழுக்காடு பழங்குடியினர், ஊரகப் பகுதியில் வசிக்கின்றனர். பழங்குடியின மக்கள்தொகையில், பெரும்பான்மையினர் பொருளாதாரத்தில் பின்தங்கியும், சமூகத்தின் விளிம்பிலும் உள்ளனர்.

மாநிலத்தில் பழங்குடியினருடைய கல்வி அறிவு, 41.53 விழுக்காடு என்ற நிலையில் மிகவும் குறைவானதாக உள்ளது. எனது பகுதி, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டதாகும். 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வசிக்கின்றனர். இவர்களில், பெரும்பாலானோர் கொல்லிமலை

என்ற மலைப் பகுதியில் வசித்து வருகிறார்கள். பழங்குடியினரைக் கல்வி, அறிவு, பொருளாதாரம் போன்றவற்றில் முன்னேற்ற, பல திட்டங்களைக் கொண்டுவந்து, அவை திறம்படவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனினும், மலைவாழ் மக்கள் எல்லா விதத்திலும் முன்னேற, நமது கழக அரசு கொண்டுவரும் திட்டத்தினை, விரைவாகத் துரிதப்படுத்துமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாமக்கல் மாவட்டம், எனது தொகுதிக்குட்பட்ட கொல்லிமலையில், தமிழகத்தின் ஒட்டுமொத்த பழங்குடியினரில், பாதி அளவு வசிக்கிறார்கள். பழங்காலந்தொட்டு, பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் வாழ்க்கை வரலாறு, தோன்றிய விதம், இவர்களின் செயல்பாடுகள்பற்றி அறிய, உதகையில் அமைந்துள்ள பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் போன்று, கொல்லிமலையிலும் ஒரு பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் அமைத்தால், அந்த மக்களின் வாழ்க்கைத் தரம் உயர பேருதவியாக இருக்கும் என்பதை இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

நமது கழக அரசு, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதைத் தலையாயக் கடமையாகக் கொண்டிருப்பதை, நான் இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். மேலும், இந்த நிதியாண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கிவரும் சிறப்பு மைய உதவியைப்போன்று ரூ.25 கோடி மதிப்பீட்டில் ஒரு சிறப்பு மாநில நிதி உதவித் திட்டத்தை இந்த அரசு அறிவித்துச் செயல்படுத்தி வருகிறது. அதை நான் வரவேற்கிறேன். மேலும், இந்த நிதியாண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த, ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போதைய மக்கள் தொகையினைக் கருதி, 25 கோடி ரூபாய் என்பதை மேலும் உயர்த்தித்தர வேண்டுமாய் இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதிக்குட்பட்ட புதுச்சத்திரம், நாமகிரிப்பேட்டை, சேந்தமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து, ஜவ்வரிசி தயாரிக்கும் மில்கள் நிறைய உள்ளன. அவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, இது 6 மாத சீசன் தொழிலாகும். 1 வருடத்திற்கு 6 மாதத்திற்கு மட்டுமே, மில்களில் பணி கிடைக்கும். மீதம் 6 மாதம் வேலை இல்லாமல், சாப்பாட்டிற்கே மிகவும் கஷ்டப்படுகிறார்கள். தொழிலாளர்கள் நலன் கருதி, கிழங்கு மில் சம்பந்தப்பட்ட கிழங்கு அறுவடை செய்யும் தொழிலாளர்கள்,



மில்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நலன் கருதி, அவர்களுக்கு 'கிழங்கு மில் நல வாரியம்' அமைத்துக் கொடுத்து, வேலை இல்லாத அந்த 6 மாத காலத்திற்கு நிவாரண தொகையும், ரேஷனில் மண்ணெண்ணெய், அரிசி ஆகியவற்றை மலிவு விலையிலும் வழங்குமாறு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளின் எண்ணிக்கை: ஆதி திராவிடர் பள்ளிகள் - 1,053. அரசுப் பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளிகள் - 286. இந்தப் பள்ளிகளில் எனது தொகுதிக்குட்பட்ட ஆதி திராவிடர் நலத் துறை பள்ளிகள் - 5. இவற்றில் வல்வில் ஓரி உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளி, செம்மேட்டில் இயங்குகிறது. செங்கரை உண்டு உறைவிட உயர்நிலைப் பள்ளி ஒன்றும், பள்ளிக்காடு உண்டு உறைவிட ஆரம்பப் பள்ளி, முள்ளுக்குறிச்சி உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளி, கலங்காணி உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளி ஆகிய இந்த ஐந்து பள்ளிகளிலும் தங்கிப் படிக்கின்ற மாணவ மாணவிகளுக்கு. . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. கே. பொன்னுசாமி:** இன்னும் கூடுதலாக இடங்கள் வழங்க வேண்டி, மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பள்ளிகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினால், பள்ளியின் தரம் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகின்றது. நமது கழக அரசு, உடனடியாக ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமாய், மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள் பொன்னுசாமி. மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் ம. வரதன். (குறுக்கீடு) சொல்லுங்கள்; நன்றி சொல்லுங்கள்.

**திரு. கே. பொன்னுசாமி:** 71 ஆயிரம் பேருக்கு நிலம் வழங்கப்பட்டு இருக்கிறது. அதிலே 30 விழுக்காடு, ஆதி திராவிடர்களுக்கு மட்டும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் ம. வரதன்.

**திரு. போளூர் ம. வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், இந்த அவையில் மூன்றாவது முறையாகப் பணியாற்றிட எனக்கு வாய்ப்பளித்த, அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) வாக்களித்த செங்கம் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு, பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. போளூர் ம. வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 6 கோடியே 24 இலட்சம் மக்கள் வாழ்வதாக ஒரு கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே, ஒரு கோடியே 24 இலட்சம் மக்கள் ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று அரசின் கணக்கு சொல்கிறது. அந்த அடிப்படையில் பார்க்கின்றபொழுது, எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. 1949-லே இந்தத் துறை, உள் துறை இலாகாவிலே இணைந்து பணியாற்றி இருக்கிறது. அதற்குப் பின்னாலே, உள் துறையிலே, ஆதி திராவிடர் நலத் துறை, சமூக நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை போன்ற துறைகள் இணைந்திருக்கின்றன. ஆனால், 1969-லே கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, அதிலேயிருந்து பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை பிரிக்கப்பட்டு, சமூக நலத் துறையும், ஆதி திராவிடர் நலத் துறையும் இணைந்து உள் துறையிலே இருந்தது. நான் ஏன் இதை இங்கே சொல்கிறேன் என்று சொன்னால், 1969-லேயிருந்து இன்று வரை, 60 ஆண்டுகளிலே - சுதந்திரம் பெற்று 60 வருடங்கள் ஆகின்றன; 60 ஆண்டுகளிலே—பல்வேறு நபர்கள் இந்தச் சமுதாயத்திலேயிருந்து இந்தத் துறையினுடைய அமைச்சர்களாக வந்திருக்கிறார்கள். அப்படி வந்தவர்களிலே எத்தனை பேர் இந்த சமுதாயத்தினுடைய உண்மை நிலையைத் தெரிந்து பணியாற்றி இருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணுகின்றபொழுது, வேதனை அளிக்கிறது.

தியாகச் செம்மல் கக்கன்ஜி, அதற்குப் பின்னாலே வந்த அம்மையார் சத்தியவாணிமுத்து அவர்களும், இந்த மாநிலத்தினுடைய ஒட்டுமொத்த மக்களுடைய எண்ணங்களிலே என்றைக்கும் நிலைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், ஆதி திராவிட மக்களுடைய உணர்வுகளை அவர்கள் புரிந்து பணியாற்றி இருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே வந்தவர்களை நான் குறை சொல்லவில்லை. ஆட்சியிலே இருந்தவர்கள்,



ஒரு சாதாரண நிலையிலே இருந்து வரக்கூடியவர்களை இந்தத் துறையினுடைய அமைச்சராக ஆக்கி இருக்கிறீர்கள். அப்படி ஆக்குவதன்மூலமாக, திறமையான ஒரு நிருவாகத்தை அவர்களால் கொடுத்திருக்க முடிகிறதா என்று சொன்னால், இல்லை என்றுதான் நான் சொல்ல முடியும். குறை சொல்லவில்லை. யாரையும் குறைத்து மதிப்பிட்டு நான் சொல்லவில்லை. மக்களுடைய உணர்வுகளை, நாடிகளைத் தெரிந்து வைத்திருக்கின்ற அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர்களை, இந்தத் துறைக்கு நீங்கள் அமைச்சராக்கி இருக்க வேண்டும். அப்படி ஆக்காததன் விளைவு, 60 ஆண்டுகள் ஆன பின்னாலும்கூட, இப்போது ஆதி திராவிட மக்களுடைய நிலை எந்த நிலையிலே இருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்களெல்லாம் பல்வேறு கருத்துகளைச் சொன்னார்கள். அந்தக் கருத்தினுடைய சாராம்சம் என்ன? 60 ஆண்டுகள் ஆன பின்னாலும், ஆதி திராவிடர் தாழ்ந்துகொண்டே இருக்கிறானேதவிர, நிமிர்ந்து நின்றதாக வரலாறு இல்லை. இங்கேகூட 44 பேர் இருக்கிறோம். இந்த 44 பேரிலே எத்தனைப் பேருக்கு, துணிந்து இந்தச் சமுதாயத்தினுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற ஒரு நிலை இருக்கிறது என்று எண்ணிப்பார்த்தால், இல்லை என்றுதான் நான் சொல்ல முடியும். அதற்குக் காரணம் யார்? தேர்தல் வருகின்றபொழுது, காலனிக்குச் செல்கிறோம்; சகோதரா என்று சொல்கிறோம்; அக்கா என்று சொல்கிறோம்; மாமா என்று சொல்கிறோம்; அண்ணா என்று சொல்கிறோம்; எல்லாம் சொல்கிறோம். எந்தச் சட்டமன்ற உறுப்பினராவது திரும்ப, அந்த மக்களுடைய குறைகளைப் போய் நேரடியாகப் பார்த்திருக்கிறோமா என்று சொன்னால், இல்லை. (குறுக்கீடுகள்) ஆனால், ஒன்றை... (குறுக்கீடு) போய், என்ன பண்ணிவிட்டீர்கள்? அதைத்தான் சொல்ல வருகிறேன். (குறுக்கீடுகள்) உங்கள் ஆட்சிக் காலத்திலே நடந்ததைத்தான் சொல்ல வருகிறேன். (குறுக்கீடு) பொறுங்கள் சார். ஏன் அவசரப்படுகிறீர்கள்? (குறுக்கீடு) இல்லை, நீங்கள் அவசரப்படுகிறீர்கள் எல்லோருமே. நீங்கள் அவசரப்படுவதன் மூலமாக... (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) என்ன? நீங்கள் போய் என்ன சாதித்துவிட்டீர்கள்? (குறுக்கீடுகள்) 10 மாதங்களுக்கு முன்னால்வரை நீங்கள்தானே ஆட்சியிலே இருந்தீர்கள்? உங்கள் சாதனைகளைச் சொல்லப் போகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், நீங்கள் அவர்களைப் பார்த்துப் பேசாதீர்கள். பேரவைத் தலைவரைப் பார்த்துப் பேசுங்கள்.

பிற்பகல் 1-35

**திரு. போளூர் ம. வரதன்:** அவசரப்பட்டு நீங்கள் சத்தம் போடாதீர்கள். நீங்கள் சத்தம் போடுவதன்மூலமாக இந்தச் சமுதாயத்திற்கு நீங்கள் துரோகம் செய்ததை நான் நிரூபித்துக் காட்ட முடியும். தேவையில்லாமல் ஒவ்வொருமுறையும் நான் பேசுகின்றபோது குறுக்கிடுவதையே வேலையாக வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். உங்கள் சாதனைகளை மக்கள் மறந்துவிடவில்லை. மன்னிக்க வேண்டுகிறேன்; நான் சொல்வதைக் கேளுங்கள். நான் சொல்வது என்ன? நான் யாரையும் குறை சொல்லவில்லையே? இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த 44 சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே இருக்கிறோம். என்ன குரல் கொடுத்திருக்கிறோம்? எந்த உணர்விலே ஒன்று சேர்ந்திருக்கிறோம்? யாருக்காவது நாம் செவி கொடுத்திருக்கிறோமா? காலையிலேகூட முன்னாள் அமைச்சர் சொன்னார், டி.வி. கொடுக்கவில்லை, டி.வி. கொடுக்கவில்லை என்று. சாதி, கட்சியைப் பார்த்து டி.வி. கொடுக்கவில்லை. ரேஷன் அட்டை இருந்தால் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதுதானே உண்மை? (மேசையைத் தட்டும் ஒலி)

நான் கேட்கிறேன், நீங்கள் மைனாரிட்டி சர்க்கார், மைனாரிட்டி சர்க்கார் என்று சொல்கிறீர்களே அய்யா, அது உண்மையா? ராஜிவ் காந்தி இறந்தபோது, 1991-லே full majority சர்க்காராக நீங்கள் இருந்தீர்கள். நான் இந்த அவையிலே இருந்திருக்கின்றேன். என்ன சாதித்தீர்கள் நீங்கள்? போன முறை, 5 ஆண்டுகள் இந்த அவையிலே நான் ஓர் உறுப்பினர். Full majority-ல் நீங்கள் இருந்தீர்கள். என்ன சாதித்தீர்கள்? சைக்கிள் கொடுத்தேன், சைக்கிள் கொடுத்தேன் என்று சொல்கிறீர்கள். சைக்கிள், யார் வீட்டுப் பணம்? உங்கள் வீட்டுப் பணமா? சர்க்கார் பணம். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் பணம், மக்களுடைய வரிப் பணம், மத்திய அரசு கொடுத்த கடன். மத்திய அரசு கொடுத்த கடனிலே கொடுத்திருக்கிறீர்களேதவிர, உங்கள் வருமானத்திலிருந்து கொடுக்கவில்லை. ஒன்றைச் சொல்கிறேன், இதே அவையிலே நான் பேசியிருக்கிறேன்; அன்றைய முதலமைச்சருக்கு நான் சொல்லியிருக்கிறேன். அங்கு இருக்கிறவர்கள் எல்லாம் இப்போது எதிர்க் கட்சி. நீங்கள் எல்லாம் அந்தப் பக்கம் இருந்தீர்கள். அப்போது நான் சொன்னேன், என்ன சொன்னேன்? எங்கள் பெண்கள் சைக்கிள் ஓட்டிக்கொண்டு போகும்போது, ஓ.சி., ஓ.சி. என்று ரோட்டில் கேலி செய்கிறான்; அதனாலே எல்லா சாதி மக்களுக்கும், ஏழைகளுக்கும் சைக்கிள் கொடுங்கள் என்று குரல் கொடுத்த சட்டமன்ற உறுப்பினர் நான். இப்போது இந்தச் சர்க்கார் எல்லோருக்கும் கொடுக்கிறது,



என்ன தப்பு? எல்லா சாதிகளிலும் ஏழைகள் இருக்கிறார்கள்; அது நல்ல திட்டம் இல்லையா? நீங்கள் கொண்டுவந்த திட்டம் என்பதால், விட்டுவிட வேண்டுமா என்ன? நீங்கள் கொண்டுவந்த திட்டம் என்று சொன்னால், உங்களுக்கு வேண்டுமானால் கொண்டுபோய் கொடுத்துக்கொள்ளுங்கள், நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. குறைகள் இருக்கிறபோது சுட்டிக்காட்டுங்கள்; நிறைகள் இருக்கிறபோது அதை எண்ணிப் பாருங்கள். எண்ணிப் பாருங்கள் என்றுதான் சொல்கிறேன்.

1967-லிருந்து இன்றுவரைக்கும் நீங்கள்தானே மாறி மாறி ஆண்டு கொண்டிருக்கிறீர்கள். இப்போது ஆதி திராவிடர்களுடைய நிலை என்ன? வீடு கட்டுகிறீர்கள்; எங்கே கொண்டுபோய்க் கட்டியிருக்கிறீர்கள்? எங்கே கொண்டுபோய்க் கட்டியிருக்கிறீர்கள்? சமத்துவபுரம் கட்டினார்கள்; அதைக் குறை சொல்கிறீர்கள். கொண்டுபோய், ஊரைவிட்டு வெளியே கட்டுகிறீர்கள். தண்ணீர் வசதி இல்லை, ரோடு வசதி இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசும்போது சொன்னார்கள், சுடுகாடு இல்லை என்று. உண்மை. இன்றைக்கு சுடுகாட்டிற்காக எத்தனை பேர் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறோம்? எத்தனை ஊரில், பிணம் தூக்க முடியாமல் இருக்கிறது? என்ன செய்து சாதித்துவிட்டோம் நாம்? ஜனநாயகம், ஜனநாயகம் என்று பேசிக்கொண்டு, ஓட்டை வாங்குகிறவரைக்கும்தான் நமக்கு constituency—லே வேலை; அந்த மக்கள் உயர்வதற்கு நீங்கள் என்ன சாதித்திருக்கிறீர்கள் என்று சொன்னால், Nil.

நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கு இருக்கிறார். அவரிடம் நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்வதெல்லாம்—ஒரு துடிப்புமிக்க இளைஞர் அவர்; துணிந்து பணியாற்றக்கூடியவர் என்பது எனக்கு 37 வருடங்களாகத் தெரியும். அதனாலே சொல்கிறேன்—அவர்கள் 80 இலட்சம் ரூபாய், 81 இலட்சம் ரூபாய் என்று கொடுத்தார்கள், இப்போது நீங்கள் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியாகக் கொடுக்கிறீர்கள்; வரவேற்கிறேன். அது உங்கள் துறையிலே ஒதுக்கப்படுகின்ற நிதி. ஒரு சட்டத்தைக் கொண்டு வாருங்கள். 33 சதவிகிதம், மூன்றில் ஒரு பங்குத் தொகையை, எந்தச் சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், அந்தப் பணத்தை ஆதி திராவிட மக்கள் வாழ்கின்ற பகுதிக்குக் கண்டிப்பாகச் செலவழிக்க வேண்டுமென்ற ஓர் உத்தரவாதத்தை நீங்கள் கொண்டு வந்தால், அந்த மக்களுடைய வளர்ச்சிக்கு அது உதவும். அதை விட்டுவிட்டு, நான்

ரோடு போட்டுக்கொள்கிறேன், தார் ரோடு போட்டுக்கொள்கிறேன் என்று சொல்கிறீர்கள், போட்டு என்ன புண்ணியம்? (குறுக்கீடு) என்னிலிருந்து, எல்லோருக்காகவும்தான் சொல்கிறேன். 100 வருடங்களுக்குத் திட்டம் போட்டு ஏதாவது கொண்டு வந்திருக்கிறோமா? தார் ரோடு போட்டால் 6 மாதங்களுக்கு மேல் இருக்காது, சிமென்ட் ரோடு போட்டால் 3 மாதங்களுக்கு மேல் இருக்காது. அதற்குத்தான் நாம் கொடுத்திருக்கிறோமேதவிர, நிரந்தரப் பணிகள் செய்து இருக்கிறோமா? எண்ணிப் பாருங்கள். நான் பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம், நான் வற்புறுத்தியும் கேட்டுக்கொள்கிறேன்; வாய் இல்லாத அந்த மக்களுக்காகச் சொல்கிறேன், அந்த மக்கள் சார்பிலே கேட்கிறேன், 33 சதவிகிதப் பணத்தை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கண்டிப்பாக, ஆதி திராவிட மக்கள் வாழ்கின்ற பகுதிக்கு வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வேறு ஒன்றையும் சொல்கிறேன், இங்கேகூட பல உறுப்பினர்கள் பேசுகிறபோது சொன்னார்கள்; இன்றைக்கு ஒரு நிலையை—முதலில் அந்த நிலையே வேறுமாதிரி வந்தது; வரும்போதே அது மாறிவிட்டதால், சொல்கிறேன்; இருந்தாலும்—இப்போது இருக்கிற இந்த இரண்டு ஏக்கர் நிலத்தைப் பற்றிச் சொன்னார்கள். காலையிலேகூட யசோதா அம்மா பேசும்போது, பேராசிரியர் பதில் சொன்னார்கள். ஆதி திராவிட மக்களுடைய நிலங்களை எடுத்துக்கொள்ளக் கூடாது, எடுத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்கிறார்கள். உண்மை அதுவல்ல. ஆதி திராவிட மக்களுக்கு உண்மையிலேயே நிலம் இல்லை. கிராமங்களிலே, ஏரி ஓரத்திலே, ஏரிக்கு எதிராக இருக்கக்கூடிய புறம்போக்கு நிலங்களை அவர்கள் உழுதுகொண்டிருக்கிறார்கள். அப்படி உழக்கூடிய நிலங்களில் அதிகமாக இருப்பதை எடுத்து மற்றவர்களுக்கு இப்போது கொடுக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வது, அந்த ஆதி திராவிட மக்கள் உழுகின்ற புறம்போக்கு நிலங்களை அவர்களுக்கே பட்டா கொடுங்கள்; அந்த இனத்தைச் சார்ந்தவர்களுக்குப் பட்டா கொடுங்கள், வேறு யாருக்கோ கொடுக்கிறீர்கள். வைத்திருப்பவர்களுக்கேயா கொடுக்க வேண்டும்? வெள்ளைக்காரன் ஆண்டபோது என்ன செய்தான்? பஞ்சமி நிலம். தமிழகத்திலே கடந்த ஆட்சியிலே—நான் கேட்கிறேன், இப்போது நீங்கள் சொல்லுங்கள்—ஒன்றரை இலட்சம் ஏக்கர் பஞ்சமி நிலம் தமிழகத்திலே இருக்கிறது என்று உங்கள் ஆட்சிக் காலத்திலே கண்டறியப்பட்டு, அதற்கான உத்தரவுகளையெல்லாம் வழங்குகின்ற நேரத்திலே நீங்கள் ஆட்சியை விட்டுப் போய் விட்டீர்கள். இதற்கு முன்னால் ஆட்சியில்



இருந்தீர்கள். இதுவரையில் 10 மாதங்களாக, அப்போது நீங்கள் கொண்டு வந்த திட்டங்கள், நீங்கள் எடுத்த முடிவுகள், அரசாங்கக் கோப்பிலே நிலுவையில் இருக்கின்றன. அதற்கு என்ன செய்யவேண்டுமென்று suggestion ஏதாவது சொல்லியிருக்கிறீர்களா? ஒன்றரை இலட்சம் ஏக்கர் நிலத்தை, யாரோ பெரிய மிட்டா, மிராசுதாரர், பணக்காரர், நிலம் படைத்தவன், ரவுடி, கேடி என்று இவர்களெல்லாம் வைத்திருக்கிறார்கள். அந்த நிலங்களை எடுத்து, ஆதி திராவிட மக்களுக்கு ஏன் கொடுக்கவில்லையென்று, நீங்கள் ஏன் கூறவில்லை? ஒன்றரை இலட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது, இல்லாமல் போய்விடவில்லை. நீங்கள்தான் record-ஐ உருவாக்கியிருக்கிறீர்கள். நீங்கள்தான் அதைக் கண்டுபிடித்திருக்கிறீர்கள். அதற்கு என்ன செய்யப்போகிறீர்கள்? அதுபற்றி அரசாங்கத்திற்கு suggestion சொல்லுங்கள். அதைச் சொல்லாமல், நாங்கள் அதைச் செய்தோம், இதைச் செய்தோம் என்கிறீர்கள். ஜால்ரா, ஜால்ரா என்று சொல்கிறீர்கள். எது ஜால்ரா?

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. போளூர் ம. வரதன்:** கொஞ்சம் இருங்கள் Sir. நான் என்ன சொல்கிறேன் என்றால், பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கோடியே 24 இலட்சம் மக்களுடைய உரிமைகளைக் கேட்கின்றேன். என்னுடைய உரிமை இல்லை. எனக்கு நிலம் கேட்கவில்லை. அவர்களுடைய உரிமையைக் கேட்கிறேன். மிகப் பெரிய அளவில் உள்ள சாதி இது. பேசி முடியுங்கள், முடித்துக்கொள்ளுங்கள் என்றால், உண்மையைப் பேச விடுங்கள் Sir. ஆகவே, நான் ஒன்றைச் சொல்கிறேன், கலைஞர் அவர்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகின்றாரோ, அப்பொழுதெல்லாம் ஒரு திட்டம் வருகின்றது. அந்தத் திட்டத்திலே குறைகள் இருக்கலாம். யார் திட்டம் கொண்டு வந்தாலும், குறை சொல்வதற்கு நிறைய பேர் இருப்பார்கள். அதை நிறையாகக் கொண்டு செல்லும்போது, அதன்மூலம் மக்கள் பயன்பெறுகிறார்கள் என்றால், எந்த அளவுக்குப் பயன்பெறுகிறார்கள் என்பதை நாம் பார்க்கவேண்டும். நான் முக ஸ்துதிக்காகப் பேசுகின்றவன் அல்ல.

இப்போது, தென் மாவட்டத்தில் 4 பஞ்சாயத்துகளில் நடந்த தேர்தலைப் பற்றி நாம் பேசுகின்றோம். அது எப்படி நடந்தது என்று கேட்கின்றார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள், நடத்தவேண்டுமென்று நினைத்தோம், நடத்தினோம்

என்று சொன்னார்கள். நீங்கள் ஆட்சியில் இருந்தீர்களே அய்யா, ஏன் நடத்தவில்லை? யாராவது வந்து உங்கள் கைகளைப் பிடித்துக்கொண்டோமா? அல்லது தி.மு.க.காரர்கள் வந்து நடத்தக்கூடாது என்று சொன்னார்களா? இல்லையென்றால், காங்கிரஸ்காரர் வந்து போராட்டம் நடத்தினார்களா? ஆட்சி அதிகாரம் உங்கள் கைகளில் இருந்ததே, ஏன் நீங்கள் அதைச் செய்யவில்லை? மற்றவர்கள் செய்யும்போது குறை சொல்கிறீர்களே, நீங்கள் ஆட்சியில் இருந்தீர்களே, ஏன் அதைச் செய்யவில்லை? நான் சொல்கிறேன், (குறுக்கீடு) இல்லை, இல்லை, எனக்கு எல்லாம் தெரியும் அம்மா; நீங்கள் உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள். உங்கள் புவனகிரியில் என்ன நடக்கிறது என்பதுகூட எனக்குத் தெரியும். உங்கள் புவனகிரியைப்பற்றி எனக்கு நிரம்ப நன்றாகவே தெரியும். அதனால் உண்மையைப்பற்றிப் பேசக் கற்றுக்கொள்ளுங்கள். நான் ஒரு மூத்த உறுப்பினர் பேசுகின்றேன். யாரெல்லாம் இதில் குரலிட்டுக் குறுக்கிடுகிறார்களோ, அவர்கள் ஆதி திராவிடர்களின் துரோகிகள் என்பதைத்தான் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆதி திராவிட மக்கள் முன்னேறவேண்டுமென்ற உணர்வு உள்ளவர்கள், உண்மையை ஏற்றுக்கொள்ளவேண்டும். வெறுமனே குரல் கொடுத்து, சத்தம் போடுவதால், அந்தச் சமுதாய மக்களுடைய வாக்குகளை இனி நீங்கள் பெறமுடியாத நிலையைத் தமிழகத்தில் நாங்கள் உருவாக்குவோம். ஏன் இதை நான் சொல்கிறேன் என்றால், எங்கள் மக்கள் ஏமாளிகளாக காலம் முழுவதும் இருப்பார்கள் என்று நீங்கள் எண்ணக்கூடாது. இன்றைக்கு ஒன்றைச் சொல்கிறேன், இந்த அவையிலிருந்து சொல்கிறேன், மூன்று முறை எதிரணியிலிருந்துகொண்டுதான் பேசிக் கொண்டிருக்கிறேன். நான் யாருக்கும் ஜால்ராவும் போடமாட்டேன், உண்மையைப் பேசுவதற்கு அஞ்சவும்மாட்டேன். பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றைச் சொல்கிறேன்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், நல்ல கருத்துகளையெல்லாம் சொல்லிவிட்டீர்கள், போதும், பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. போளூர் ம. வரதன்:** முடித்துக்கொள்கிறேன். திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் இன்று காலையில் பேசினார். நெடுங்குளத்தில் ஆயிரம் ஏக்கர் நிலத்தை, Unitech Company-காரர்கள் வாங்கியிருக்கிறார்கள். அதே கம்பெனிக்காரர்கள் ஸ்ரீபெரும்புதூர், குன்றத்தூர் பக்கத்தில் காவனூர், நந்தம்பாக்கத்தில் ஆயிரம் ஏக்கர் வாங்குகிறார்கள்.



தமிழகத்தினுடைய நிலையைக் கருதி நான் சொல்கிறேன். ஒருவர் 10 ஏக்கர், 20 ஏக்கர், 100 ஏக்கர் என்று ஒரு கம்பெனிக்காக வாங்கலாம். டெல்லியிலே இருக்கக்கூடிய Unitech Company இங்கே வந்து, பணத்தைக் கொட்டி, கிராமங்களில் வளர்ச்சி என்று சொல்லி, நிலத்தை வாங்குவதால், பலர் பாதிக்கப்படுகிறார்கள். அந்த நிலங்களை எடுத்து, நீங்கள் ஏன் ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கக்கூடாது? நிலமற்ற ஏழைகளுக்குத் கொடுங்கள் என்று கேட்கிறேன்.

அதுமட்டுமல்ல; 7 ஆயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். தாட்கோவின் மூலமாக 100 கோடி ரூபாயை ஆதி திராவிட மக்கள் கடன் பெற்றிருக்கிறார்கள். அதைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, இசைக் கல்லூரி இங்கே இருக்கிறது. அந்த இசைக் கல்லூரிக்கு எத்தனையோ பேரை உறுப்பினர்களாக நியமிக்கிறீர்கள். இதுவரையில் ஆதி திராவிடர் ஒருவரை நீங்கள் நியமிக்கவில்லை. அப்படியானால், ஆதி திராவிடர்களுக்கு இசையில் ஞானம் இல்லையென்று சொல்லிவிடாதீர்கள். இளையராஜா போன்ற மேதைகளும் இருக்கிறார்கள். அவரைக்கூட நீங்கள் நியமிக்கவில்லை. இதற்கு என்ன காரணம்? இசை, இசை என்று சொல்கிறோம். இசைக்கு வித்தகரே, காரணகர்த்தாவே இன்று இளையராஜா. அவர்கூடவா அதில் உள்ளே நுழையத் தகுதியில்லை? இதைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, எதிர்காலத்திலாவது இந்தச் சமுதாய மக்களும் அந்த இசைக் கல்லூரியிலே மற்றவர்களுக்கு உதாரணமாக இருக்கவேண்டுமென்று நீங்கள் முடிவெடுத்து அதற்கு ஆவன செய்யவேண்டுகிறேன்.

*பிற்பகல் 1-45*

கலைஞர் அவர்கள் முன்பு ஆட்சியில் இருந்தபோது, அம்பேத்கர் மணிமண்டபத்தைப் பற்றிச் சொன்னார்கள். - 5 ஏக்கர் நிலம். அந்தப் பெரியவர் - இங்கே போட்டோவை வைத்திருக்கிறோம். அதில் என்ன எழுதியிருக்கிறோம் என்று பாருங்கள். 'சமத்துவம் கண்டு சமூக நீதி காப்போம்' என்று எழுதி வைத்திருக்கிறோம். கலைஞர் அவர்கள் ஐந்து ஏக்கர் நிலம் அதற்காக ஒதுக்கினார், மெயின்ரோட்டில். ஒன்றேகால் ஏக்கரில் கட்டிவிட்டு, ஐந்து ஏக்கர் நிலம் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறது? யாரிடம் இருக்கிறது? ஏன், ஐந்து ஏக்கர் நிலத்தில் இந்தச் சமுதாயத்தின் தலைவர் பெயராலே நிறுவியிருக்கலாமே? அவர்கள் வந்து கையைப் பிடித்துக்

கொண்டார்களா, தி.மு.க.விலிருந்து வந்து? காங்கிரஸிலேயிருந்து நான் வந்து கையைப் பிடித்துக்கொண்டேனா? உங்கள் ஆட்சிக் காலத்தில்தானே செய்தீர்கள்? ஏன் செய்தீர்கள்? எதற்காகச் செய்தீர்கள்? அந்தப் பணம் எங்கே? நான் கேட்கிறேன், பதில் சொல்லுங்கள் இப்போது. அந்தப் பணம் எங்கே போய்விட்டது? இப்படி ஆதி திராவிட மக்களுக்குச் செய்கின்ற துரோகங்களைச் செய்துவிட்டு, "நாங்கள்தான், நாங்கள்தான்" என்று சத்தம் போடுவதன்மூலமாக, எங்கள் குரல்வளையை நெரித்துவிடலாம் என்று எண்ணினால், அது நடக்காது. நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். முதல்வர் அவர்கள் இங்கே இல்லை என்றாலும், அவர் காதுக்குச் செல்லும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்த மூன்றே முக்கால் ஏக்கர் நிலத்தை மீண்டும் எடுத்து, அண்ணா நகரில், I.A.S., I.P.S. Coaching Centre வைத்திருக்கிறீர்கள், ஆதி திராவிடர்களுக்கு அதற்குச் சரியான கட்டடம் இல்லை. இதற்கு அருகில் ஒரு I.A.S. Coaching Centre பெரிய அளவில் கட்டி, தமிழகத்தில் நல்ல அறிவாளிகளை, I.A.S., I.P.S. அதிகாரிகளை உருவாக்குவதற்கு அந்த மணி மண்டபத்தின் பெயராலே, அம்பேத்கரின் பெயராலே நீங்கள் ஒரு Academy-யை உருவாக்குங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்று. என்னுடைய தொகுதியிலே செங்கத்திலே ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது; அது வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்டது. எப்போது இடிந்துவிழும் என்று தெரியவில்லை. அங்கு ஒரு ஜீப் உள்ளது. குற்றவாளிகளைப் பிடிக்க வேண்டுமென்று சொன்னால், அந்த ஜீப்பை எடுத்துக்கொண்டு போகும்போது அதை போலீஸ்காரர்கள் தள்ளுவதைப் பார்த்தால், பாவமாக இருக்கிறது. அதற்குள் கடத்தல்காரர்கள் பாண்டிச்சேரிக்குப் போய்விடுவார்கள். இவர்கள் ஜீப்பைத் தள்ளி ஸ்டார்ட் செய்வதற்குள், அவர்கள் எங்கே போவார்கள் என்றே தெரியவில்லை. இந்த நிலையிலே அந்தப் பகுதியினுடைய காவல் துறை இருக்கிறது. எனவே, அந்தக் காவல் நிலையத்திற்கு ஒரு ஜீப் கொடுங்கள். அந்த போலீஸ் ஸ்டேஷனுக்குக் கட்டடம் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி புதுப்பாளையத்திலே அவுட் போஸ்ட் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது; அதைப் பக்கா போலீஸ் ஸ்டேஷனாக மாற்றிக் கொடுங்கள். அதேமாதிரி... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் வரதன் என்னென்ன கேட்கிறாரோ, அவற்றையெல்லாம் கலைஞரிடத்திலே சொல்லி வாங்கித் தருகிறோம். நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். தயவுசெய்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. போளூர் ம. வரதன்:** அதாவது, நான் எனக்காகக் கேட்கவில்லை. உண்மையைச் சொல்கிறேன். நேரம் இல்லை என்பது எனக்குப் புரிகிறது. இறுதியாக, (குறுக்கீடு) நான் உண்மையைத்தான் சொல்கிறேன். இப்போதும் சொல்கிறேன். நான் உங்களைப்போல் ஓடிப்போகவில்லையே? ஓரகடம் என்ற பகுதியிலே, சென்னகுப்பம் பகுதியிலே, ஆதி திராவிட மக்களுடைய பகுதி, காலனி ஏரியாவை அப்புறப்படுத்தப்பட இருக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. அந்த மக்களுடைய நலன் கருதி அவர்களை, அங்கிருந்து அப்புறப்படுத்தக் கூடாது என்று கேட்டு, (குறுக்கீடு) இதற்கெல்லாம் பயப்படக்கூடிய ஆள் நானில்லை. (குறுக்கீடு) உங்களுடைய நிலைமை எனக்குத் தெரியும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சின்னசாமி, உட்காருங்கள்.

**திரு. போளூர் ம. வரதன்:** காட்டிக்கொடுத்த ஓடுகாலிதான் நீ. (குறுக்கீடு) உங்களுடைய யோக்கியதை எனக்குத் தெரியும். வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். ஜெய்ஹிந்த்!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் பேசுங்கள்.

பிற்பகல் 1-50

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்"

என்னும் வள்ளுவத்தின் வழியில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் அவர்களே!

தங்களது இளமைப் பருவத்தில், திருவாரூரில், திருக்குவளையில், பண்ணைக்காரர் செய்த கொடுமையைப் பார்த்து உங்களின் தந்தையார் அய்யா முத்துவேலர் எழுதினாரே,

" இந்தக் கொடுமை செய்தால்
ஏழைகள் என்ன செய்வோம்?
இனிப் பொறுக்க மாட்டோம்.
ஈட்டியாய் வேலாய் மாறுவோம்"

என்று பாடிய வீரத் தமிழனின் மகனாய்ப் பிறந்த தமிழகத்தின் மகாத்மாவே! (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சர்களிடம் தட்டி பாராட்டி, அஞ்சாமை திறத்தோடு, துணிவுடைமையுடன்கூடிய ஆட்சியை நடத்தி, அறன் இழுக்காது மக்களை நன்முறையில் காத்தும், காட்சிக்கு எளியவராய், கடுஞ்சொல் பேசாது, இனிமையான சொற்களால் எல்லோரையும் ஈர்த்து, முறைசெய்து மக்களைக் காத்து, பண்புடைய வேந்தனாய் ஆட்சி செய்கின்ற செங்கோலைப் பிடித்து, எங்களுக்கும் வழிகாட்டும் வாழும் வள்ளுவரே, முத்தமிழ் வித்தகரே! டாக்டர் கலைஞர் அவர்களே! உங்களின் திருவடியை வணங்குகிறோம் (மேசையைத் தட்டும் ஒலி)

வறியவர்களின் வாழ்க்கை வளம் பெற, வரி இல்லா நிதிநிலை அறிக்கை தந்து, நிகரில்லா நிதி அமைச்சராக விளங்கும் எங்கள் அவை முன்னவர், மாண்புமிகு இனமானப் பேராசிரியப் பெருந்தகை அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஈன்றெடுத்த தவப் புதல்வரே! தமிழினத் தளபதி அவர்களே! உள்ளாட்சியில் நல்லாட்சியை வழங்கிக் கொண்டிருக்கும், ஓய்வறியா எங்கள் இளைய சூரியனே! தமிழகத்தின் எதிர்காலமே! (மேசையைத் தட்டும் ஒலி)

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல்"

என்றார் வள்ளுவர். இக்குறளின் உண்மையான கருத்தை அறிந்த நமது வாழும் வள்ளுவர், உள்ளாட்சியில் நல்லாட்சி தருவார் என்பது மட்டுமல்லாமல், ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமையைப் பத்தாண்டுக் காலமாக நடைமுறைப்படுத்தாமல் இருந்ததை நடைமுறைப்படுத்தி, அம்மக்களுக்கும் கிராம ஊராட்சியில் ஜனநாயக உரிமையைப் பெற்றுத் தர, இவர்தான் சரியானவர் என்று எண்ணியதால், அந்த எண்ணம், எங்கள் தளபதியால் நிறைவேறியது மட்டுமல்லாமல், வள்ளுவத்தையும் நிலைநிறுத்திவிட்டார் என்று சொன்னால் மிகையாகாது; மிகவும் பொருத்தமானதாகும்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு எண்ணற்ற சலுகைகளையும், அதிகாரங்களையும், கிள்ளிக்கூட தராத தலைவர்கள் மத்தியில், அள்ளித் தந்த எங்களது எட்டாவது வள்ளலே! (மேசையைத் தட்டும் ஒலி) தென்னாட்டுச் சிங்கம், அண்ணன் அஞ்சா நெஞ்சன் எங்கள் ஆற்றல் அரசு அவர்களே! மதுரை மாவட்ட கழக வளர்ச்சிக்காக அரும்பணி ஆற்றிக் கொண்டிருக்கும் எங்களது மாவட்டச் செயலாளர் அண்ணன் மூர்த்தி அவர்களே! இம்மாமன்றத்தில், இரண்டாவது



முறையாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையினைச் சமர்ப்பிக்க வைத்து, எங்கள் இன மக்களின் வாழ்வில் விடிவெள்ளியாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு சமத்துவப் பெரியாரே, உங்கள் பாதம் பணிந்து எனது பதிலுரையைத் துவக்குகின்றேன்.

டாக்டர் கலைஞர் அவர்கள், இரண்டாவது முறையாக முதல்வராக ஆட்சி செய்தபோது, மத்திய அரசில் உணவு அமைச்சராகத் திகழ்ந்த அண்ணல் பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள், 1975 ஆம் ஆண்டு ஜனவரியில், செங்கல்பட்டு, அதாவது தற்போது காஞ்சிபுரம் மாவட்டம், காட்டுப்பாக்கத்தில் தாட்கோ சார்பில் கட்டப்பட்டிருந்த குடியிருப்புகளைத் திறந்துவைத்து உரையாற்றும்போது, "மக்கள் நல அரசை, ஆட்சியை நாம் நடத்துகின்றோம் என்றுதான் இந்தியாவில் கூறி வருகின்றோம்; ஆனால் மக்கள் நல அரசு என்ற வார்த்தைக்கு உண்மையான விசுவாசத்துடன் தமிழக அரசு பணியாற்றி வருவதைக் கண்டு, நான் மகிழ்ச்சி அடைகின்றேன்; வாடகை எதுவும் இல்லாமல் இலவசமாக இந்த வீடுகளை, ஆதி திராவிட மக்களுக்கு வழங்குவது என்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முடிவு செய்திருப்பது, அவருடைய சீரிய மனப்பான்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்; தமிழ்நாடு காட்டியுள்ள இந்தச் சிறந்த முன்னுதாரணத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்ற முயலும் என்று நம்புவோமாக!" என்று கூறிய அந்த முன்னுதாரணத்தை உங்கள் முன்னிலையில் இம்மாமன்றத்தில் பதிவுசெய்து, ஐந்தாவது முறையாக அரியணை ஏறிய நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லரசு, ஆதி திராவிட மக்களுக்குச் செய்த நன்மைகள் பற்பல.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்கள், சமூக நீதியும், பொருளாதார மேம்பாடும் அடைய ஒரே வழி, சிறந்த கல்விதான் என்று அறிந்த நமது முதல்வர் அவர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு இவ்வாண்டு ஒதுக்கப்பட்ட 641 கோடியே 51 இலட்சம் ரூபாயில் 492 கோடியே 9 இலட்சம் ரூபாய், அதாவது 77 சதவீதம், கல்விக்கே செலவு செய்ய வேண்டுமென்று எண்ணி, இச்சமூக மாணவ, மாணவிகளுக்கு 10 மாத காலத்திற்குள்ளாக எண்ணற்ற சலுகைகளை வழங்கி உள்ளார்கள். இவற்றில் ஒரு சிலவற்றையாவது இந்த மாமன்றத்தில் பதிவுசெய்ய ஆசைப்படுகின்றேன்.

ஆதி திராவிடர் நலத் துறையில் இயங்கும் ஐந்து ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், ஐந்து

உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாகவும், இரண்டு பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தி வழங்கியுள்ளார்கள் டாக்டர் கலைஞர் அவர்கள்.

கடந்த காலங்களில் பராமரிப்பின்றி செயல்பட்டுக் கொண்டிருந்த ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் விடுதிகளின் பராமரிப்பிற்காக தலைவர் கலைஞர் அவர்கள் 10 கோடி ரூபாய் வழங்கி புதுப்பிக்க ஆணையிட்டார்.

ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு, சோப்பு மற்றும் எண்ணெய் வாங்குதல் போன்ற இதர செலவினங்களுக்கு பள்ளி மாணவர்களுக்கு மாதம் 15 ரூபாயிலிருந்து 25 ரூபாயாகவும், கல்லூரி மாணவர்களுக்கு மாதம் 25 ரூபாயிலிருந்து 35 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கியுள்ளார் நமது முதல்வர் அவர்கள். மேலும், ஆதி திராவிட மாணவ, மாணவியர் அதிக அளவில் விடுதியில் தங்கிப் பயில ஆர்வம் காட்டுவதால், மேலும் கூடுதலாக 1,000 இடங்களை ஏற்படுத்திக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், விடுதிகளுக்கு 100 சர அளவை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிற்பகல் 1-55

ஆதி திராவிடர் நலத் துறை பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களின் வசதிக்காக, பாதுகாப்பிற்காக 31 இலட்சம் ரூபாய் செலவில், 11 ஆதி திராவிடர் நலப் பெண்கள் விடுதிகளுக்கு சுற்றுச் சுவரும், 99 இலட்சம் ரூபாய் செலவில், 15 ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 30 கூடுதல் வகுப்பறைகளும், ஒரு கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில், 40 ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தனியாக எழுதும் மேசையுடன்கூடிய நீள்இருக்கைகளும், 99 இலட்சம் ரூபாய் செலவில், 585 ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு, தலா 15 மின்விசிறிகள் என்ற விதத்தில் 8,775 மின்விசிறிகளும், 95 இலட்சம் ரூபாய் செலவில், ஆதி திராவிடர் நல விடுதிகளில் உள்ள 2,700 மாணவர்களுக்கு அறைகலன்களும் வழங்கியுள்ளார்கள் நமது முதல்வர் அவர்கள். இன்னும் பல சலுகைகள் கல்வி வளர்ச்சிக்காக வழங்கப்பட்டிருப்பினும், நேரத்தின் அருமை கருதி, இவற்றை மட்டுமே இம்மாமன்றத்தில் பதிவுசெய்ய ஆசைப்படுகின்றேன்.



ஆதி திராவிட மற்றும் பழங்குடியினக் குடியிருப்புப் பகுதிகளில் வாழும் இம்மக்களுக்கு, சிறப்பு நிகழ்ச்சிகள் மற்றும் சுப காரிய நிகழ்ச்சிகளைக் கொண்டாடுவதற்காக, 12 சமுதாய நலக் கூடங்களை 71 இலட்சம் ரூபாயில், தலைவர் கலைஞர் அவர்கள், கட்ட உத்தரவிட்டுள்ளார்கள்.

கடந்த காலங்களில், நேர்மையான வழக்கிற்காக வாதாடும் வழக்கறிஞர்களுக்கு வழங்கப்பட்டதை என்னென்ன என்பதை, நடுநிலையாளர்களும், நடுநிலைப் பத்திரிகையாளர்களும் நன்கு அறிவார்கள். நீதித் துறையில், இந்தியத் திருநாட்டில், முதன்முதலாக உயர் நீதிமன்றத்தில் ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த ஒருவரை நீதிபதியாக்கி, அவரை உச்ச நீதிமன்றத்திற்கும் நீதிபதியாக உயரும் அளவிற்கு உதவியவர் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

அந்த நெறியில் சிறிதும் பிசகாமல், சட்டம் பயின்ற ஆதி திராவிட மாணவ மாணவிகள், தங்களுடைய தொழிலைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று எண்ணிய நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், 2000 ஆம் ஆண்டு முதல், நபர் ஒருவருக்கு 5,000 ரூபாய் மானியமாக வழங்கினார்கள். எண்ணற்ற நலத் திட்டங்கள் எப்படிக் கிடப்பில் போடப்பட்டனவோ, அதேபோல், இத்திட்டம் 2002-2003 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படவில்லை. இதனை அறிந்த நமது முதல்வர் அவர்கள், சட்டத்தில் பட்டம் பெற்ற ஆதி திராவிட மாணவ மாணவிகள், சிறந்த வழக்கறிஞர்களாக உருவாக வேண்டும் என்ற சீரிய எண்ணத்தில், மீண்டும் அவர்களுக்குச் சட்டப் புத்தகங்கள் வாங்கவும் மற்றும் அலுவலகம் அமைப்பதற்கும் சிறப்பு உதவித் தொகையாக, நபர் ஒருவருக்கு 5,000 ரூபாய்க்குப் பதிலாக 10,000 ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்தகால அரசால் போடப்பட்ட வேலை நியமனத் தடைச் சட்டம், வேலைநிறுத்தத் தடைச் சட்டம் போன்ற கறுப்புச் சட்டங்களுக்கெல்லாம் கல்லறை கட்டிய நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி வருகிறார். மேலும், தொகுப்பு ஊதியத்தில் பணிபுரிந்த எண்ணற்ற ஆசிரியர்களுக்கு, காலமுறை ஊதியம் வழங்கி, அவர்கள் வாழ்வில் ஒளிவிளக்கை ஏற்றியுள்ளார்.

மாண்புமிகு உறுப்பினர் யசோதா அம்மா அவர்கள்கூட, ஆசிரியர்கள் எத்தனை பேர் பணியில் அமர்த்தப்பட்டார்கள் என்று கேட்டார்கள். இந்த அரசு பதவியேற்ற பிறகு ஆதி திராவிடர் நலத் துறையில், 32 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களும், 209 பட்டதாரி ஆசிரியர்களும், 211 இடைநிலை ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேலும், 256 சமையலர்கள், 70 காவலர்கள் ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் விடுதிகளில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

ஆதி திராவிடர் நலத் துறையில், தொகுப்பு ஊதியத்தில் பணிபுரிந்த 62 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் மற்றும் 100 பட்டதாரி ஆசிரியர்களுக்கும் காலமுறை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. இதை மாண்புமிகு உறுப்பினர், அக்கா பத்மாவதி அவர்களும் கேட்டிருந்தார்கள். அது வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் பதவிக்கு நேரடி பதவி உயர்வு கோரக் கூடாது என்ற நிபந்தனையைத் தளர்த்தி, 1,310 இடைநிலை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வழங்க ஆணையிட்டவர் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிடர் நல விடுதிகளில், தொகுப்பு ஊதியத்தில் பணிபுரிந்த 112 சமையலர்களை காலமுறை ஊதியத்திற்கு கொண்டு வந்தது மட்டுமல்லாமல், மாதம் ஒன்றிற்கு ரூபாய் 70, ரூபாய் 90, ரூபாய் 100 மற்றும் ரூபாய் 250 என வெவ்வேறு தொகுப்பு ஊதியம் பெற்றுக்கொண்டிருந்த 102 சமையல் உதவியாளர்களுக்குச் சம்பளத்தை ஒரே சீராக, மாதம் ஒன்றுக்கு ரூபாய் 500 ஆக உயர்த்தி வழங்கியவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

மனிதனை அமர வைத்து, மனிதனே இழுத்துச் செல்லும் கை ரிக்ஷா கொடுமையை ஒழித்ததைப்போல, மனிதக் கழிவை மனிதனே கையால் அள்ளும் கொடுமையை ஒழிக்க வேண்டுமென்று எண்ணிய நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், அத்தொழிலில் ஈடுபட்ட 10,000 பேருக்கு அவரவர் விருப்பத்திற்கிணங்க, தேசிய மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் 50 கோடி ரூபாய் செலவில், சுய தொழில் தொடங்கிட ஆணையிட்டதனால், அத்தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்களின் வாழ்வில் ஒரு புத்துணர்வு ஏற்படுத்தினார் என்று சொன்னால் மிகையாகாது.



பிற்பகல் 2-00

அதுமட்டுமல்லாமல், ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு, தாட்கோமூலம் எண்ணற்ற சாதனைகளை நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் செய்துள்ளார்கள். அவற்றுள் ஒரு சிலவற்றை இந்த மாமன்றத்தில் பதிவுசெய்ய ஆசைப்படுகின்றேன். 4 கோடியே 16 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் செலவில், துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களும், அத்தொழிலிலிருந்து விடுபட்டு மாற்று சுய தொழில் தொடங்குவதற்கான பொருளாதார நிதி உதவித் திட்டத்தின்கீழ் 2,789 நபர்கள் பயன் பெற்றுள்ளார்கள்.

இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள் உருவாக்கிய சுயமதி சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதித் திட்டத்தின்கீழ் 10,000 ரூபாய் விதம் ரூபாய் 19 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்கள், சுய தொழில் தொடங்குவதற்காக, 22 கோடியே 6 இலட்சத்து 90ஆயிரம் ரூபாய் செலவில், 22 ஆயிரத்து 69 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

விண்ணில் பறக்கும் விமானங்களை, மண்ணிலிருந்து கண்டுகளித்த ஏழை ஆதி திராவிடப் பெண்கள், இனி விண்ணில் பறந்துகொண்டே பணி செய்ய வேண்டும் என்று எண்ணிய நல்ல நோக்கத்தில், முதன்முதலாக ஒரு கோடி ரூபாய் செலவில் 100 ஆதி திராவிடப் பெண்களுக்கு விமானப் பணிப் பெண் பயிற்சி வழங்குவதற்கு நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிட மக்களையும் தொழிலதிபர்களாக மாற்ற வேண்டும் என்று எண்ணிய நமது முதல்வர், 41 கோடியே 37 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் செலவில், 17 ஆயிரத்து 48 நபர்களுக்குத் தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் கடன் வழங்கி, அவர்கள், வாழ்வில் முன்னேற வழிவகுத்துள்ளார்கள்.

வளர்ந்துவரும் அறிவியல் உலகத்தில், ஆதி திராவிட மக்களும் தங்களது சிறந்த பங்களிப்பைத் தர வேண்டும் என்ற உறுதியான எண்ணத்தில், 2 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் 2,000 நபர்களுக்குக் கணிப்பொறிப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இன்னும் எவ்வளவோ சாதனைகள் இருப்பினும், அவை அனைத்தையும் இம்மாமன்றத்தில் பதிவுசெய்வதற்கு நேரமின்மை

காரணத்தால், இறுதியாக ஒன்றை மட்டும் சொல்ல ஆசைப்படுகின்றேன். தமிழகத்தில், நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால், 1989 ஆம் ஆண்டு, நவம்பர் மாதத்தில், தருமபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள், இன்று ஆல்போல் வளர்ந்து, படர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் அந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் பொருளாதார உதவித் திட்டத்தின்கீழ், 63 கோடியே 91 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் செலவில், 47 ஆயிரத்து 214 குழுக்களுக்குப் பொருளாதார உதவி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், 14 கோடியே 8 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவில் 84 ஆயிரத்து 423 நபர்கள் பயன்பெறும் வகையில், சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் கலைஞர் அவர்கள், ஐந்தாவது முறையாக அரியணை ஏறியவுடன், பழங்குடியின மக்களுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதை அறிந்து, அதனை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டுமென்று எண்ணி, 23-8-2006 அன்று பழங்குடியின மக்களுக்குச் சாதிச் சான்றிதழ் விண்ணப்பங்கள் சரியாக இருக்கும்பட்சத்தில் ஒரு வாரத்திற்குள்ளாகவும், ஏதேனும் சந்தேகங்கள் இருக்கும் விண்ணப்பங்களைப் பொறுத்த அளவில், 15 நாட்களுக்குள்ளும் சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டுமென்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுரை வழங்கியுள்ளார்கள். அவர்களின் அறிவுரைப்படி, தமிழ்நாட்டில் இப்போது குறித்த நேரத்திற்குள்ளாக, பழங்குடி மக்களுக்குச் சாதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அறிவிப்புகள்:

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராகவும் தமிழர்களின் இதயமாகவும், ஏழை எளியோர்களின் நாடித் துடிப்பை நன்கு உணர்ந்த ஒப்பற்ற தலைவரின் பொற்கால ஆட்சியில் மேலும் பல புதிய திட்டங்களை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பிற்பகல் 2-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், 1971 ஆம் ஆண்டில்தான் முதன்முதலாக ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினர்களுக்கும் சேர்த்து, இட ஒதுக்கீடு 16 சதவிகிதம் என்று பல ஆண்டுகளாக இருந்ததை உயர்த்தி, 18 சதவிகிதம் என நமது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் திராவிட



முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், 1990 ஆம் ஆண்டில், இந்த இட ஒதுக்கீட்டினை 18 சதவிகிதம் என ஆதி திராவிட மக்களுக்கு மட்டும் ஒதுக்கி, தனியாக ஒரு சதவிகிதம் பழங்குடியின மக்களுக்கு மட்டும் என்று முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். பழங்குடியினர் நலனுக்கென 2000 ஆம் ஆண்டிலே தனியாக ஒரு துறையை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் உருவாக்கி நடைமுறைப்படுத்தினார்கள். இந்த வரிசையில் மற்றும் ஒரு கட்டமாக, பழங்குடியின மக்கள், சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் மேலும் வளங்களைப் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு, அவர்களுக்கென தனியே ஒரு நல வாரியம் அமைத்து, அதன் சலுகைகளை (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் பல்வேறு நல வாரியங்களில் உள்ளவர்களுக்கு அளிக்கப்படும் அத்துணைச் சலுகைகளையும் அளித்திட, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு செய்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல இட ஒதுக்கீடுபற்றி விவாதித்து முடிவு எடுத்தபோது, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்குத் தனியாக 20 சதவிகிதம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 1989 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிலையில், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், சீர்மரபினர்களுக்கும் சேர்த்துதான் இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது. இதற்குப் பின்னரும், நாம் மன நிறைவு கொள்ளத்தக்க அளவிற்கு முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதால், சீர்மரபினருக்கு இட ஒதுக்கீடு அன்னியில், அதாவது மேலும் தனியாக ஒரு நல வாரியம் அமைத்து உரிய சலுகைகளை அளித்திட, தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் முடிவெடுத்துள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விடுதிகளில் தங்கிப் படிக்கும் ஆதி திராவிட மாணவிகளுக்கு ஒரு கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் ஒவ்வொருவருக்கும் ஒரு போர்வை வழங்கப்படும் என்று அறிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஆதி திராவிடர் நலத் துறையால் நடத்தப்படும் இலவச விடுதிகளில் தங்கிப் படிப்பதற்கு அதிக அளவில் மாணவ, மாணவியர் ஆர்வம் கொண்டுள்ளதால், இந்த ஆண்டு 50 இலட்சம் ரூபாய் செலவில், 1,000 மாணவ மாணவியர் கூடுதலாகச் சேர்ந்து படிக்கும் வகையில், கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்படும். விடுதி ஒன்றுக்கு சுமார் 35 இலட்சம் ரூபாய் என்ற அளவில், மொத்தம் 8 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் 25 விடுதிகளுக்குப் புதிதாகக் கட்டடங்கள் கட்டுவதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். 2007-2008 ஆம் ஆண்டில், 1,250 மாணவர்கள்

பயன்பெறும் வகையில், விடுதி ஒன்றுக்கு 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம், ஒரு கோடியே 87 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 25 புதிய விடுதிகள் துவங்கப்படும்.

சமுதாய நலக் கூடங்கள்: மாண்புமிகு உறுப்பினர் யசோதா அம்மா அவர்கள் சொன்னார்கள்; சமுதாய நலக் கூடங்களுக்கு இந்த நிதியாண்டு வெறும் 14 இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், கடந்த ஆண்டு 74 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது என்றும் கூறியிருந்தார்கள். இந்த ஆண்டு, தலைவர் கலைஞர் அவர்கள், இந்த 14 இலட்சத்தையும் சேர்த்து மேலும் புதிய 8 சமுதாய நலக் கூடங்கள் கட்டுவதற்கு 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தக் கல்வி ஆண்டில், பள்ளி மற்றும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்க்கு, மாண்புமிகு யசோதா அம்மா அவர்கள், உணவுக் கட்டணத்தை உயர்த்தித் தர வேண்டுமென்று கோரியிருந்தார்கள். தலைவர் கலைஞர் அவர்கள், பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் உணவுக் கட்டணத்தை மாதம் ஒன்றுக்கு 300 ரூபாயிலிருந்து 400 ரூபாயாகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்க்கு மாதம் ஒன்றுக்கு 400 ரூபாயிலிருந்து 500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் டில்லி பாபு அவர்கள், விடுதி வேண்டுமென்று கோரியிருந்தார்கள். தலைவர் கலைஞர் அவர்கள், இந்த ஆண்டு, 2 கோடி ரூபாய் செலவில் 5 பழங்குடியினர் விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய கட்டடங்கள் கட்ட ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது அரசுப் பழங்குடியினர் உண்டு உறைவிடத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் மற்றும் சமையலர்களுக்குக் குடியிருப்பு இல்லம் ஏதும் இல்லை. இதனால் ஆசிரியர்களும், அலுவலர்களும் பள்ளிக்கு அருகில் தங்க முடியாமல், எங்கோ தங்க வேண்டியுள்ளதால், மலைப் பகுதிகளில் வாழும் பழங்குடியின மாணவ, மாணவிகளின் கல்வி மேம்பாட்டைக் கருத்தில்கொண்டு, 2007-2008 ஆம் ஆண்டில், 50 அரசுப் பழங்குடியினர் உண்டு உறைவிடத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும்



சமையலர்கள் தங்குவதற்காக, வாடகையற்ற குடியிருப்பு இல்லங்கள், ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். 286 அரசுப் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் உடல் நலனை நன்கு பேணிக்காக்கும் வகையில், இப்பள்ளிகள் அனைத்திலும் 8 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய் செலவில், பாதுகாக்கப்பட்ட தூய்மையான குடிநீர் வழங்க வசதி செய்யப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசுப் பள்ளிகள், அரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில், 10 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெறும் 10 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியரைத் தேர்ந்தெடுத்து, தமிழகத்தில் உள்ள தலைசிறந்த மேல்நிலைப் பள்ளிகளில் அந்த மாணவ, மாணவிகளின் விருப்பப்படி, 11 ஆம் வகுப்பில் சேர்த்து சிறந்த முறையில் படித்திட, வழிவகை செய்யப்படும். அவர்களுக்கான கல்விக் கட்டணம் மற்றும் உறைவிடச் செலவு ஆகியவற்றை அரசே ஏற்கும். இத்திட்டத்திற்காக 2 ஆண்டுகளுக்கு ஒரு கோடியே 68 இலட்ச ரூபாய் தேவைப்படும். இதற்காக, நடப்பு நிதியாண்டில் 84 இலட்ச ரூபாய் செலவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-10

ஆதி திராவிட மக்கள் மேம்பாட்டுக்காக, பல்வேறு தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு தொழில்நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்குத் தேவையான கருவிகள் மற்றும் சாதனங்கள், ஒரு கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை—மாண்புமிகு உறுப்பினர் யசோதா அக்கா அவர்கள் கூறினார்கள். (குறுக்கீடு) அதாவது, அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள் என நான் சொல்கிறேன்—மொழித் திறனை வளர்க்கும்பொருட்டு, 30 ஆங்கில மொழி பயிற்றுவிக்கும் ஆய்வுக் கூடங்கள், 30 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்படும். (குறுக்கீடு) அவர்கள் கோரிக்கை விடுத்தார்கள், அதனால் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். 97 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில், 3 அரசு ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும். 97 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில், 3 அரசுப் பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு நலத் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்திடவும், அவற்றின் முன்னேற்றங்களை உடனுக்குடன் அரசுக்குத் தெரிவிக்கவும், தற்போது நேரடித் தொலைபேசி இணைப்பு வசதி இல்லாத, 17 மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகங்களுக்கு 5 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் செலவில் தொலைபேசி இணைப்பு வசதி செய்து கொடுக்கப்படும்.

தலைமைச் செயலகத்திலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு, 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் 5 கணினிகள் மற்றும் இதர துணை பாகங்கள் வழங்கப்படும்.

தாட்கோமூலமாக, 2006-2007 ஆம் நிதியாண்டில் இந்த அரசு பொறுப்பேற்றபின், முதன்முதலாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனில், சிறப்பு அக்கறை கொண்டுள்ள ஒரே தலைவர், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான், (மேசையைத் தட்டும் ஒலி) ரூபாய் 25 கோடியை, சிறப்பு மாநில நிதியுதவியாக வழங்கியுள்ளார்கள். அதேபோன்று, 2007-2008 ஆம் ஆண்டில், மாண்புமிகு முதல்வர் அவர்கள், சிறப்பு மாநில நிதியுதவியாக 25 கோடி ரூபாயினை ஒதுக்கியுள்ளார்கள். இத்தொகையிலிருந்து, தாட்கோமூலம், 2007-2008 ஆம் ஆண்டில் பின்வரும் பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்:

இந்த ஆண்டு, 100 ஆதி திராவிட மற்றும் பழங்குடியினப் பெண்களுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் மீண்டும் விமானப் பணிப் பெண் பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடப் பெண்களுக்குமட்டும், விமானப் பணிப் பெண் பயிற்சி அளிக்கப்படுவதால், ஆதி திராவிட இளைஞர்களுக்கும் ஏதேனும் செய்ய வேண்டுமென்று எண்ணிய தொலைநோக்கு கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள், 100 ஆண்களுக்கு, விமானத்திற்குள் Cabin crew பணி செய்யும் பயிற்சி, ஒரு கோடி ரூபாய் செலவில் அளிக்கப்படும் என்பதைப் பெருமிதத்தோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆண்டு, செவிலியர் கல்லூரிகளில் 125 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகளுக்கு 3 ஆண்டு செவிலியர் பட்டயப் படிப்பு, 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் தாட்கோமூலம் வழங்கப்படும். இது, ஏற்கெனவே உள்ள 19 சதவீத இட ஒதுக்கீடு இல்லாமல் தனியான சிறப்பு அனுமதியாகும். (மேசையைத் தட்டும் ஒலி)



3,500 பயனாளிகளுக்கு, உணவு தயாரித்தல், பதப்படுத்துதல், பரிமாறுதல் பயிற்சியும், 2,000 பயனாளிகளுக்கு, உதவி செவிலியர் பயிற்சியும், 2,000 பயனாளிகளுக்கு, கணினிப் பயிற்சியும், 2,000 பயனாளிகளுக்கு, சில்லறை விற்பனை மேலாண்மைப் பயிற்சியும், 10 கோடி ரூபாய் செலவில் அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கட்டுமானத் தொழிலில் உலகம் முழுவதும் அதிகப்படியான தொழிலாளர்கள் தேவையுள்ள காரணத்தால், தாட்கோமூலம் கொத்தனார், தச்சர், கம்பியாளர், குழாய்ப் பணியாளர், மின்கம்பியாளர், பற்ற வைப்பவர் போன்ற தொழிற் பயிற்சிகள், 2,000 நபர்களுக்கு 3 கோடியே 76 இலட்ச ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

தேசிய நிறுவனங்கள்மூலமாக, 1,000 நபர்களுக்குப் பின்னலாடை தயாரித்தல், பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல் மற்றும் தோல் பொருட்கள் தயாரித்தல் போன்ற தொழில்சார்ந்த பயிற்சிகள், 2 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

ஆங்கிலப் பயிற்சி—இந்த ஆண்டில் 5,000 மாணவர்களுக்கு, 2 கோடி ரூபாய் செலவில் ஆங்கிலம் சரளமாகப் பேசும் பயிற்சி அளிக்கப்படும்.

மேலும், உடனடி வேலைவாய்ப்புப் பெற, வாய்ப்புள்ள BPO Call Centre-ல் 1,000 நபர்களுக்கு 90 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சிகள் அளிக்கப்படும். மேலும் இந்த ஆண்டில் 500 நபர்களுக்கு, Medical transcription பயிற்சி 60 இலட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

ஆதி திராவிடர்கள் கடன் வாங்குவதற்கு வசதியாக, விளிம்புத் தொகைத் திட்டம் செயல்பட்டு வந்தது. ஆனால் கடந்த ஆட்சிக் காலத்தில், 2002-2003 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட அந்தந்தத் திட்டத்தை, தற்போது தலைவர் கலைஞர் அவர்கள், ஒரு வருடத்திற்கு 5 கோடி ரூபாய் செலவில் தாட்கோமூலம் மீண்டும் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பணிபுரியும் மகளிர் விடுதி: தாட்கோமூலம் வழங்கப்படும் பல்வேறு பயிற்சிகளில் வெளியூரிலிருந்து வந்து கலந்துகொள்ளும் மகளிரும், வேலை கிடைத்து சென்னைக்கு வரும் ஆதி திராவிட மகளிரும், சென்னையில் தங்கும்பொருட்டு, 'தாட்கோ பயிற்சி மகளிர் விடுதி', சென்னையில் 50 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பத்மாவதி அவர்கள்கூட, இதைக் கேட்டிருந்தார்கள். அது நிறைவேற்றித் தரப்படுகிறது.

பிற்பகல் 2-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக ஒன்றை இந்த மாமன்றத்தில் பதிவுசெய்ய ஆசைப்படுகின்றேன். நல்லவரும், நாடு போற்றும் வல்லவரும், இந்தியத் துணைக் கண்டத்தின் மூத்த அரசியல் வழிகாட்டியும், இன்று மட்டுமல்லாமல், அவர் தமிழகத்தை ஆளும் காலக் கட்டத்தில்தான் நாடுபோற்றும் நல்ல நிகழ்ச்சிகள் கொண்டாடப்படுகின்றன. இதனடிப்படையில் பார்க்கின்றபோது, நமக்கெல்லாம் ஓர் உண்மை தெரிகின்றது.

நான்கு கோடி தமிழ் மக்களின் ஒப்பற்ற முதல்வராகத் திகழ்ந்த காலத்தில், அவருடைய பொன்விழாவினை இந்த நாடே கொண்டாடி மகிழ்ந்தது. அந்தக் காலக் கட்டத்தில்தான் இந்தியத் திருநாட்டின் சுதந்திர வெள்ளி விழா ஆண்டும் அவர் ஆண்ட காலத்தில்தான் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாட்டில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், மூன்றாவது முறையாக முதல்வராகப் பணியாற்றியபோது, ஆதி திராவிட மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக அரும் பாடுபட்ட சுவாமி சகஜானந்தா அவர்களின் நூற்றாண்டு விழா, 1990 ஆம் ஆண்டு மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் வைர விழாவினைக் கொண்டாடிய காலத்தில்தான், இந்தியத் திருநாட்டின் சுதந்திரதினப் பொன் விழாவும், இந்தியா ஒரு மக்களாட்சிக் குடியரசு நாடாக மாறிய பொன் விழாவும் அப்போதுதான் கொண்டாடப்பட்டது.

இன்று, 6 கோடி மக்கள் இதயத்தில் வீற்றிருக்கும் மாண்புமிகு நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், சட்டமன்றத்தில் 50 ஆண்டுக் காலம் பணியாற்றியதைப் பெருமைப்படுத்தும் வகையில், பொன்விழா கொண்டாட, இம்மாமன்றத்தில் முடிவு செய்யப்பட்டுள்ள வேளையில், தென்னிந்தியாவில், முதல் பல்கலைக்கழகமாக விளங்கும் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு, 150-வது ஆண்டு விழா கொண்டாடப்படுகிறது. இதிலிருந்து நாமும் நம் மக்களும் அறிவது யாதெனில், நல்லவர்கள் ஆளும்போதுதான், நம் நாட்டில், நல் விழாக்கள் வரும் என்று சொன்னால், அது மிகையாகாது என்று கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மானியக் கோரிக்கை 4-ன்மீது மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் 316 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கைகளையும், வெட்டுத் தீர்மானங்களையும் படித்துப் பார்த்தேன். இந்த மானியக் கோரிக்கை தொடர்பாக, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய ஆலோசனைகளுக்கும், கருத்துருக்களுக்கும் வேண்டிய விளக்கம் அளித்துள்ளேன் எனக் கருதுகிறேன்.



உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களில் சுட்டிக்காட்டிய கருத்துகளையும், திட்டங்களையும் நன்கு பரிசீலனை செய்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரிய வகையில் நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்கள் அளித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்று, இம்மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமெனப் பணிவன்புடன் கேட்டுக்கொண்டு விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு சின்ன விளக்கம்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், மணி 2-18. விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 4 - ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. (குறுக்கீடு) வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் முன்அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை எண் 4-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.614,55,15,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.22,99,63,000/-ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19-04-2007) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-18 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

- ஏதுமில்லை -

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

87. மானியக் கோரிக்கை எண் 4 - ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

88. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு-செலவு செயலாக்கத் திட்டம், 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

89. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2007-2008.

90. கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007-2008. (தமிழ்)

91. உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007-2008. (தமிழ்)



## இணைப்பு

(354 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 4 — ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

*"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"*

—திருவள்ளுவர்

இக்குறள் நெறியின்படி, தமிழ்நாட்டில் வாழும் அனைத்துப் பிரிவினரும் சமுதாயத்தில் எவ்விதப் பாகுபாடுமின்றி ஒன்றுபட்டு அனைத்து வளங்களையும் பெற்று சமமாக வாழவேண்டுமென்பதே இவ்வரசின் தலையாயக் கொள்கையாகும். 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 62406 இலட்சத்தில், 118.58 இலட்சம் (19%) ஆதி திராவிடரும், 6.51 இலட்சம் (1.04%) பழங்குடியினரும் ஆவர். இச்சமுதாய மக்கள் கல்வி மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள நிலையை இவ்வரசு முற்றிலும் உணர்ந்துள்ளது. ஆதி திராவிட மக்களின் எழுத்தறிவு விகிதம் 63.19% ஆகவும், பழங்குடியினரது எழுத்தறிவு விகிதம் 41.53% ஆகவும் உள்ளது. இது மாநிலத்தின் பொது எழுத்தறிவு விகிதமான 73.45% உடன் ஒப்பிடுகையில் குறைவானதாகும். இதற்குக் காரணம், பொருளாதார நலிவும், தரமான கல்வியின்மையும், சமூக ஏற்றத் தாழ்வுகளும்தான். இந்த நிலையை மாற்றியமைத்திட, இவ்வரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வறுமையை வேரோடு அழிப்பதைக் கொள்கையாகக் கொண்டுள்ளது.

கல்வி ஒரு வற்றாத செல்வம். இது தனி மனிதனின் வாழ்க்கையை வளம் பெறச் செய்யவும், அவன் சார்ந்த சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகிறது. சமுதாயத்தில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களின் அறியாமையை நீக்கும் வகையில், இம்மக்களுக்குக் கல்வி புகட்டுவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களின் குழந்தைகள் அனைவரும் பள்ளிகளில் சேர்ந்து கல்வி அறிவைப் பெற்றால்தான் இவர்களும் மற்றவர்களைப்போல முன்னேற்ற நிலையை அடைய

இயலும். எனவே, இவர்களுக்குக் கல்வி நிறுவனங்களில் தரமான அடிப்படை வசதிகளை உருவாக்குதல், இவர்கள் வசிக்கும் இடங்களில் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருதல் மற்றும் இவ்வின மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, தேவையான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்றவற்றால் மட்டுமே இவர்களும் இதர சமுதாய மக்கள் அடையும் வளர்ச்சிக்கு இணையான வளர்ச்சியை எய்த இயலும்.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வி, உயர்நிலைக் கல்வி, பட்டப் படிப்பு, முதுகலைப் பட்டப் படிப்பு ஆகியவற்றில் வழங்கப்படும் பல்வேறு சலுகைகள் குறித்தும், இச்சமுதாய மக்களின் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்கள் குறித்தும் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

## 1. ஆதி திராவிடர் நலன்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் மொத்தப் பள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு:

| பள்ளிகளின் வகைப்பாடு | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் | 1,053 | 2,07,706 |
| அரசுப் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகள் | 286 | 36,563 |
| மொத்தம் | 1,339 | 2,44,269 |

### கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள்

2007-08 ஆம் ஆண்டில் இத்துறைக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ரூ.641.54 கோடியில், ரூ.492.09 கோடி அதாவது 77% நிதி, கல்வி சார்ந்த திட்டங்களுக்காகவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### கல்விக் கட்டணச் சலுகைகள்

### 1. கற்பிப்புக் கட்டணச் சலுகை

கல்வியின் மூலம்தான் சமூகப் பொருளாதார மாற்றத்தை உருவாக்க முடியும் என்பதை உணர்ந்த இந்த அரசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அனைவருக்கும் கல்வி புகட்ட வேண்டியதைத்



தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனைச் செயல்படுத்த, அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ மாணவியர் வருமான வரம்பின்றி கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளனர். இக்கல்விச் சலுகை இளங்கலை பட்டப் படிப்பு முதல் மேற்படிப்புப் பயிலும் மாணவ/மாணவிகளுக்கு வழங்கப்படுகிறது. இதற்காக 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.254.97 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 2,515 மாணவ/மாணவியர் பயனடைந்துள்ளனர்.

நடப்பு நிதியாண்டில், இத்திட்டம் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும்:—

| நிதி ஆண்டு | நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) | பயனாளர்களின் எண்ணிக்கை (தோராயமாக) |
|---|---|---|
| 2007–2008 | 215.82 | 2,500 |

### 2. இளங்கலை பட்டப் படிப்பு பயிலும் மாணவ/மாணவிகளுக்குச் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்

மத்திய அரசு அல்லது மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெற மாணவ, மாணவியரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் முறையே ரூ.1,00,000/- மற்றும் ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இந்த வருமான வரம்பிற்கு மேற்பட்ட இளங்கலை பட்டப் படிப்புப் பயிலும் மாணவ, மாணவிகளுக்குச் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. இதற்காக 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 5,984 மாணவ/மாணவியர் பயனடைந்துள்ளனர்.

நடப்பு நிதியாண்டில் இத்திட்டம் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும்:-

| நிதி ஆண்டு | நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) | பயனாளர்களின் எண்ணிக்கை (தோராயமாக) |
|---|---|---|
| 2007–2008 | 90.00 | 6,000 |

### 3. முதுகலைப் பட்டம் படிக்கும் மாணவிகளுக்குச் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்

மத்திய அரசு மற்றும் மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைக்கு நிர்ணயிக்கப்பட்ட வருமான வரம்பிற்கு மேற்பட்ட முதுகலைப் பட்டப் படிப்பு படிக்கும் மாணவிகளுக்கு மட்டும் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. இதற்காக 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,035 மாணவியர் பயனடைந்துள்ளனர்.

நடப்பு நிதியாண்டில், இத்திட்டம் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும்:—

| நிதி ஆண்டு | நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) | பயனாளர்களின் எண்ணிக்கை (தோராயமாக) |
|---|---|---|
| 2007–2008 | 50.00 | 1,035 |

### 4. 10 ஆம் வகுப்பு வரை படிப்பிற்கான (Pre-matric) சிறப்புக் கட்டணச் சலுகை

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ/மாணவிகள் தங்கள் கல்வியில் இடைநிற்றலின்றி தொடர்ந்து பயில்வதற்கு ஏதுவாக பல்வேறு உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் அனைத்து ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ/மாணவியர் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றனர். இதன் பொருட்டு ஏற்படும் செலவினம் அந்தந்தக் கல்வி நிறுவனங்களுக்கு இத்துறைமூலம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.527.47 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5. பொதுத் தேர்வுக் கட்டணச் சலுகைகள்

10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ/மாணவியர் அனைவரும் வருமான வரம்பின்றி தேர்வுக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர். இதற்கான செலவினத் தொகை முழுவதும் இத்துறையால், அரசுத் தேர்வுகள் துறைக்கு



வழங்கப்படுகிறது. இதற்கென 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.420.48 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6. கல்வி உதவித் தொகைத் திட்டங்கள்

#### (அ) துப்புரவுத் தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கு 10 ஆம் வகுப்பு வரை படிப்பிற்கான (Pre-matric) உதவித் தொகைத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் துப்புரவுத் தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கு அவர்களது சாதி, மதம் மற்றும் வருமான வரம்பினைக் கணக்கில் கொள்ளாமல் உதவித் தொகை வழங்கப்படுகிறது. விடுதியில் தங்காது பயிலும் மாணவ/மாணவியருக்கு மாதம் ஒன்றிற்கு 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை ரூ.40/-ம். 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை ரூ.60/-ம் 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பிற்கு ரூ.75/-ம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. விடுதியில் தங்கிப் பயில்வோருக்கு 3 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரையில் மாதம் ரூ.300/-ம், 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயில்வோருக்கு மாதம் ரூ.375/-ம் வழங்கப்படுகிறது. இதுவன்றி தனி மானியமாக விடுதியில் தங்காது பயிலும் மாணவ/ மாணவிகளுக்கு ஆண்டுக்கு ரூ.550/-ம் விடுதியில் தங்கிப் பயில்வோருக்கு ரூ.600/-ம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.599.09 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 46,012 மாணவ/மாணவியர் பயனடைந்துள்ளனர்.

நடப்பு நிதியாண்டில் இத்திட்டம் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும்:—

| நிதி ஆண்டு | நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|
| 2007–2008 | 298.52 |

#### (ஆ) 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான (Post-matric) உதவித் தொகைத் திட்டம்

மைய அரசு திட்டத்தின்கீழ் 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பு பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியருக்கு அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருப்பின், குறிப்பேடுகள் வாங்குதல் போன்ற கட்டாயச் செலவுகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கட்டாயக் கட்டணங்கள் ஆகியவற்றை ஈடுசெய்ய

அதிகபட்சமாக மாதம் ஒன்றிற்கு ரூ.330/- வரை அவர்கள் பயிலும் படிப்புக்கு ஏற்றவாறு வழங்கப்படுகிறது. இவர்கள் விடுதியில் தங்கி, கல்விப் பயில்பவராக இருப்பின், இத்தொகை அவர்கள் பயிலும் படிப்புக்கு ஏற்றவாறு அதிகபட்சமாக மாதம் ஒன்றிற்கு ரூ.740/- வரை பராமரிப்புப் படியாக வழங்கப்படுகிறது. இதுவன்றி மாணவ மாணவிகளால் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டாயக் கட்டணங்கள் அக்கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கென 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.11,616.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், பாலிடெக்னிக், சட்டம், வணிக நிருவாக முதுகலைப் பட்டம், பட்டயக் கணக்கியல், உயிர் அறிவியல் மற்றும் இதர தொழில்நுட்பம் சார்ந்த படிப்பினை மேற்கொள்ளும் மாணவ மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காக, புத்தக வங்கித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் புத்தக வங்கிமூலம் ரூ.2,100/- முதல் ரூ.7,500/- வரை மதிப்பிலான புத்தகங்கள் மாணவ/மாணவிகளுக்குப் பயன்படும் வகையில் வழங்கப்படுகின்றன.

### (இ) 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான (Post-matric) மாநில சிறப்பு உதவித் தொகைத் திட்டம்

மைய அரசின் கல்வி உதவித் தொகை பெற இயலாத கிறுத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ/மாணவியருக்கு அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருப்பின் 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்காக (Post -matric) சிறப்பு உதவித் தொகை திட்டத்தை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. இதன்படி விடுதியில் தங்காது 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பு பயிலும் மாணவ/மாணவியருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.65/- முதல் ரூ.125/- வரையில் பராமரிப்புப் படி மற்றும் கட்டாயக் கட்டணங்களுக்காக படிப்புக்கு ஏற்றவாறு வழங்கப்படுகிறது. இதுவே விடுதியில் தங்கி, கல்விப் பயில்பவராக இருப்பின், மாதம் ஒன்றிற்கு ரூ.115/- முதல் ரூ.280/- வரையில் படிப்பிற்கு ஏற்றவாறு இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

மேலும், இவ்வுதவித் திட்டத்தின்கீழ், தொழிற் பயிற்சி மற்றும் இதர பயிற்சிகள் பெற 10 ஆம் வகுப்பு தேர்ச்சி தேவையில்லாத இனங்களும் போஸ்ட் மெட்ரிக் படிப்பு எனக் கருதப்பட்டு, அதற்குரிய உதவித் தொகை வழங்கப்படுகிறது.



மைய அரசு மற்றும் மாநில அரசின் இக்கல்வி உதவித் தொகைகள் அந்தந்தக் கல்வி நிறுவனத் தலைவர்கள்மூலமாக மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 436.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 7. உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை

கல்விக் கடன் உதவித் தொகைத் திட்டம் மானியமாக மாற்றப்பட்டு "உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை" என வழங்கப்பட்டு வருகிறது. இவ்வுதவித் தொகைக்குத் தகுதி பெற மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். இத்திட்டத்தின்கீழ் மாணவ/மாணவிகளுக்கு இளங்கலைப் பட்டப் படிப்பிற்காக ஆண்டொன்றுக்கு ரூ.6,500/-ம், முதுகலை பட்டப் படிப்பு மற்றும் தொழிற்கல்வி படிப்பிற்காக ஆண்டொன்றுக்கு ரூ.7,000/-ம் வழங்கப்படுகிறது. மேற்படி உதவித் தொகை, மருத்துவப் படிப்புப் பயிலும் மாணவ/மாணவிகளைப் பொறுத்த வரை ஆண்டொன்றுக்கு ரூ.7,000/- ஆகும். இதில் 75% தொகை மானியமாகவும், 25% தொகை கடனாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.1,029.50 இலட்சம் செலவிடப்பட்டு 12,372 மாணவ/மாணவியர் பயனடைந்துள்ளனர்.

நடப்பு நிதியாண்டில், இத்திட்டம் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும்:—

| நிதி ஆண்டு | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) | பயனாளர்களின் எண்ணிக்கை (தோராயமாக.) |
|---|---|---|
| 2007–2008 | 1,029.50 | 12,400 |

### 8. வெளிநாடு சென்று பயில உதவித் தொகை

சமீப காலங்களில் ஆராய்ச்சி மற்றும் முதுகலைப் பட்டப் படிப்பு நிலையில், குறிப்பாக பொறியியல், தொழில்நுட்பவியல் மற்றும் அறிவியல் போன்ற துறைகளில் வெளிநாடு சென்று மேற்படிப்பைத் தொடர இளைஞர்கள் விரும்புகின்றனர். அவர்களது விருப்பத்தினை நிறைவேற்றும் வகையில் இந்த உதவித் தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் பயன்பெற விரும்பும் பணியிலுள்ள மாணவ மாணவியர் அல்லது அவரின் பெற்றோர்/பாதுகாவலரின் மாத வருமானம் ரூ.12,000-க்கு மிகாமலிருக்க வேண்டும்

என்ற நிபந்தனையோடு இந்த நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.13.11 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9. பெண் கல்வி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டம்

*"பெண் களறிவை வளர்த்தால்– வையம்*
*பேதைமை யற்றிடுங் காணீர்"*

–மகாகவி பாரதியார்

பெண் கல்வி என்பது சமத்துவம் மற்றும் சமூக நீதியில் ஒரு சிறப்பான அங்கமாகும். பெண்கள் தற்போது வானத்தை அளப்போம் என்று பீடு நடை போடும் அளவுக்கு, பெண் கல்வியில் இவ்வரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதன்படி ஆதி திராவிட மற்றும் பழங்குடியினப் பெண் குழந்தைகளின் பள்ளிச் சேர்க்கையை 100% ஆக உறுதிப்படுத்திடும் நோக்கத்தோடு பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையில் கல்விப் பயிலும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியினப் பெண் குழந்தைகள் 60,000 பேருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50 வீதம் 10 மாதங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம் ஆதி திராவிட மாணவிகளைப் பொறுத்த வரையில் கல்வியில் பின் தங்கியுள்ள மாவட்டங்களான தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், விருதுநகர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், சேலம், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் வழங்கப்படுகிறது. பழங்குடியின மாணவிகளைப் பொறுத்தவரையில் சென்னையைத் தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 6 ஆம் வகுப்பில் சேர்ந்து கல்விப் பயிலும் மாணவியர் கல்வியைத் தொடர ஊக்குவிக்கும் வகையில் 30,000 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 வீதம் 10 மாதங்களுக்கு சென்னையைத் தவிர, மற்ற அனைத்து மாவட்டங்களிலும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.600 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தை 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த ரூ.600 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 10. சிறந்த மாணவ/மாணவியருக்குப் பரிசுத் தொகைகள் (மாநில அளவில்)

அரசுத் தேர்வுகளில் மாணவ/மாணவியர் அதிக மதிப்பெண்கள் பெற்று உயர்கல்விப் பயில்வதற்கு அவர்களை ஊக்குவிக்க பல்வேறு பரிசுத் தொகைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ/மாணவிகளுக்கு மாநில அளவில் பொதுப் பரிசுகள் கீழ்க்கண்ட வாறு வழங்கப்படுகின்றன:—

| | | |
|---|---|---|
| 1 | பன்னிரண்டாம் வகுப்பு | பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வில் மாநில அளவில் முதலாவதாக வரும் ஆதி திராவிடர், பழங்குடியினர், கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப் பரிசு ரூ.25,000 வீதம். |
| 2 | பத்தாம் வகுப்பு | பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலாவதாக வரும் ஆதி திராவிடர், பழங்குடியினர், கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப் பரிசு ரூ.10,000 வீதம். |
| 3 | பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு மாநில அளவில் (25 பாடங்கள்) | பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் ஒவ்வொரு பாடத்திலும் (25 பாடங்கள்) முதல் மதிப்பெண் பெற்ற ஆதி திராவிடர், பழங்குடியினர், கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவிக்குப் பரிசு ரூ.2,000 வீதம். |
| 4 | பத்தாம் வகுப்புத் தேர்வில் மாநில அளவில் (ஐந்து பாடங்கள்) | பத்தாம் வகுப்பு தேர்வில் மாநில அளவில் ஒவ்வொரு பாடத்திலும் (5 பாடங்கள்) முதல் மதிப்பெண் பெற்ற ஆதி திராவிடர், பழங்குடியினர், கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவிக்குப் பரிசு ரூ.1,000 வீதம். |

இத்திட்டத்திற்கென 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.3.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 11. சிறந்த மாணவ/மாணவியருக்குப் பரிசுத் தொகைகள் (மாவட்ட அளவில்)

மாவட்ட அளவில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ/மாணவிகளுக்குப் பொதுப் பரிசுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:—

| | | |
|---|---|---|
| 1 | பன்னிரண்டாம் வகுப்பு | ஆதி திராவிடர், பழங்குடியினர், கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப் பரிசு ரூ.3,000 வீதம். |
| 2 | பத்தாம் வகுப்பு (3 பரிசுகள்) | |
| | முதல் பரிசு | ஆதி திராவிடர், பழங்குடியினர், கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப் பரிசு ரூ.1,000 வீதம். |
| | இரண்டாம் பரிசு | ஆதி திராவிடர், பழங்குடியினர், கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப் பரிசு ரூ.500 வீதம். |
| | மூன்றாம் பரிசு | ஆதி திராவிடர், பழங்குடியினர், கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப் பரிசு ரூ.300 வீதம். |

இத்திட்டத்திற்கென 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.3.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 12. முதலமைச்சரின் தகுதிப் பரிசுகள்

பன்னிரண்டாம் வகுப்பு என்பது ஒவ்வொரு மாணவ, மாணவியர் வாழ்விலும் முக்கியமான காலக் கட்டமாகும். இத்தேர்வில் அதிகமாக மதிப்பெண் பெறும் மாணவ/மாணவியர் மேற்படிப்பில் வருங்கால வாய்ப்புள்ள பாடத்தைத் தேர்ந்தெடுத்து நல்ல எதிர்காலத்தை அமைக்க முடியும். இதனை ஊக்குவிக்க பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்களில் முதல்





ஆயிரம் பேருக்கும், மாணவிகளில் முதல் ஆயிரம் பேருக்கும் அவர்கள் மேற்படிப்பினைத் தொடர்கிறவர்களாய் இருப்பின், ஆண்டுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.1,500 வீதம் ஐந்து ஆண்டுகளுக்குத் தகுதிப் பரிசு வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 64.89 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 3,370 மாணவ/மாணவியர் பயன் பெற்றுள்ளனர். 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.64.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 13. அண்ணல் காந்தி நினைவுப் பரிசுத் தொகை

பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மதிப்பெண்கள் பெறும் இந்து ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு அண்ணல் காந்தியடிகளின் நினைவாக இப் பரிசுத் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த பரிசுத் தொகை முதல் வருடத்திற்கு ரூ.1,500 வீதமும், அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,000 வீதமும் வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் 154 மாணவ/மாணவியர் பயன்பெறும் வகையில் ரூ.3.31 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில், இத்திட்டம் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும்:—

| நிதி ஆண்டு | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) | பயனாளர்களின் எண்ணிக்கை (தோராயமாக) |
|---|---|---|
| 2007–2008 | 3.34 | 154 |

### 14. தகுதி வழிவகை பரிசுத் தொகை

அண்ணல் காந்தி நினைவு பரிசுத் தொகை வழங்கப்படுவதுபோல் ஒவ்வொரு மாவட்டத்திலும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவர் மற்றும் மாணவி ஒருவருக்கும், பழங்குடியின மாணவர் மற்றும் மாணவி ஒருவருக்கும் இவ்வகை பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2006-2007 ஆம் ஆண்டில் ரூ.0.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 82 மாணவ/மாணவியர் பயனடைந்துள்ளனர். 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ.0.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15. சிறப்புப் பரிசுத் தொகைத் திட்டம்

பரிசு கொடுப்பதும், பாராட்டு அளிப்பதும் மாணவ/மாணவியரின் செயல்திறனில் மிகப் பெரிய அளவில் தூண்டுதலை ஏற்படுத்தும். இதன் மூலம் அவர்கள் நன்கு படித்து, எளிதாக வேலை வாய்ப்பினைப் பெற இயலும். எனவே மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பட்டப் படிப்பு, முதுகலை பட்டப் படிப்பு, தொழிற்கல்வி படிப்புகளில் 60% மற்றும் அதற்குமேல் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்ற ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்குப் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி பரிசுத்தொகையாக ரூ.2,000 முதல் ரூ.5,000 வரையில் மொத்தம் 550 மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ.18.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16. சிறந்த மாணவருக்கான ஊக்கத் தொகை

பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் மதிப்பெண் பெறும் பொருட்டும், அவர்களது படிப்பினைத் தொடரும் பொருட்டும் இந்த ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆதி திராவிடர், பழங்குடியினர், கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு முதல் ஆண்டுக்கு ரூ.800-ம், அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஓராண்டிற்கு ரூ.960 வீதமும் அவர்கள் படிப்பினைத் தொடர்ந்தால் மட்டும் ஆறு ஆண்டுகளுக்கு வழங்கப்படும். 2006-2007 ஆம் ஆண்டில் 454 மாணவ/மாணவியர் பயன்பெறும் வகையில் ரூ.8.16 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில், இத்திட்டம் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும்:—

| நிதி ஆண்டு | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) | பயனாளர்களின் எண்ணிக்கை (தோராயமாக) |
|---|---|---|
| 2007–2008 | 8.16 | 454 |



## 17. இலவச சிலேட்டுகள் வழங்குதல்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைப் பள்ளிகளில் பயிலும் மூன்றாம் வகுப்பு மாணவ, மாணவியர்க்கு பிளாஸ்டிக் சட்டத்திலான சிலேட்டுகள் இலவசமாக ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. இதற்காக 2006-2007 ஆம் ஆண்டிற்கு இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் நிதியிலிருந்து ரூ. 2.65 இலட்சம் செலவிடப்பட்டதன் மூலம் 27,135 மாணவ/மாணவியர் பயனடைந்துள்ளனர்.

## 18. இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம்

பெற்றோர்களின் நிதிச் சுமையைக் கருத்தில் கொண்டும், அனைத்து மாணவர்களுக்கும் கல்விப் புகட்ட வேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொண்டும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ/மாணவிகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களும், 3 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு இலவசமாகக் குறிப்பேடுகளும் வழங்கப்படுகின்றன. பள்ளிக் கல்வித் துறைப் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ/மாணவிகளைப் பொறுத்தமட்டில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவிகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களும், 4 ஆம் வகுப்பு முதல் 10 வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவிகளுக்கு இலவசமாகக் குறிப்பேடுகளும் வழங்கப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு இதற்கென ரூ. 500 இலட்சம் நிதி ஒதுக்கீடும், பொதுப் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ/மாணவியர்க்கு ரூ.1,819.88 இலட்சம் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

## 19. இலவச சீருடைகள் வழங்கும் திட்டம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைப் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் மற்றும் ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் அனைத்து மாணவ/மாணவிகளுக்கும் ஆண்டொன்றுக்கு இரண்டு ஜோடி சீருடைகள் தைப்பதற்கான துணி இலவசமாக வழங்கப்படுகின்றது. முன்னர், பருத்தி மற்றும் பாலியஸ்டர் இணைந்த

[2007 ஏப்ரல் 18

தைக்கப்பட்ட சீருடைகள் விநியோகிக்கப்பட்டு வந்தன. தற்பொழுது மாணவ, மாணவிகள் தங்கள் அளவுக்கேற்ப தைத்துக்கொள்ளும் விதத்தில் துணிகள் மற்றும் தையற்கூலி மாணவ/மாணவிகளுக்கு வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் கல்வியாண்டு முதல் மாணவி/மாணவிகளுக்கு வழங்கப்படும் சீருடைகளின் வடிவமைப்பில் மாறுதல் செய்து 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்குச் சுடிதாரும், 8 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முழுக்கால் சட்டையும் (Full pant) வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் சீருடைகள் வழங்குவதற்கென ரூ.970 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுமார் 3,45,000 மாணவ/மாணவியர் பயன்பெற்றுள்ளனர்.

நடப்பு நிதியாண்டில் இத்திட்டம் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும்.

| நிதி ஆண்டு | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) | பயனாளர்களின் எண்ணிக்கை (தோராயமாக) |
|---|---|---|
| 2007–2008 | 970.00 | 3,45,000 |

## 20. பள்ளிகளுக்கும், விடுதிகளுக்கும் இலவசமாகப் பொது அறிவுப் பத்திரிகைகள் வழங்கும் திட்டம்

இந்திய ஆட்சிப் பணி மற்றும் அரசு உயர் பணிகளுக்கான தேர்வுகளுக்குத் தயார் செய்ய உதவும் பொருட்டு, மாணவர்களின் பொது அறிவை வளர்க்கும் நோக்கத்தைக் கருத்தில்கொண்டு, "Competitive Success Review" போன்ற பொது அறிவுப் பத்திரிகைகளை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் அனைத்து உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளுக்கும், விடுதிகளுக்கும் முதல் முறையாக 2006-2007 ஆம் ஆண்டு முதல் வழங்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்திற்கென 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.6.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 21. இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

அரசு/அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் +1 மற்றும் +2 மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் +1 மற்றும் +2 வகுப்புகளில் பயிலும் மாணவ/மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.



2007 ஏப்ரல் 18]

2006-2007 ஆம் ஆண்டில் ரூ.1,361.95 இலட்சம் செலவில் 65,609 ஆதி திராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய கிருத்துவ ஆதி திராவிட/பழங்குடியின மாணவர்களுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 2007-2008 ஆம் ஆண்டில் இலவச மிதிவண்டிகள் வழங்க, மாணவிகளுக்கு ரூ.1,351.55 இலட்சமும், மாணவர்களுக்கு ரூ.1,264.52 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 22. உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி

ஒவ்வொருவருடைய அன்றாட வாழ்க்கையிலும் கணினி ஒரு முக்கியப் பங்கு ஆற்றுகிறது. இதற்காகக் கணினி அறிவியலில் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் கணிப்பொறி அறிவியல் பாடப் பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன. 2006 ஆம் ஆண்டில் கணிப்பொறி அறிவியலில் பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ/மாணவிகளின் தேர்ச்சி 93% ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## 23. விடுதிகள்

கிராமப் பகுதிகளில் உள்ள ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்கள் தங்கள் படிப்பில் கவனம் செலுத்தும்பொருட்டும், அவர்கள் படிப்பினைத் தொடரும்பொருட்டும் அவர்களை ஊக்கப்படுத்த விடுதி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் விடுதிகளின் விவரம்:—

| விடுதிகளின் வகைப்பாடு | விடுதிகளின் எண்ணிக்கை | விடுதி மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கை | அரசுக் கட்டடத்தில் இயங்கும் விடுதிகள் | வாடகைக் கட்டடத்தில் இயங்கும் விடுதிகள் |
|---|---|---|---|---|
| ஆதி திராவிடர் நல விடுதிகள் | 1,178 | 81,336 | 998 | 180 |
| பழங்குடியினர் நல விடுதிகள் | 37 | 1,982 | 27 | 10 |
| மொத்தம் | 1,215 | 83,318 | 1,025 | 190 |

இத்துறையினால் நடத்தப்படும் விடுதிகளை நன்கு பராமரிக்கும் பொருட்டு சிறப்புப் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 2006-07 ஆம் ஆண்டில் ரூ.9.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2006-2007 ஆம் ஆண்டு முதல் திருவாரூரில் ஆதி திராவிடர் நலப் பள்ளி மாணவிகள் 50 பேர் தங்கிப் பயில்வதற்கு ஒரு புதிய ஆதி திராவிடர் நல விடுதி துவக்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

2006-2007 ஆம் ஆண்டு முதல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை விடுதிகளில் கூடுதலாக 1,000 இடங்களை ஏற்படுத்துவதற்காக அரசு ஆணையிட்டுள்ளது.

2006-2007 ஆம் ஆண்டு முதல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவிகளுக்கு எண்ணெய், சோப்பு போன்ற பல்வகைச் செலவினத்திற்கு மாதம் ஒன்றுக்கு கீழ்க்கண்டவாறு உயர்த்திய தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது:—

| | |
|---|---|
| பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர் | ரூ.15/—லிருந்து ரூ.25/— ஆக உயர்த்தப்பட்டுள்ளது. |
| கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர் | ரூ.15/—லிருந்து ரூ.35/— ஆக உயர்த்தப்பட்டுள்ளது. |
| முதுகலை பட்டதாரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர் | ரூ.25/—லிருந்து ரூ.35/— ஆக உயர்த்தப்படுள்ளது. |

### 24. இடைநிலை ஆசிரியர்கள் அனைவருக்கும் பணியிடைப் பயிற்சி

ஆசிரியர்களின் கல்வி மற்றும் கற்பிக்கும் திறனை மேம்படுத்துவது முக்கியமானதாகும். இதற்காக "அனைவருக்கும் கல்வி" என்ற "சர்வ சிக்ஷா அபியான்" திட்டத்தின்மூலம் பள்ளிக் கல்வித் துறையுடன் சேர்ந்து செயலாற்ற இத்துறை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் தரமும், வசதிகளும் உயர்வடையும், "அனைவருக்கும் கல்வி" எனும் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள் அனைவருக்கும் பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், ஒலி-ஒளி துணைக் கலங்கள் பயன்படுத்திப் பாடம் கற்பிக்கும் வகையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி மூலம் ஆசிரியர்களின் கல்வி மற்றும் கற்பிக்கும் திறன் வளர்ச்சி அடைவதுடன் மாணவர்களும் பயனடைகிறார்கள்.





### 25. இட ஒதுக்கீடு

இட ஒதுக்கீட்டு முறையை சீரிய முறையில் நடைமுறைப்படுத்தி வருவதன்மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்குரிய அதிகாரம் கிடைக்க வழி வகுக்கிறது. இதன்மூலம் அவர்களுக்குரிய சமூக நீதியும் கிடைக்கிறது. எனவே, இட ஒதுக்கீட்டுப் பயன்கள் அம்மக்களுக்குச் சென்றடைய இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. அரசுப் பணியாளர் தேர்வு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஆகியவற்றின்மூலம் மேற்கொள்ளப்படும் நேரடி நியமனங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சட்டப்படியான 18% மற்றும் 1% இட ஒதுக்கீட்டின்படியே ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். இந்த இட ஒதுக்கீட்டின்படி தகுதி வாய்ந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பணி நாடுநர்கள் போதிய அளவில் கிடைக்கப் பெறாத பட்சத்தில் அவர்களுக்கான அந்தப் பணியிடங்கள் பின்னடைவு காலிப் பணியிடங்களாக அறிவிக்கப்பட்டு, அடுத்து வருகின்ற தேர்வுகள் அல்லது சிறப்புத் தேர்வுகள்மூலம் நிரப்பப்படுகின்றன.

சட்டப்படியான 18% மற்றும் 1% குறைவு ஏற்படுகின்ற இடங்களில் நுழைவு நிலையில் நேரடி நியமனம் செய்யவும் மற்றும் பணி மாறுதல் மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைக் கொண்டு நிரப்புவதற்கும், தேவைப்பட்டால் இந்தப் பணியிடங்களுக்குரிய விதிமுறைகளை மாற்றி திருத்தங்கள் கொண்டு வந்து அதன்படி நியமனம் செய்வதற்கும் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனை ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அவ்வப்போது ஆய்வு செய்து வருகிறது.

### 26. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

#### (அ) ஆதி திராவிடர் துணைத் திட்டம் (முன்பு சிறப்பு உள்ளடக்கத் திட்டம் என்று அழைக்கப்பட்டது)

பல்வேறு திட்டங்கள் மூலம் ஆதி திராவிட மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என அரசு கருதுகிறது. இதற்கேற்ப, ஆண்டு திட்ட நிதியில் மக்கள் தொகைக்கேற்ப நிதி ஒதுக்கப்பட வேண்டுமென மைய அரசு அறிவுறுத்தியுள்ளது. இத்திட்டமானது 21 செயலாக்கத் துறைகள்மூலம் செயல்படுத்தப்படுகிறது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து ஆதி திராவிடர் துணைத் திட்டமானது, பகுக்கக்கூடிய

(divisible) மற்றும் பகுக்க இயலாத (indivisible) திட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு துறையிலும், ஒருங்கிணைக்கும் அலுவலர் (Nodal Officer) நியமனம் செய்யப்பட்டு, இத்திட்டங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

2007-2008 ஆம் ஆண்டில் மொத்த திட்ட நிதி ஒதுக்கீடான ரூ.14,000/- கோடியில் பகுக்கக்கூடிய திட்டங்களின்கீழ் திட்ட வரவு-செலவு இணைப்பு புத்தகத்தின்படி (Plan-Budget Link Book) ஆதி திராவிடர்களுக்கான துணைத் தலைப்பு 789-ன்கீழ் ரூ.1,638.19 கோடி ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பகுக்க இயலாத திட்டத்தின்கீழ் ரூ.1,021.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. இத்திட்டத்திற்கென மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.2,660 கோடியாக 2007-2008 ஆம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட உள்ளது.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2002-2003 முதல் 2006-2007 (டிசம்பர் 2006) வரையிலான ஆதிதிராவிடர் துணைத் திட்டத்தின் செலவின விவரங்கள் பின்வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு | திட்டமிடப்பட்ட ஆதி திராவிடர் துணைத் திட்ட (முன்பு சிறப்பு உள்ளடக்கத் திட்டம்) ஒதுக்கீடு | செலவினம் | | | திட்டமிடப்பட்ட ஆதி திராவிடர்துணைத் திட்ட ஒதுக்கீட்டுடன் செலவின விழுக்காடு | மாநில ஆண்டு திட்ட ஒதுக்கீட்டுடன் செலவின விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பகுக்கக்கூடிய இனம் | பகுக்க இயலாத இனம் | மொத்தம் | | |
| 2002-03 | 575152.96 | 110373.55 | 40209.13 | 79069.95 | 119279.08 | 108.07% | 20.74% |
| 2003-04 | 700013.16 | 135370.65 | 61388.49 | 100125.28 | 161513.77 | 119.31% | 23.07% |
| 2004-05 | 800108.10 | 154343.79 | 59955.43 | 98766.25 | 158721.68 | 102.84% | 19.84% |
| 2005-06 | 910000.00 | 210455.00 | 55481.74 | 118203.08 | 173684.82 | 82.53% | 19.09% |
| 2006-07 (டிசம்பர் 2006 முடிய) | 1250000.00 | 311785.43 | 72004.07 | 50480.93 | 122485.00 | 39.29% | 9.80% |





**(ஆ) இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்**

பெரும்பாலான ஆதி திராவிட, பழங்குடியின மக்கள் பொருளாதார நலிவின் காரணமாக வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்றனர். அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் அடிப்படை வசதியுடன் கொடுத்தால் அவர்களுக்கு சமூக அந்தஸ்து உயரும் என்பதை உணர்ந்த அரசு, அடிப்படை வசதியோடு கூடிய வீட்டுமனை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

நடப்பு நிதியாண்டில், இத்திட்டம் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும்:—

| நிதி ஆண்டு | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 2007–2008 | 1,155.89 |

**27. சமூக மேம்பாட்டுத் திட்டங்கள்**

**(அ) சமுதாயக் கூடங்கள்**

பல்வேறு சமூக நிகழ்ச்சிகள், குறிப்பாக சமுதாய விழாக்கள், கூட்டங்கள் மற்றும் திருமணங்கள் நடத்துவதற்கும், சமுதாயக் கூடங்கள் தேவைப்படுகின்றன. இதனைக் கருத்தில்கொண்டு ஆதி திராவிடர் குடியிருப்புகளில் சமுதாயக் கூடங்கள் கட்டப்படும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.74 இலட்சம் மதிப்பீட்டில் 12 சமுதாயக் கூடங்கள் கட்ட இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில், இத்திட்டம் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும்:—

| நிதி ஆண்டு | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 2007–2008 | 14.00 |

**(ஆ) மயானங்கள் மற்றும் பாதை வசதி**

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தேவைப்படும் மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான

[2007 ஏப்ரல் 18

நிலத்தினை வாங்குவதற்கும், கையகப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்களும் தமது நிதியிலிருந்து ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருகின்றன. இதற்காக, குடிநீர் வசதிக்கு 15%-ம், இணைப்புச் சாலை வசதிக்கு 10%-ம் இத்துறையின் பங்குத் தொகையாக வழங்கப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.72.91 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) ஈமச் சடங்குக்கு உதவித் தொகை

ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டால் அவரின் ஈமச் சடங்கிற்கான செலவினை மேற்கொள்ள நிதி உதவியாக ரூ.500/- வழங்கப்படுகிறது. இதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.24,000 ஆகும். 2007-2008 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.283.26 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 28. சாதிச் சான்றிதழ்கள்

ஆதி திராவிடர்களுக்குரிய சாதிச் சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களால் வழங்கப்படுகின்றன. அரசு ஆணை (நிலை) எண் 2137, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 11-11-1989-இன்படி அனைத்துப் பழங்குடியினருக்கும் சாதிச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் உரிய வருவாய்க் கோட்டாட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர்க்கு அரசியல் அமைப்பின்கீழ் அளிக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டை போலியான சாதிச் சான்றுகள் அளித்து இதர இனத்தவர் கல்வி நிறுவனங்களில் சேருதல், பொதுப் பணிகளில் நியமனம் பெறுதல் மூலம் உண்மையான ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே அவ்வாறு அளிக்கப்பட்ட சான்றிதழ்களின் மெய்த் தன்மையினை முறையாக ஆய்வு செய்தல் இன்றியமையாததாகும். இதற்கென உச்சநீதிமன்றத்தின் நெறிமுறைகளின் அடிப்படையில் அரசு, மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் குழுக்களை அமைத்துள்ளது. இக்குழுக்களில் ஒரு மானிடவியல் வல்லுநர் சேர்க்கப்பட்டுள்ளார். வட்டாட்சியர் மற்றும் வருவாய்க் கோட்டாட்சியர்களால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களை இக்குழுக்கள் ஆய்வு செய்யும்.



2007 ஏப்ரல் 18]

## 29. குடியுரிமைப் பாதுகாப்பு

### (அ) தீண்டாமை ஒழிப்பு

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளைத் தடுக்க, இந்த அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக, 1955 ஆம் ஆண்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் ஆகியவை உருவாக்கப்பட்டு அவை சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கென, காவல் துறைத் தலைவர் (சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்) அவர்கள் தலைமையின்கீழ் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஒன்று, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

மேலும், இவ்விரு சட்டங்களின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகளை விசாரிக்க முதல் நிலை சிறப்பு அமர்வு நீதிபதிகளைக் கொண்ட 4 சிறப்பு நீதிமன்றங்கள் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. மற்ற மாவட்டங்களில் குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு இவ்வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், கலவரங்களால் பாதிக்கப்படும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு நிதி உதவி வழங்கும் வகையில் 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ.225 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்

தீண்டாமையின் தீமை குறித்துப் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்படுகிறது. தீண்டாமை ஒழிப்பு தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் குறுந் திரைப்படங்கள் கிராமங்களில் திரையிடப்படுகின்றன.

### (இ) தீண்டாமை ஒழிப்பில் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்

இத்திட்டத்தின்கீழ், பொதுமக்கள் நல்லிணக்கத்துடனும் அமைதியுடனும் வாழ ஊக்குவிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் தீண்டாமை கடைப்பிடிக்காமல் பொதுமக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு அக்கிராமத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகையைக் கொண்டு, அக்கிராமத்தின் முன்னேற்றத்திற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

[2007 ஏப்ரல் 18

இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்காக 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ. 29 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மனித நேய வார விழா ஒவ்வோர் ஆண்டும் மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், ஜனவரி 24 முதல் 30 ஆம் நாள் வரை பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படுகிறது. வில்லுப் பாட்டுக் கலைஞர்கள்மூலம் பொதுமக்களுக்குத் தீண்டாமை ஒழிப்பு குறித்து விளம்பரப்படுத்தப்படுகிறது. இதற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.5.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், சமபந்தி விருந்து ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 26, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 அல்லது அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த நாட்களில் ஏற்பாடு செய்யப்படுகிறது.

### (ஈ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டு நிறுவனம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொடர்பான கலை, கலாச்சாரம், இலக்கியம் இவற்றைப் படைக்கும் திறனை ஊக்குவிக்கவும் இவர்கள் குறித்த ஆராய்ச்சியை மேற்கொள்ளவும் "ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் செயல்கள் நிறுவனம்" என ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிட மற்றும் பழங்குடியின எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் சிறந்த படைப்புகளை வெளியிட ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 எழுத்தாளர்களுக்கும் ஆதி திராவிடர்களின் பிரச்னை பற்றி எழுதும் ஆதி திராவிடர் அல்லாதவர் ஒருவருக்கும் ரூ.20,000/- வீதம் நிதியுதவி அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

### 30. (அ) கொத்தடிமை ஒழிப்பு

கொத்தடிமைத் தொழிலாளர் முறையை அறவே ஒழிக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. தேசிய அளவில் கொத்தடிமை முறையை ஒழிப்பதற்காக 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் அதே ஆண்டு முதல், தமிழகத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கொத்தடிமையில் சிக்கியுள்ளவர்களை விடுவித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தை மாநிலத்தில்



2007 ஏப்ரல் 18]

திறம்பட நிறைவேற்றிட அந்தந்த மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் தலைமைச் செயலாளர் தலைமையில் ஓர் உயர்மட்டக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 15,75 கொத்தடிமைத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டு ரூ.15.09 கோடி செலவில் மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ.110.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கொத்தடிமைத் தொழிலாளர்கள் குறித்து மைய அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.60 இலட்சம் செலவில் மறு கணக்கெடுப்பு மேற்கொள்வதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

### (ஆ) கொத்தடிமைத் தடுப்பு மற்றும் மறுவாழ்வு மாதிரி திட்டம்

இத்திட்டம் கொத்தடிமைகள் அதிகமாக இருப்பதாகக் கண்டறியப்பட்ட திருவள்ளூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதுடன் அவர்கள் மேலும் கடனாளியாக ஆவதைத் தடுப்பதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. இம்மாவட்டத்தில் கொத்தடிமை முறையைத் தடுக்கும் விதத்தில் திட்டங்களைச் செயல்படுத்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலாளர் தலைமையில் "திட்ட அறிவுரைக் குழு" ஒன்று செயல்பட்டு வருகிறது.

## II. பழங்குடியினர் நலன்

பழங்குடியினர்களின் பொருளாதாரம், கல்வி மற்றும் சமூக நிலையை மேம்படுத்தி, பழங்குடியினருக்கும், பழங்குடியினர் அல்லாதாருக்கும் உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கு, பழங்குடியினர் மேம்பாடு அவசியமாகிறது. பழங்குடியின மேம்பாட்டின் முக்கிய நோக்கம் இம்மக்களைப் பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாட்டு நீரோட்டத்தில் ஒருங்கிணைப்பதாகும். பழங்குடியினர் நலனுக்காகத் தனியே ஓர் இயக்ககம், 1-4-2000 முதல் செயல்பட்டு வருகிறது. பழங்குடியினர் நல இயக்ககம், பழங்குடியினர்கள் அதிகம் வாழும் 14 மாவட்டங்களில் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. மாநிலத்தின் 36 வகை பழங்குடியினர்களில் 6 வகை பழங்குடியினர், அதாவது தோடா, கோட்டா, குரும்பாஸ், இருளர், பனியன் மற்றும் காட்டுநாயகன் ஆகியோர் பண்டைய பழங்குடியினர்களாகக் கண்டறியப்பட்டுள்ளனர். மேற்கண்ட பழங்குடியினர் தவிர, இதர பழங்குடியினர், பரவலாக

[2007 ஏப்ரல் 18

வசித்து வருவதால் இவர்கள் பரவிவாழும் பழங்குடியினர் என அழைக்கப்படுகின்றனர். மொத்த மக்கட்தொகையில் 50%க்கும் அதிகமாகப் பழங்குடியினர் வாழும் பகுதிகள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதியென அறிவிக்கப் பட்டுள்ளது. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதி சேலம், நாமக்கல், விழுப்புரம், திருவண்ணாமலை, திருச்சி, தருமபுரி மற்றும் வேலூர் ஆகிய 7 மாவட்டங்களில் உள்ளது.

## 31. பழங்குடியினர் துணைத் திட்டம்

பழங்குடியினர் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்தும் வகையில் தமிழக அரசு பழங்குடியினர் துணைத் திட்டத்தினை 1976-1977 முதல் செயல்படுத்தி வருகிறது. இதன்படி அனைத்துத் துறைகளும் தங்களது ஆண்டுத் திட்ட நிதி (Annual Plan Outlay) ஒதுக்கீட்டில், பழங்குடியின மக்கட் தொகை விகிதாச்சாரத்திற்கு ஏற்ப நிதியினை ஒதுக்கீடு செய்து, வளர்ச்சித் திட்டங்கள் முழுமையாகப் பழங்குடியின மக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்வதாகும். 2001 ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் பழங்குடியின மக்கள் 6.51 இலட்சம் உள்ளனர் (மாநில மக்கட் தொகையில் 1.04%). இத்திட்டமானது 21 செயலாக்கத் துறைகள்மூலம் செயல்படுத்தப்படுகிறது. 10-வது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து பழங்குடியினர் துணைத் திட்டமானது பகுக்கக்கூடிய (divisible) மற்றும் பகுக்க இயலாத (indivisible) திட்டங்களாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு துறையிலும் ஒருங்கிணைக்கும் அலுவலர் (Nodal Officer) நியமனம் செய்யப்பட்டு இத்திட்டங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

2007-2008 ஆம் ஆண்டின் மொத்த திட்ட நிதி ஒதுக்கீடான ரூ.14,000 கோடியில், பகுக்கக்கூடிய (divisible) திட்டங்களின்கீழ் திட்ட வரவு-செலவு இணைப்புப் புத்தகத்தின்படி (Plan-Budget Link Book) பழங்குடியினருக்கான துணைத் தலைப்பு 796-ன்கீழ் ரூ. 28.51 கோடி பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பகுக்க இயலாத (indivisible) திட்டத்தின்கீழ் ரூ.117.09 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டிற்கு மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 145.60 கோடியாக நிர்ணயம் செய்யப்பட உள்ளது.



2007 ஏப்ரல் 18]

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2002-2003 முதல் 2006-2007 (டிசம்பர் 2006 முடிய) வரையிலான பழங்குடியினர் துணைத் திட்டத்தின் செலவின விவரங்கள் பின்வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | மாநில திட்ட மதிப்பீடு | திட்டமிடப்பட்ட பழங்குடியினர் துணைத் திட்டம் | செலவினம் | | | ப.து.தி. பொறுத்த செலவினத்தின் விழுக்காடு | மாநில திட்ட மதிப்பீட்டினைப் பொறுத்து செலவினத்தின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பகுக்கக் கூடியது | பகுக்க முடியாதது | மொத்தம் | | |
| 2002-2003 | 575152.96 | 5941.03 | 2001.99 | 1427.01 | 3429.00 | 57.72% | 0.60% |
| 2003-2004 | 700013.16 | 8606.00 | 3629.88 | 4869.70 | 8,499.58 | 98.76% | 1.21% |
| 2004-2005 | 800108.10 | 8406.42 | 3352.48 | 5014.46 | 8366.94 | 99.53% | 1.05% |
| 2005-2006 | 910000.00 | 16728.94 | 2452.97 | 7730.37 | 10183.34 | 60.87% | 1.12% |
| 2006-2007 (டிசம்பர் 2006 முடிய) | 1250000.00 | 22567.64 | 1111.03 | 3409.73 | 4520.76 | 20.03% | 0.36% |

## 32. பழங்குடினருக்கான அடிப்படைக் கட்டுமான அமைப்பு

### (அ) வீட்டு வசதித் திட்டம்

மலைப் பகுதி மற்றும் சமவெளிப் பகுதியில் வாழும் பழங்குடியினத்தவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அரசு இம்மக்களுக்கு வீட்டு வசதி திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதன்படி ஆண்டுதோறும் சமவெளிப் பகுதிகளில் ஒரு வீட்டிற்கு ரூ. 34,000 வீதமும், மலைப் பகுதிகளில் ரூ. 36,500 வீதமும் செலவினம் செய்து பழங்குடியினத்தவர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. இத்திட்டத்திற்கான முழுச் செலவினமும் அரசால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் 46 வீடுகள் கட்டுவதற்காக ரூ. 16.80 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டிற்கும் ரூ. 16.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) குடிநீர் வசதி

பழங்குடியினர் வாழும் பகுதிகளில் குடிநீர் வசதி தேவைப்படும் இடங்கள் கண்டறியப்பட்டு அதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதற்காக ஒவ்வோர் ஆண்டும் நிதி உதவி செய்யப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் 5 மாவட்டங்களில் (நாமக்கல், திருவண்ணாமலை, தருமபுரி, வேலூர் மற்றும் விழுப்புரம்) உள்ள 8 பழங்குடியினர் குடியிருப்புகளில் குடிநீர் வசதி செய்ய ரூ.32 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. பழங்குடியினர் பகுதிகளில் குடிநீர் வசதி செய்யும் திட்டத்திற்கு 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) மின்வசதி அளித்தல்

சேலம் மாவட்டத்தில் ஜருகு மலையில் உள்ள மேலூர் மற்றும் கீழூர் ஆகிய பழங்குடியின மக்கள் வசிக்கும் கிராமங்களுக்கு ரூ. 27.57 இலட்சம் செலவில் மின்வசதி செய்துதர 2006-2007 ஆம் ஆண்டில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

### (ஈ) பொருளாதார மேம்பாடு

பழங்குடியின மக்களின், சிறு வன விளைபொருட்களை விற்பனை செய்ய வகை செய்வதோடு மட்டுமின்றி, குறுகிய கால மற்றும் நீண்டகாலக் கடன்கள் வழங்குவதற்கும், பழங்குடியினருக்கும் தேவையான நுகர்பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க வழி வகை செய்வதற்கும் பெரிய அளவிலான பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் (Lamp Societies) ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது தமிழ்நாட்டில் 17 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் பழங்குடியினர்க்கு வேலைவாய்ப்பில் வழிகாட்டும் வகையில் ஒரு தொழில்நெறி வழிகாட்டும் மையம் செயல்பட்டு வருகிறது. பழங்குடியினர் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு 25 ஆரம்ப சுகாதார நிலையங்களும் 76 துணை சுகாதார நிலையங்களும், 7 சித்த மருத்துவமனைகளும், 5 அரசு மருந்தகங்களும் மற்றும் ஒரு நடமாடும் சித்த மருத்துவ நிலையமும் பழங்குடியினர் பகுதியில் அவர்களின் முன்னேற்றத்திற்காகச் செயல்பட்டு வருகின்றன.





### (உ) குடும்ப வருவாய் ஈட்டித் தரும் திட்டங்கள்

பண்டைய பழங்குடியினர் மற்றும் பரவி வாழும் பழங்குடியினர் ஆகியோரின் குடும்ப வருவாய் ஈட்டித் தரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆடு அலகுகள் மற்றும் கறவை மாடுகள் பழங்குடியினர்க்கு வழங்கப்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் 71 ஆடு அலகுகளும், 25 கறவை மாடுகளும் ஈரோடு, பெரம்பலூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள பரவி வாழும் பழங்குடியினருக்கு வழங்கும் பொருட்டு ரூ. 10.14 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்கென ரூ. 10.14 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஊ) மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்

பழங்குடியினர் பகுதியில் பின்வரும் மைய அரசு பொறுப்பு ஏற்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:—

### (i) பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மைய உதவி

இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு பழங்குடியினர்களுக்கு வருவாய் ஈட்டித் தரும் திட்டத்திற்கு முதன்மையாகவும், இதில் ஒரு பகுதி (30% மிகாமல்) இந்த வருவாய் ஈட்டித் தரும் திட்டத்திற்கான அடிப்படை வசதிகளுக்காகவும் செலவிடப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் மைய அரசு இத்திட்டத்திற்காக ரூ. 327 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் பழங்குடியினர் நலத் துணைத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக ஊக்கத் தொகையாக ரூ. 48.55 இலட்சமும் இத்திட்டத்தின்கீழ் வழங்கியுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ. 327 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மைய அரசிடமிருந்து நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

### (ii) இந்திய அரசமைப்புச் சட்ட பிரிவுக் கூறு 275 (1)ன்கீழ் விடுவிக்கப்படும் நிதி

இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 275 (1)ன்கீழ் வழங்கப்படும் நிதி, பழங்குடியினர் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டம் கல்ராயன் மலையில் உள்ள வெள்ளிமலையில் ஏக்லைவா மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும், சேலம் மாவட்டத்தில்

ஒரு ஏகலைவா மாதிரி உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளி 2006-2007 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிக்குத் தொடராச் செலவினமாக ரூ. 150 இலட்சமும், தொடர் செலவினமாக ரூ. 30 இலட்சமும் 2006-2007 ஆம் ஆண்டில் மைய அரசு விடுவித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 2006-2007 ஆம் ஆண்டில் பழங்குடியினர் பகுதிகளில் அடிப்படை வசதிகளுக்கும், சிறுபாசன வசதிகள் அளிப்பதற்கும் ரூ. 251 இலட்சம் மைய அரசு விடுவித்துள்ளது. மேலும் 2006-2007 ஆம் ஆண்டிற்கு பழங்குடியினர் முன்னேற்றத்திற்காக புதுமையான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கென ரூ. 46.62 இலட்சம் மைய அரசு விடுவித்துள்ளது.

2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மைய அரசிடமிருந்து நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

### (iii) பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டிற்கான மைய அரசின் நிதியுதவி

பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டிற்காக மைய அரசு ஆண்டுதோறும் நிதியுதவி வழங்கி வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.255 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டிற்கும் ரூ. 255 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மைய அரசிடமிருந்து நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

### (iv) பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் மற்றும் பழங்குடியினர் அருங்காட்சியகம்

பழங்குடியினர்க்காக அருங்காட்சியகம் ஒன்று உதகை பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் இயங்கி வருகிறது. பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் பழங்குடியினர் தொடர்பான ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் பழங்குடியினர் திட்டங்களை ஆய்வு செய்தல், பழங்குடியினர் புள்ளிவிவரக் கணக்கெடுப்பு ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (v) ஜனஸ்ரீ பீமா யோஜனா

பண்டைய பழங்குடியினரிடையே இறப்பு விகிதம் அதிகம் ஏற்படுவது சம்பந்தமான அறிக்கையின்பேரில் வறுமைக் கோட்டிற்குகீழ் மற்றும் அதற்குச் சிறிதளவு மேலாக வாழும் 18 முதல் 58 வயது வரையுள்ள பண்டைய பழங்குடியினருக்கென ஒரு காப்பீட்டுத் திட்டம் வடிவமைக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகிறது. இக்காப்பீட்டுத்





திட்டத்தில் சேருபவரின் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகையாக நபர் ஒன்றுக்கு ஒவ்வொரு காலாண்டிற்கும் ரூ. 300 வீதம் வழங்கப்படுகிறது. ஜனஸ்ரீ பீமா யோஜனா காப்பீட்டுத் திட்டத்தின் பயன்கள் கீழ்வருமாறு:—

(1) இயற்கையான மரணத்திற்கு ரூ. 20,000.

(2) விபத்தில் இறந்தால் ரூ. 50,000.

(3) விபத்தினால் முழு அளவிலான ஊனம் ஏற்பட்டால் ரூ.50,000.

(4) விபத்தினால் பகுதி அளவிலான ஊனம் ஏற்பட்டால் ரூ.25,000.

2004-2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் 8,000 பண்டைய பழங்குடியினர்க்கு ஆண்டுக்கான காப்பீட்டுத் தொகை நபர் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் ஐந்தாண்டுகளுக்குச் செலுத்துவதற்காக மைய அரசு ரூ. 40 இலட்சம் அளித்துள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில் 16,000 பண்டைய பழங்குடியினர் பயனடையும் வகையில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு ரூ. 80.00 இலட்சம் நிதியினை மைய அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் 3-வது கட்டத்தில், 2006-2007 ஆம் ஆண்டிலும் ரூ.80 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 16,000 பண்டைய பழங்குடியினர் பயனடைந்துள்ளனர். இதுகாறும் மொத்தம் 40,000 பேர் பயன் பெற்றுள்ளனர்.

## 33. பழங்குடியினருக்கான இதர திட்டங்கள்

### (அ) பழங்குடியினர் சுய உதவிக் குழுக்கள்

பழங்குடியினர் மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சுய உதவிக் குழுவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. 31-01-2007 அன்றைய நிலையில் நமது மாநிலத்தில் 3,518 சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு அதில் 52,919 பழங்குடியினப் பெண்கள் சேர்ந்து ரூ. 1,189 இலட்சம் வரை சேமித்துப் பயன் அடைந்துள்ளனர்.

### (ஆ) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரியில் வாழும் பழங்குடியினரின் நலனுக்காக மட்டும் நீலகிரி மாவட்ட ஆட்சியரால் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசால் ரூ. 566.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டிலும் இதற்கென ரூ. 566.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம்

இந்திய மருத்துவக் கழக ஆராய்ச்சிக் குழுமத் திட்டப் பணிகள், காஞ்சிபுரம், திருவள்ளூர், நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பண்டைய பழங்குடியினரின் மருத்துவ நலன் கருதி அதற்கு வசதிகள் செய்யும் பொருட்டு பழங்குடியின நலப் பணியாளர்கள் மற்றும் தாதியர் ஆகியோரைக் கொண்ட குழுவை நியமித்து அவர்களுக்கு இத்திட்டப்பணிகளுக்கான தொடர் பயிற்சி வழங்கப்படுகிறது.

## III. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

தமிழகத்தில் வாழ்கின்ற நலிந்த ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகத் துவக்கப்பட்ட தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) 1974 முதல் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் இக்கழகம் கீழ்க்கண்ட இருபெரும் பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது:—

(1) பொருளாதார மேம்பாட்டுத் திட்டப் பணிகள்

(2) கட்டுமானப் பணிகள்

இக்கழகத்தின் வளர்ச்சிப் பிரிவு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தேவையின் அடிப்படையிலான பொருளாதார மேம்பாட்டுத் திட்டப் பணிகளைச் செயல்படுத்தி வருகிறது. இக்கழகத்தின் தொழில்நுட்பப் பிரிவு, மாணவ/மாணவியர் விடுதிக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், அறிவியல் ஆய்வுக் கூடங்கள், ஆசிரியர் குடியிருப்புகள் போன்ற கட்டுமானப் பணிகளைச் செய்து வருகிறது.

### 34. திட்டங்கள் செயல்முறையை பரவலாக்குதல்

மாவட்ட செயலாக்கத் திட்டம், அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் அம்மாவட்டத்திலுள்ள ஆதி திராவிட மக்களின் தேவை மற்றும் தொழில் செய்வதற்கு அம்மாவட்டத்திலுள்ள வசதி வாய்ப்புகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. பயனாளிகளின் தேர்வு பரவலாக்கப்பட்டு, வட்டார அளவில் தெரிவு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.



### 35. மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதி

நடைமுறையிலுள்ள ஏனைய திட்டங்கள்மூலம் பயன்பெற இயலாத, மிகவும் நலிவடைந்த நிலையிலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரது மேம்பாட்டிற்கென மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதி தொடங்கப்பட்டு, இவர்கள் வருமானம் ஈட்டக் கூடிய தொழிலைத் தொடங்குவதற்கு நூறு விழுக்காடு மானியம் மாவட்ட ஆட்சியர்மூலம் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 2.79 கோடி விடுவிக்கப்பட்டு, 3,744 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

### 36. சிறப்பு மாநில நிதியுதவித் திட்டம்

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது இந்த அரசின் தலையாய இலட்சியங்களில் ஒன்றாகும். நாட்டிலேயே முதன்முறையாக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டுக்காக மைய அரசு வழங்கி வரும் சிறப்பு மைய உதவியைப் போன்று (Special Central Assistance), ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் ஒரு சிறப்பு மாநில நிதி உதவித் திட்டத்தை இந்த அரசு அறிவித்துச் செயல்படுத்தியது.

இத்திட்டம், இந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு மட்டுமல்லாமல் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கும் பொருந்தும்.

இத்திட்டத்தின்கீழ் 2,500 இளைஞர்களுக்கு, உணவு தயாரித்தல், பதப்படுத்துதல், மற்றும் பரிமாறுதல் பயிற்சியும், 2,000 மகளிருக்கு, செவிலியர் உதவியாளர் பயிற்சியும், 5,000 இளைஞர்களுக்கு, பவர் தையல் மெஷின் இயக்குவதற்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, ஆதி திராவிடர் நலத் துறை பள்ளிகள் மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் 1,000 மாணவ/மாணவிகளுக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் பயிற்சியும், 200 இளைஞர்களுக்கு BPO, Call Centre பயிற்சியும் மற்றும் 100 மகளிருக்கு விமானப் பணிப் பெண் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சித் திட்டங்களுக்கென ரூ.10 கோடி செலவிடப்பட்டுள்ளது.

தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் 6,000 ஆதி திராவிடர் இளைஞர்களுக்குச் சுயதொழில் தொடங்கிட ரூ.7 கோடி மானிய உதவி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், சுயதொழில் தொடங்கிட 650 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 13,000 பயனாளிகளுக்கு ரூ.8 கோடி மானிய உதவி அளிக்கப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் நிதி ஆண்டிலும் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 37. பொருளாதார மேம்பாட்டுச் செயல்பாடுகள்

2006-2007 ஆம் நிதி ஆண்டில் 1,97,400 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.208 கோடி செலவில் ஆதி திராவிடர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் கீழ்க்கண்டவாறு செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது:—

### (அ) மகளிர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

தனி நபர் பயனாளிகளுக்கு மட்டும் திட்டங்கள் உதவுவது என்ற நிலைப்பாட்டினை மாற்றி தற்சமயம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், மாவட்டச் செயலாக்கத் திட்டத்தின் 75% நிதி ஒதுக்கீடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின சுய உதவிக் குழுக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1,70,036 ஆதி திராவிடர்கள் பயனடையும் வகையில் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.25.49 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

### (ஆ) நிலம் வாங்கும் திட்டம்

பெண்களுக்கு உரிய அதிகாரம் அளிக்கப்பட்டால், குடும்பத்தின் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன், சமுதாய மதிப்பும் உயரும். இந்த நிலம் வாங்கும் திட்டம், ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மகளிருக்காக உருவாக்கப்பட்ட திட்டம் ஆகும். இத்திட்டத்தின்கீழ், நிலமற்ற 1,361 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மகளிர் பயன்பெறும் வகையில் நிலம் வாங்க, நில மேம்பாடு, சிறிய நீர்ப்பாசனம் மற்றும் கால்நடைப் பராமரிப்புக்காக 50% மானியம், 50% வங்கிக் கடன் என்னும் அடிப்படையில் ரூ. 10.86 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அதிகபட்ச நிதி உதவியான ரூ. 2 இலட்சத்தில், நிலம் வாங்க ரூபாய் ஒரு இலட்சமும், நில மேம்பாடு, நீர்ப் பாசனம் மற்றும் கால்நடைப் பராமரிப்பு போன்றவற்றிற்கு ரூபாய் ஒரு இலட்சமும் வழங்கப்படுகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின ஏழைப் பெண்களுக்காக மட்டுமே இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது. இத்துடன், இப்பயனாளிகளின் விவசாயத்திற்காக மின் இணைப்புகள் வழங்குவதில் முன்னுரிமை வழங்க வகைசெய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பயனாளிகளுக்கு முத்திரைத்தாள் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணத்தில் 7.5% விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.



### (இ) தனி நபர் பயனாளிகளுக்கான நிதி உதவி

தனி நபர் பயனாளிகளுக்கான திட்டத்தின்கீழ், தனி நபர்களுக்கு அவர்களின் விருப்பத்திற்கேற்ப சுய தொழில்கள் துவங்க நிதி உதவி வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.28.01 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு 11,263 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

### (ஈ) வேலைவாய்ப்பளிக்கும் பயனுள்ள பயிற்சித் திட்டங்கள்

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெறும் வசதியை விரிவுபடுத்தும் பொருட்டு பல்வேறு தொழிற் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்தத் தொழிற் பயிற்சித் திட்டங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்ட மாவட்ட தொழிற் பயிற்சித் தேர்வுக்குழுவால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இப்பயிற்சிகள் மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மற்றும் பல்கலைக்கழகங்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்மூலம் அளிக்கப்படுகின்றன. தொழிற் பயிற்சித் திட்டத்தின்கீழ் உணவக நிருவாகம், விமானப் பணிப் பெண் பயிற்சி, கணினி மென்பொருள் (C++ ஜாவா) பயிற்சி, ஆளுமை மேம்பாடு பயிற்சி ஆகியவற்றிக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அரசால் முதல்முறையாக, தனியார் விமான நிறுவனங்களில் அதிக வேலைவாய்ப்பு பெறக்கூடிய 'விமானப் பணிப் பெண்' பயிற்சி 100 மகளிருக்கு தாட்கோ மூலம் வழங்கப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் தொழிற் பயிற்சித் திட்டத்தின்கீழ் 11,982 வேலையற்ற இளைஞர்களுக்கு ரூ.22.56 கோடி செலவில் தொழிற் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

### (உ) இளைஞர்களுக்கான சுய தொழில் வேலைவாய்ப்புத் திட்டம்

"இளைஞர்களுக்கான சுய தொழில் வேலைவாய்ப்புத் திட்டம்" (SEPY) என்ற திட்டத்தின்மூலம் மாவட்டத்திற்கு உரித்தான தொழில்முறைகள் கண்டறியப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களை வழி நடத்தும் முகமை மூலம் அவர்களால் நடத்தக்கூடிய சிறிய தொழில்கள் தொடங்க வழிவகை செய்யப்படும். இத்திட்டத்தின்கீழ், 885 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்கள் பயனடையும் வகையில் ரூ.205.27 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டிலும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் ரூ.253 கோடி செலவில் 2,25,000 ஆதி திராவிட இளைஞர்கள் பயனடையும் வகையில் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும்.

## 38. தேசிய துப்புரவுப் பணியாளர் விடுவிப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம்

மனிதக் கழிவை மனிதனே எடுத்துச் சுமக்கும் கொடுமையை அறவே அகற்றி, இந்தத் தொழிலில் ஈடுபட்ட அனைவருக்கும் மறுவாழ்வு அளிக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இந்தப் பணியில் ஈடுபட்ட 11,691 துப்புரவுப் பணியாளர்களுக்கும் மறுவாழ்வு அளிக்கும் திட்டம் ரூ. 58.4 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 3,199 துப்புரவுப் பணியாளர்கள் மாற்றுத் தொழிலுக்கான நிதி உதவி பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்துள்ளவர்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் "துப்புரவுப் பணியாளர் சுய தொழில் வேலைவாய்ப்புத் திட்டம்" என்னும் ஒரு புதிய திட்டம் மைய அரசின் நிதி உதவியுடன் இவ்வாண்டு செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ், சுய தொழில் மேற்கொள்வதற்குத் தேவையான பயிற்சியும், ஊக்குதவித் தொகையுடன் (subsidy) கூடிய மூலதனக் கடன் ரூ.25,000 முதல் ரூ.5 இலட்சம் வரையிலும் அவர்கள் மேற்கொள்ளும் சுய தொழிலுக்கேற்றவாறு அளிக்கப்படும்.

---

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227570
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம். சென்னை–600 079.